இ : 59.

# தொல்காப்பியம்

## உரைவளம்

# எழுத்ததிகாரம்

# புணரியல்

பதிப்பாசிரியர் :
ஆ. சிவலிங்கனார்

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

## (உரைவளம்)

# புணரியல்


பதிப்பாசிரியர் :

***ஆ. சிவலிங்கனார்***



**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**

அடையாறு, சென்னை-600 020.

தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டம் — வெளியீடு-6.

## Bibliographical Data

| | | |
|---|---|---|
| Title of the Book | : | Tolkappiyam — Punariyal |
| Editor | : | A. Sivalinganar<br>International Institute of Tamil Studies. |
| Publisher & Copy Right | } | International Institute of Tamil Studies<br>Madras-600 020. |
| Publication Number | : | 45 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | March 1982 |
| Paper used | : | 18 kg. D/Demy (F) White Printing |
| Size of the book | : | 21 × 18cms. |
| Printing types used | : | 10 point |
| Number of pages | : | xxxii + 175 |
| Number of copies | : | 1200 |
| Price | : | **Rs. 10/- (Rupees Ten only)** |
| Printing | : | Sri Gomathy Achagam<br>6, P.M.D. Main Street, Lloyds Road,<br>Madras-600005. |
| Binding | : | Card board |
| Artist | : | Eswary |
| Subject | : | Grammar |
| Summary | : | Compilation of Commentaries on Punariyal of Tolkappiyam. |

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர்,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600020.

## முன்னுரை

'தொல்காப்பியம்—எழுத்ததிகாரம் (உரைவளம்)—புணரியல்' என்னும் இந்நூல் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் வரும் ஆறாவது வெளியீடாகும்.

இதில் முன்னைய உரைவள நூல்களிற் போலவே இளம்பூரணர் நச்சினார்க்கினியர் உரைகளும், சுப்பிரமணிய சாஸ்திரியார் வேங்கடராசுலு ரெட்டியார் வெள்ளை வாரணனார் குறிப்புரை ஆராய்ச்சிக் கருத்துரைகளும், நூற்பாக்களுக்கு டாக்டர் இலக்குவனார், கமீல் சுவலபில் ஆங்கில மொழிபெயர்ப்புகளும் பிற்கால இலக்கண நூல்களிலிருந்து ஒப்புமை நூற்பாக்களும் அமைக்கப் பட்டுள்ளன.

பதிப்பாசிரியரின் 'புணரியல்—ஓர் அறிமுகம்' என்னும் கட்டுரையும், என் ஆங்கில முன்னுரையும் முன்னர்த் தரப்பட்டுள்ளன.

தமிழுலகம் இந்நூலையும் வாங்கிப் படித்துத் தங்கள் கருத்துரைகளைத் தெரிவிப்பின் எங்கட்கு மேலும் ஊக்கம் பெற வாய்ப்பாகும்.

இந்நூலை உருவாக்கிய பதிப்பாசிரியர், திரு. ஆ. சிவலிங்கனாரையும், அவர்க்கு உடனிருந்துதவிய செல்வி, ச. சிவகாமியையும் பாராட்டுகின்றேன்.

உரைவள நூல்கள் வெளிவரப் பல்லாற்றானும் ஊக்கமளித்து வரும் தமிழக அரசின் கல்வியமைச்சர், மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கட்கு நன்றி யுடையேன்.

அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீகோமதி அச்சக உரிமையாளர் திரு. சி. சரவணகுமார் அவர்களுக்கு நன்றி.

10-3-1982

அன்புடன்

ச. வே. சுப்பிரமணியன்

# பதிப்புரை

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் தொடங்கியுள்ள தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டின் ஆறாவது வெளியீடாகப் புணரியல் என்னும் இந்நூல் வெளிவருகின்றது. முன்னர் வெளிவந்த நூல்கள்:

1. தொல்காப்பியம்-சிறப்புப்பாயிர உரைவளம் (1980)
2. தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் நூன்மரபு உரைவளம் (1980)
3. ,, ,, மொழிமரபு ,, (1981)
4. ,, ,, பிறப்பியல் ,, (1981)
5. ,, பொருளதிகாரம் மரபியல் ,, (1981)

நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல் உரைவள நூல்களிற் போலவே புணரியல் உரைவள நூலிலும் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உரைகளும், சுப்பிரமணிய சாஸ்திரியார், வேங்கடராசுலு ரெட்டியார், வெள்ளை வாரணனார், பதிப்பாசிரியர், தற்காலக் கட்டுரையாளர் கருத்துரைகளும், நூற்பாக்களுக்கு டாக்டர் சி. இலக்குவனார், கமீல்சுவலபில் ஆகியோரின் ஆங்கில மொழிபெயர்ப்புகளும் சேர்க்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நூற்பாவினையும் ஒட்டி வீரசோழியம் முதலான பிற்கால இலக்கண நூல்களிலிருந்து ஒப்புமை நூற்பாக்கள் தரப்பட்டுள்ளன.

முன்னதாகப் 'புணரியல்—ஓர் அறிமுகம்' என்னுப் தலைப்பில் ஒரு கட்டுரையும் பதிப்பாசிரியரால் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது. நிறுவன இயக்குநர் அவர்கள் எழுதியுதவிய ஆங்கில முகவுரை (Forword) ஒன்றும் நன்றியுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

இப்பதிப்பு வெளிவர உடன் உதவியவர் செல்வி, ச. சிவகாமி. வேண்டும் நூல் தந்துதவியவர் புலவர் க. வா.

சச்சிதானந்தம், மயிலம் பேராசிரியர் வே.சிவ சுப்பிரமணியன் ஆகியோர். அழகுற அச்சிட்டவர் ஸ்ரீகோமதி அச்சக உரிமையாளர் திரு. சி. சரவணகுமார். இவர் தமக்கு என் நன்றி.

உண்மையுழைப்பும் ஊக்கமும் உடையார் நன்மை செய்வதில் நாட்டம் உடையார் எங்கள் நிறுவன இயக்குநர், டாக்டர், ச. வே. சுப்பிரமணியன் அவர்கட்கு என்றும் நன்றிக் கடப்பாடுடையேன்.

நிறுவனத் தலைவர், தமிழக அரசுக் கல்வியமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கட்கும் நன்றியுடையேன்.

உரைவள நூல்களையேற்று ஊக்கமளித்து வரும் தமிழறிஞர்கட்கும் நன்றி.

ஆ. சி.
10—3—82

# பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | iii—iv |
| பதிப்புரை | v—vi |
| பொருளடக்கம் | vii—viii |
| புணரியல்-ஓர் அறிமுகம் | ix—xxiv |
| Foreword | xxv—xxviii |
| சுருக்க விளக்கம் | xxx |
| System of Translitaration | xxxi |
| புணரியல் விளக்கம் | 1—3 |
| 1. மொழிகளின் முதலும் ஈறும் (3—29) | |
| மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வரும் எழுத்துக்கள் | 3—7 |
| மொழியிறுதி மெய்கள் புள்ளி பெறுதல் | 7—10 |
| குற்றுகரம் ஒற்றெழுத்து ஒத்தல் | 10—23 |
| உயிர்மெய்யிறு உயிரீற்றது | 23—26 |
| புணர்ச்சிக்குரிய இருமொழிகளின் இயல்பு | 26—29 |
| 2. புணர்தலின் இயல்பு | 30—56 |
| மொழி புணர் இயல்பு நான்கு | 30—36 |
| புணர்ச்சியில் மூவகைத் திரிபுகள் | 36—40 |
| அடைமொழிகளோடு புணர்தல் | 40—44 |
| மரூஉ மொழிப் புணர்ச்சி | 44—49 |
| இருவகைப் புணர்ச்சி | 49—56 |
| 3. உருபு புணர்ச்சி (56—74) | |
| வேற்றுமையுருபுகள் | 56—59 |
| வலிமுதல் உருபு புணரு நிலை | 59—64 |
| அதுவுருபின் அகரம் கெடும் | 64—69 |
| வேற்றுமையுருபுகள் நிற்கும் இடம் | 69—72 |
| பெயர்களின் பெயர், முறை, தொகை | 72—74 |

4. சாரியைப் புணர்ச்சி (74—121)

சாரியைகள் வரும் இடம் 74—77

சாரியைகளின் பெயரும் முறையும் தொகையும் 77—83

சாரியைக்குப் புணர்ச்சிவிதி 83—86

இன்சாரியை யீறு திரியும் இடம் 86—89

வற்றுமுதல் கெடுதல் 89—91

னகர வீற்றுச் சாரியை திரியும் இடம் 91—92

பொருட் புணர்ச்சியில் ஆன் ஈறு திரிதல் 92—96

அத்து முதல் கெடுதல் 96—98

இக்கு முதல் கெடுதல் 98—100

அக்கு அகரம் நிற்க ஏனைய கெடுமாறு 100—103

அம் ஈறுதிரியும் இடம் 103—105

அம் ஈறுகெடும் இடம் 105—106

இன்சாரியை முழுதும் கெடும் இடம் 107—110

புணர்மொழிகளிற் சாரியை வருதல் 110—115

அத்து வற்று வருமிடத்து நிகழும் விகாரம் 115—1 1

5 எழுத்துச் சாரியை (121—127)

எழுத்துச் சாரியைகளின் பெயர் 121—123

நெட்டெழுத்துக்குச் சாரியை 123—124

குற்றெழுத்துக்குச் சாரியை 124—126

ஐ ஔவின் சாரியை 126—127

6. உயிர் எழுத்தின் புண.ர்ச்சியியல்புகள் 127—

7. புணர்ச்சியிற் பொருள் வேறுபடும் இடம்

ஒலிவேற்றுமையால் பொருள் வேறுபடல் 142—145

இணைப்பு—திரிந்ததன் திரிபு 146—153

பயன்படுத்தப் பெற்ற நூல்கள் 154—155

புணரியல்...கட்டுரைகள் சில 156—157

சொல்கராதி 158—166

சூத்திரமுதற்குறிப்பகராதி 167

# புணரியல்—ஓர் அறிமுகம்

## புணர்ச்சி

"தமிழ் மொழியினை மொழி நூல் வல்லார் 'ஒட்டு மொழி' என்பர். தமிழில் உள்ள சொற்கள் பொதுவாகப் பகுதி விகுதி என்ற உறுப்புகள் சேர்ந்தே பிறக்கின்றன. தனித்தனிச் சொற்களும் பின்னர் ஒன்று சேர்கின்றன. இப்படி ஒன்று சேர்தலையே புணர்ச்சி என்பர். புணர்ச்சியையும் பொருட்புணர்ச்சி எழுத்துப் புணர்ச்சி என இருவகைப்படுத்திப் பின்னர் பொருட் புணர்ச்சியை வேற்றுமை அல்வழி என்று பிரித்து, எழுத்துப் புணர்ச்சியை இயல்பும் விகாரமும் என்று பிரிப்பர்.

புணர்ச்சிக்குக் காரணம் என்ன? சொற் புணர்ச்சி (அ) நேரிய பொருளைத் தந்து, (ஆ) விட்டிசைத் தலை நீக்கி, (இ)இன்னிசையைத் தந்து எங்கள் மொழி வளத்தைப் புலப்படுத்தித் தெளிவுபடுத்துகின்றது."

—F. X .C. நடராசா*

மேற்கூறப்பட்ட கருத்துகள் மிகமிகப் பொருந்துவனவே. சொற்புணர்ச்சி பற்றித் தொல்காப்பியம்' புணரியல் முதலாகக் குற்றியலுகரப் புணரியல் ஈறாக ஆறு இயல்களில் கூறு கின்றது.

## புணரியல்

புணரியல் என்பது எழுத்துகள் தம்மிற் புணரும் இயல்பு கூறுதலின் அப்பெயர்த்தாயிற்று.

இங்கு எழுத்துகள் என்பன நிலைமொழியிறுதி எழுத்தும் வருமொழி முதல் எழுத்துமாகும். இரண்டு சொற்கள் தம்மில் தொடரும் போது—முதற்கண் நிற்பதாகிய நிலைமொழியிறுதி

---

'இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பல்' — ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு — கருத்தரங்கு ஆய்வுக் கட்டுரைகள், பக்கம். 21. (1981)

யில் உள்ள எழுத்தும் வருமொழி முதலில் உள்ள எழுத்தும் ஒன்றோடொன்று தொடரும்போது—அவற்றுக்கு ஏற்படும் இயல்புகள் நான்கு வகைப்படும். அந்நான்கு வகைகளையும் விவரிப்பதே புணரியல்.

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் புணரியல் என்னும் பெயருக்குரியன, இவ்வியலாகிய புணரியலும், பின்னர் உள்ள தொகைமரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகிய ஐந்தும் ஆக ஆறு இயல்கள் ஆம். எனினும் புணரியல் என்னும் இவ்வியல் பொதுப்புணரியல் என்றும், மற்றையன சிறப்புப் புணரியல்கள் என்றும் கொள்ளலாம். எனவே இதனகத்துச் சொல்லப்படும் செய்திகள் மற்றைய புணரியல்களுக்குரிய பொது இலக்கணங்களாகும் என்பது கொள்ளல் வேண்டும். அதனால் இவ்வியல் அடைமொழியின்றிப் பொதுவில் புணரியல் எனப்பட்டது.

ஒருமொழியின் முதலெழுத்தும் இறுதியெழுத்தும் எவையாயினும் உயிர், அல்லது மெய் என்னும் இரண்டில் அடங்கும் (1)

அரசன் என்பதில் முதல் எழுத்து உயிரும் இறுதியெழுத்து மெய்யும் ஆகும். முதலெழுத்தும் இறுதியெழுத்தும் உயிர்மெய்களானால் உயிர்மெய் முதல் உயிர்மெய் இறுதியெனக் கொள்ளல் கூடாது. உயிர்மெய்யைப் பிரித்து மெய்முதலாகவும் உயிர் இறுதியாகவும் கொள்ளல் வேண்டும். 'விள' என்பதில் உள்ள 'வி' என்னும் உயிர்மெய்யைப் பிரித்து (வ்+இ) வகர மெய். முதல் என்னல் வேண்டும். 'ள' என்னும் எழுத்தையும் அவ்வாறே பிரித்து (ள்+அ) அகர உயிர் ஈறு என்று கொள்ளல் வேண்டும். எனவே உயிர்மெய் எழுத்தை மெய்ம் முதல் உயிர்ஈறு எனக்கொள்ளல் வேண்டும்(2).

ஒரு தொடரில் உள்ள முதற் சொல் நிலைமொழி (நிறுத்தசொல்) எனவும், அடுத்த சொல் வருமொழி (குறித்து வருகிளவி) எனவும் வழங்கப்படும் (5) இப்படி வரும் இரண்டு சொற்களும் உயிர் ஈற்றுச் சொல்முன்னர் உயிர் முதல்மொழி வருதலும் (விள+உண்டு), உயிரீற்றுச் சொல்முன்னர் மெய்ம் முதல் மொழி வருதலும்(விள+வீழ்ந்தது), மெய்யீற்றுச் சொல் முன்னர் உயிர் முதல்மொழி வருதலும் (ஆல்+இலை) மெய்யீற்றுச் சொல் முன்னர் மெய்ம் முதல் மொழி வருதலும் (ஆல்+வீழ்ந்தது) என நான்கு வகையால் தொடரும் (5)

---

பிறைக்குறிக்குள் உள்ள எண்கள் புணரியல் நூற்பா எண்கள்

மேலும் அவை—அந்நிலைமொழியும் வருமொழியும்—தொடர்ந்து வரும்போது பெயர்ச் சொல்லோடு பெயர்ச் சொல்லும் (சாத்தன்+கை) பெயர்ச் சொல்லோடு வினைச் சொல்லும் (சாத்தன்+வந்தான்) வினைச் சொல்லோடு பெயர்ச் சொல்லும் (வந்தான்+சாத்தன்) வினைச்சொல்லோடு வினைச்சொல்லும் (வந்தான்+போனான்) என நான்கு வகையில் தொடரும்(6).

அப்படித் தொடரும்போது, நிலைவருமொழிகளுக்கு இடையில்—அதாவது நிலைமொழியீற்றெழுத்திற்கும் வருமொழி முதல் எழுத்திற்கும் இடையில் யாதோர் மாற்றமும் இல்லாமல் அப்படியே தொடர்தலும் (வேலன் வந்தான்) நடுவில் ஓரெழுத்துத் தோன்றுதலும் (வாழை+பழம்=வாழைப்பழம்) நிலைமொழியிறுதி மட்டுமோ வருமொழி முதல் மட்டுமோ இரண்டுமோ திரிதலும் (பொன்+குடம்=பொற்குடம், தேன்+துளி=தேன்றுளி, பொன்+தகடு=பொற்றகடு), 'நிலைமொழியிறுதி எழுத்தோ, வருமொழி முதல் எழுத்தோ, அவ்விரண்டுமோ, கெடுதலும் (மரம்+வேர்=மரவேர், ஆடி, இக்கு=ஆடிக்கு, மரம்+அத்து=மரத்து) என நான்கு வகையாக—அதாவது இயல்பும்மூவகைத் திரிபுமாகத் தொடரும்(6).

ஆயிரம்+ஒன்று என்பன சேரும்போது ஆயிரத்தொன்று என மாற்றம் பெறும். ஆயிரம் என்பது பத்து என்பதை முதலில் அடைமொழியாகப் பெற்றுப் பதினாயிரம் என நின்றாலும், ஒன்று என்பது பத்து என்னும் அடைமொழியுடன் சேர்ந்து பதினொன்று என நின்றாலும், அவற்றையும் நிலைவருமொழிகளாகக் கொண்டு தொடர் அமைக்கப் பெறும் (பதினாயிரம்+ஒன்று, ஆயிரம்+பதினொன்று, பதினாயிரம்+பதினொன்று) (8).

மரூஉச் சொற்களும் நிலைவருமொழிகளாக நிறுத்தப்பட்டுப் புணர்க்கப்படும் (முன்+இல்=முன்றில்) (9).

மேற்குறித்த நிலைவருமொழிகள் தொடரும்போது வேற்றுமை வழியாகவும் அஃதல்லாத அல்வழியாகவும் தொடரும் (மரம்+வெட்டினான், மரம்+வீழ்ந்தது) (10).

இவ்வாறு நிலைவருமொழிகள் தொடரும்போது இடையில் ஓர்எழுத்து வருதலும், சாரியை வருதலும் உண்டு. (விள+கோடு=விளங்கோடு, விள+குறிது=விளக்குறிது மக+கை மகவின்கை, பனை+குறை=பனையின்குறை) (10)

வேற்றுமை வழித் தொடர்தல் இரண்டுவகை; உருபொடு தொடர்தலும் உருபின் பொருள் படத்தொடர்தலும் என. **கல்லால் எறிந்தான்** என்பதில் **கல்** என்பது **ஆல்** என்னும் மூன்றாம் வேற்றுமை யுருபுடன் தொடர்ந்து **கல்லால்** என நின்றது. **கல்லெறிந்தான்** என்பதில் **கல்** என்பது மூன்றாம் வேற்றுமையுருபுடன் இன்றி மூன்றாம் வேற்றுமை உருபின் பொருளுடன் சேர்ந்து **எறிந்தான்** என்பதோடு தொடர்ந்தது. நிலை மொழி உருபுடன் சேர்வதை **உருபுப் புணர்ச்சி** என்றும், உருபின் பொருள்பட வருமொழியுடன் சேர்வதைப் **பொருட்புணர்ச்சி** யென்றும் கூறுவர்.

அல்வழிப் புணர்ச்சிக்குப் பொருட்புணர்ச்சி மட்டும் உண்டு; உருபில்லை; அதனால் அல்வழிப் புணர்ச்சியைப் பொருட் புணர்ச்சி என விதவாது அல்வழிப்புணர்ச்சியென்றே கூறுவர்.

வேற்றுமையுருபுகள் ஐ, ஒடு, கு, இன். அது, கண், என்பன வாம். இவை இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையுள்ள ஆறனுக்கும் தனித்தனியுரியன. முதல், விளி வேற்றுமைகளுக்குத் தனியே உருபுகள் இல்லையாதலின் அவை அல்வழியில் சேர்க்கப்படும்.

வேற்றுமை யுருபுகள் பெயர்ப்பின் வருமேயன்றி வினைச் சொற்பின் வருதல் இல்லை(14) பெயர்கள் உயர்திணைப் பெயர் அஃறிணைப் பெயர் என இருவகைப்படும் (15).

சாரியைகளும் பெயர்களின்பின் வரும் (மக + இன் + கை) சாரியை இன், வற்று எனப்பலவுள (17).

அவற்றுள் 'இன்' என்பது '**ஆவின் கோடு**' என யாதோர் மாற்றமும் இன்றியிருப்பதுடன், '**ஆன் கோடு**' என இகர எழுத்துக் கெடுதலும் (18) ஆ + இன் + கு = ஆவிற்கு என னகரம் றக மாதலும் (21) ஆகிய திரிபுகளும் அடையும். (அன், ஆன், ஒன்ர என்னும் சாரியைகளின் னகரமும் றகரமாகத்திரியும்)

அத்து, இக்கு என்னும் சாரியைகளின் அகரமும் இகரமும் கெடுதல் உண்டு (மக + அத்து + கை = **மகத்துக்கை**, ஆடி + இக்கு + கொண்டான் = **ஆடிக்குக் கொண்டான்**) (23, 24)

அக்கு என்ற சாரியை, எங்கும் அப்படியே வருதலில்லை. 'அ' மட்டும் நிற்க மற்றையன கெடும் (26) குன்று + அக்கு + கூகை = குன்றக்கூகை)

அம் சாரியையின் மகரமெய் வருமொழி வல்லெழுத்தாயின் அதற்கின மாகத்திரியும் (27) (புளி + அம் + காய் = புளியங்காய்) மெல்லெழுத்தும் இடையெழுத்தும் உயிரெழுத்தும் வருமொழி யின் முதவெழுத்தாயின் மகரமெய் கெடும். (புளியநுனி, புளிய வட்டு, புளிய விலை)

அத்து, வற்று என்னும் சாரியைகளுக்கு முன்வரும் வருமொழி யில் வல்லெழுத்திருக்குமானால் அந்த வல்லெழுத்து மிகுந்து வரும் (31) (கலத்து + குறை = கலத்துக்குறை, பலவற்று + கோடு = பலவற்றுக்கோடு).

இவையாவும் சாரியைகளின் திரிபுகள்; இருமொழிப் புணர்ச்சியில் வருவன.

தனியெழுத்துகளுக்கும் சாரியைகள் ஆட்சியில் வரும். உயிர்க் குற்றெழுத்து கரம், காரம், கான் என மூன்று சாரியையும், உயிர் நெட்டெழுத்து காரம் என்னும் ஒரு சாரியையும், அவற்றுள் ஐயும் ஔவும் காரச் சாரியையுடன் கான் என்னும் சாரியையும் பெறும். உயிர்மெய்க்குறில் உயிர்க்குறில் போலும். உயிர்மெய் நெடில் சாரியை பெறாது. மெய்யெழுத்துகள் 'அ' என்னும் சாரியை மட்டும் பெறும். (32—35)

நிலைமொழி யிறுதியில் மெய் இருக்க வருமொழி முதலில் உயிர்வந்தால் அவ்வுயிர், மெய்யின் மேல் ஏறிநிற்கும் (36) (ஆல் + அடை = ஆலடை)

வருமொழி முதலில் உயிராயின் நிலை மொழியிறுதி உயிராகவோ மெய்யாகவோ இருப்பின் தேவைப்பட்டால் உடம்படுமெய் வரும் (38) அணி + இழை = அணியிழை நால் + அர் = நால்வர்.)

தொடர்மொழிகள், சொல்லுவானின் எடுத்தல் படுத்தல் ஓசை வேறுபாட்டால் பொருள் மாறுபடும்; குறிப்பினாலே பொருளறியப்படும் (39) (செம்பொன்பதின்றொடி; செம்பு + ஒன்பதின்தொடி, செம்பொன் + பதின்தொடி)

இதுவரை கூறப்பட்டன யாவும் புணரியற் கருத்துகள்.

**சில கருத்துகள்: (1) புணரியல் வகை**

“தமிழ் எழுத்திலக்கணத்தின் உயிர்ப் பகுதி புணரியல் தான். அதனாலேயே எழுத்து அதிகாரத்தின் பெரும் பகுதியைப் புணரியல் பற்றிக் கொள்கிறது. இவ்வியலும் பிற மொழியாளரின் சந்தியியலும் ஒத்த நோக்கின; ஆனால் ஒத்த போக்கின வல்ல. சொற்புணர்ச்சி பற்றி மொழியியலார் அணுகும் முறை வேறு; தமிழியலார் அணுகுமுறை வேறு. முன்னது புறநிலையை மட்டும் அடிப்படையாகக் கொண்டது; பின்னது புறநிலையோடு பொருள்நிலையையும் அடிப்படையாகக் கொண்டது.

“தமிழ் இலக்கணத்தில் புணரியல் மிக நுணுக்கமானது. அனைத்து இலக்கண ஆசிரியருள்ளும் மூத்த இலக்கண ஆசிரியரான தொல்காப்பியர் புணரியலை ஆறியல்களாகப் பகுத்துள்ளார். மயங்கியல் என முடியும் இரண்டியல்களும், இயல் என முடியும் மூன்று இயல்களும், மரபு என முடியும் ஓர் இயலுமாகச் சேர்ந்து ஆறியல்களாகத் தொல்காப்பியரால் பேசப்பட்டுள்ளது. தொல்காப்பியர் பெயர் வைப்புக்கு வகுத்துக் கொண்ட அடிப்படையை நாம் விளங்கிக்கொள்ள இயலவில்லை. ஒருவகை உகரத்தின் புணர்ச்சியைப் பேசும் குற்றியலுகரப் புணரியலை உயிர் மயங்கியலோடு சேர்த்துக் கூறாமல் தனித்துப் பேசுவானேன்? உயிர்மயங்கியலிலும், புள்ளிமயங்கியலிலும் அடங்கிவிட வேண்டிய செய்திகளையுடைய ஓரியலைத் தொகைமரபு என்று அமைப்பானேன்? புணர்ச்சியோடு நேர்த்தொடர்பு கொள்ளாத வடிவம் பற்றியும், நிறைப்பெயர், அளவுப் பெயர் ஆகியவற்றின் முதல் எழுத்துப்பற்றியும் புணர்ச்சியியல்களிற் கூறுவானேன்? என்பன போன்ற ஐய வினாக்கள் நமக்கு எழுகின்றன. இவற்றிற்கு முழுவிடை ஒருபக்கம் இருக்க, தொல்காப்பியரின் நூற்பா அமைப்பு முறை தனித்தன்மை உடையதாய் இலங்குகிறது”*

இவ்வாறு டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் கூறுவர். அவர் மேலும்,

மொத்தத்தில் மரபிலக்கணம் கூறும் புணர்ச்சி நிலைகள் சிறப்பானவை. அவை வரன்முறையாத் தெளிவாக உணர்த்த முயற்சிக்கப்பட்டிருக்கின்றன. தொல்காப்பியர் அவற்றை

---

* இலக்லகணத்தொகை—எழுத்து. (1967) பக். 106, 107

உணர்த்த ஆறியல்களைச் செலவழித்துள்ளார். வீரசோழியர் சந்திப்படலம் என்றும், முத்து வீரியர் புணரியல் என்றும் அமைத்துக் கொண்டமை ஆராயத்தக்கது. இந்த ஒரே பிரிவில் உயிர்ஈறு மெய்யீறு எனக் கூறி அவற்றிலேயே உருபுப் புணர்ச்சியையும் அடக்கிவிடலாம் என்று தோன்றுகிறது''†

என்றும் கூறுவர்.

நன்னூலுக்கு முற்பட்ட வீரசோழியம் சந்திப்படலம் என்ற ஒரு படலத்திலேயே தொல்காப்பியப் புணரியல்கள் ஆறனையும் அடக்கியிருந்தாலும் அது தெளிவற்றது என்பதனாலேயே நன்னூலார் புணரியலை உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என மூன்றாகக் கொண்டு கூறினர். சொற்புணர்ச்சிகள் உயிரீற்றிலும் மெய்யீற்றிலும் விரிவாகக் கிடத்தலின் தனித்தனியியல்களே தேவை. குற்றியலுகரம் சார்பெழுத்தாதலினாலும், புணர்ச்சிவிதிகள் விரிவாக இருத்தலினாலும் அதற்கும் தனியியல் தேவையாம்.

வேற்றுமை உருபுகளுள் ஐ, ஒடு, அது என்பன உயிர் முதல் உயிரீற்று உருபுகளாகவும், கு என்பது மெய்ம் முதல் உயிரீற்று உருபாகவும் 'இன்' என்பது உயிர் முதல் மெய்யீற்று உருபாகவும் கண் என்பது மெய்ம் முதல் மெய்யீற்று உருபாகவும் உள்ளன. இவற்றுள் உயிரீற்றுருபுகளை உயிர் மயங்கியலுள்ளும், மெய்யீற்றுருபுகளைப் புள்ளிமயங்கியலுள்ளும் கூறவேண்டும். அவ்வாறு பிரிப்பது கூடாமையயானும் ஓரிடத்திலேயே ஒருசேரக் கூறுவது முறையாகலானும் உருபியல் தனியியலாக அமைக்க வேண்டுவதாயிற்று. மேலும் வேற்றுமைத் தொகைப் பொருட் புணர்ச்சியும், உருபு புணர்ச்சியும் சிலவற்றில் ஒத்தும் வேறுபட்டும் வருவதாலும் உருபுப் புணர்ச்சி தனியே கூறப்படவேண்டும்.

மரம் வெட்டினான், மரத்தை வெட்டினான் என்னும் இரண்டு தொடர்களும் இரண்டாம் வேற்றுமைப் பொருள் தருவனவே; மாற்றம் இல்லை. ஆனால் மரம் என்பது ஐ என்னும் இரண்டன் உருபுடன் சேரும்போது மரமை என வருவதில்லை. மரத்தை என அத்துச் சாரியை பெற்றே வருவது. பொருளால் வேறுபாடில்லை யென்றாலும் புணர்ச்சி வகையால் வேறுபாடுண்டு. இப்படிப் பலவுள.

---

† ஷெ ஷெ பக். 109.

எல்லாம் என்பதுடன் அது வுருபு சேரும்போது இடையில் வற்றுச் சாரியையும் இறுதியில் உம்முச் சாரியையும் வரும். எல்லாவற்றதும் எனக் காண்க. எல்லாம் என்பது கோடு என்னுஞ் சொல்லுடன் சேரும்போது அது உருபின் பொருள் கெடாமல் வற்றும் உம்மும் பெறுதல் உண்டு. எல்லாவற்றுக் கோடும் எனக் காணலாம். இப்படி வேறுபாடில்லமமல் அமைவனவும் உண்டு. அதனால் உருபியல் என்பதொன்று தனியே தேவைப் படுவதாகும்.

இனித் தொகைமரபு தனித்துக்கூற வேண்டிய காரணம் காணலாம்.

மரபு என்பது எக்காலத்தும் திரியாதது; திரிக்கப்படாதது. "மாற்றருஞ்சிறப்பின் மரபு" (மரபியல் 1) என்பர் ஆசிரியர்.

தொகை மரபில் கூறப்பட்ட செய்திகள் எக்காலத்துக்கும் ஏற்புடையன என்பதால் தொகைமரபு தனித்ததாயிற்று. இதன் பெயர்க் காரணம் கூறவந்த இளம்பூரணர்,

> "அகத்தோத்தினுள் இருபத்து நான்குஈற்றினும் விரிந்து முடிவனவற்றையெல்லாம் தொகுத்து முடித்தலின் தொகை மரபு எனப்பட்டது. மேல் புணரியலுள் கூறிய கருவிகளாற் செய்கை கூறும் வழித் தொக்குப் புணரும் செய்கை கூறலின் புணரியலோடு இயைபுடைத்தாயிற்று"

என்றார். உருபு புணர்ச்சி உருபியலிற் கூறப்பட்டமையின் வேற்றுமைப் புணர்ச்சியாகக் கூறப்பட்ட யாவும் தொக்குப் புணரும் செய்கையே யாதலினாலும், அல்வழிப் புணர்ச்சியாவும் தொகை விரி என்ற பாகுபாடு இலவாதலினாலும், தொக்குப் புணரும் செய்கை தொகை மரபிற் கூறப்பட்டதென்பது பொருந்தாது. தொகுத்து முடித்தலின் தொகை மரபு எனப் பட்டது என்பதுவே பொருந்தும்.

தொகுத்து முடித்தலும், மரபு பற்றிக் கூறலும் ஆகிய இருவகைகள் இவ்வியலிற் கூறப்பட்டிருத்தலின் தொகை மரபு என்னும் பெயர் பெற்றது என்பதே பொருந்தும்.

இவ்வியலில் உள்ள மொத்த நூற்பாக்கள் 30. தொகுத்து முடித்த நூற்பாக்கள் பொதுவும் சிறப்புமாக 21. மரபு மட்டும்

கூறிய நூற்பாக்கள் 2. தொகுத்து முடித்தலும் மரபு கூறலும் ஆகிய இரண்டும் பற்றிய நூற்பாக்கள் 7.

ஞ ந ம ய வவெனும் முதலாகு மொழியும்
உயிர்முத லாகிய மொழியும் உளப்பட
அன்றி யனைத்தும் எல்லா வழியும்
நின்ற சொல்முன் இயல்பா கும்மே (தொகைமரபு. 1)

இந்நூற்பாவுரையில் இளம்பூரணர்,

இஃது இருபத்து நான்கு ஈற்றிற்கும், அல்வழியிலும் வேற்றுமையிலும் அகத்தோத்தினுள் நாற்பத்தெட்டுச் சூத்திரத்தால் முடிவதனை, ஈண்டு ஒரு சூத்திரத்தால் தொகுத்து முடித்தலாயிற்று. மேலும் இவ்வாறே தொகுத்து முடிக்கின்றவாறு அறிக''

என எழுதியுள்ளார். இப்படித் தொகுத்து முடித்த நூற்பாக்கள் 2, 3, 5—21, 28, 29 ஆகிய 21 ஆகும். மரபு பற்றி மட்டும் கூறிய நூற்பாக்கள் 4, 30 ஆகிய 2 ஆகும். தொகையும் மரபும்பற்றிய நூற்பாக்கள் 1, 22—27 ஆகிய 7 ஆகும். எனவே தொகைமரபுப் புணர்ச்சி தனியாகக் கூறப்பட்டது.*

எல்லாப் புணரியல்களுக்கும் பொதுப் புணர்ச்சி கூறும் புணரியல் தனித்ததாயிற்று.

புணரியல்கள் ஆறானமைக்கு இவ்வாறு அமைதி கொள்வதே சிறக்கும்.

## 2. சாரியைகள்

ஆசிரியர் தொல்காப்பியர் இன், வற்று, அத்து, அம், ஒன், ஆன், அக்கு, இக்கு, அன் என்பன சாரியை யென்றார். நன்னூலாரும் இலக்கண விளக்கமுடையாரும் இவற்றுள் வற்றுச் சாரியைக்குப் பதில் அற்றுச் சாரியையினையும், ஏ, உ, ஐ, கு, ன் என்னும் எழுத்துச் சாரியைகளையும் மூவிடங்களுக் கேற்பத் தம், நம், நும் என்னும் சாரியைகளையும் கூறினர். (நன். 241. இல. வி. 59) தொல்காப்பியர் உடம்பொடு புணர்த்தல் என்பதனால் தம் நம் நும் உம் முதலிய சாரியைகளைத் தம் நூலிற் கூறினமையே பின்னவர்க்கு அவற்றைக் கூற வழி கொடுத்தது.

---

* இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கு (1978) ஆய்வுக்கோவை தொகுதி 2.

ஆசிரியர் வற்று எனக் கொண்ட சாரியையினைப் பிற்காலத்தார் அற்று எனக் கொண்டதேன்? வற்று என்பதைக் கொள்வதால் ஒரு குறையும் அற்று எனக் கொள்வதால் ஒரு குறையும் வருகின்றன. வற்றாயினும் அற்றாயினும் பன்மைப் பெயர்வழியே வரும்.

பல+வற்று+ஐ என்பன யாதோர் மாற்றமும் இன்றிப் பலவற்றை என வரும். பல+அற்று+ஐ என்பன வகர உடம்படு மெய் பெற்ற மாற்றத்துடன் பலவற்றை என வரும். இதனால் வற்று என்றே இருத்தல் பொருந்தும்.

அவ்+வற்று+ஐ என்பன வகர ஒற்றுக் கெட்டு அவற்றை எனவரும். அவ்+அற்று+ஐ என்பன யாதோர் மாற்றமும் இன்றி அவற்றை எனவரும். இதனால் அற்று என்றே இருத்தல் பொருந்தும். எனினும் இதில் ஓர் சிக்கல் உண்டு. அவ்+அற்று என்பன சேரும்போது குறியதின் இறுதி தன் உருபு ஈட்டல் (எழு. 160)என்பதற்கேற்ப அவ்வற்று என வாராமை நோக்கத் தக்கது.

| | |
|---|---|
| யா—யாவற்றை | அவ்—அவற்றை |
| பல—பலவற்றை | யாவை—யாவற்றை |
| பிற—பிறவற்றை | எவை—எவற்றை |
| கிளந்த—கிளந்தவற்றை | எல்லாம்—எல்லாவற்றையும் |

மேல் உள்ள இரண்டு வரிசைக் கூட்டுகளில் முன்வரிசையில் நிலைமொழியீறு மாற்றம் இன்மையின் வற்று மாறுபடுதல் இல்லை. வற்றுக்குப் பதில் அற்று கொள்வதாயின் வகர உடம்படுமெய் தேவை. இரண்டாம் வரிசையில் நிலைமொழி யீறுதிக் கேடுண்டு. இங்கு வற்று எனக் கொள்வதால் யாதும் மாற்றம் இல்லை. அற்று எனக் கொள்வதால் வகர உடம்படு மெய் தேவை. அவையற்றை என்பதில் எதுவாயினும் மாற்றம் உண்டு. எனவே அற்றுச் சாரியை கொள்வதினும் வற்றுச்சாரியை கொள்வதே சிறக்கும் என்னலாம்.

பிற்காலத்தார் அக்கு, இக்கு என்னும் இரண்டு சாரியைக ளையும் நீக்கி அ, கு என்ற இரண்டு எழுத்துச் சாரியைகளைக் கொண்டனர். அக்குச் சாரியை முழுவடிவத்தில் எங்கும் ஆளப் படவில்லை. குன்று+அக்கு+கூகை=குன்றக் கூகை என்பதில் அக்கின் அகரம் மட்டும் நின்றது. க்கு என்பன கெட்டன. அதனால் பிற்காலத்தார் அக்குச் சாரியை கொள்ளாமல் 'அ' சாரியை கொண்டது பொருத்தமே. அக்குச் சாரியை எங்கும்

முழுவடிவில் வாராது. அகர எழுத்து மட்டில் வர மற்றைய எழுத்துகள் கெட்டுவரும் என ஆசிரியர் விதி கூறியுள்ளார். 'அ' என்பதே சாரியை எனக்கொண்டால் இவ்விதி தேவை யற்றதுதான். ஆசிரியர் ஏன் கூறினார்? குன்றக் கூகையென்பது குன்றக்குக்கூகை யென்றே ஆசிரியர் காலத்துக்கு முன்னர் வழக்கில் இருந்திருத்தல் வேண்டும். அவர்கால இலக்கண நூல்களில் இவ்வழக்குக்கே இலக்கணம் கூறப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் ஆசிரியர் காலத்தில் செய்யுளிலும் வழக்கிலும் குன்றக்குக்கூகை என்பதில்லாமல் குன்றக்கூகை என்பதே வழங்கியிருத்தல் வேண்டும். அதனால் முன்னோர் கொண்டதற்கேற்ப முதலில் அக்குச் சாரியை உன்டென்று கூறிப் பின்னர் அது புணர்மொழியிடைவரின் அகரமாகமாறும் என்றார். அக்குச்சாரியை கூறியது முதல் நூல் கருத்து. அகரமாகத் திரியும் எனக் கூறியது வழி நூல் கருத்து எனக்கொள்ளலாம்.*

ஆடி + இக்கு = ஆடிக்கு எனவருமிடத்தில் இகரம் கெடும் எனத் தொல்காப்பியர் கூறினார். பிற்காலத்தார் இக்குச் சாரியை கொள்ளாமல் கு சாரியை எனக் கொண்டு இடையில் வல்லெழுத்து மிக்கதாகக் கொண்டனர். ஆடியில் கொண்டான் என்பது ஆடிக்குக் கொண்டான் என வருதலின் கண் உருபு நிற்குமிடத்தில் கு உருபு நின்றது வேற்றுமை மயக்கம் என்னலாம். வருவர் என்பது வருகுவர் எனவருமிடத்துக் கு சாரியைபெற்றது. அதனால் கு சாரியையினைப் பிற்காலத்தார் சேர்த்தது பொருத்தமே. இக்கு என்னும் சாரியை வழக்கு வீழ்ந்ததாகக் கொள்ளலாம்.

ஆ + இன் + ஐ என்பன ஆவினை எனவும், இன்னின் இகரம் கெட்டு ஆனை எனவும் வரும் என்பர் ஆசிரியர். கோ என்பதுஒன் சாரியை பெறும் என்றும் கூறுவர். நன்னூலார் இவ்வாறு கூறாமல் ஆ, மா, கோ என்பன ன் சாரியை பெறும் என்றார். (நன்.248)

மற்றைச் சாரியைகளை ஆசிரியரைப் பின்பற்றியே பிற்காலத்தார் கூறினர்.

---

* ஆ. சிவலிங்கனார், சாரியை அக்கு—செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 54 பால் 10 (1981)

## 3. நூற்பாக்கருத்து

1. மூன்றுதலை யிட்ட முப்பதிற் றெழுத்தின்
இரண்டுதலை யிட்ட முதலா கிருபஃது
அறுநான் கீற்றொடு நெறிநின் றியலும்
எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்
மெய்யே உயிரென்று ஆயீ ரியல.

இந்நூற்பாவின் கருத்துரை, "மெய்யும் உயிரும் மொழிக்கு முதலிலும் ஈற்றிலும் வரப் பெறும் என்பதே" என்பர் டாக்டர் முத்துச் சண்முகம்.* மொழிமரபில் உயிரும் மெய்யும் மொழிக்கு முதலிலும் ஈற்றிலும் வரும் என்பது கூறப்பட்டு விட்டமை யானும் அங்கு மெய்யானது உயிரொடு கூடியே முதலில் வரும் என்பதும் கூறப்பட்டு விட்டமையானும் ஈண்டும் கூறுதல் கூறியது கூறலாகும். எனவே இந்நூற்பாவின் கருத்து வேறாகும்.

இவ்வியலிலிருந்து மொழிகள் தம்முள் புணரும் இயல்பு கூறத் தொடங்குகின்றார். அம்மொழிகளின் முதலும் ஈறுமே புணர்ச்சி விதிகளுக்குட்படுவன; ஆதலின் மொழியிறுதி மெய் பற்றியோ மொழிமுதல் உயிர் பற்றியோ யாதோர் ஐயமும் தோன்றாமல் மொழியிறுதி உயிர் மெய்யும் மொழிமுதல் உயிர் மெய்யும் பற்றியே அவ்வுயிர் மெய்களை ஒற்றுமை நயத்தால் ஒன்றெனக் கொள்வதா அல்லது வேற்றுமை நயத்தால் வேறெனக் கொள்வதா என்ற ஐயம் தோன்றும். அதனால் புணர்நிலைக்கேற்ப வேற்றுமை நயத்தால் வேறெனக்கொண்டு 'மொழிமுதல் உயிர் மெய்யாயின் அதனை மொழிமுதல் மெய் என்றும், மொழியிறுதி உயிர்மெய்யாயின் அதனை மொழியிறுதி உயிர் என்றும் கொள்ளவேண்டும். எனவே புணர்நிலைத் தொடர்பாக மொழிகளின் முதலும் ஈறும் உயிர், மெய் என்னும் இரண்டில் அடங்கும் என்பதே இந்நூற்பாவின் கருத்தாகும்.

2. அவற்றுள்,

மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல் ; இந்நூற்பா

வுக்குப் பொருள் கூறுவதிலும் மாறுபாடுகள் உண்டு.

---

* *இக்காலத்தமிழ் (பக். 234.) முத்துப் பதிகம், ஆழ்வார் நகர், மதுரை (1980)*

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் 'மொழி முதலில் மெய் வாராது;மொழியிறுதியில்தான் மெய்வரும் என்றுகூறவந்த ஆசிரியர், ஈற்று மெய்யெல்லாம் புள்ளி பெறும் என்று கூறு முகத்தான், மொழிமுதல் மெய்புள்ளி பெறாதுஉயிர்மெய்யாகவே நிற்கும் என்பதையும், மெய்ம் முதல் எல்லாம் புள்ளி பெறா என்னாமல் ஈற்று மெய்யெல்லாம் புள்ளிபெறும் என ஈற்றின் மேல் வைத்துக் கூறியதனால் ஈற்றுமெய் உயிர் ஏற இடம் கொடுக்கும் என்பதையும் குறிப்பால் உணர்த்தினார். என்று கூறுவர். இவர்களை மறுத்து,

> "இச்சூத்திரம் உணர்த்திய பொருள்தான் யாதோ எனின் கூறுதும். மொழி மரபு இருபத்தேழாம் சூத்திரத்தால் மொழி முதல் மெய் உயிர் மெய்யாக வரும் என்றும், புணரியல் முதற் சூத்திரத்தால் மெய் மொழிக்கு முதலிலும் ஈற்றிலும் வரும் என்றும் ஆசிரியர் கூறினாராதலின் இரண்டும் கேட்ட மாணாக்கனுக்கு அவ்வாறாயின், மொழியீற்று மெய் உயிர் மெய்யாக வருமோ தனி மெய்யாக வருமோ என ஐயம் நிகழுமன்றே? அவ்வையம் நீக்குதல் நுதலிற்று இச்சூத்திரம் என்க. எவ்வாறு நீக்கியது எனின் மொழிமுதல் மெய் போல உயிர் மெய்யாக வாராது மொழியீற்று மெய் தனி மெய்யாகவே வரும் என்று கூறுவதால் என்க.*

என்பர் முத்து சண்முகம்.

க. வா. சச்சிதானந்தம் என்பார் இந்நூற்பாவுக்கு, "மொழி யிறுதி மெய்யெல்லாம் தனி மெய்களின் இயல்பொடு நிற்க" எனப் பொருள் கூறித் தனிமெய்களின் இயல்புகளாவன (1)புள்ளி பெறுதல் (2) உயிர்களுடன் சேரும்போது புள்ளியிழந்து உருபு திரிதல் (3) வரும் உயிர் ஏறி முடிதற்கு இடம் கொடுத்தல் எனக் கூறி, மொழியிறுதி மெய்களும் அம்மூன்று இயல்புகளையும் பெறும் என விளக்கமும் கூறினார்† இவர் கூற்றில் 'புள்ளி' என்பதற்கு மெய்யெழுத்து என்பது பொருளாகும்.

மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல் (எழு. 15) என்று கூறி விட்டமையால் மெய் எங்கு வந்தாலும் புள்ளியொடு நிற்கும் என்பது பெறப்பட்டுவிட்டது. அதனால் ஈற்று மெய்

---

*இக்காலத் தமிழ் பக். 238

†இந்நூல் பக். 9, 10ல் விளக்கமாகக் காண்க.

புள்ளி பெறும் என்பது கூறியது கூறலாய் முடியும். மெய் மொழிக்கு முதலில் வருவதாயின் உயிரொடு கூடியே வரும் என்பது 'உயிர் மெய் அல்லன மொழி முதலாகா (எழு. 60) என்னும் நூற்பாவினால் கூறப்பட்டது ஆதலினாலும், உயிர் மெய்யின் வரிவடிவம் 'புள்ளியில்லா எல்லாமெய்யும்' (எழு. 17) என்னும் நூற்பாவினால் புள்ளியில்லாத வடிவம் என்பது கூறப்பட்டது ஆதலினாலும், ''மூன்று தலையிட்ட (எழு. 103) என்னும் நூற்பாவினால் நிலை வருமொழிகள் (உயிர் மெய்யாக இருந்தாலும்) உயிர் முதல் உயிர் ஈறு மெய் முதல் மெய்யீறு என்றே கொள்ளப் படும் என்பது கூறப்பட்டது ஆதலினாலும் 'மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்' என்னும் இந்நூற்பாவுக்கு ''ஈற்று மெய்கள் எல்லாம் தனிமெய்களின் இயல்பொடு ஒத்து நிற்கும்'' என்னும் உரையே சிறக்கும் எனக் கருதலாம்.

மேலும், 'குற்றியலுகரமும் அற்றென மொழிப' என்னும் நூற்பாவின் மாட்டேறும் இந்நூற்பாவோடு பொருந்தியமை தலையும் காணலாம். நாகு என்னும் குற்றியலுகர ஈற்றுச்சொல் இறுதியெழுத்தாகிய கு என்பதன்மேல் புள்ளி பெற்று நாகு என நிற்பது. உயிர் முதன்மொழி வருமொழியாய்வரின் அவ்வுயிர் ஏறி முடியுங்கால் புள்ளியிழந்தும் உருவு திரிந்தும் காணப்படும். நாகு + அரிது = நாகரிது எனக் காண்க.

3. உடம்படுமெய் பற்றித் தொல்காப்பியர்,

எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருபு கொளல் வரையார்

என்றார். நிலை மொழியீறும் வருமொழிமுதலும் உயிராக இருப்பின் இடையில் அவ்வுயிர்களை இணைக்க உடம்படுமெய் வரும். அம்மெய் யாது எனக் கூறப்படவில்லை. பெரும்பாலான வழக்குகளைக் கொண்டு நன்னூலார்,

இ ஈ ஐவழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும், ஏமுன் இருமையும்,
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும் (நன். 162)

என்று வரையறை செய்தார். இவ்வரையறை ஓரளவிற் பொருத்தமே எனினும் விகுதிப்புணர்ச்சியினும் சொற்புணர்ச்சி

யினும் இவ்வரையறைக் குட்படாமல் உடம்படுமெய் வந்தனவும் உண்டு.

ஐ + அர் = ஐவர்–வ்

என விகுதிப் புணர்ச்சிக் கண்ணும்

மா + இரு = மாயிரு–ய்

எனச் சொற்புணர்ச்சிக் கண்ணும் நன்னூலார்க்கு மாறுபட்டு வருவன வுள. யகர வகர உடம்படு மெய்களே யன்றி

அறி + அர் = அறிஞர்—ஞ்
வாழ் + அர் = வாழ்நர்— ந்

என ஞகர நகர உடம்படுமெய்களும் வருகின்றன. இவ்விரண்டை யும் பெயரிடை நிலையெனப் பின்னர் வழங்கினர்.

தொல்காப்பியர் பொதுவில் உடய்படுமெய் எனக் கூறியதே சாலும். மெய்யீற்றின்முன் உயிர்வரினும் உடம்படுமெய் வருதலும் உண்டு. கள் + அன் = கள்வன் எனவும், விண் + அத்து = விண்வத்து எனவும் வகர உடம்படுமெய் வந்தமை காணலாம்.

வாரும், கோரும், தாரும், காரும் என்பனவற்றில் ரகர உடம்படுமெய் வந்தது என்பர் F. X. C. நடராசர்.* வா + உம் = வாரும், கோ + உம் = கோரும், தா + உம் + = தாரும் கா + உம் = காரும் என வருவனவற்றில் 'ரு' விரித்தல் விகாரம் என்பர் பிற்காலத்தார்.

சார்வுழி. செல்வுழி என்பனவற்றில் மெய்யீற்றுமுன் 'வ்' உடம்படுமெய் வந்தது என்பர் மாறனலங்கார வுரையாசிரியர் (மாற. 47—1-உரை) சார் + வ் + உழி எனப்பிரித்து வகர மெய் எதிர்கால இடைநிலை என்றும் கூறலாம். சார்ந்த விடத்து, சாருமிடத்து, (சார்கின்றவிடத்து) எனப் பொருள்கொண்டு வினைத்தொகை எனக்கூறி வகரம் உடம்படுமெய் யன்று என்பர் நச்சினார்க்கினியர். உடம்படுமெய்யன்று என்றவர் வகரம் எதுவாகும் எனக் கூறாது போயினர். சார்வு + உழி என்பனவே

---

* ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு (மதுரை) கருத்தரங்கு ஆய்வுக் கட்டுரைகள். பக். 24. (1981)

சார்வுழி என்றாயிற்று. சார்வு என்பதில் உள்ள வு தொழிற் பெயர் விகுதியாகும். அவ்வாறே உண்புழி என்பதிலும் பு தொழிற்பெயர் விகுதியாகும். எனவே மெய்யீற்றின்முன் வரும் உடம்படு மெய்க்குக் கள்வர், சேய்நர்போலும் சொற்களையே காட்டல் தகும். கள்வர் என்பதே கள்ளர் எனவும், சேயர் என்பதுவே சேய்நர் எனவும் வருவதால் வ், ந் ஆகியவற்றை உடம்படுமெய் என்னலாம். சார்வுழி செல்வுழி என்பன சாருழி, செல்லுழி எனவும் வரும் எனக் கொள்ளின் வகரம் உடம்படு மெய் எனக் கொள்வதில் தவறில்லை. உண்புழி என்பது உண்ணுழி எனவரின் பகரமெய் உடம்படுமெய் எனப்படும். எனவே உயிரீற்றுமுன் வருதல் மட்டுமன்றி மெய்யீற்றின் முன் உயிர்வரினும் உடம்படுமெய் (எந்த மெய்யேனும்) வரும் என்பது பெறப்படும்.

# Foreword

'Puṇariyal' deals with the general rules of morpho-phonemic changes in the Tamil Language. We may say that 'Puṇarcci', morpho-phonemics, forms the life core of Tamil grammatical rules on letters. Of the different aspects of the Tamil Grammar, this 'Puṇarcci', is very subtle, minute, sharp and deep. This 'Puṇarcci' as well as the 'sandhi' concept of other languages have a similar view but differ in their manner. Linguistic approach of this concept varies from that of the Tamil traditional grammars. Of these, the former has only the external form of the word as its basis, while the latter has considered meaning also, along with the external form.

Tolkāppiyam's first chapter, Eluttatikāram allots a large space and considerable place to the study of these morpho–phonemic changes. The discussion on these rules cover six sections, viz, Puṇariyal, tokaimarapu, urupiyal, uyir mayaṅkiyal, puḷḷimayaṅkiyal and kuṟṟiyalukarap puṇariyal.

The basis on which Tolkāppiyam divides its morpho-phonemic rules to be included under these six sections, does not seem fully explainable and comprehensible. It is not quite easy to understand why the morphophonemic changes of a particular shortened 'u' are made into an individual section and not given along with the rules on vowels. Similarly, the reason for the formation of a separate section as 'tokaimarapu' while its rules might well be included under the sections on consonants and vowels, is not known. It is also unknown, why matters on the first letters of the words denoting linear measures and weights, and the unrelated matters on form, are given in these sections. Though such questions arise, there is always possibility to explain them with due reasons.

It may be possible to include all rules under two categories according to the ending sound as vowel and consonant and include case contents accordingly under them.

It is very interesting to note that, not only word-form but also its contextual meaning is important and basic for the morpho-phonemic changes it undergoes. This can be illustrated with a few examples:

1. The word mā, when it joins with the word kōṭu, meaning, branch of a tree, becomes **māṅkōṭu**; But while it takes the same word, with a different meaning, as the horns of an animal, has the resultant form as **māṉkōṭu**. In the former the nasal ṅ, which is related to the following surd k comes in between, while in the latter, a new nasal sound **ṉ** occurs between the words.

2. Similarly, the word tāy, meaning mother, when comes before the word kai, meaning hand, undergoes no change and occurs naturally as **tāykai**. But, when the word kalakam meaning quarrel, comes in the place of kai, there occurs a consonant doubling resulting in **tāykkalakam**. The complexity of the morpho-phonemic changes in the words are revealed by these examples. As per the meaning context, a letter addition occurs in the latter category.

A letter change effected by morpho-phonemics can also alter the meaning. The sentence Pulavaṉ kaṇṭāṉ, means, 'the poet saw', while a subtle change in the first word end, as Pulavaṟ kaṇṭāṉ, gives quite different a meaning as 'the poet was seen'. Of these two examples, the former has no grammatical case context, while the latter has it. Because of the change in the letter 'ṟ'-the subject Pulavaṉ-has become an object.

Coming back to 'Puṇariyal', we find it as a section on the general rules of morpho-phonemics, and so preceding all other sections which are on more special and specific rules. This section, Puṇariyal, comes as the fourth one in the first chapter of Tolkāppiyam and has altogether forty sutras.

The joining together of letters, in different manner and different circumstances are discussed in Puṇariyal. Here, letters are those which begin and end the words. When two words

follow each other, the last letter of the first word and the first letter of the second word go together in four different ways. The description of these ways constitute this Puṇariyal.

The letters that occur in the first and last position of the words can be included under the two varieties, viz., vowels and consonants. Though we have in Tamil, a third variety of letter called Uyirmey (vowel-consonant), on phonetic basis it is segmented and brought under the above two.

In a phrase or sentence, the first words is called the existing-word, while the next one is called the following word. Between these, the joining may come among two vowels or two consonants or a vowel and a consonant or a consonant and a vowel. So there are four possible joinings.

In another way of approach, the word that join may either be two nouns, or two verbs, or a verb and a noun, or a noun and a verb. So there are four possible joinings.

In such occasions, the words may follow without any change; or may get on additional letter in between; or the first, last or both letters may change into another letter or letters; or the last or first letter may disappear. That is, words may follow naturally or accept changes in any of the above three ways.

Just like the simple-single words, compound and complex words also take these morpho-phonemic rules in a similar way. Non-grammatical usages also accept these changes.

All these joinings may occur when the words follow each other in grammatical case contexts or otherwise. In both these situations, there may occur a letter addition or a euphonic addition.

In grammatical case contexts also there is the possibility of two different positions, as the presence of the case marker and the absence of it, the meaning being explicit. Of these the former is noted as case marker-sandhi, while the latter is referred to as meaning-sandhi.

Of the eight cases, only the middle six have case markers as ai, oṭu, ku, i<u>n</u>, atu, kaṇ. So the first and the last, having no markers are classed along with the non-case contexts.

Just as the case markers, which occur after nouns alone, the euphonic additions also follow the nouns. These euphonic additions form quite a long list, in this puṇariyal section of Tolkāppiyam. They have special and individual sandhi rules and they are also listed.

For example, the euphonic addition, 'i<u>n</u>', when following ā, in some position occurs in its natural form and in others under goes changes as <u>n</u> or <u>r</u>.

When vowel occurs as the first letter of the second word, if the first word ends in a consonant, the vowel does not stand alone, but joins with the consonant to form a vowel consonant (uyirmey); if the last letter of the first word also is a vowel, then. they join together with an additional consonant letter in between (uṭampaṭumey).

In some phrases, and sentences, where these morphophonemic additions occur, a varied recital in tone or stress may give differences of meaning.

These are the rules, discussed in this particular section.

This volume comes as the sixth one in the series of Tolkāppiyam commentaries' edition. It includes two English translations also. Other than the old commentaries like Iḷampūraṇam and Nacci<u>n</u>ārkkki<u>n</u>iyam, those of the 20th c. critics like Venkata Rajulu Reddiar, P.S.S. Sastri and the views of the modern linguistics, are also included in this edition. The editor of this volume Prof. Sivalinganar adds his views whereever necessary. This edition will be of much use to Tolkāppiyam lovers and those interested in Tamil grammar.

**S. V. SUBRAMANIAN**

# சுருக்க விளக்கம்

அகத் — அகத்திணையியல்
அகம் — அக நானூறு
அவி — அவிநயம்
ஆ. மொ — ஆங்கில மொழிபெயர்ப்பு
இடை — இடையியல்
இல — இலக்குவனார்
இ-ள் — இதன் பொருள்
இளம் — இளம்பூரணர்
உ-ம் — உதாரணம்
உயிர், உயிர்மயங்—உயிர் மயங்கியல்
உயிரீற்—உயிரீற்றுப் புணரியல்
உரி—உரியியல்
உருபி—உருபியல்
எச்ச—எச்சவியல்
எ-டு—எடுத்துக்காட்டு
எழு, எழுத், எழுத்து—எழுத்ததிகாரம்
எ-று—என்றவாறு
க, சு—கமீல்சுவலபில்
கலி—கலித்தொகை
குற்றிய—குற்றியலுகரப் புணரியல்
சந்திப்—சந்திப்படலம்
சங்கர—சங்கர நமச்சிவாயர்
சப்தமணி, சப்த—சப்தமணி தருப்பணம்
சமா—சமாசப் படலம்
சிவ—சிவலிங்கனார்
சிவஞா—சிவஞானமுனிவர்
சிலப்—சிலப்பதிகாரம்
சுக்ல-ப்ரா—சுக்லயஜுர்வேதப் ப்ராதிசாக்கியம்
சுவாமி, சாமி—சுவாமி நாதம்
சுப்பிர. சுப்பிரமணிய சாஸ்திரியார்
சு. வே. — சுவடி வேறுபாடு
செய்யு, செய் — செய்யுளியல்
சொல் — சொல்லதிகாரம்
தைத். ப்ரா — தைத்ரீய ப்ராதிசாக்யம்

தொகை — தொகைமரபு
தொல் — தொல்காப்பியம்
தொல் — பொருள் — தொல்காப்பியப் பொருளதிகரம்
தொன், தொ. வி — தொன்னூல் விளக்கம்
நச் — நச்சினார்க்கினியர்
நன் — நன்னூல்
நூன் — நூன்மரபு
நேமி — நேமிநாதம்
ப்ரா — ப்ராதிசாக்கியம்
பக் — பக்கம்
பதி — பதிகம்
பதிற்று — பதிற்றுப்பத்து
பி. இ. நூ — பிற்கால இலக்கண நூல்கள்
பிறப் — பிறப்பியல்
புணரி — புணரியல்
புள்ளி — புள்ளி மயங்கியல்
புறம் — புறநானூறு
பேரா — பேராசிரியர்
பொ-ள் — பொருள்
மயிலை — மயிலை நாதர்
மரபு — மரபியல்
மலைபடு — மலைபடுகடாம்
மாற, மாறன் — மாறனலங்காரம்
முத்து—முத்து வீரியம்
மொழி—மொழி மரபு
லீலா—லீலா திலகம்
வினை—வினையியல்
வீர —வீரசோழியம்
வெள்ளை—வெள்ளைவாரணனார்
வேங்கட—வேங்கடராசுலு ரெட்டியார்
வேற், வேற்றுமை—வேற்றுமையியல்
வேற். ம—வேற்றுமை மயங்கியல்

# SYSTEM OF TRANSLITARATION

## உயிர் எழுத்துகள் — Vowels

| | இலக்குவனார் | கமீல் சுவலபில் |
|---|---|---|
| அ | — a | a |
| ஆ | — ā | ā |
| இ | — i | i |
| ஈ | — ī | ī |
| உ | — u | u |
| ஊ | — u | u |
| எ | — e | e |
| ஏ | — ē | ē |
| ஐ | — ai | ai |
| ஒ | — o | o |
| ஓ | — ō | ō |
| ஔ | — au | au |

## மெய்யெழுத்துகள் — Consonants

**வல்லினம்**

| | | |
|---|---|---|
| க் | — k | k |
| ச் | — s | c |
| ட் | — t | ṭ |
| த் | — th | t |
| ப் | — p | p |
| ற் | — ṛ | ṛ |

**மெல்லினம்**

| | | |
|---|---|---|
| ங் | — ṅ | ṅ |
| ஞ் | — ñ | ñ |
| ண் | — ṇ | ṇ |
| ந் | — n | n |
| ம் | — m | m |
| ன் | — ṉ | ṉ |

**இடையினம்**

| | | |
|---|---|---|
| ய் | — y | y |
| ர் | — r | r |
| ல் | — l | l |
| வ் | — v | v |
| ழ் | — ḻ | ḻ |
| ள் | — ḷ | ḷ |

# புணரியல்

# தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

## உரைவளம்

## புணரியல்

### இளம்பூரணர்

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், மொழிகள் (மேற் செய்கை ஒத்துக்களுள்) புணர்தற்குரிய கருவியின் இயல்பு கூறினமையின் புணரியல் எனப்பட்டது. மேல் மொழிமரபில் கூறிய மொழிகள் புணருமாறு உணர்த்தினமையின் மொழி மரபினோடு இயைபுடைத்தாயிற்று.

### நச்சினார்க்கினியர்

மொழிமரபிற் கூறிய மொழிகளைப் பொதுவகையாற் புணர்க்கும் முறைமை யுணர்த்தினமையின் புணரியல் என்று இவ் வோத்திற்குப் பெயராயிற்று. ஈண்டு முறைமை யென்றது மேற் செய்கை ஓத்துக்களுட் புணர்தற்கு உரியவாக ஈண்டுக் கூறிய கருவிகளை.

### சுப்பிரமணிய சாஸ்திரியார்

எழுத்துக்களின் வகை இயல்பு முதலியவற்றையும், அவற்றின் பிறப்பிடம் முயற்சி இவற்றையும் பற்றி நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல் என்ற மூன்று இயல்களிற் கூறிய பின்னர், இரண் டெழுத்துக்கள் ஒன்றன்பின் மற்றொன்று கூட்டி ஒலிக்கப்படும் பொழுது நேரும் மாறுதல்களைக் கூறத் தொடங்கினர்.

அவ்வெழுத்துக்கள் சொற்களின் உறுப்பாய் நின்று புணரும் போது நிகழும் மாறுதல்களின் வகையையும் அங்கு இடையிற் றோன்றும் சாரியைகளையும், பகுதிக்கும் சாரியைக்கும் நேரும் புணர்ச்சிகளையும் புணரியலிலும், பெரும்பாலும் வருமொழி முதலில் வரும் மாறுதல்களைக் கூறும் விதிகளைத் தொகை மரபிலும், பெயருக்கும் வேற்றுமையுருபுக்கும் இடையில் வரும் புணர்ச்சி விதிகளை உருபியலிலும், நிலைமொழியீறு உயிராய் இருக்க வரும் புணர்ச்சி விதிகளை உயிர்மயங்கியலிலும், நிலை மொழியீறு மெய்யாய் இருக்க வரும் புணர்ச்சி விதிகளைப் புள்ளி மயங்கியலிலும், நிலைமொழியீறு குற்றியலுகரமாய் இருக்க வரும் புணர்ச்சி விதிகளைக் குற்றியலுகரப் புணரியலிலும் ஆசிரியர் கூறினர்.

### வேங்கடராசுலு ரெட்டியார்

மேல் மொழி மரபிற் கூறிய மூவகை மொழிகளும் தம்முட் புணரும் இயல்பு கூறுகின்றதனான், இவ்வியல் புணரியல் என்னும் பெயர்த்தாயிற்று. அஃதேல் இவ்வியலை மொழி மரபினையடுத்து வைக்க எனின், மொழிமரபில் எழுத்துக்களின் இயல்பினையே கூறினாரகலானும், புணர்ச்சியில் எழுத்துக்கள் திரிதற்குக் காரணம் அவ்வெழுத்துக்களின் பிறப்பிடத்தியல்பே யாகலானும், எழுத்துக்கள் திரிந்து புணரும் புணரிலக்கணம் கூறுதன் முன்னர் எழுத்துக்களின் பிறப்புணர்த்துதல் வேண்டற் பால தாகலானும் மொழிமரபினையடுத்துப் பிறப்பியலை நிறுத் தினார் என்க.

### வெள்ளை வாரணனார்

மொழிகள் புணர்தற்குரிய கருவியின் இயல்பு உணர்த்தின மையின் இது புணரியல் என்னும் பெயர்த்தாயிற்று. மேற்கூறப் படும் புணர் மொழிச் செய்கைகளுக்கு இன்றியமையாத சிறப்புக் கருவிகள் இதன்கண் கூறப்படுகின்றன.

### சிவலிங்கனார்

இங்கு நின்றும் மொழிகள் நிலை வரு மொழிகளாக நின்று தம்முட் புணருமாறு கூறத் தொடங்கினார். புணரியல் என்னும் பெயர் தொகைமரபு முதல் குற்றியலுகரப் புணரியல் ஈறாக உள்ள அனைத்திற்கும் உரியதாயினும் அவையெல்லாம் நிலைமொழியீறும் வருமொழிமுதலும் பற்றிக் கூறுவன. இவ் வியல் அவ்விரு மொழிகளின் இடையில் வரும் சாரியை, உருபு

களின் இயல்பு கூறுதலினாலும், புணர்மொழிகளின் பொது இலக்கணம் கூறுதலினாலும் தனித்துப் புணரியல் எனப்பட்டது.

**தே. ஆண்டியப்பன்**

புணர்ச்சியைப் பற்றிப் பேசுகிறார் என்பதைவிட, சொற் புணர்ச்சியின் சூழல்களையும், அதைப்பற்றிய தமது கொள்கை களையும் வகைப்படுத்தும் முறைகளைப் பற்றியுமே விளக்கு கிறார்; அதனால் 'புணர் மொழியியல்' என்றே முற்பகுதியை (புணரியலை)க் கருதலாம். (காப்பியர் நெறி—எழுத்தியல். பக்கம். 50 வெற்றிவேல் பிரசுரம் மதுரை1. 1976)

**வை. தங்கமணி**

பின்னர் வரும் தொகைமரபு முதல் குற்றியலுகரப் புணரியல் வரையுள்ள இயல்களுக்கு இவ்வியல் ஓர் முன்னுரையாக அமை கிறது. நூலுக்கு முன்னுரை போலவும், வீட்டிற்கு நுழைவாயில் போலவும் இது அமைகிறது.†

### மொழிகளின் முதலும் ஈறும்

மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வரும் எழுத்துகள்

*104. மூன்றுதலை யிட்ட முப்பதிற்று எழுத்தின்
இரண்டுதலை யிட்ட முதலாகு இருபஃது
அறுநான்கு [1]ஈறொடு நெறிநின் றியலும்
எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்
மெய்யே யுயிரென்று ஆயீர் இயல. (1)*

**ஆங்கில மொழிபெயர்ப்பு**

**இலக்குவனரர்**

Of three and thirty letters
Two and twenty begin the words
And six times four end the words
The end and beginning of all the words
Fall into two sorts: consonants and vowels.

† டாக்டர், ஏ. என். பெருமாள் மூலம் எனக்கு அனுப்பி வைக்கப் பட்ட 'புணரியல் - இயல் விளக்கம்' என்னும் கட்டுரையில் உள்ள கருத்து இது.

* நூற்பாவின் முன்னர் உள்ள எண் எழுத்ததிகாரத் தொடர் எண், இறுதியிலுள்ள எண் புணரியல் தொடர் எண்.
பாடவேறுபாடு 1. ஈற்றொடு. நச்.

**கமில் சுவலபில்**

Of the three and thirty sounds
two and twenty occur initially
and six times four occur finally,
all words end and begin
only with the two, consonants or vowels.

**இளம்.**

இத்தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், மொழி மரபினுள் முதலும் ஈறும் கூறிய வழி உயிரும் மெய்யும் உயிர் மெய்யும் என மூன்றாய் விரிந்து நின்றதனை உயிரும் மெய்யும் என இரண்டாகத் தொகுத்தலானும், அவ்வழி இருபத்திரண்டு எழுத்து மொழிக்கு முதல், இருபத்து நான்கு எழுத்து மொழிக்கு ஈறு எனக் கூறலின், முப்பத்துமூன்று எனப்பட்ட எழுத்து நாற்பத்தாறு ஆவனபோல விரிந்ததனை அவையெல்லாம் முப்பத்து மூன்றினுள்ளனவே எனத் தொகுத்தலானும் விரிந்தது தொகுத்தல் நுதலிற்று.

(இதன்பொருள்.) மூன்று தலையிட்ட முப்பதிற்று எழுத்தின்–மூன்றனை [1]முடிவிலே இடப்பட்ட முப்பதாகிய எழுத்தினுள், இரண்டு தலை இட்ட முதல் ஆகு இருபஃது—அவ்விரண்டினை [2]முடிவிலே இடப்பட்ட மொழிக்கு [3]முதலாய இருபதும், அறுநான்கு ஈறொடு நெறி நின்று இயலும்—இருபத்து நான்கு ஈற்றொடு வழக்கு நெறிக்கண் நின்று நடக்கும், எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்—மூவகை மொழிக்கும் ஈறும் முதலுமாவன, மெய் உயிர் என்று அ ஈர் இயல—மெய்யும் உயிருமாகிய அவ்விரண்டு இயல்பினையுடைய. (என்றவாறு)

எடுத்துக்காட்டு: மரம், இலை, ஆல், விள என மெய்யும் உயிரும் முதலும் ஈறும் ஆயின.

இருபத்திரண்டு எழுத்து [4]முதலாவன பன்னிரண்டு உயிரும் ஒன்பது உயிர்மெய்யும் மொழிமுதற் குற்றியலுகரமும் என

**மேற்கோள் :** தொகுத்துக்கூறல், முந்துமொழிந்ததன் தலைதடு மாற்றம் என்பனவற்றிற்கு மேற்கோள் இந் நூற்பா (தொல்-பொருள். 665-பேராசிரியர்)

சு. வே : 1. முடியிலே 3. முதலாகிய
2. முடியிலே 4. முதலாயின

இவை. இருபத்து நான்கு எழுத்து ஈறாவன பன்னிரண்டு உயிரும் பதினொரு புள்ளியும் ஈற்றுக் குற்றியலுகரமும் என இவை. *ஈற்றொடு என்பது விகாரத்தால் தொக்கது. மெய் முற் கூறியவதனால் நால்வகைப் புணர்ச்சியும் மெய்க்கண் நிகழு மாறு உயிர்க்கண் நிகழாதென்பது கொள்க.

நச்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், மொழிமரபிற் கூறிய மொழிக்கு முதலாம் எழுத்தும் மொழிக்கு ஈறாம் எழுத்தும் இத்துணை யென்றலும், எல்லா மொழிக்கும் ஈறும் முதலும் மெய்யும் உயிருமல்லது இல்லையென்று வரையறுத் தலும், ஈறும் முதலுமாக எழுத்து நாற்பத்தாறு உளவோ என்று ஐயுற்றார்க்கு எழுத்து முப்பத்து மூன்றுமே அங்ஙனம் ஈறும் முதலுமாய் நிற்பது என்று ஐய மறுத்தலும் நுதலிற்று.

(இ—ள்.) மொழிக்கு முதலாம் எழுத்து இரண்டை முடியிலே யிட்ட இருபஃதும், மொழிக்கு ஈறாம் எழுத்து இருபத்து நான்கு மாகின்ற, மூன்றை முடியிலேயிட்ட முப்பதாகிய எழுத்துக் களோடே, வழக்கு நெறிக்கண் நின்று நடக்கும் மூவகை மொழிக்கும், மெய்யும் உயிரும் என்று கூறப்பட்ட அவ்விரண்டு இயல்பினையுடைய எழுத்துக்களே, ஈறும் முதலும் ஆவன; எ—று.

இருபத்திரண்டு முதலாவன பன்னீருயிரும் ஒன்பது உயிர் மெய்யும் மொழி முதற் குற்றியலுகரமுமாம். இருபத்து நான்கு ஈறாவன பன்னீருயிரும் பதினொரு புள்ளியும் ஈற்றுக் குற்றிய லுகரமுமாம். மெய்யை முற்கூறினார் நால்வகைப் புணர்ச்சியும் மெய்க்கண் நிகழுமாறு உயிர்க்கண் நிகழா என்றற்கு.

எ—டு: மரம் என மெய்ம்முதலும் மெய்யீறும், இலை என உயிர் முதலும் உயிர் ஈறும், ஆல் என உயிர் முதலும் மெய்யீறும், விள என மெய் முதலும் உயிர் ஈறும் ஆம். மொழியாக்கம் இயல்பும் விகாரமும் என இரண்டாம். உயிர் தாமே நின்று முதலும் ஈறும் ஆதல் இயல்பு. அவை மெய்யோடு கூடி நின்று அங்ஙனமாதல் விகாரம்.

* ஈறு + ஒடு = ஈற்றொடு. ''நெட்டெழுத்திம்பரும்'' (எழு.-197) என்னும் விதிப்படி 'ற்' மிக வேண்டுவது மிகாதிருத்தலின் விகாரத்தால் தொக்கது என்றார்.

சுப்பிர.

இச்சூத்திரம் எற்றுக்கெனின், மொழி மரபில் ''உயிர் மெய் யெல்லாம் மொழிமுதலாகா'' (எழுத். 6.) எனவும், ''உச்சகாரம் இருமொழிக் குரித்தே'' (எழுத். 75) எனவும், ''உப்ப காரம் ஒன்றெனெ மொழிப'' (எழுத். 76) எனவும் கூறினமையானும், நிலைமொழி யீற்றினையும் வருமொழி முதலையும் உயிர்மெய் யாகக் கொண்டு புணர்ச்சி விதிகளை ஆசிரியர் கூறாமையானும், அவற்றைக் கூறுமிடத்து இறுதியெழுத்தையும் முதலெழுத்தை யும் உயிராகவேனும் மெய்யாகவேனுமே கொள்ளல் வேண்டும் என்றற்கென்க.

வேங்கட.

இத்தலைச் சூத்திரம் மொழியின் முதலிலும் ஈற்றிலும் நிற்கும் எழுத்துக்களைக் குறித்துக் கூறுகின்றது. 'எல்லா மொழிக்கும்......இயல' என்றதனால் அவ்விரண்டன்றி, முதலும் ஈறுமாய் நிற்பவை வேறில்லை என்றவாறாயிற்று. ஆகலின், குற்றியலுகரத்தை அவ்விரண்டனுள் ஒன்றனில் அடக்கினாராவர். அது, முன்னர் அறியப்படும். சூத்திரத்தில் 'மெய்யே யுயிரென்று' என்று மெய்யெழுத்தை முற்கூறியது, புணர்ச்சி மெய்யெழுத்துக்களில் நிகழுதல் போல உயிரெழுத்துக்களில் நிகழாமை கருதி. நன்னூலாரும், 'மெய்யுயிர் முதலீறாம்' (51) என்று மெய்யெழுத்தினையே முதலில் வைத்துக் கூறினார்.

இச்சூத்திரத்தை, 'முதல் இரண்டு தலையிட்ட இருபஃது, ஈறு அறு நான்காகும் மூன்று தலையிட்ட முப்பதிற் றெழுத் தினோடு, நெறி நின்று இயலும் எல்லா மொழிக்கும், மெய்யே யுயிரென்று ஆயீரியல இறுதியும் முதலும்' என்று பிரித்து நச்சினார்க்கினியர் பொருள் கூறினார். இச்சூத்திரம், கிடக்கை முறையில் செம் பொருள் பயந்து நிற்றலின் இவ்வாறு மாற்றிக் கூட்டுதல் வேண்டாது. அன்றியும், 'ஈறொடு' என்னும் சொல்லினின்று உருபினை வேறு பிரித்து, 'முப்பதிற்றெழுத்தின்' என்பதனோடு கூட்டினார்; இவ்வாறு பிரித்துக் கூட்டுதலும் வேண்டற்பாலதன்று. இளம்பூரண அடிகள், சூத்திரக் கிடக்கை முறையே பொருள் கூறியுள்ளார். அவர், 'அறு நான்கீறொடு' என்று பாடங் கொண்டு 'ஈற்றொடு என்பது விகாரத்தாற் றொக்கது' என்று எழுதியுள்ளார். அதுவே இன்னோசையது.

சிவ.

ஈண்டு நின்றும் மொழிகள் நிலை வருமொழிகளாக நின்று புணருமாறு கூறுகின்றாராதலின், அம்மொழிகளின் முதல் எழுத்தும் இறுதியெழுத்தும் உயிர்மெய்களாக அமையின் அவற்றைப் பிரித்து, நிலைமொழியிறுதி உயிர் என்றும், வருமொழிமுதல் மெய்என்றும் கொள்ளல் வேண்டும் என்பதற்காக இச்சூத்திரம் கூறினார்.

முப்பத்து மூன்றெழுத்துகளுள் இருபத்திரண்டு எழுத்து இருபத்து நான்கு எழுத்து எனத் தொகையளவில் கூறாது மூன்று தலையிட்ட முப்பது என்றும், இரண்டு தலையீட்ட முதலாகு இருபஃது என்றும் கூறியதும், அவை போலவே நான்கு தலையிட்ட இருபஃது ஈறு என்னாமல் அறுநான்கீறு என்று கூறியதும் என்னெனின், 'எழுத்தெனப்படுப சார்ந்து வரல் மரபின் மூன்றலங்கடை முப்பஃது' எனக் கூறியதற்கேற்ப மூன்று தலையிட்ட முப்பஃது என்றார் எனவும், மொழி முதற் குற்றியலுகரம் மொழிக்கு முதலில் வந்ததாகக் கூறப்படினும் அது நகர மெய்யின் மீது ஏறியது என்பதால் சிறப்பினது அன்று என்பதைத் தெரிவிக்க இரண்டு தலையிட்ட இருபஃது என்றார் எனவும், இறுதி எழுத்துக்களில் யாதோர் ஐயமும் தோன்றாதா தலின் 'அறு நான்கீறு' என்றார் எனவும் கொள்வதற்கு என்க.

## மொழியிறுதி மெய்கள் புள்ளி பெறுதல்

105. அவற்றுள்
மெய்யீறு எல்லாம் புள்ளியொடு நிலையல். (2)

ஆ. மொ: இல.

Of these, the consonant endings will have dots.

க. சு.

Among them,
all final consonants will be provided with dots.

இளம்.

இது (மேற்கூறியவாற்றான் தனிமெய்யும் முதலாவான் சென் றதனை விலக்கலின்)எய்தியது விலக்கல் நுதலிற்று.

(இ-ள்) அவற்றுள்—மேல் மெய்யும் உயிரும் என்று கூறிய இரண்டனுள், ஈறுமெய் எல்லாம் புள்ளியொடு நிலையல்—

மொழிக்கு [1]ஈறாய மெய்யெல்லாம் புள்ளி பெறுதலொடு [2]நிற்கும் முதலாயவையெல்லாம் புள்ளி [3]யிழந்து நிற்கும்.

எ-டு: மரம் என வரும்.

மொழிமுதல்மெய் புள்ளியொடு நில்லாது என்னாது, ஈறெல்லாம் புள்ளியொடு நிலையல் என ஈற்றின் மேல் வைத்துக் கூறியவதனான், அவ்வீற்றின்மெய் உயிர் முதன்மொழி வந்த இடத்து அஃது ஏற இடங்கொடுக்கும் [4]என்பது பெறப்பட்டது.

நச்.

இது மேற்கூறியவாற்றால் தனிமெய் முதலாவான் சென்றதனை விலக்கலின் எய்தியது விலக்கிற்று.

(இ-ள்) முற்கூறிய மெய்யும் உயிரும் என்ற இரண்டினுள், மெய் மொழிக்கு ஈறாயவையெல்லாம் புள்ளி பெற்று நிற்கும்; எ-று.

எனவே மொழிக்கு முதலாயினவையெல்லாம் புள்ளியிழந்து உயிரேறி நிற்கும் [5]என்றாராயிற்று. இன்னும் ஈற்றுமெய் புள்ளி பெற்று நிற்கும் என்றதனானே உயிர்முதன் மொழி தம்மேல் வந்தால் அவை உயிரேற இடங்கொடுத்து நிற்கும் என்பதூஉம் கூறினாராயிற்று. இவ்விதி முற்கூறிய தன்றோவெனில் ஆண்டுத்தனி மெய் பதினெட்டும்புள்ளிபெற்று நிற்கும் என்றும், அவைதாம் உயிரேறுங்காற் புள்ளியிழந்து நிற்கும் என்றும் கூறினார்; ஈண்டு மெய்முதல் மெய்யீறெனப் பொருளுரைக்க வேண்டினமையின் மொழி முதல் மெய்களும் புள்ளி பெறுமோ வென்று ஐயுற்ற ஐயம் அகற்றக் கூறினார் என்று உணர்க. மரம் எனப் புள்ளி பெற்று நின்றது அரிது என வந்துழி, மரமரிதென்று ஏறி முடிந்தவாறு காண்க.

சுப்பிர.

இச்சூத்திரம் நியம விதியாகும். 'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல் (எழுத்.15) என்ற சூத்திரத்தான் வருமொழி முதலின் கண்ணும் நிலைமொழியிறுதியின் கண்ணும் உள்ள மெய்கள் புள்ளிபெறும் எனப் பெறபட்ட அவற்றுள், நிலைமொழியீற்றின் கண் உள்ளனவே புள்ளிபெறும் எனக் கூறினமையின்.

சு. வே. : 1. ஈறாயவையெல்லாம் 2. நிற்க 3. யழிந்து 4. என்பதும் 5. என்றாயிற்று

இதனால் வருமொழி முதலிலுள்ள மெய் புள்ளி பெறாது எனப் பெறப்பட்டது.

இச்சூத்திரத்திற்கு உதாரணம் நிற்கும், மரா என்பனவாகும்.

இச்சூத்திரத்திலுள்ள 'அவற்றுள்' என்பதற்கு, 'மேல் மெய்யும் உயிரும் என்று கூறிய இரண்டனுள்' என இளம் பூரணரும், 'முற் கூறிமெய்யும் உயிரும் என்ற இரண்டினுள்' என நச்சினார்க்கினிய ரும் பொருள் கூறினர். எல்லாவுயிர்களுக்கும் புள்ளி பெறுதல் இயல்பாயின் அவ்விருவர் தம் கூற்றும் பொருந்தும்.

''மொழி முதல் மெய் புள்ளியொடு...இடங்கொடுக்கும் என் பது பெறப்பட்டது'' என இளம்பூரணத்திலும், ''இன்னும் ஈற்று மெய்......கூறினாராயிற்று'! என நச்சினார்க்கினியத்திலும் உள. அவை உயிர் ஏற இடங்கொடுக்கும் என்பது,

புள்ளி யீற்றுமுன் உயிர்தனித் தியலாது
மெய்யொடும் சிவணும் அவ்வியல் கெடுத்தே

(எழுத். 139)

என்ற சூத்திரத்திற் கூறப்பட்டமையான், அவர்தங் கூற்று வேண்டுவதன்று.

## வெள்ளை.

''மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்'' என்புழித் தனிமெய் பதினெட்டும் புள்ளிபெற்று நிற்கும் எனக்கூறி, உயிரே றுங்கால் அவை புள்ளியிழந்து நிற்கும் என உய்த்துணர வைத்தார், ஈண்டு மெய்முதல் மெய்யீறு என வகுத்துரைக்குங்கால், மொழி முதல் மெய்களும் புள்ளி பெறுமோ என்னும் ஐயம் அகற்றுதல் வேண்டி. இச் சூத்திரத்தால் மொழிக்கு ஈறாய மெய்களே புள்ளி பெறுவன எனக் கூறி, மொழிக்கு முதலாயின மெய்கள் புள்ளிபெறா என்பதனை உய்த்துணர வைத்தாராதலின் இச்சூத் திரம் கூறியது கூறலன்மையுணர்க.

## பிற குறிப்புகள்

*க. வா். சச்சிதானந்தம், 'மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்' என்பதற்கு, ''மொழியிறுதி மெய்கள் எல்லாம் தனி

* இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், 12-ஆம் கருத்தரங்கு (1980) ஆய்வுக்கோவை, தொகுதி 2. பக்கம் 126. ஷெ மன்ற வெளியீடு. அண்ணாமலை நகர், 1980.

மெய்களின் இயல்பொடு நிற்க'' எனப் பொருள் கூறி, தனிமெய் களின் இயல்புகளாவன: (1) புள்ளிபெற்று நிற்றல் (2) அகரவுயிரு டன் சேரும்போது புள்ளியிழந்து நிற்றல் (3) பிற உயிருடன் சேரும்போது உருபு திரிதல் (4) உயிர் ஏறி முடிவதற்கு இடம் கொடுத்தல்' எனக் கூறி, மொழியிறுதிமெய்களும் அந்நான்கு இயல் புகளையும் பெறும் என விளக்கமும் எழுதினர். அம்மொழியிறுதி மெய் போலவே குற்றியலுகரமும் அந்நான் கியல்புகளையும் பெறும் என 'குற்றி...மொழிப' என்னும் இச் சூத்திரமும் கூறு கிறது; இம் மாட்டேறு முழுவதும் சேறலாகும் என்பது அவர் கருத்து.

## குற்றுகரம் ஒற்றெழுத்து ஒத்தல்

**106. குற்றிய லுகரமும் அற்றென மொழிப. (3)**

**ஆ. மொ: இல.**

The shortened 'U' also is similar—so say the poets.

**க. சு:**

They say that the shortened U is like that.

**இளம்.**

இது, ஈற்றிற்குற்றியலுகரத்திற்கு ஓர் கருவி கூறுதல் நுதலிற்று.

(இ—ள்.) குற்றியலுகரமும் அற்று என மொழிப—[1]ஈற்றிற் குற்றியலுகரமும் (புள்ளியீறுபோல உயிரேற இடம் கொடுக்கும்) அத்தன்மைத்து என்று சொல்லுவர்.

இம்மாட்டேறு ஒருபுடைச் சேறல் எனவுணர்க.

**நச்.**

இது முன்னர்ப் புள்ளிஈற்றுமுன் உயிர் தனித்தியலா தென்று மெய்க்கு எய்துவிக்கின்ற கருவியை எதிரது போற்றி உயிர்க்கும் எய்துவிக்கின்ற கருவிச் சூத்திரம்.

(இ—ள்.) ஈற்றுக் குற்றியலுகரமும் புள்ளியீறு போல உயிரேற இடங்கொடுக்கும் என்று கூறுவர் புலவர்; எ—று.

சு.வே.: 1. ஈற்றுக்

இம்மாட்டேறு ஒருபுடைச் சேறல், புள்ளி பெறாமையின். அங்ஙனம் உயிரேறுங்காற் குற்றுகரங் கெட்டுப்போக நின்ற ஒற்றின்மேல் உயிரேறிற்றென்று கொள்ளற்க. நாகரிது என்புழி முன்னர்க் குற்றுகர வோசையும் பின்னர் உயிரோசையும் பெற்று அவ்விரண்டுங்கூடி நின்றல்லது அப்பொருளுணர்த்த லாகாமை யின், இஃது உயிரோடுங்கூடி நிற்கும் என்றார்.

சுப்பிர.

(பொ—ள்.) மொழியீற்றிலுள்ள குற்றியலுகரமும் அத் தன்மையது எனக் கூறுவர் (புலவர்).

முற் சூத்திரத்திலிருந்து ஈண்டு ஈறு என்ற சொல் அதிகரித் தல் வேண்டும்.

அம்முப்பாற்புள்ளி (எழுத். 2) என்றதனானே குற்றியலுகர மும் புள்ளி பெறும் எனப் பெறப்படுதலான், இச்சூத்திரம் எற்றுக்கென ஐயந்தோன்றும். அம்முப்பாற் புள்ளி என்றதனான் மொழியீற்றிலுள்ள குற்றியலுகரமும் 'நுந்தை' என்ற சொல்லி லுள்ள குற்றியலுகரமும் புள்ளி பெறும் எனப் பெறப்பட, இச்சூத்திரத்தான் மொழியீற்றுக் குற்றியலுகரமே புள்ளி பெறும் என்று நியமிக்கப்பட்டதென்க. இதனாற் பெறப்பட்டது யாது எனின், நுந்தை என்னுமிடத்துக் குற்றியலுகரம் புள்ளி பெறாது என்பதேயாகும். இச்சூத்திரமும் முற்சூத்திரம் போன்று நியம விதியாம் என்க. மெய்யீறும் ஈற்றுக் குற்றியலுகரமும் புள்ளி பெற்றால் என், பெறாவிடின் என் எனின்,

புள்ளி யீற்றுமுன்......கெடுத்தே (எழுத். 139)

என்ற சூத்திரந்தான் உயிரேற இடங்கொடுக்கும் என்று உணர்த் தற்கு என்க.

இச்சூத்திரத்துக்கு உரைகாரர்கள் "ஈற்றிற் குற்றியலுகரமும் புள்ளியீறுபோல உயிரேற இடங் கொடுக்கும் அத்தன்மைத்து என்று சொல்லுவர்" எனப் பொருள் கூறினர். அது பொருந்தா தென, "குற்றியலுகரமும் அற்றென மொழிப" என்னுஞ் சூத்திரத்தால் குற்றியலுகரமும் புள்ளி பெற்று நிற்கும் என முற்றுகரத்தோடிதனிடை வரிவடினும் வேற்றுமை தோன்றக் கூறி" என்ற தொடரான் சிவஞான முனிவர் கூறினர். "அம் மூன்றும் புள்ளி பெறுதல் பற்றி பொதுப் பெயராக முப்பாற் புள்ளியும் என்றும்" என அவரே முன்னர்க் கூறினமையான், இச்சூத்திரம் குற்றியலுகரம் புள்ளிபெறும் என உணர்த்திற்று எனக் கொள்ளுதல் பொருந்தாது.

ஆகலின் ஈற்றுக் குற்றியலுகரமே புள்ளி பெறும் எனப் பொருள் கொள்வதே சாலும்.

'இம்மாட்டேறு ஒரு புடைச்சேறல் என இளம்பூரணர் கூறினர். ஒருபுடை என்பதும் ஏகதேசம் என்பதும் ஒருபொருட் கிளவியாகும். புள்ளியீற்றுமுன் என்ற சூத்திரப் பொருளை நோக்கின், குற்றியலுகரம் நிலைமொழியிறுதியில் வர வருமொழி முதலில் உயிர்வரின் ஆங்கு வரும் புணர்ச்சிக்கும், மெய் நிலை மொழியிறுதில் வர வருமொழி முதலில் உயிர் வரின் ஆங்கு வரும் புணர்ச்சிக்கும் உள்ள மாறுபாடு யாதெனின், முற்கூற்றில் குற்றிய லுகரங்கெட, மெய்யுடன் உயிர் ஒலிக்கும், பிற்கூற்றில் நேரிலே மெய்யுடன் ஒலிக்கும் என்றதே; ஒற்றுமையாவது இரண்டின் கண்ணும் உயிர் மெய்யுடன் ஒலித்தலேயாகும். சிறிது ஒற்றுமை யும் சிறிது வேற்றுமையும் இருத்தலின் 'இம்மாட்டேறு ஒருபுடைச் சேறல்' என இளம்பூரணர் கூறியிருத்தல் கூடும். இவ்வாறிருக்க நச்சினார்க்கினியர் "இம் மாட்டேறு......உயிர் ஏறிற்றென்க" எனக் கூறினர். புள்ளி பெறும் என்றது அம்முப்பாற் புள்ளி என்றதனான் பெறப்படும் எனச் சிவஞான முனிவர் கூறியிருத்த லானும், குற்றுகரங்கெடாது முன்னர்க் குற்றுகர வோசையும் பின்னர் உயிரோசையும் பெற்று அவ்விரண்டுங் கூடி நின்று பொருளுணர்த்தும் எனக் கூறுதல் பொருந்தாமையானும் நச்சினார்க்கினியர் கொள்கைகள் ஆராயற்பாலன.

**வேங்கட.**

**104.** அவற்றுள், மெய்யீ......நிலையல்

**105.** குற்றிய......மொழிப.

புணர்ச்சியில் முதலும் ஈறும் பற்றியே விதி கூறுபவாகலின். ஈண்டு, மெய்யீறு...நிலையல் என்றார். எனவே, மெய்முதலெல் லாம் புள்ளியொடு நிலையா என்பது அறியப்படும். முன்னர், இவ்விரண்டீறுகளையும் புள்ளியீறு என்று ஆள்வராகலின், ஈண் டுக்கருவி செய்தார்.

மேலைச் சூத்திரத்தில் இறுதியும் முதலும் மெய்யே உயிரென் றாயீரியல என்றாராகலின், குற்றியலுகர வீறும் மெய்யீறும் எவ் வாறு கொள்ளப்படும் என ஐயம் நிகழுமாகலின், ஈண்டு, குற்றிய லுகரவீறு மெய்யீறாகக் கொள்ளப்படும் என்று கூறுகின்றார்; உயிர்மெய் ஈற்றைக்குறித்து முன்னர்க் கூறுவார்.

ஈற்றுமெய் புள்ளிபெறும் என்றதனால். அவ்வீற்றின் முன் உயிர் முதல் மெய்வரின், அவை அவ்வுயிர் ஏற இடம் கொடுத்து

நிற்கும் என்று உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் உரை கூறி னர். அவர்கள் கூறும்விதி, முன்னர், 'புள்ளியீற்று முன் உயிர் தனித்தியலாது...கெடுத்தே' என்னும் சூத்திரத்தாற் பெறப்படு தலின், ஈண்டுத் தந்துரைக்க வேண்டுதல் இன்று.

பேராசிரியர், ஒற்றெழுத்தியற்றே குற்றியலிகரம் (செய்யு 8) என்னுஞ் சூத்திரத்தின் உரையில், "எழுத்தோத்தினுள் 'மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல் எனக் கூறிக் 'குற்றியலுகரமும் அற்றென மொழிப' எனக் குற்றியலுகரத்திற்குப் புள்ளிபெறு தலும் கூறினான்" என்றார்.

சங்கர நமச்சிவாயப் புலவர், உயிர்வரின் உக்குறள் (நன். உயி ரீற்று.14) என்னுஞ் சூத்திரத்தின் உரையில், "ஆசிரியர் தொல்காப் பியர், 'அவற்றுள் மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்' என வும், 'குற்றியலுகரமும் அற்றென மொழிப' எனவும் கூறிய சூத்தி ரங்களுள் 'அவற்றுள்' என்னும் மாட்டேற்றிற்கு, மெய்யீறு போலக் குற்றியலுகர வீறும் புள்ளியொடு நிற்கும்,எனப் பொருள் கொள்ளாது...சாதிப்பாருமுளர். அவ்வாறு கூறல் மாட்டேற்றி லக்கண மன்றாம்...இவ்வாறு அந்நூலொடு பொருந்தாவுரைக் கோள் பலவுள" என்று கூறியுள்ளார். சிவஞான முனிவர்,"ஆசிரி யர், குற்றியலுகரமும் அற்றென மொழிப என்னும் சூத்திரத்தால் குற்றியலுகரமும் புள்ளி பெற்று நிற்கும் என முற்றுகரத்தோடு இதனிடை வரிவடிவினும் வேற்றுமை தோன்றக் கூறி" என்றார்.

இக்காட்டிய வாற்றால் குற்றியலுகர வீறு புள்ளி பெற்று நிற்கும் என்றலே சூத்திரத்தின் பொருளாதல் அறியபடும்.

ஆயின் இச்சூத்திரத்திற்கு உரையாசிரியர், "ஈற்றுக்குறிய... அத்தன்மைத்து என்று சொல்லுவர்" என்று கூறி "இம்மாட் டேறு... எனவுணர்க" என்றார். நச்சினார்க்கினியர் 'உரையாசி ரியர் கூறியாங்கே 'ஈற்றுக்குற்றியலுக...என்று கூறுவர்" எனவுரை யெழுதி, 'இம்மாட்டேறு...பெறாமையின்' என்றார். இவ்விருவ ரும் 'அவற்றுள், மெய்யீறெல்லாம்' என்ற மேலைச் சூத்திரத் திற்கு, 'புள்ளியீற்றுமுன், என்னும் இவ்வியல் முப்பத்தாறாம் சூத் திரத்தின் பொருளைத் தந்தெழுதி, அதனையே இச்சூத்திரத் திற்குப் பொருளாக வுரைத்தனர்.

மேலைச் சூத்திரத்திற்கு, மொழியின் ஈற்று மெய்யெழுத்துக் கள் புள்ளி பெற்று நிற்கும் என்பதே பொருளாகலின் ஈண்டு 'அற்று' என்று மாட்டெறிந்தது, குற்றியலுகரமும் புள்ளிபெற்று நிற்கும். எனவே பொருள் தருதலை யாரும் எளிதில் அறிவர்.

இதனை விடுத்து, உரைகாரர் இருவரும் இரண்டாம் சூத்திரத்திற்கு முப்பத்தாறாம் சூத்திரப் பொருளை இலேசினாற் கொள்வதாக எழுதி, அதனையே மூன்றாம் சூத்திரத்தில் வரும் மாட்டேற்றுக்குப் பொருளாகக் கூறியதன் காரணம், குற்றியலுகர வீற்றின் மேல் உயிர் ஊர்ந்து நிற்கும் என்று ஆசிரியர் கூறிய விதி அறியப்படாமையே யாகும்.

நன்னூலார், குற்றியலுகரம் புள்ளி பெறும் என விதந்து கூறிற்றிலர். ஆயின், 'தொல்லை வடிவின எல்லா எழுத்தும்' (நன். 98) என்னுஞ் சூத்திரத்தின் உரையில், மயிலைநாதர், 'ஆண்டு என்ற மிகையானே, தாது ஏது என்றற் றொடக்கது ஆரிய மொழிகளும், எட்டு கொட்டு என்றற்றொடக்கத்துப் பொது மொழிகளும், குன்றியாது நாடியாது என்றற் றொடக்கத்துப் புணர்மொழிப் பொருள் வேறுபாடுகளும் அறிதற் பொருட்டுக் குற்றிகரக் குற்றுகரங்கட்குமேல் புள்ளி கொடுப்பாரும் உளர் எனக் கொள்க' என்று எழுதியுள்ளார். அதனான் அவர் காலத்திலும் குற்றியலுகரங்களுக்குப் புள்ளியிடும் வழக்கம் இருந்தது என்பது அறியப்படும்.

மேல் இவ்வியல் முதற் சூத்திரத்தில், 'எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும், மெய்யே யுயிரென்றாயீரியல' என்றதனான் குற்றியலுகரம் அவ்விரண்டனுள் ஒன்றன் பாற்படும் என்பது பெறப்பட்டதன்றே? ஈண்டு மெய்யீறு போன்று புள்ளி பெறும் என்று விதித்ததனால், அது, மெய்யீற்றின் பாற்படுத்தமை அறியப்பட்டது. இது, முன்னரும் பலவிடங்களான் வலியுறும். இனி, உயிர் மெய்யீறு உயிரீறேயாகும் என்பது முன்சூத்திரத்தாற் கூறுவர்.

குற்றியலுகர வீற்று மொழிக்குமுன் உயிர் முதல் மொழி வரின் ஆண்டுக் குற்றியலுகரம் கெடாதே நிற்கும் என்று நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். இலக்கண விள்க்கம் உடையாரும் நச்சினார்க்கினியர் கொள்கையையே பின்பற்றி எழுதினார். இஃது உயிர் வரின் உக்குறள் மெய்விட்டோடும் (164) என்னும் நன்னூலார் கருத்துக்கு மாறுபட்டதேயாகும். ஆயின், ஆசிரியர் தொல்காப்பியனார், முற்றுகரங்களுக்கு முன்னர் உயிர்முதல் மொழி வரின், அம்முற்றுகரங் கெடுதற்கு விதி கூறியாங்கு, குற்றுகரத்தின் முன்னர் உயிர் முதல் மொழி வரின், ஆண்டும் அவ்வுகரம் கெடும் என்று விதி கூறினாரல்லர். அதுவேயன்றிக்குற்றுகரம் உருவு திரியாது உயிர் முதல் மொழியொடு புணரும் என்றும் கூறியுள்ளார். அவ்வாறாயின் ஆசிரியர், 'ஆறன்

மருங்கிற் குற்றியலுகரம், ஈறு மெய் ஒழியக் கெடுதல் வேண்டும்' எனக் குற்றுகரம் கெடுதற்கு விதி கூறியுள்ளாரால் எனின், ஆண்டுக் குறித்தது குற்றியலுகரத்தையன்று என்பது அச்சூத்திர ஆராய்ச்சியில் விளக்குவேன்.

## வெள்ளை.

இது மேல் மொழியீற்றின் மெய்க்குக் கூறிய விதியினை மொழியீற்றில் வரும் குற்றியலுகரத்திற்கும் மாட்டெறிந்து கூறுகின்றது.

மெய்யீற்றின் தன்மையாவன புள்ளி பெறுதலும் புள்ளியிழந்து உயிர் ஏற இடங் கொடுத்தலும் ஆம். அவ்விரண்டினுள் புள்ளி பெறுதலை விலக்கி, உயிர் ஏற இடங்கொடுத்தலாகிய ஒன்றை மட்டும் குற்றியலுகரத்திற்கு இயைத்துக் கூறுதலின், 'இம்மாட்டேறு ஒருபுடைச்சேறல் என வுணர்க' என்றார் இளம்பூரணர்.

'ஒற்றெழுத்தியற்றே குற்றிய லிகரம்' (செய். 8) என வரும் செய்யுளியற் சூத்திரவுரையுள் ''எழுத்தோத்தினுள் மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்' எனக் கூறிக் 'குற்றிய லுகரமும் அற்றென மொழிப' எனக் குற்றுகரத்துக்குப் புள்ளி பெறுதலும் கூறினான்' எனப் பேராசிரியர் கூறுதலால், குற்றியலுகரத்திற்குப் புள்ளியிட்டெழுதும் வழக்கம் பேராசிரியர் காலத்தில் நிலவியதெனத் தெரிகிறது. ஆனால் இளம்பூரணர் காலத்தில் இவ்வழக்கம் நிலை பெற்றிருந்ததாகத் தெரியவில்லை. குற்றியலுகரத்திற்குப் புள்ளியிட்டெழுதும் வழக்கம் இளம்பூரணர் காலத்தில் நிலவியிருப்பின் 'குற்றியலுகரமும் அற்று' என்னும் இம்மாட்டேற்றினை முழுவதும் சேறலாகவே கொண்டு பொருள் கூறியிருப்பர். அவர் அங்ஙனம் கூறாமையின் அவர் காலத்தில் குற்றியலுகரத்திற்குப் புள்ளியிட்டெழுதும் வழக்கம் இல்லை என்பது புலனாகும். அன்றியும் குற்றியலுகரமும் புள்ளி பெறும் என்பதொன்றே இச்சூத்திரத்திற்குக் கருத்தாயின் 'மெய்யின் அளபே அரையென மொழிப'(எழுத். 11) என்பதனை அடுத்து 'அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே' (எழுத். 12) யென மாட்டெறிந்தாற்போல 'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்' (எழுத். 15)எனவும்'எகர ஒகரத்தியற்கையு மற்றே' (எழுத். 16)எனவும் வருஞ்சூத்திரங்களையடுத்துக் 'குற்றியலுகரமும் அற்றென மொழிப' என இச்சூத்திரத்தையும் கூறியிருப்பர். ஆசிரியர் அங்ஙனங் கூறாது புணரியலாகிய இவ்வியலில் கூறு

தலால் குற்றியலுகரமும் மெய்யீறுபோல உயிரேற இடங் கொடுக்கும் என்பதே தொல்காப்பியனார் கருத்தென்பது நன்கு துணியப்படும்.*

இங்ஙனமன்றிக் குற்றியலுகர வீற்றின் முன் உயிர் முதன் மொழி வருங்கால் நிலைமொழியீற்றுக் குற்றுகரம் கெடும் எனக் கொண்டார் வீரசோழிய நூலார். 'ஆவி பின் தோன்றக் கெடும் குற்றுகரம்' என்பது வீரசோழியம் (21) இக்கருத்தினை யொட்டியே

உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்
யவ்வரின் இய்யாம் முற்றுமற் றொரோவழி (நன். 164)

எனச் சூத்திரம் செய்தார் பவணந்தியார்.

இவ்வாறு குற்றுகர வீற்றின்முன் உயிர் முதன்மொழி வருங்கால் நிலைமொழியீற்றுக் குற்றுகரங்கெட நின்றவொற்றின் மேல் வருமொழி முதலுயிர் ஏறிற்றென்று கொள்ளுதல் கூடா தென்றும், நாகரிது என்புழி முன்னர்க் குற்றுகர வோசையும் பின்னர் உயிரோசையும் பெற்று அவ்விரண்டுங்கூடி நின்றல்லது அப்பொருளுணர்த்தலாகாமையின் நாகு என்பதன் இறுதியி லுள்ள குற்றியலுகரம் கெடாது நின்றே அரிது என்னும் வருமொழி முதலிலுள்ள அகரவுயிர்க்கு இடந்தந்து அவ் வுயிரோடுங்கூடி நிற்கும் என்றும் நச்சினார்க்கினியர் இச் சூத்திரவுரையுள் தெளிவாக விளக்கி உரையாசிரியர் கொள்கையை வலியுறுத்தியுள்ளார்.

தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தியுள் 'எழுத்தெனப் படுப' என்னுந் தொடர்க்குப் புணர்ச்சி விதி கூறுங்கால் "இனி ஆசிரியர் 'நூறென் கிளவியொன்று முதலொன்பாற்கு, ஈறு சினையொழிய இனவொற்று மிகுமே' எனவும், (எழுத். 472) 'ஆறன் மருங்கின் குற்றியலுகரம் ஈறுமெய் யொழியக் கெடுதல் வேண்டும்'(எழுத். 469)எனவும் நூறு என்னும் எண்முன்னும் ஆறு என்னும் எண் முன்னும் முறையே ஒன்று முதலிய எண்களும் ஆயிரமும் வந்து புணரின், குற்றியலுகரங்கெட நின்ற ஒற்றின் மேல் உயிர் வந்து ஒன்றிமுடியும் என்றார். எனவே ஒன்றின முடித்தல் என்பதனால் ஏனைக் குற்றியலுகர வீறும் உயிர் முதன்மொழி வந்து புணர்வுழிக் குற்றியலுகரங் கெட்டு நின்ற வொற்றின்மேல் உயிர்வந்து ஒன்றி முடியும் என்பதூஉம் பெறப்பட்டதாகலின், ஈண்டும் அவ் வாறே குற்றியலுகரங்கெட நின்ற தகர ஒற்றின்

* திரு. அடிகளாசிரியரும் இச் சூத்திரத்தின் நூற்பாக்குறிப்பில் இக் கருத்தே எழுதினர்.

மேல் எகரவுயிர் வந்து ஒன்றி 'எழுத்தெனப்படுப' என முடிந்தது' எனச் சிவஞான முனிவர் புணர்ச்சி விதி கூறியுள்ளார்.

'நூறென் கிளவி......இனவொற்று மிகுமே' என்னும் சூத்திரம் நூறு என்னும் குற்றுகர வீற்றெண்ணுப் பெயர் முன் ஒன்று முதல் ஒன்பான் வரையுள்ள எண்ணுப் பெயர்கள் வந்து புணரின் நிலைமொழியீற்றின் உள்ள குற்றுகரமும் அதனால் ஊரப்பட்ட றகர மெய்யும் கெடாது நிற்ப, அவ்வொற்றுக்கு இனமாகிய நகரம் மிக்கு முடியும் என்னும் விதியைக் கூறுவதாகும். இதன் பொருளை உரையாசிரியர் இனிது விளக்கியுள்ளார். இச் சூத்திரத்தில் 'ஈறு சினை ஒழிய' எனவருந் தொடர்க்கு, 'ஈற்றி லுள்ள சினையாகிய குற்றியலுகரங்கெட' எனப் பொருள் கொள்வர் சிவஞான முனிவர். அங்ஙனம் கூறின், நூற்றுமூன்று நூற்றுநான்கு என ஈற்றுக் குற்றியலுகரம் கெடாது நிற்பன இச் சூத்திரத்துள் அடங்காவாம். இச்சூத்திரத்து 'ஒன்றுமுதல் ஒன்பாற்கு' என ஆசிரியர் வரையறுத்துக் கூறிய வருமொழி களுள் மூன்றும் நான்கும் அடங்கும் ஆதலின் அவை வருமிடத்தும் நூறு என்பதன் ஈற்றுக் குற்றியலுகரம் கெடுதல் வேண்டும். அங்ஙனங் கெடாமையின் இச்சூத்திரத்திற்குச் சிவ ஞான முனிவர் கூறும் பொருள் தொல்காப்பியனார் கருத்துக்கு முரணாதல் தெளியப்படும். ஆகவே இச்சூத்திரத்தில் 'ஈறு சினை ஒழிய' என்னும் தொடரிலுள்ள ஒழிய என்னும் சொல்லுக்கு, 'அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே, முதனிலை யொழிய முன்னவை கெடுதலும்' (புள்ளி 20) என்புழிப்போல 'எஞ்சி நிற்ப' எனப் பொருள் கொண்டு 'ஈற்றெழுத்தாகிய குற்றியலுகரமும் அதனால் ஊரப்பட்ட மெய்யாகிய சினையும் விகாரமின்றி எஞ்சி நிற்ப அவ்விடத்து இனமாகிய நகர ஒற்று மிக்கு முடியும்' எனப் பொருள் உரைப்பதே ஆசிரியர் கருத்துக்கு ஏற்புடையதாம் என்க.

குற்றியலுகரப் புணரியல் 32ஆம் சூத்திரத்தில் ஒன்று முதல் ஒன்பதீறாகச் சொல்லப்படுகின்ற எண்ணுப் பெயர்களின் முன் பத்து என்பது வருமொழியாய் வரின், நிலை மொழிகளுள் ஆறு என்னுஞ் சொல் நீங்கலாக ஏனைய எண்ணுப்பெயர்களின் இறுதிக் குற்றியலுகரம் மெய்யொடுங் கெடும் என்றும், 35-ஆம் சூத்திரத்தில் மூன்று ஆறு என்பவற்றின் முதலிலுள்ள நெட்டெழுத்துக்கள் குறுகும் என்றும் கூறிய ஆசிரியர், ஒன்று முதல் ஒன்பான்களின் முன் ஆயிரம் வந்து புணருங்காலும்

32 முதல் 38 வரையுள்ள சூத்திரங்களால் முன்னர்க் கூறிய விதி களை அவ்வாறே வைத்துக் கொண்டு அவற்றின் மேலுளவாம் திரிபுகளை 58 முதல் 63 வரையுள்ள சூத்திரங்களால் கூறுகின்றா ரென்பது அச்சூத்திரங்களின் கிடக்கை முறையால் நன்கு விளங்கும். எனவே ஆறன் மருங்கிற் குற்றியலுகரம், ஈறுமெய் யொழியக் கெடுதல் வேண்டும்' (குற்றிய. 64) என்னும் இச் சூத்திரத்தாற் குறிக்கப்பட்ட ஆறு என்பது முன்னர் 32, 35-ஆம் சூத்திரங்களிற் சொல்லிய வண்ணம் அறு எனத் திரிந்த வடிவத்தையே குறித்தது. எனக் கொள்ளுதல் வேண்டும். இங்ஙனம் அறு எனத் திரிந்து நின்ற காலத்து அதன் இறுதி நின்ற உகரம் முற்றுகரமாகவும் அவ்வாறு திரிதற்கு முன்னுள்ளது குற்றியலுகரமே யாதலின் குற்றியலுகரந் திரிய நின்ற உகரமே அது என்பார், 'ஆறன் மருங்கிற்குற்றியலுகரம்' என்றார் ஆசிரியர். இங்ஙனம் கூறியது, திரிந்ததன் திரிபது என்னும் கருத்தினால் என்பதனை இளம்பூரணரும் நச்சினார்க் கினியரும் நூன்மரபின் முதற்சூத்திரவுரையில் நன்கு தெளிவு படுத்தியுள்ளார்கள். எனவே இச்சூத்திரத்துக் குற்றியலுகரம் எனக் கூறப்பட்டது, ஆறு என்னும் குற்றுகர வீற்றின் திரிபாகிய அறு என்பதன் இறுதி நின்றது முற்றுகரமாதலின், அவ்வுகரம் ஆயிரம் எனவரும் வருமொழி முதலிலுள்ள ஆகாரவுயிர்க்கு இடந்தந்து ஒருங்கு நிற்கும் ஆற்றலின்றித் தான் ஏறிய றகர மெய் யைவிட்டுக் கெட அம்மெய்யின்மேல் வருமொழி ஆகாரவுயிரேறி அறாயிரம் என முடிவதாயிற்று. ஆகவே இச்சூத்திரத்துள் 'ஈறு மெய் ஒழியக்கெடும்' எனக் கூறியவிதி, ஆறு என்னும் சொல்லில் இறுதியிலுள்ள குற்றியலுகரத்திற்கு அன்று என்பதும், அதன் திரிபாகிய அறு என்பதிலுள்ள முற்றுகரத்திற்கே யுரித்தென்பதும் பகுத்துணர்ந்து கோடல் வேண்டும். இங்ஙனமன்றி ஆயிரம் என்னும் சொல் வருமொழியாய் வர ஆறு என்னும் நிலைமொழி யிறுதிக் குற்றுகரம் கெடும் என்பதே தொல்காப்பியனார் கருத் தாயின், ஆறு என்பதன் முன் உழக்கு என்னும் உயிர் முதல் மொழி வருமிடத்தும் குற்றியலுகரம் கெடும் எனக் கூறியிருப்பர். அங்ஙனங் கூறாது 'ஆறென் கிளவி முதல்நீடும்மே (குற்றிய. 52) என்ற அளவே கூறிப்போதலின், ஆறு என்பதன் ஈற்றுக் குற்றிய லுகரம் உயிர் முதல் மொழி வருமிடத்துக் கெடாதென்பதே தொல்காப்பியனார் கருத்தென்பதே நன்கு தெளியப்படும்.*

*இக் கருத்து, அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் உயர் ஆய்வுத் துறையினர் 1970-ல் நடத்திய தொல்காப்பியக் கருத்தரங்கில் படிக்கப்பட்ட 'சார்பெழுத்துகள்' என்னும் தலைப்புக் கட்டுரையிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆகவே மேல் எடுத்துக்காட்டிய, 'நூறென் கிளவி' (குற்றிய. 67) 'ஆறன் மருங்கின' (குற்றிய. 64) என்னும் இவ்விரு சூத்திரங் களுக்கும் சிவஞானமுனிவர் கூறிய பொருள்கள் தொல்காப்பிய னார் கருத்துக்கு முரணாவன என்பதும், இங்ஙனம் நூலாசிரியர் கருத்துக்கு முரண்படக்கூறிய இப்பொருள்களை அடிப்படை யாகக் காட்டி 'ஏனைக் குற்றியலுகர வீறும் உயிர் முதன்மொழி வந்து புணர்வுழிக் குற்றியலுகரங் கெட்டு நின்ற ஒற்றின்மேல் உயிர் வந்து ஒன்றி முடியும் என்பதூஉம் பெறப்படும்' என ஒன்றின முடித்தல் என்பதனால் கொள்ளுதற்கு இடம் இல்லை யென்பதும் நன்கு தெளிவாதல் காண்க.

அஃது இஃது உஃது எனவரும் ஆய்தத் தொடர்க் குற்றிய லுகரத்தின் முன் உயிர் முதன்மொழி வருங்கால் ஆய்தங்கெடாது நிலை பெறும் எனவும், மெய்ம் முதல்மொழி வருங்கால் ஆய்தம் கெடும் எனவும் கூறிய தொல்காப்பியனார், அச்சொற்களின் இறுதிக்கண் நின்ற குற்றியலுகரம் கெடும் எனக் கூறாமை யானும், குற்றியலுகர வீற்றுச் சொற்களுக்கு அம், அக்கு, அன், இன், ஏ முதலிய சாரியைப்பேறு கூறிய ஆசிரியர், உயிர் முதலாகிய அச்சாரியைகள் வந்து புணருங்கால் நிலைமொழி யீற்றுக் குற்றுகரங் கெடும் என யாண்டும் கூறாமையானும், குற்றுகர வீற்று எண்ணுப் பெயர்களுள் ஒன்றாகிய ஒன்பது என்னும் சொல் நிலைமொழியாய் நிற்க அதன்முன் அளவுப் பெயரும் நிறைப்பெயரும் ஆயிரம் என்னும் எண்ணுப்பெயரும் வந்து புணருங்கால் அது தன் வடிவு நிலை திரியாது இன்சாரியை பெறும் எனக் குற்றியலுகரப் புணரியலின் 54, 65-ஆம் சூத்திரங் களில் ஆசிரியர் கூறுதலாலும் குற்றியலுகர வீறு உயிர் முதல் மொழி வருமிடத்துக் கெடாது நின்று மெய்யீறுபோல உயிரேற இடங்கொடுக்கும் என்பதே ஆசிரியர் தொல்காப்பியர் கருத் தென்பது இனிது புலனாகும்.

இனி, "நாகரிது என்புழி முன்னர்க் குற்றுகர ஓசையும் பின்னர் உயிரோசையும் பெற்று அவ்விரண்டுங்கூடி நின்றல்லது அப்பொருள் உணர்த்தலாகாமையின் குற்றியலுகரத்திறுதி முன்னும் உயிர் முதல்மொழி வந்தால் புள்ளியீறுபோல அவ்வுயிரேறி முடியும் என்பார்க்குக் கதவழகிது கனவழகிது என்புழியும் முன்னர் முற்றுகர வோசையும் பின்னர் உயிரோசை யும் கூடியல்லது அப்பொருளுணர்த்தலாகாமையின் முற்றுகரத் தின் மேல் உயிரேறி முடிந்ததெனக் கூறல் வேண்டும்; அவ்வாறன்றி முற்றுகரங்கெட நின்ற ஒற்றின் மேல் உயிரேறி

முடியும் என்பதே எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததாதலானும், குற்றியலுகரத்திற்கும் உயிர் என்னும் குறியீடு கொண்டமையின் ஒற்றின்மேலன்றி உயிரின் மேல் உயிரேறுதல் பொருந்தாமையானும், நாகரிது என்புழி இதழ் சிறிது குவிதலாகிய முயற்சி ஆண்டுப் பெறப்படாமையிற் குற்றியலுகரவோசை ஆண்டுண்டென்றல் பொருந்தாமையானும், 'ஆறன் மருங்கின்' என்றற்றொடக்கத்துச் சூத்திரங்களோடு முரணுதலானும், யகரம் வரும்வழி யிகரங்குறுகி யுகரத்தின்மேல் உயிரேறி முடியும் என்னாது 'இகரங்குறுகும்—உகரக் கிளவி துவரத் தோன்றாது' என்றாராகலானும் அவர் கூற்றுப் பொருந்தாது'' என்பர் சிவஞானமுனிவர்.

கதவழகிது கனவழகிது என்புழிக் கதவு கனவு எனவரும் முற்றுகரங்களை நுந்தை என்னும் சொல்லிற் போலக் குற்றுகரமாக ஒலித்தமையால் அவை, குற்றியலுகரத்துக்குரிய செய்கை பெற்றுத் திரிந்தனவன்றி இயல்பு புணர்ச்சி பெற்றனவல்ல ஆதலானும், திரிபுடையவிவற்றைக் காட்டிக் குற்றியலுகர வீறுகள் எல்லாவற்றிற்கும் உரிய உயிரேறி முடிதலாகிய சிறப்பியல்பினை விலக்குதல் பொருந்தாமையானும், கதவழகிது என்புழி வகரத்தின் கண் குற்றுகர ஓசையின்மையும் நாகரிது என்புழிக் ககரத்தின்கண் குற்றுகர ஓசை நுண்ணிய நிலையில் உண்மையும் இவ்விரு தொடர்களையும் ஒலித்துக் காண்போர்க்குச் செவி கருவியாகப் புலனாதலானும், குற்றியலுகரத்திற்கு உயிர் என்னும் குறியீடுண்டெனினும் அக்குறியீடொன்றே பற்றி எல்லாவகையானும் குற்றியலுகரம் உயிரியல்பே பெறும் எனக் கோடல் பொருந்தாமைக்கு அது மெய்யின் தன்மை பெறும் என விதித்த 'குற்றியலுகரமும் அற்றென மொழிப' என்னும் இச் சூத்திரமே சான்றாகலானும், குற்றியலுகரத்திற்கு இதழ் குவிதலாகிய முயற்சி புலப்பட்டே வரும் என ஆசிரியர் கூறாமையானும், மெய்யீறு போல உயிர் ஏற இடம் கொடுத்தலாகிய புணர்ச்சி வேறுபாடு முதலாயின கருதியே குற்றுகர வீற்று விதிகளை உயிர் மயங்கியலிற் கூறாது குற்றியலுகரப் புணரியல் எனத் தனியியல் வகுத்துக் கூறினார் ஆசிரியர் ஆதலானும், குற்றுகர வீறும் முற்றுகர வீறும் புணர்ச்சி வகையான் ஒத்தன என்பது தொல்காப்பியர் கருத்தாயின் அவற்றை இரு வேறு இயல்களிற் பிரித்துரைக்க வேண்டிய இன்றியமையாமையின்மையானும், 'ஆறன் மருங்கின்' என்றற் றொடக்கத்துச் சூத்திரங்களோடு முரணாமை மேற் காட்டினாம் ஆதலானும், 'யகரம் வரும் வழி இகரங்குறுகும், உகரக் கிளவி துவரத் தோன்றாது'

எனவரும் சூத்திரம் குற்றியலுகர வீற்றின் முன் யகர முதன் மொழிவரின் அவ்யகரத்தோடு குற்றியலுகரத்திற்கு மயக்க விதியின்மையால் குற்றியலுகரங்கெட அது நின்ற நிலைக்களத்து இகரந்தோன்றிக் குறுகி நிற்கும் எனக் கூறியதல்லது குற்றிய லுகரத்தின் முன் இகரம் வரக் குற்றியலுகரம் கெடும் எனக் கூறியதன்றாகலானும் சிவஞான முனிவர் கூறுமாறு குற்றிய லுகரம் உயிர் முதன்மொழி வரின் கெடும் என்றல் தொல் காப்பியனார் கருத்தன்றெனக.

இனி, 'குற்றியலுகரமும் அற்று' எனவரும் புணரியல் மூன்றாம் சூத்திரத்தினைப் 'புள்ளியீற்று முன் உயிர்தனித் தியலாது' எனவரும் இவ்வியல் முப்பத்தாறாம் சூத்திரத்தோடு மாட்டெறிந்து உரையாசிரியரை யுள்ளிட்டோர் பொருள் கூறினர் எனவும், 'அவற்றுள் மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்' என்னும் சூத்திரத்தால் அவ்வீற்றின் மெய் உயிர் முதன்மொழி வந்தால் அஃது ஏற இடங்கொடுத்து நிற்கும் என்பதும் கூறினாராயிற்றேல் 'புள்ளியீற்று முன்' எனச்சூத்திரம் செய்தது கூறியது கூறல் என்னும் குற்றம் தங்குதற்கோவெனக் கூறி மறுக்க எனவும் சங்கர நமச்சிவாயரும் சிவஞான முனிவரும் உரையாசிரியர் உரையிற் குற்றங் கூறினர். அவர்கள் கூறியபடி இம்மூன்றாம் சூத்திரத்தைப் பின்வரும் முப்பத்தாறாம் சூத்திரத் துடன் உரையாசிரியர் மாட்டெறிந்து பொருள் கொள்ள வில்லையென்பதும், இதன் முன் உள்ள இரண்டாஞ் சூத்திரத் துடன்தான் மாட்டெறிந்து பொருள் கூறியுள்ளார் என்பதும் இச் சூத்திரத்திற்கு உரையாசிரியர் எழுதிய வுரையினைக் கூர்ந்து நோக்குவார்க்கு இனிது புலனாகும். அன்றியும் 'அவற்றுள், மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்' என்னும் இச்சூத்திரத் தாற் கூறப்பட்ட பொருளும் 'புள்ளியீற்றுமுன்...அவ்வியல் கெடுத்தே' எனவரும் இச்சூத்திரத்தால் கூறப்பட்ட பொருளும் ஒன்றாயினன்றே கூறியது கூறல் என்னும் குற்றந் தங்குவது? மொழிக்கீறாய மெய்யெல்லாம் புள்ளியொடு நிற்கும் எனக்கூறி அவை உயிர் முதன்மொழி வந்தவிடத்து உயிரேற இடங்கொடுக்கும் என்பதனை யுய்த்துணர வைப்பது 'மெய்யீறெல்லாம்' என்னும் சூத்திரமாகும். இது நிலைமொழி பற்றிய விதி. இனி மெய்யீற்றின் முன் உயிர் தனித்து நடவாது; தான் தனி நின்ற இயல்பை விடுத்து நிலை மொழியீற்று மெய்யொடுங் கூடும் என்பதனைக் கூறுவது

'புள்ளியீற்றுமுன்' எனவரும் இவ்வியல் 36-ஆம் சூத்திரமாகும். இது வருமொழி பற்றிய விதி. இங்ஙனம் நிலை மொழிக் கருவியும் வருமொழிக் கருவியுமாக இவ்விரு சூத்திரப் பொருளையும் பகுத்துணருங்கால் கூறியது கூறல் என்னும் குற்றம் தங்குதல் யாண்டையதென மறுக்க.

இதுகாறும் கூறியவாற்றால் குற்றியலுகரம் உயிர் முதல் மொழி வரின் கெடும் என வீரசோழியம் நூலாசிரியரும் நன்னூலாரும் சங்கர நமச்சிவாயர் சிவஞான முனிவர் முதலிய பிற்கால உரையாசிரியர்களும் கூறும் கொள்கை பொருந்தா தென்பதும், 'குற்றியலுகரம் மெய்யீறுபோலக் கெடாது நின்று உயிரேற இடம் கொடுக்கும் என உரையாசிரியரை யுள்ளிட் டோர் கூறும் கொள்கையே தொல்காப்பியனார் கருத்து என்பதும், 'குற்றுகரத்திற்கு முன்னர் வந்த உயிர் ஏறிமுடிய அரைமாத்திரையாய் நிற்றலும் முற்றுகரத்திற்கு முன்னர் வந்த உயிர் ஏறி முடியாமையும் தம்முள் வேற்றுமை' என நச்சினார்க் கினியர் காட்டிய இலக்கணமே குற்றியலுகர வீறுகள் எல்லா வத்தின் கண்ணும் செல்லும் என்பதும் நன்கு வலியுறுத்தப் பட்டமை காண்க.

*சிவ.*

இச்சூத்திரம் மொழியிறுதி மெய்யின் இயல்பாகிய புள்ளி பெறுதலும் உயிர் ஏற இடங்கொடுத்தலும் ஆகிய இரண்டனுள் உயிர் ஏற இடங்கொடுத்தல் என்ற ஒன்றுடன் மாட்டெறியப் படுதலின் உரையாசிரியர்கள் 'இம்மாட்டேறு ஒருபுடைச் சேறல்' என்றனர். இளம்பூரணர் காலத்தில் குற்றியலுகரத்துக்குப் புள்ளியிடும் வழக்கம் இல்லை என்றும் அதனாலேயே உயிரேற இடங்கொடுத்தலாகிய ஒருபுடையே இம்மாட்டேறு சேரும் என்றும் அவர் கூறியதாகக் கொள்வர். 'குற்றியலிகரம் குற்றிய லுகரம் ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும்' என ஆசிரியர் கூறிய தில் அம்மூன்றும் புள்ளியெழுத்துகள் எனப் பெறப்படுதலினால் இச்சூத்திரத்தில் மீண்டும் புள்ளி பெறும் என்பது கூறியது கூற லாம் எனக்கொண்டு உயிரேற இடங்கொடுத்தலாகிய ஒரு புடையே சேறல் கொண்டார் இளம்பூரணர் என்னலாம். இளம்பூரணர்க்குப் பிற்பட்ட பேராசிரியர் காலத்தில் குற்றிய லுகரத்துக்குப் புள்ளியிடும் வழக்கிருந்தது என்றால் இடையில் எப்படி அவ்வழக்கு வந்தது? இளம்பூரணர் காலத்திலும் அவ் வழக்கு இருந்திருக்கும் எனக் கொள்வதில் தவறில்லை.

பி. கு.

"அலகு+இல் என்பது 'குற்றியலுகரமும் அற்றென மொழிப' என்பதனால் நிலைமொழியீற்றுக் குற்றியலுகரம் புள்ளியீறுபோல, வருமொழி முதல் இகர உயிர் ஏற இடங் கொடுத்தது இம்மாட்டேறு ஒருபுடைச் சேறல் என்றுணர்க. அன்றிக் குற்றியலுகரம் அழிந்ததெனிற் பொருள்வேறுபடும்; அஃது உரையன்றென்க. இது குறைவும் கூட்டமும் உடன் ஒன்றியது. கருவி அகக் கருவி; என்னை? நிலை மொழியீற்று உகரம் வருமொழி முதல் இகரம் ஏற இடங்கொடுத்தலின்." (மாறனலங்காரம் 63. உரை)

"வீரசோழிய நூலார் ஆவிபின் தோன்றக் கெடுங்குற்று கரம் (2) என்றுரைத்தார். அவரைப் பின்பற்றி நேமிநாத நூலாரும் 'குற்றுகரம் ஆவி வரிற்சிதையும் (14) என்று கூறினார். நன்னூலார் 'உயிர் வரின் உக்குறள் மெய்விட்டோடும்' (164) என்று அவ்விதியைக் கொண்டு கூறினும், மற்றோரிடத்துத் தொல்காப்பியர் கூறுயவாறே 'ஐயீற்றுடைக் குற்றுகரமும் உளவே (184) என்றனர்"—திரு. அடிகளாசிரியர்.

### உயிர்மெய்யீறு உயிரீற்றது

107. உயிர்மெய் ஈறும் உயிர்ஈற்று இயற்றே. (4)

**ஆ. மொ: இல.**

The vowel—consonant ending is in the nature of vowel endings.

**க. சு.**

The final vocalized consonant is of the same nature as the final vowel.

**இளம்.**

இது, மேல் 'மெய்யே யுயிரென்றாயீ ரியல' என்றதற்கு ஓர் புறனடை கூறுதல் நுதலிற்று.

(இ—ள்.) உயிர்மெய் ஈறும் உயிர் ஈற்று இயற்று—உயிர்மெய் [1]மொழியீற்றின் நின்றதுவும் உயிர் ஈற்றின் இயல்பை யுடைத்து; [2]இடையில் நின்றதுவும் உயிரின் இயல்பையுடைத்து.

பா. வே: 1. மொழியீற்று, மொழியீற்றினியன்றதுவும்
2. இடையினியன்றதுவும், இடையில் நின்றனவும்

ஈறும் இடையும் உயிருள் அடங்கும். எனவே, முதல் மெய்யுள் அடங்கும் என்றதாயிற்றி.

இதனால், விள முதலிய உயிர்மெய் ஈறெல்லாம் அகரவீறு முதலிய உயிரீற்றுள் அடங்கிப் புணர்ச்சி [1]பெறுவனவாயின. வரகு என்புழி இடை நின்ற ரகர வுயிர்மெய் அகரமாய் உயிர்த் தொடர் மொழியெனப்பட்டது.

ஈண்டு உயிர்மெய் ஒற்றுமை [2]நயத்தான் உயிர்மெய்யென வேறு ஓர் எழுத்தாவதன்றி, ஈறும் இடையும் உயிர் என ஓர் எழுத்தாயும், முதல் மெய் என ஓர் எழுத்தாயும் நின்றதாயிற்று

இத்துணையும் ஒருமொழி யிலக்கணங் கூறலின் மொழி மரபின் ஒழிபாயிற்று.

**நச்.**

இது, 'மெய்யே யுயிரென் றாயீ ரியல' (எழுத். 103) என்ற உயிர்க்கண் நிகழ்வதோர் ஐயம் அகற்றியது; உயிர்மெய் என்பதோர் ஈறு உண்டேனும் அது புணர்க்கப்படாது, அதுவும் உயிராயே அடங்கும் என்றலின்.

(இ—ள்.) உயிர்மெய் மொழியினது ஈற்றின்கண் நின்றதும், உயிரீற்றின் இயல்பை யுடைத்து; எ—று.

உம்மையான் இடைநின்ற உயிர்மெய்யும் உயிரீற்றின் இயல்பையுடைத்து என்றா ராயிற்று. உம்மை: எச்சவும்மை. ஈற்றினும் இடையினும் நின்றன உயிருள் அடங்கும். எனவே முதல் நின்றன மெய்யுள் அடங்கும் என்றார். இதனானே மேல் விள என்றாற் போலும் உயிர்மெய்கள் எல்லாம் அகரவீறென்று புணர்க்குமாறு உணர்க. 'வரகு' இதனை மேல் உயிர்த்தொடர் மொழி யென்ப. முன்னர் 'மெய்யின் வழியது' (எழு. 18) என்றது ஒரெழுத்திற்கென்றுணர்க. இத்துணையும் மொழிமரபின் ஒழிபு கூறிற்று.

**சுப்பிர.**

(பொ—ள்.) மொழியீற்று உயிர்மெய்யும் மொழியீற்று உயிரின் தன்மைத்து.

ஈண்டு உம்மையால், இளம்பூரணர், 'இடையில் நின்றதுவும் உயிரின் இயல்புடைத்து' என்று கொண்டனர். உயிரின் இயல்பை யுடைத்து என அவர் கூறியது பொருந்தாது எனக் கருதி

சு. வே: 1. பெறுவனவாயிற்று 2. நயத்தினும்

நச்சினார்க்கினியர், 'உம்மையான் இடைநின்ற உயிர்மெய்யும் உயிரீற்றின் இயல்பையுடைத்து' எனக் கூறினர் போலும். ஈண்டு ஈறு என்றதனான் மொழியின் ஈற்றை இருவரும் கொண்டு வரகு என்றவிடத்து இடையில் வந்த உயிர்மெய்யும் உயிரின் தன்மைத்து எனக் கொள்வது எவ்வாறு பொருந்தும்? உம்மையை எச்சவும்மையாகக் கொள்ளின் அதனாற் றழுவப்படுதற்கு உயிரைப் போன்றது வேறொன்றில்லாமையின், அது பொருந் தாது. சிறப்பும்மையாகக் கொள்ளின் ஒருவாறு பொருந்தும் என்னலாம். சிறப்பும்மையாற் பயனின்மையான் உம்மையின்றியே பாடம் இருந்ததோ என ஐயமுண்டாகின்றது. 'மெய்யே யுயிரென் றாயீ ரியல' (எழுத். 104) என்ற சூத்திரத்தானே இப் பொருள் பெறப்படுகின்றமையானும், விளக்கத்திற்காகத் தனியாய்க் கூறினர் எனின், 'உயிர்மெய் முதலே மெய்ம்முத லியற்றே' எனச் சூத்திரமும் கூறியிருத்தல் வேண்டும். ஆதலானும் இச்சூத்திரங் கூறியதற்கு ஆசிரியரின் உட்கருத்து விளங்கவில்லை.

'இத்துணையும் ஒரு மொழியிலக்கணங் கூறலின் மொழி மரபின் ஒழிபாயிற்று' என இளம்பூரணரும், 'இத்துணையும் மொழிமரபின் ஒழிபு கூறிற்று' என நச்சினார்க்கினியரும் கூறினர். புணர்ச்சியில் நிலைமொழியீற்றிற்கும் வருமொழி முதலுக்குமே மாறுதல் நிகழ்கின்றமையானும், புணர்ச்சி விதிகளில் உயிர் மெய்யைக் கூறாமையானும், புணர்ச்சி விதிகளுக்கு இச்சூத்திரங் கள் கருவியாயிருத்தலின் அவர் தங் கூற்று ஆராய்தற்பாலது.

நச்சினார்க்கினியத்தில் 'உயிர்மெய்யென்பது ஓர் ஈறு உண்டேனும் அது புணர்ச்சிப்படாது. அதுவும் உயிராயே யடங்கும் என்றலின்' என்றதற்குப் பிரதியாக 'உயிரின் தன்மைத் தென்றலின்' என்றிருப்பின் நலம்.

**வேங்கட.**

இஃது ஐயம் அறுத்தல் நுதலிற்று. என்ன எனின், உயிர் மெய் முதல் மொழி, மெய் முதல்மொழி ஆகியவாறு போல உயிர் மெய் ஈற்று மொழியும் வேறு படுங்கொல் என ஐயம் நிகழு மாகலின்.

மொழிகளின் ஈற்றில் நிற்கும் உயிர்மெய்யெழுத்து உயிரெழுத்தாகவே கருதப்படும் என்பது கருத்து.

உரையாசிரியர்கள், உம்மையான் இடைநின்ற உயிர்மெய்யும் உயிரெழுத்தாகவே கொள்ளப்படும் என்றும், அதனானே, வரகு

முதலியன உயிர்த் தொடர்க் குற்றுகரம் எனப்பட்டன என்றும் உரைத்தனர். அஃதாவது, கறி என்னும் மொழியின் முதற்கண் உள்ள ககர வுயிர்மெய்யின் முதலில் ஒலிப்பது மெய்யெழுத் தாகலின் மெய்முதல் என்றும் ஈற்றிலுள்ள றிகர வுயிர்மெய்யில் ஈற்றில் ஒலிப்பது உயிராகலின் உயிரீறு என்றும் கொள்ளப் பட்டதுபோல, வரகு என்னும் மொழியின் இடையிலுள்ள ரகர வுயிர்மெய்யில் ஈற்றில் ஒலிப்பது உயிரேயாகலின், அதனைத் தொடர்ந்த உகரம் உயிர்த்தொடர் எனப்பட்டது என்று கொள்ளுதல் வேண்டும்.

**வெள்ளை.**

(இ—ள்) உயிர்மெய்யீற்று மொழியும், மெய் முன்னும் உயிர் பின்னுமாக ஒலித்து நின்றவாற்றால் உயிரீற்றின் தன்மையை யுடைத்து. எ—று.

......விள முதலிய உயிர்மெய்யீறெல்லாம் அகரவீறு முதலிய உயிரீற்றுள் அடங்கிப் புணர்ச்சி பெறுவனவாயின். வரகு என்புழி இடைநின்ற ரகரவுயிர்மெய் அகரமாய் உயிர்த்தொடர்மொழி யெனப்பட்டது. எனவே, ஒற்றுமை நயத்தான் ஒன்றென வழங்கும் உயிர்மெய் எழுத்தினை வேற்றுமை நயத்தால் மொழி களின் ஈறும் இடையும் உயிரென ஓரெழுத்தாயும், முதலில் மெய் என ஓரெழுத்தாயும் பிரித்துரைத்தமை நன்கு பெறப்படும்.

முன்னர், 'மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே' (எழுத். 18) என்றது உயிர்மெய்யாகிய தனியெழுத்திற்குக் கூறியது. ஈண்டு 'உயிர்மெய் யீறும் உயிரீற் றியற்றே' என்றது, மொழியிறுதி நின்ற உயிர்மெய் எழுத்திற்குக் கூறியது; ஆதலின் கூறியது கூறல் அன்மை யுணர்க.

## புணர்ச்சிக்குரிய இருமொழிகளின் இயல்பு

108. உயிர்இறு சொல்முன் உயிர்வரு வழியும்
உயிர்இறு சொல்முன் மெய்வரு வழியும்
மெய்இறு சொல்முன் உயிர்வரு வழியும்
மெய்இறு சொல்முன் மெய்வரு வழியும்என்று
இவ்வென அறியக் கிளக்குங் காலை
நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவியென்று
ஆயீர் இயல புணர்நிலைச் சுட்டே. (5)

**ஆ. மொ: இல:**

When vowel comes after vowel ending
When consonant comes after vowel ending
When vowel comes after consonant ending
When consonant comes after consonant ending
When we define the rules of joining to know
The standing word and the coming word
These are the two in the joining we note.

**க. சு:**

When (one) defines (rules) in the combination (of sounds)
Which are concerned with those two—the standing word and the particular coming word—
One should known these such (which may be classified as)
When vowel follows a vowel—ending,
When consonant follows a vowel ending
When vowel follows a consonant ending
(and) When consonant followes a consonant ending.

**இளம்.**

இது மேற்கூறும் புணர்ச்சி மும்மொழிப் [1]புணர்ச்சியாகாது இரு மொழிப் புணச்சியாம் என்பதூஉம், அவை எழுத்து வகையான் நான்காம் என்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உயிர் இறு சொல்முன் உயிர் வருவழியும்—உயிரீற்றுச் சொல்முன் உயிர் முதல்மொழி வரும் இடமும், உயிர் இறு சொல்முன் மெய்வருவழியும்—உயிரீற்றுச் சொல்முன் மெய்ம்முதல் மொழி வருமிடமும், மெய்யிறு. சொல்முன் உயிர் வருவழியும்—மெய்யீற்றுச் சொல்முன் உயிர் முதல் மொழி வரும் இடமும், மெய்இறு சொல் முன் மெய்வருவழியும் என்று—மெய்யீற்றுச் சொல்முன் மெய்ம்முதல் மொழி வரும் இடமும் என்று, இவ் என அறிய—(அப்புணர்ச்சிவகை) இவையென அறிய

சு. வே: 1. புணர்ச்சியாகா

**மேற்கோள்:** ஆயிரியல புணர் நிலைச் சுட்டே என்பது தொல் பொருள். 663ல் பேராசிரியர் மேற்கோள். சூத்திரத்துட் சில சொல் மிகையாகச் செம்தலுக்குக் காட்டடப்பட்டது.

கிளக்குங்காலை— ஆசிரியர் சொல்லுங் [2]காலத்து, நிறுத்த சொல் குறித்து வருகிளவி என்று அ ஈர் இயல—அவை நிறுத்த சொல் லும் அதன் பொருண்மையைக் குறித்து வரும் [3]சொல்லுமாகிய அவ்விரண்டு இயல்பையுடைய, புணர்நிலைச்சுட்டு—புணரும் நிலைமைக்கண்.

எ—: ஆ ஈ, ஆவலிது, ஆல்இலை, ஆல் வீழ்ந்தது எனக் கண்டு கொள்க.

விளவினைக் குறைத்தான் என்பது அவ்வுருபு குறித்து வரு [4]கிளவியை நிலைமொழியுள் அடக்கி இரு மொழிப்புணர்ச்சியாய் நின்றவாறு அறிக.*

நச்.

இது மேற்கூறும் புணர்ச்சிகள் எல்லாம் இருமொழிப் புணர்ச்சியல்லது இல்லை யென்பதூஉம், அஃது எழுத்து வகை யான் நான்காம் என்பதூஉம் உணர்த்துகின்றது.

(இ—ள்.) உயிர் தனக்கு ஈறாக இறும் சொல்லின் முன்னர் உயிர் முதலாகிய மொழி வரும் இடமும், உயிர் தனக்கு ஈறாக இறும் சொல்லின் முன்னர் மெய்முதலாகிய மொழிவரும் இடமும், மெய் தனக்கு ஈறாக இறும் சொல்லின் முன்னர் உயிர் முதலாகிய மொழி வரும் இடமும், மெய் தனக்கு ஈறாக இறும் சொல்லின் முன்னர் மெய்முதலாகிய மொழிவரும் இடமும், என்று சொல்லப்பட்ட ஒன்றினோடொன்று கூடும் நிலைமை யாகிய கருத்தின்கண், அவற்றை இத்துணையென வரையறையை எல்லாரும் அறிய யாங்கூறுங்காலத்து, முன்னர் நிறுத்தப்பட்ட சொல்லும் அதனை முடித்தலைக் குறித்து வருஞ் சொல்லும் என்று சொல்லப்பட்ட அவ்விரண்டு இயல்பினையுடைய; எ—று.

எனவே, நான்கு வகையானும் கூடுங்கால் இருமொழியல்லது புணர்ச்சியின்று என்றாராயிற்று.

எ—டு: ஆவுண்டு ஆவலிது ஆலிலை ஆல்வீழ்ந்தது என முறையே காண்க. விளவினைக் குறைத்தான் என்ற வழிச்

2. காலத்தும்
3. சொல்லுமாகி
4. கிளவியன்மையின் நிலை மொழியுள் அடங்கி.

* இதற்கு நச். விளக்கங் காண்க.

சாரியையும் உருபும் நிலைமொழியாயே நிற்கும் என்பது நோக்கி அதனை நிறுத்த சொல் என்றும், முடிக்கும் சொல்லைக் குறித்து வருகிளவி என்றும் கூறினார். இதனானே நிலைமொழியும் வருமொழியும் கூறினார். முன்னர் 'மெய்யேயுயிர்' (எழு, 103) என்றது ஒருமொழிக்கு; இஃது இருமொழிக்கு என்று உணர்க.

சுப்பிர.

கிளக்குங்காலை என்றதற்கு எழுவாயாக ஆசிரியன் என்றதை இளம்பூரணரும், யாம் என்றதை நச்சினார்க்கினியரும் கொண்டனர். அதனைச் செயப்பாட்டு வினைப் பொருளதெனக் கொண்டு இவை என்றதனை அதற்கு எழுவாயாகக் கொள்ள லாம்.

இளம் பூரணர், 'என்றப்புணர்ச்சிவகை' 'ஆகிய அவ்விரண் டியல் புடைய' என்று கூறுதலின், இக்சூத்திரத்துள்ள என்று இரண்டும் பெயர்ப் பொருளில் வந்தன என்றது வெளிப்படை. ஆகலின் 'என்று இரண்டும் எண்ணிடைச் சொல்' என்ற சிதம்பரம் பிள்ளைக் குறிப்புப் பொருந்தாது என்க.*

நச்சினார்க்கினியர் முன்னர் உள்ள என்று என்ற சொல்லை, 'புணர்நிலைச் சுட்டு' என்றதனோடுகூட்டி 'என்று சொல்லப் பட்ட ஒன்றினோடொன்று கூடும் நிலைமையாகிய கருத்தின் கண்' என்று கூறுதல் நேரிதாகத் தோன்ற வில்லை. அன்றியும் 'முன்னர் மெய்யே உயிர் என்றது ஒரு மொழிக்கு; இஃது இரு மொழிக்கு' என்ற தொடர் பொருந்த வில்லை, ஈண்டு அச் சூத்திரம்போல மொழிகளின் ஈற்றினையும் முதலையும் கூறாது புணர்நிலையின்கண் நிறுத்தசொல் குறித்து வருகிளவி என இரண்டாகக் கொள்ளல வேண்டும் என்றே கூறலின்.

---

* "உயிர்...உயிர்வரு வழியும் என்று, உயிர்...மெய்வரு வழியும் என்று, மெய்...உயிர்வரு வழியும் என்று, மெய்...மெய்வரு வழியும் என்று (வைத்து) அவற்றை இவையென அறியக்கிளக்கும் காலை'' எனப் பொருள் கொள்வதே சிறக்கும் ஆதலினாலும் இளம்பூரணர் உரையும் அவ்வாறே அமைதலினாலும் முதலில் உள்ள 'என்று' என்பதும், 'நிறுத்த சொல் என்று குறித்துவரு கிளவி என்று' எனப் பொருள் கொள்ளக்கிடத்தலின் பின்னர் உள்ள 'என்று' என்பதும் எண்ணிடைச் சொற்கள் என்பதில் தவறில்லை.

## 2. புணர்தலின் இயல்பு
## மொழிபுணர் இயல்பு நான்கு

**109:** **அவற்றுள்**
**நிறுத்த சொல்லின் ஈறாகு எழுத்தொடு**
**குறித்துவரு கிளவி முதலெழுத்து இயையப்**
**பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்**
**பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும்**
**[1]தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்**
**தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலும்**
**மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்புஎன**
**[2]ஆங்குஅந் நான்கே மொழிபுணர் இயல்பே. (6)**

**ஆ. மொ:** இல.

Of these,
With the final letter of the standing word
When the first letter of the coming word intermingles
As the noun is joined with the noun
As the noun is joined with the verb
As the verb ls joined with the noun
As the verb is joined with the verb
There appear four methods of joining of words, of which three belong to change
and one to 'non-change'

**க. சு:**

Among those,
as the initial sound of the coming word units
with the final sound of the standing word,
(and) as a noun joins a noun.
(or) a noun joins a verb
(or) a verb joins a noun
(or) a verb joins a verb
there are four methods of word—sandhi
in three (of which) change takes place
and in one (of which) there is no—change

சு.வே. 1. தொழிலொடும் 2. ஆங்கே

## பிற இலக்கண நூல்கள்

வீரசோழியம் 9:

நின்றசொல் ஈறும் வருஞ்சொல் முதலும் நிரவித் தம்முள்
ஒன்றிடும் போதும் ஒரோமொழிக் கண்ணும் உலகிற்
கொப்பின்
அன்றிய மும்மை விகாரம்வந் தெய்திடும் நன்கியல்பிற்
குன்றுத லின்றி வருதலும் உண்டென்று கூறுவரே.

நேமிநாதம் 12.

மெய்யீறு உயிர்ஈறு உயிர்முதல் மெய்ம்முதலா
எய்தும் பெயர்வினையும் இவ்வகையே.

நன்னூல் 151.

மெய்யுயிர் முதலீறு ஆமிரு பதங்களும்
தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத்து இயல்வது புணர்ப்பே.

இலக்கண விளக்கம் 53.

மெய்யுயிர் முதலீறு ஆமிரு பதங்களுந்
தம்மொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே.

முத்துவீரியம் 160.

நிலைவரு மொழியொடு நேர்வது புணர்ப்பே.

,, 161. அவைதாம்
இலல்பு விகாரம் என இருபா லான.

**இளம்.**

இது, மேற் கூறும் புணர்ச்சி, புணர்ச்சிவகையான் நான்காம் என்பதூஉம், அவை சொல்வகையான் நான்காம் என்பதூஉம், புணர்வது சொல்லும் சொல்லுமேயன்று; எழுத்தும் [3]எழுத்துமே என்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) அவற்றுள்—நிலைமொழி வருமொழி எனப்பட்டவற்றுள், நிறுத்த சொல்லின் ஈறாகு எழுத்தொடு குறித்து

சு. வே. 3. எழுத்தும்

வருகிளவி முதல் எழுத்து இயைய—நிறுத்த சொல்லினது ஈறாகின்ற எழுத்தினோடு அதனைக் குறித்து வருகின்ற சொல்லினது முதல் எழுத்துப் பொருந்த, பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்—பெயர்ச் சொல்லொடு பெயர்ச் சொல்லைப் புணர்க்குங் காலத்தும், பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும்—பெயர்ச் சொல்லொடு வினைச் சொல்லைப் புணர்க்குங் காலத்தும், தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்—வினைச் சொல்லொடு பெயர்ச் சொல்லைப் புணர்க்குங் காலத்தும், தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலும், வினைச் சொல்லொடு வினைச் சொல்லைப் புணர்க்குங் காலத்தும். திரிபு மூன்று இயல்பு ஒன்று என அ நான்கே மொழி புணர் இயல்பு—திரியும் இடம் மூன்றும் இயல்பு ஒன்றும் ஆகிய [4]அந் நான்கே மொழிகள் தம்மிற் புணரும் இயல்பு.

எ—டு: சாத்தன் கை, சாத்தன் [5]உண்டான், வந்தான் சாத்தன், வந்தான் போயினான் எனக் கண்டு கொள்க.

இடையும் உரியும் பெயர் வினைகளை அடைந்தல்லது தாமாக நில்லாமையின் பெயர் வினைகட்கே [6]புணர்ச்சி கூறப் பட்டது.

இது முன்னர் எழுத்து வகையான் நான்கு புணர்ச்சி யெய்திய இருவகைச் சொல்லும் சொல் வகையானும் நான்காகும் என்பதூஉம், அங்ஙனம் புணர்வது சொல்லும் சொல்லும் அன்று, எழுத்தும் எழுத்தும் என்பதூஉம் உணர்த்துகின்றது.

(இ—ள்.) நிலைமொழி வருமொழி என்ற வற்றின், முன்னர் நிறுத்தப்பட்ட சொல்லினது ஈறாகின்ற எழுத்தோடே அதனை முடிக்கக் கருதி வருகின்ற சொல்லினது முதல் எழுத்துப் பொருந்த, பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லைக் கூட்டும் இடத்தும் பெயர்ச் சொல்லோடு தொழிற்சொல்லைக் கூட்டும் இடத்தும், தொழிற்சொல்லோடு பெயர்ச் சொல்லைக் கூட்டும் இடத்தும், தொழிற் சொல்லோடு தொழிற் சொல்லைக் கூட்டும் இடத்தும், திரியும் இடம் மூன்று இயல்பு ஒன்று என்று முந்துநூலிற் கூறிய அந்நான்கு இலக்கணமுமே, ஈண்டு மொழிகள் தம்முட் கூடும் இலக்கணம்; எ—று.

சு.வே: 4. நான்கே 5. ஆண்டான்
6. புணர்ச்சி உரிமை கூறப்பட்டது.

எ-டு: சாத்தன் கை, சாத்தன் உண்டான், சாத்தன் வந்தான், வந்தான் போயினான் என முறையே காண்க. இவை நான்கு [1]இனத்தோடும் கூடப் பதினாறாம். இடையும் உரியும் தாமாக நில்லாமையிற் பெயர் வினையையே கூறினார். இடைச் சொல்லும் உரிச் சொல்லும் புணர்க்கும் செய்கைப் பட்டுழிப் புணர்ப்புச் சிறுபான்மை. பெயர்ப் பெயரும் ஒட்டுப் பெயரும் என இரண்டு வகைப்படும் பெயர். தெரிநிலை வினையும் குறிப்பு வினையும் என [2]இரண்டு வகைப்படும் தொழில். நிலைமொழியது ஈற்றெழுத்து முன்னர்ப் பிறந்து கெட்டுப்போக வருமொழியின் முதலெழுத்துப் பின் பிறந்து கெட்டமையான் முறையே பிறந்து கெடுவன ஒருங்கு நின்று புணருமாறின்மையிற் புணர்ச்சி என்பது ஒன்றின்றாம் பிறவெனின், அச்சொற்களைக் கூறுகின்றோரும் கேட்கின்றோரும் அவ்வோசையை இடையறவு படாமை உள்ளத்தின் கண்ணே உணர்வராதலின் அவ்வோசை கேடின்றி உள்ளத்தின்கண் நிலைபெற்றுப் புணர்ந்தனவேயாம். ஆகவே, பின்னர்க் கண்கூடாகப் புணர்க்கின்ற புணர்ச்சியும் முடிந்தனவேயாம் என்று உணர்க. இனி முயற்கோடு உண்டென்றால் அது குறித்துவரு கிளவி அன்மையின் புணர்க்கப் படாது. இதுதான் இன்றென்றாற் புணர்க்கப்படும் என்று உணர்க.*

**வேங்கட.**

திரிபு மூன்று இவை என்பது முன் சூத்திரத்திற் கூறப்படும். 'நிறுத்த சொல் என்பதனை நிலைமொழி என்றும், 'குறித்து வருகிளவி' என்பதனை வருமொழி என்றும் நன்னூலார் வழங்குவர். திரிபுப் புணர்ச்சியை விகாரப்புணர்ச்சி என்பர்.

**தோன்றல் திரிதல் கெடுதல்எனத் தூமொழியாய்**
**மூன்றென்ப சந்தி முடிபு** (நேமிநாதம் 12).

---

க. வே. 1. இலக்கணத்தோடும்

2. இருவகைத்து வினை

* குறித்து வரு கிளவி என்பதற்குப் பொருட் பொருத்த முறக் குறித்து வரும் சொல் எனப் பொருள் கொண்டமையால் இவ்வாறு எழுதினார். முயலுக்குக் கொம்பின்மையால் முயற்கோடு + உண்டு எனக் கூறலாகாது அதனால் முயற்கேடு + இல்லை எனக் கூறிப் புணர்க்கலாம். இக்கருத்தைச் சுப்பிரமணிய சாஸ்திரியார் மறுத்தது பொருத்தமே.

என்பவாகலின், இவர், இயல்பினையும் கூட்டி புணர்ச்சி நான்கு என்றல் அமையாதால் எனின், அவரே,

'இயல்பு சந்தி இணைந்தபடியே முடியும் ஏய்ந்து'
(நேமி. 15)

என்று, இயல்பு சந்தியினையும் கூறினாராகலின், நான்கு எனல் அவர்க்கும் கருத்தாகும்.

இனி, தெலுங்கு முதலிய மொழிகளில் இயல்புணர்ச்சியாய் வருமிடங்களில் சந்தியில்லை என்று கூறுதலின், இயல்பு புணர்ச்சியை நீக்கிப் புணர்ச்சி மூன்று எனக் கோடலும் அமையும். 'சாத்தன் வந்தான்' என்பது போல்ற இடங்களில் சந்திகாரியமில்லை.

வடமொழியில் மூன்று திரிபுகளுள் யாதேனும் ஒன்று வரவேண்டிய விடத்தில் அது வரப் பெறாதே இயல்பாகப் புணர்வது 'ப்ரக்ருதி பாவ ஸந்தி' எனப்படும். ப்ரக்ருதி என்ப தற்கு இயல்பு என்பது பொருள். ஆயின், தமிழில் மூன்று திரிபு களுள் ஒன்றும் பெறுதற்கு நியாயம் இல்லாமையின் இயல்பாகப் புணரும் புணர்ச்சியும் இயல்பு புணர்ச்சி எனப்படுகின்றது. இவ்வேறுபாடு அறியத்தக்கது.

**பி. கு:**

**சுப்பிர.**

"நச்சினார்க் கினியத்தில் 'இனிமுயற்கோடு உண்டென்றால் அது குறித்து வரு கிளவி யன்மையின் புணர்க்கப்படாது' என்ற தொடர் உளது. ஒருவன் மயக்கத்தால் முயற்கோடு உண்டு எனக் கூறின், ஆங்கு முயற்கோட்டினை நிறுத்த சொல்லாகவும் உண்டு என்றதனைக் குறித்து வருகிளவியாகவும் கொண்டால் இழுக்கென்ன? இவ்வதிகாரத்துள் சொற்களுக்கேயன்றிப் பொருளுக்குப் புணர்ச்சிக் கூறவில்லையே?"

**அடிகளாசிரியர்**

1. "இந்நூற்பாவில் 'பெயரொடு...புணர்க்குங்காலும்' என்றாற்போல, இல்வியல் 30 ஆம் நூற்பாவில், பெயருந் தொழிலும் பிரிந்து ஒருங்கு இசைப்ப' என்பர். இயல்பு விதிக்கு 'மெய்ம்மை' என்று ஒரு பெயர் இருத்தலைத் தொகை மரபு 14 ஆம் நூற்பாவால் அறியலாம்."

2. "ஆங்க நான்கே' என்பதில் ஆங்க என்பது உரையசைக் கிளவியாகும். 'ஆங்க வாறே' (35) 'ஆங்கவிரண்டும் (34)

ஆங்கவிரண்டே (3) ஆங்கப் பத்தே' என்னும் இறையனார் களவியல் நூற்பாப் பகுதிகளையும், அவற்றின் உரையையும் நோக்குக. ஆனால் நச்சினார்க்கினியர், 'ஆங்கந் நான்கே' என்று பாடங் கொண்டு, 'முந்தை நூலிற் கூறிய அந்நான்கு இலக்கணமுமே' என்று உரை கூறினர்.''

3. ''மொழிபுணர் இயல்பு' என்பதில், இயல்பு—இலக்கணமாகும். 'ஆயர் மகளிர் இயல்புரைத்து' (கலித். 111–22) என்னும் பகுதிக்கு 'ஆயர் மகளிரை வரைந்து கொள்ளும் இலக்கணத்தை அறிவித்து' என்று பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர்.''

4. ''பிரயோக விவேக நூலார் ''இனிஇயைந்த சொற்களாவ தென்னெனின், நிலைமொழி யீற்றெழுத்து முன்னர்ப் பிறந்து கெட்டுப்போக வருமொழி முதல் எழுத்துப் பின்னர்ப் பிறந்து கெடும். இவ்விரண்டும் முறையிற் பிறந்து கெடுவன ஒருங்கு நின்று புணருமாறின்மையின், புணர்ச்சியென்பதொன்றில்லை என்பார்க்கு, அச்சொற்களைக் கூறுகின்றோரும் கேட்கின்றோரும் அவ்வோசையை இடையறவு படாமை உள்ளத்தின் கண்ணே உணர்வாராகலின் அவ்வோசை கேடின்றி உள்ளத்தின் கண் நிலைபெற்றுப் பின்னர்க் கண் கூடாகப் புணர்கின்ற புணர்ச்சி போலப் புணரும் சொற்கள் என்க. கண்கூடு—காட்சியளவை. பூர்வ பதத்தின் ஈற்றெழுத்தும் உத்தர பதத்தின் முதல் எழுத்தும் தாப்பிசை என்னும் பாசபந்தம் போலப் புணர்வதன்றிப், பூர்வபதமும் உத்தரபதமும் யோகாங்குலி நியாயம் போலப் புணராவாகலின், ''நிறுத்த சொல்லே...முதலெழுத்தியைய'' என்றார் தொல்காப்பியர் (சமா. 9) என்று கூறியுள்ளார்.''

*சிவ.*

'நிறுத்த சொல்' என்றும், புணர்க்குங்காலும்' என்றும் பிறவினைப் பொருளில் கூறிய ஆசிரியர் இறுதியில் 'மொழி புணர் இயல்பு எனத் தன் வினைப் பொருளை அமைத்ததால் சொல்லுடன் சொல் சேரும்போது இயல்பாகவே அந்நான்கு புணர்நிலைகளையும் பெறும் என்பதாகக் கொள்ளவேண்டுமே யன்றி ஒருவன் (ஆசிரியன்) புணர்ப்பதாகக் கொள்ளுதல்கூடாது. சொற்கள் முன்னும் பின்னுமாகத்தாமே நிற்பனவல்ல; நிறுத்தப் படுவனவேயாகலின் நிலைமொழி என்று குறிப்பிடாமல் நிறுத்த சொல் எனக் குறிப்பிட்டார் ஆசிரியர். 'மூன்றே திரிபு இடன்' என்பதில் இடன் என்பதற்கு இடம் என்றே பொருள் கொள்ளாது

பொருள் எனப் பொருள் கொள்வது சாலும், மூன்று இடங்கள் என்பதின்றி மூன்று நிலைகள்—(தோன்றல், திரிதல், கெடுதல்) என்பதே கருத்தாகலின். 'அவற்றுள்' என்பதற்கு, 'நிறுத்த சொல் குறித்து வருகிளவி என்னும் இரண்டனுள்' எனப் பொருள் கொள்ளுதல் சாலாது, மீண்டும் 'நிறுத்த சொல்லின்' 'குறித்து வருகிளவி' எனக் கூறுதலின். அதனால் 'அவற்றுள்' என்பதற்கு, 'முன் நூற்பாவில் உள்ள உயிர் இறுசொல் முன் உயிர் வருதல் முதலிய நான்கனுள்' எனக் கொள்வதே சிறக்கும்.

## புணர்ச்சியில் மூவகைத் திரிபுகள்

**110.** அவைதாம்
மெய்பிறி தாதல் மிகுதல் குன்றல்என்று
[1]இவ்வென மொழிப திரியு மாறே. **(7)**

**ஆ. மொ:** இல.

Those (changes) are the poets say,
the transformation, the appearance and
the disappearance.

**க. சு.**

And they,
according to what they say,
are: one sound chaning into another,
addition, and loss.

### பிற இலக்கண நூல்கள்

நேமி. 12.

தோன்றல் திரிதல் கெடுதல்எனத் தூமொழியாய
மூன்றென்ப சந்தி முடிபு.

நன். 154.

தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்றும் மொழிமூ விடத்தும் ஆகும்.

இல. வி. 56.

விகாரம் ஒற்றுயிர் உயிர்மெய் மிகுதல்
திரிதல் கெடுதல் எனமூ வகைத்தே.

---

சு. வே: 1. இவையென

தொ. வி. 21.

திரிபு அழிவு ஆக்கம்
திரட்டு நால்வி காரம்.
(திரட்டு என்பதொரு விகாரம் இதில் புதியதாக உளது.)

முத்து. 163.

ஆக்கம் திரிபு அழிவாகும் விகாரம்.

சாமி. பதமரபு. 6.

தோன்றல் திரிதல் கெடல்என விகாரம்மூன்று.

**இளம்.**

இது, மேற்கூறிய [2]திரிபு மூன்றும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) அவைதாம்—[3]அத்திரிபுதான், மெய்பிறிது ஆதல் மிகுதல் குன்றல் என்று இவ் என மொழிப திரியும் ஆறு—மெய் பிறிது [4]ஆதலும் [5]மிகுதலும் [6]குன்றலும் [7]ஆகிய இவை எனச் சொல்லுவர், திரியும் நெறியினை; இம்மூன்றும் அல்லாதது இயல்பு என்று கொள்க.

எ—டு: பொற்குடம், யானைக்கோடு, மர வேர் எனவரும். குவளை மலர் என்பது இயல்பு.

இப்புணர்ச்சி நான்கும் ஒரு புணர்ச்சிக் கண்ணே நிகழ்வு பெறும் என்பது உரையிற் கொள்க. மேல் 'இடன்' (புணரியல். 6) என்றதனால், [8]ஒரு புணர்ச்சிக்குத் திரிபு மூன்றனுள் ஒன்றாயினும் இரண்டாயினும் மூன்றாயினும் வரப்பெறும் எனக் கொள்க.

'மகத்தாற் கொண்டான்' என்பது அம்மிகுதி இரண்டு வந்தது. [9]'நீயிர் குறியிர்' என்பது அம்மிகுதி மூன்று வந்தது. பிறவும் அன்ன.

சு. வே: 2. திரிபு ஆமாறு
3. அத்திரிபுதானே, அத்திரிபுதாமே
4. பிறிதாதல்
5. மிகுதல்
6. குன்றல்
7. என்றிவையெனச்
8. அத்திரிபு மூன்றனுள் யாதானும் ஒன்றாயது ஒரு புணர்ச்சிக்கண் இரண்டும் மூன்றும் ஒருங்கு வரப் பெறும் என்று கொள்க.
9. நீஇர்

**நச்.**

இது முற்கூறிய மூன்று திரிபும் ஆமாறு கூறுகின்றது.

(இ—ள்.) முன்னர்த் திரிபு என்று கூறிய அவை தாந் திரிந்து புணரும் நெறியை, மெய் வேறுபடுதல் மிகுதல் குன்றல் என்று கூறப்படும் இம்மூன்று கூற்றையுடைய என்று கூறுவர் ஆசிரியர்; எ—று.

இம்மூன்றும் அல்லாதது இயல்பாம் என்று உணர்க. இவை விகற்பிக்கப் பதினாறு உதாரணம் ஆம். மட்குடம், மலைத் தலை, மரவேர் இவை பெயரோடு பெயர் புணர்ந்த மூன்று திரிபு. மண்மலை என்பது இயல்பு. சொற்கேட்டான், பலாக்குறைத் தான், மரநட்டான் இவை பெயரோடு தொழில் புணர்ந்த மூன்று திரிபு. கொற்றன் வந்தான் இஃது இயல்பு. வந்தானாற் சாத்தன், கொடாப் பொருள், ஓடு நாகம் இவை தொழிலொடு பெயர் புணர்ந்த மூன்று திரிபு. வந்தான் சாத்தன் இஃது இயல்பு. வந்தாற் கொள்ளும், பாடப் போயினான், [1]சாஞான்றான் இவை தொழிலொடு தொழில் புணர்ந்த மூன்று திரிபு. வந்தான் கொண்டான் இஃது இயல்பு. மூன்று திரிபு என்னாது இடன் என்றதனான் ஒரு புணர்ச்சிக்கண் மூன்றும் [2]ஒருங்கேயும் வரப் பெறும் என்றுணர்க. மகத்தாற் கொண்டான் இஃது அங்ஙனம் வந்தவாறு மகரவீற்று 'நாட் பெயர்க்கிளவி' (எழு. 331.) என்னும் சூத்திரத்தான் உணர்க. இரண்டு வருவனவும் காண்க.

**சுப்பிர.**

(பொ—ள்.) அம்மொழி புணர் இயல்பு திரிபாய் வருமிடத்து மெய்பிறிதாதல், மிகுதல், குன்றல் என்று இவை எனக் கூறுவர் (ஆசிரியர்).

'அவைதாம்' என்றதற்கு 'அத்திரிபுதான்' என இளம் பூரணரும், 'முன்னர்த் திரிபு என்று கூறிய அவைதாம்' என நச்சினார்க்கினியரும் பொருள் கூறினர். அவ்வாறாயின் சூத்திரத்துள் 'திரியுமாறே என்றது எற்றுக்கு? அன்றியும், 'அவைதாம் திரிந்து புணரும் நெறியை' என்று அவர் கூறு வதற்குப் பொருள் யாது? ஆகலின், 'அவைதாம்' என்றது கீழ் மொழி புணர் இயல்பு என்று வந்ததைச் சுட்டும் என்று கொண்டு பொருள் உரைப்பதே சாலும்.

---

சு. வே: 1. சாநின்றான்
2. ஒருங்கே

இளம்பூரணர் உரை. கன்னியப்ப முதலியார் பதிப்பு: ''திரிபு மூன்றனுள் யாதாயினும் ஒன்றாயினும், ஒரு புணர்ச்சிக்கு இரண்டும் மூன்றும் ஒருங்கு வரப் பெறும்.'' சிதம்பரம் பிள்ளை பதிப்பு: ''ஒரு புணர்ச்சிக்குத் திரிபு மூன்றனுள் ஒன்றாயினும் இரண்டாயினும் மூன்றாயினும் வரப் பெறும்.''

சிதம்பரம் பிள்ளை பதிப்பில், ''முதல் உதாரணத்தில் அத்திரிபு மூன்று வந்தது என்றிருத்தல் வேண்டும். இரண்டாம் உதாரணம் பிழை. இப்பிழைகள் ஏடு பெயர்த்தெழுதினோரால் நேர்ந்தன போலும்'' என்ற குறிப்பு உளது. முதல் உதாரணம் 'மகத்தாற் கொண்டான்' என்றது. மகம்+கொண்டான் என்ற விடத்து 'நாட் பெயர்க்கிளவி' (எழு. 332.) என்ற சூத்திரத்தான் அத்து, ஆன் என்ற சாரியைகள் வந்தன. ஆகலின் ஆங்கு 'மிகுதி இரண்டு வந்தது' என்று கூறுதல் பிழையாகாது. இரண்டாம் உதாராணம் 'நீயிர் குறியிர்' என்றது. நும் என்றது அல்வழிப் புணர்ச்சியில் 'அல்லதன் மருங்கிற் சொல்லுங்காலை' (எழுத். 327) என்ற சூத்திரத்தான், உகரங்கெட, நகரத்தின் மேல் ஈ வர, ஈறுகெட ரகரம் வர, இடையில் இகரம் தோன்ற, நீஇர் என மாறுகின்றது. ஈண்டு ஈகாரம் இகரம் ரகரம் மூன்றும் மிகுதலின் அம்மிகுதி மூன்று வந்தது எனக் கூறுதலும் பிழையாகாது. ஆகலின் அக்குறிப்பினை அழித்தல் வேண்டும்.

*சிவ.*

'அவைதாம்' என்பதற்குப் பதிலாக 'அவற்றுள்' என்பது இருத்தல் வேண்டும். முன் நூற்பாவில் திரிபு மூன்றும் இயல்பு ஒன்றும் ஆக நான்கு கூறப்பட்டன. அவைதாம் எனச் சுட்டுவ தாயின் அந்நான்கையுமே குறிக்கும். நான்கனுள் மூன்றுபற்றியே இந்நூற்பா கூறுகின்றதாகலின் அவற்றுள் என்பதே பொருந்தும். முன்நூற்பாவில் கூறிய 'மொழி புணர் இயல்பு' என்பதைச் சுட்டும் என்பதும் பொருந்தவில்லை, மொழி புணர் இயல்பு நான்காதலின். அவைதாம் நான்கைச்சுட்டி மூன்று கூறுதல் குற்றமாம்.

இளம்பூரணத்தில் ''இப்புணர்ச்சி நான்கும் ஒரு புணர்ச்சிக் கண்ணே நிகழ்வு பெறும் என்பது உரையிற் கொள்க'' என்றுளது. இதில் ஒரு புணர்ச்சிக்கண்ணே என்பதற்குப் பதில் 'உருபு புணர்ச்சிக் கண்ணும்' என்றிருப்பது சிறக்கும். இளம்பூரணர், 'வல்லெழுத்து முதலிய' (புணரி. 115) என்னும் நூற்பாவில், ''மெய் பிறிதாதல் முதலாய நான்கு புணர்ச்சியும் உருபு புணர்ச்சிக் கண்ணும் எய்தலின்'' என எழுதியதும் காணலாம்.

இளம்பூரணர் “மேல் இடன் என்றதனால்......மூன்றாயினும் வரப் பெறும் எனக் கொள்க” என எழுதி உதாரணம் காட்ட வேண்டி “மகத்தாற் சொண்டான் என்பது அம்மிகுதி இரண்டு வந்தது” என்றார். இதில் அம்மிகுதி என்பதற்குப் பதிலாக அத்திரிபு என்றும் இரண்டு என்பதற்குப் பதிலாக மூன்று என்றும் இருப்பதே சிறக்கும். மகம்+கொண்டான் என்பனவற்றின் இடையில் அத்து ஆன் என்ற சாரியைகள் மிகுதலும், மகம் என்பதின் ஈற்று மகர ஒற்று குன்றலும், ஆன்சாரியையின் னகர ஒற்று றகர ஒற்றாகப் பிறிதாதலும் ஆகிய மூன்று திரிபுகள் வந்து ‘மகத்தாற் கொண்டான்’ என்பது உருவாகிறது. “நீயிர் குறியிர் என்பது அம்மிகுதி மூன்று வந்தது” என்பதற்குப் பதிலாக, “நீயுர் குறியிர் என்பது அத்திரிபு இரண்டு வந்தது” என்றிருப்பதே அமையும். ‘நும்’ என்பதில் முதலில் உள்ள நகர மெய்யின்மேல் ஏறிய உகர உயிர் குன்றலும், ஈகாரம் இகரம் ரகரமெய் ஆகியன மிகுதலும் ஆகிய இரண்டு திரிபுகள் காரண மாக ‘நீயிர்’ என்ற சொல் உருப் பெறுகின்றது.

## அடைமொழிகளோடு புணர்தல்

**111. *நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும்**
**அடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய. (8)**

**ஆ. மொ:** இல.

The standing word and the coming word
Even when appearing with adjuncts are eligible to join.

**க. சு:**

Even when the standing word and the coming word occur with adjunct (s), they are elgible to sandhi.

* ‘அவற்றுள், நிறுத்த சொல்லும்’ என்று இராசம் வெளியீட்டில் மட்டும் பாடவேறுபாடு பகுதியில் குறிக்கப்பட்டுள்ளது. புணர்ச்சித் திரிபுகளாக மெய் பிறிதாதல், மிகுதல், குன்றல் என்ற மூன்றும் முன் நூற்பாவில் கூறப்பட்டன. அவைபற்றிய செய்தி தொடராமையின் இந்நூற்பாவில் ‘அவற்றுள்’ என்பது தேவையற்றது

## இளம்.

இது [1]'நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவி' (புணரியல். 5.) என்பதற்கு ஓர் புறனடையுணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும்...நிலை மொழியாக நிறுத்தின சொல்லும், அதனைக் குறித்து வரு சொல்லும், அடையொடு தோன்றினும் புணர்நிலைக்கு உரிய— (தாமே வந்து புணர்வதன்று) [2]அவையிரண்டினும் ஒரோர் [3]சொல்லடை வந்துஒன்றித் தோன்றினும் [4]புணர்நிலைக்கு உரிய.

எ-டு: பதினாயிரத் தொன்று, ஆயிரத்தொருபது, பதினாயிரத்தொருபஃது எனவரும்.

ஈண்டு அடையென்றது உம்மைத் தொகையினையும், இரு பெயரொட்டுப் பண்புத் தொகையினையும் என உணர்க. அவையல்லாத தொகைகளுள் வினைத் தொகையும், பண்புத் தொகையும் [5]பிளந்து முடியாமையின் ஒரு சொல் எனப்படும். அன்மொழித் தொகையும் தனக்கு வேறு ஓர் [6]முடிபு இன்மையின் ஒரு சொல் எனப்படும் இனி ஒழிந்த வேற்றுமைத் தொகையும் 'தன்னின முடித்தல்' என்றதனான் ஈண்டு ஒரு சொல் எனப் படும்.

*உண்ட சாத்தன் வந்தான், உண்டு வந்தான் சாத்தான் என்பனவும் அவ்வாறே ஒருசொல் எனப்படும். பிறவும் அன்ன,*

## நச்.

இது நிலைமொழி அடையடுத்தும் வருமொழி அடை யடுத்தும் அவ்விரு மொழியும் அடையடுத்தும் புணரும் என எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

(இ—ள்.) நிலைமொழியாக நிறுத்தின சொல்லும் அதனைக் குறித்துவரும் சொல்லும், தாமே புணராது ஒரோ ஓர் சொல்

சு. வே: 1. நிறுத்த சொல்லொடு
2. அவ்விரண்டும்
3. சொல்லடை வந்தொரன்றினும்
சொல்லிடை வந்தொன்றினும்
4. அவையும் புணர்நிலைக்குரிய
5. பிரித்து
6. முடிவின்மையின், முடுயின்மையின்

* இப்பகுதி சில ஏடுகளில் இல்லை என்பது திரு—அடிகளாசிரியர் பதிப்பில் (தொல். எழுத்து. இளம்பூரணம்) காணப்படுகிறது.

அடையடுத்து வரினும் இரண்டும் அடையடுத்து வரினும் புணர் நிலைமைக்கு உரிய; எ—று.

அடையாவன உம்மைத் தொகையும் இருபெயரொட்டுப் பண்புத் தொகையுமாம்.

எ-டு: பதினாயிரத் தொன்று, ஆயிரத்தொருபஃது, பதினாயிரத்திருபஃது எனவரும். இவ்வடைகள் ஒரு சொல்லேயாம். வேற்றுமைத் தொகையும் உவமத்தொகையும் பிளந்து முடியப் பண்புத்தொகையும் வினைத் தொகையும் பிளந்து முடியாமையின் ஒரு சொல்லேயாம். அன்மொழித் தொகையும் தனக்கு வேறோர் முடிபின்மையின் ஒரு சொல்லேயாம். இத் தொகைச் சொற்களெல்லாம் அடையாய் வருங்காலத்து ஒரு சொல்லாய்வரும் என்றுணர்க. உண்ட சாத்தன் வந்தான், உண்டு வந்தான் சாத்தன் என்பனவும் ஒரு சொல்லேயாம்.

**சுப்பிர.**

இச்சூத்திரம் எற்றுக்கு எனின் தனிச் சொற்கள் போலத் தொகைச் சொற்களும் நிலைமொழியாய் வருமெனத் தெற்றென விளக்க என்னலாம்.

இச்சூத்திரவுரையில் "ஈண்டு அடையென்றது உம்மைத்... எனவுணர்க" என இளம்பூரணத்திலும், "அடையாவன... தொகையுமாம்" என நச்சினார்க்கினியத்தியலும் உள.

பதினாயிரம் என்றது வேற்றுமைத் தொகையாகுமேயன்ற* ஆயிரத்திற்கடையாகிய 'பத்து' உம்மைத் தொகையாகாமையின் அத்தொடர்கள் ஆராய்தற்பாலன, அன்றியும் "அவையல்லாத தொகைகளுள்...ஒருசொல் எனப்படும்" என இளம்பூரணத் திலும், அப்பொருள் கொண்ட மற்றொரு தொடர் நச்சினார்க் கினியத்திலும் உள. 'எல்லாத் தொகையும் ஒரு சொல் நடைய' (சொல். 420) என்ற சூத்திரத்தான் பண்புத்தொகை, உம்மைத் தொகை, இவையும் ஒரு சொல்லேயாம் என உணர்த்தப் படுதலின் அத்தொடர்களின் உட்கருத்து நன்கு விளங்கவில்லை.

---

* பதினாயிரம் என்பது வேற்றுமைத் தொகையாகாது. பத்தை யுடைய ஆயிரம் என்றாவது பிறவாறாவது வேற்றுமைப் பொருள்பட விரியாது; பத்தாகிய ஆயிரம் எனப் பண்புத் தொகையாகவே விரியும்.

பி. கு.

பாவாணர்:—"பன்னிரண்டு கண் என்னும்போது, பன்னிரண்டு என்பது பத்தும் இரண்டும் எனப் பொருள்படுவதால் தொகை.

"பதினாயிரத் தொன்று என்னும்போது, பதினாயிரம் என்பது பத்தாகிய ஆயிரம் எனப் பொருள்படுதலின் பண்புத் தொகையாம், ஆனால் இருபெயர் ஒட்டுப் பண்புத் தொகையன்று. இருபெயர் ஒட்டாயின் பத்து ஆயிரம் என்னும் சொற்கள் தனித்தனி நின்றும் ஒருபொருளே உணர்த்தல் வேண்டும். அங்ஙனம் உணர்த்தாமையும், பனைமரம் என்னும் இருபெயர் ஒட்டுப் பண்புத் தொகையில் இருசொல்லும் தனித்தனி ஒரே பொருளை உணர்த்துவதையும் நோக்குக.

"மரக்கிளை என்னும் வேற்றுமைத் தொகை மரம்+கிளை என்றும், முத்துப்பல் என்னும் உவமைத் தொகை முத்து+பல் என்றும் பிளந்து முடிதல் காண்க.

"செந்தாமரை என்னும் பண்புத் தொகையும், கொல் களிறு என்னும் வினைத்தொகையும் திட்டமாக அல்லது தெளிவாக இரு சொல்லாய்ப் பிளந்து முடியாமையும் ஒரு சொற்றன்மைப் பட்டு நிற்றலும் காண்க."

"அன்மொழித்தொகை என்றும் வெளிப்படாத சொல்லாய் ஏனைத் தொகைகளின் ஈற்றில் பிறத்தலானும் ஒரு சொற்றன்மைப்பட்டு நிற்றலானும் ஒரு சொல்லாம்"

"உண்ட சாத்தனாய் வந்தான், உண்டு வந்தவனாகிய சாத்தன் எனப் பொருள் படும்போது இவைகளும் ஒரு சொற்றன்மைப் படும்." (இந்நூற்பாவின் அடிக்குறிப்பு)

"வினைத்தொகை, பண்புத்தொகை, அன்மொழித் தொகையென்னும் அல்வழிப் புணர்ச்சியவாய தொகைநிலைத் தொடர்மொழிகளை ஒழிமொழிகள் என்பாரும் உளர்; அவர் கூற்றுத் தாய் மலடி யென்றாற்போலும்"—இது சங்கர நமச்சிவாயர் கூற்று. (நன்னூல் 152 உரை)

தொல்காப்பியர் பண்புத் தொகை வினைத் தொகைகளைப் "புணரியல் நிலையிடை யுணரத் தோன்றா" (குற்றிய. 77) ஆதலின் அவற்றைப் பிரித்துப் புணர்க்கக் கூடாது என்றார்.

அதுகொண்டு, அவை நிலைமொழியாக வரின் இரு சொற்களாகக் கொள்ளமல் ஒரு சொல்லாகக் கொண்டு வருமொழியோடு புணர்க்கப்படும் என்பதற்காக உரையாசிரியர்கள் ஒரு சொல் என்றனரேயன்றி வேறன்று சிவ.

மரூஉமொழிப் புணர்ச்சி

112. மருவின் தொகுதி மயங்கியல் மொழியும்
உரியவை யுளவே புணர்நிலைச் சுட்டே. (9)

**ஆ. மொ: இல:**

Even the deformed words, formed into
phrases are in the way of joining of words
(in the formation of sentence)

**க. சு:**

Words whose fusion and accumulation
is sanctioned as marūu do also occur
in the situation of juxtaposition.

**பி.இ.நூ.**

முத்து 164.

மருவின் தொகுதி மயங்கியல் மொழியும்
உரியவை யுளவே புணர்நிலைச் சுட்டே

**இளம்.**

இது, இலக்கண வழக்கேயன்றி மரூஉக்களும் புணர்க்கப்படும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) மருவின் தொகுதி மயங்கு இயல் மொழியும்—(இலக்கண வழக்கேயன்றி) மரூஉத் திரளாகிய தலைதடுமாறாக மயங்கின இயல்பையுடைய இலக்கணத்தொடு பொருந்தின மரூஉ வழக்கும், உரியவை உள புணர்நிலைச் சுட்டு—உரியன உள புணரும் நிலைமைக்கண்.

எ—டு: மீகண், முன்றில் எனவரும்.

நிலை என்றதனான் இலக்கணத்தொடு பொருந்திய [1]மரூஉ வழக்கல்லா மரூஉ வழக்கும் புணர்க்கப்படும் எனக் கொள்க.

சு. வே. 1. மரூஉ வழக்கல்லாமல் வரூஉம் வழக்கும்

நச்.

இது மரூஉச் சொற்களும் புணர்ச்சி பெறும் என்பதூஉம் நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியுமாய்ப் பொருளியை பில்லனவும் புணர்ச்சி பெற்றாற்போல நிற்கும் என்பதூஉம் உணர்த்துகின்றது.

(இ—ள்.) இருவகையாகி மருவிய சொற்களும், செவிக் கினிதாகச் சொற்றிரளிடத்து நிறுத்த சொல்லுங் குறித்து வரு கிளவியுமாய் ஒட்டினாற் போல நின்று பொருளுணர்த்தாது பிரிந்து பின்னர்ச் சென்று ஒட்டிப் பொருளுணர்த்த மயங்குதல் இயன்ற சொற்களும், புணரும் நிலைமைக் கருத்தின்கண் உரியன உள; எ—று

மொழியும் என்பதனை மருவென்பதனோடுங் கூட்டுக. 'இன்றொகுதி' என்றார், பாவென்னும் உறுப்பு நிகழப் பொருளொட்டாமற் சான்றோர் சொற்களைச் சேர்த்தலின்.

எ—டு: முன்றில், மீகண். இவை இலக்கணத்தோடு பொருந்திய மரு. இலக்கணம் அல்லா மரு 'வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்' (எழு. 483) என்புழிக் காட்டுதும். இனி,

> இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பிற்
> பரலவ லடைய இரலை தெறிப்ப (அகம். 4)

என்புழி மருப்பின் இரலையென்று ஒட்டி இரண்டாவதன் தொகையாய்ப் பொருள்தந்து 'புள்ளி யீற்று முன் உயிர் தனித் தியலா' (எழு. 183) என்று உயிர் ஏறி முடிந்து மயங்கி நின்றது. ஆயின் மருப்பிற் பரல் என்று மெய் பிறிதாய் ஒட்டி நின்றவா றென்னை யெனின், மருப்பினையுடைய பரல் என வேற்றுமைத் தொகைப் பொருள் உணர்த்தாமையின் அஃது அச்செய்யுட்கு இன்னோசை நிகழ்தற்குப் பகரத்தின் முன்னர் நின்ற னகரம் றகரமாய்த் திரிந்து நின்ற துணையேயாய்ப் புணர்ச்சிப் பயன் இன்றி நின்றது. இங்ஙனம் புணர்ச்சி யெய்தினாற்போல மாட்டிலக்கணத்தின் கண்ணும் மொழி மாற்றின் கண்ணும் நிற்றல் சொற்கு இயல்பு என்றற்கு அன்றே ஆசிரியர் இன்றொகுதி என்றதென்று உணர்க. 'கருங்கா லோமைக் காண்பின் பெருஞ் சினை' (அகம். 3) என்புழி ஓமைச்சினை யென்று ஒட்டி ஓமை யினது சினையெனப் பொருள் தருகின்றது, இன்னோசை தருதற்குக் ககர ஒற்று மிக்குக் காண்பின் என்பதனோடும் ஒட்டினாற்போல நின்றது. 'தெய்வ மால்வரைத் திருமுனி

யருள்' (சிலப். 3) என்புழித் தெய்வவரை யென்று ஒட்டித் தெய்வத் தன்மையுடைய வரையெனப் பொருள் தருகின்றது, இன்னோசை தருதற்கு மாலென்பதனோடும் ஒட்டினாற்போலக் குறைந்து நின்றது. மூன்று திரிபும் வந்தவாறு காண்க. இனி எச்சத்தின்கண்ணும்,

> பொன்னோடைப் புகரணிநுதல்
> துன்னருந்திறல் கமழ்கடாஅத்
> தெயிறுபடையாக எயிற்கத விடாஅக்
> கயிறு பிணிக்கொண்ட கவிழ்மணி மருங்கிற்
> பெருங்கை யானை யிரும்பிடர்த் தலையிருந்து
> மருந்தில் கூற்றத் தருந்தொழில் சாயா (புறம். 3)

என *மாட்டாய் ஒட்டி நின்றது, கயிறு பிணிக்கொண்ட என்பதனோடும் ஒட்டினாற்போல நின்று ஒற்றடுத்தது இன்னோசை பெறுதற்கு. பிற சான்றோர் செய்யுட்கண் இவ்வாறும் பிறவாறும் புணர்ச்சியில் வழிப் புணர்ச்சி பெற்றாற் போல நிற்பன எல்லாவற்றிற்கும் இதுவே ஓத்தாகக் கொள்க.

சுப்பிர.

(பொ—ள்.) வழக்கில் வரும் சொற் கூட்டங்களுள் புணர் நிலையைக் கருதுமிடத்து மயங்குந் தன்மையுடைய சொற்களும் உரியவையுள.

உ—ம்: நுனிநா, முன்றில்.

நாவின் நுனி, இல்லின்முன் என்பன தொகையாம் போது நாநுனி, இல்முன் என ஆகாது, நுனிநா, முன்றில் என ஆயின. 'நிலை' என்ற சொல் எற்றுக்கு எனின், நாவின் நுனி என்ற தொகையாகி நாநுனி என்ற சொற்கள் புணர்கின்ற நிலையில் தான் மயங்குமேயன்றி நாவின்நுனி எனத் தனிச்சொற்களாய் நிற்கும்போது மயங்கா தென்றற் கென்னலாம். இவ்வாறு 'நிலை' என்ற சொற்கும் பயன் காணலாம். சோணாடு முதலிய மரூஉச் சொற்களோ தொகைச் சொற்களாகலான் 'நிறுத்த சொல்லும்' (எழுத். 111) என்ற சூத்திரத்தாலேயே புணரலாம். ஆகவே நிலை என்றதனான் இலக்கணத்தொடு பொருந்திய மரூஉ வழக்கல்லா மரூஉ வழக்கும் புணர்க்கப்படும் எனக் கொள்க'' என்ற இளம்பூரணத் தொடரின் கருத்து விளங்க வில்லை.

* மாட்டாய்—கொண்டு கூட்டாக.

இச்சூத்திரத்தான் மரூஉச் சொற்களின் பகுதிகள் புணரும் போது இடம் மாறும் என உணர்த்தப்பட்டதாகக் கொள்ளல் வேண்டுமேயன்றி 'மரூஉக்களும் புணர்க்கப்படும்' என்பது உணர்த்தப்பட்டதாகக் கொள்ளல் பொருந்தா தென்க.

இச்சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் கூறும் பொருள்; "இருவகையாகிய மருவிய சொற்களும்......உரியன உள" என்பதாகும்.

இவ்வாறு கூறியதற்குக் காரணம் 'இரும்பு திரித்தன்ன...... இரலை தெறிப்ப' போன்றவிடத்து, 'மருப்பின்' என்றது, 'பரல்' போன்றதோடு அந்நுவயிக்காது 'இரலை' போன்றதனைத் தழுவுதலானாகும். செய்யுளில் சொற்களின் முறை பிறழல் பன்மொழியிலும் காணப்படுதலானும் 'இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பின்' என்றதை அன்மொழித் தொகையாகக் கொள்ளலாம் ஆகலானும் 'குறித்து வரு கிளவி' என்றதனாற் பின்னர்க் கூறப்படும் 'வருமொழி' என்றதே பொருளாகக் கொள்ளப்படும் ஆகலானும் நச்சினார்க்கினியர் கூறும் பொருள் ஆராய்தற்குரியது.

**வேங்கட.**

'உரியவை உள' என்றதனால், உரியவை அல்லாதனவும் உள, அவை புணர்க்கப்படா என்பது போதரும். அவை, முன்னர் (482ஆம் சூத்திரத்தான்) அறியப்படும்.

நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்தின் முதலடியை, மருமொழியும் இன்தொகுதி மயங்கியல் மொழியும் எனப் பிரித்து மாற்றிக் கூட்டிப் பொருள்கூறி, 'இன்தொகு என்றார், பா என்னும் உறுப்பு நிகழப் பொருளொட்டாமற் சான்றோர் சொற்களைச் சேர்த்தலின்' என்று விசேடம் எழுதி, உதாரணமும் காட்டினார். அவர் காட்டிய,

> 'கருங்கால் ஓமைக் காண்பின் பெருஞ்சினை'
> 'தெய்வ மால்வரைத் திருமுனி யருள'

என்னும் உதாரணங்களுள், காண்பின் பெரும் என்பது சினைக்கு அடையாகலானும், மால் என்பது வரைக்கு அடையாகலானும், அவை குறித்து வரு கிளவி அடையொடு வந்தனவேயாகும். அடைமொழி, ஒன்றே யன்றிப் பலவந்துள்ளன; இதுவே வேறு பாடு. இனி,

இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பிற்
பரல்வ லடைய இரலை தெறிப்ப'

என்னும் அடிகளில், 'மாயிரு மருப்பின் இரலை' என இயைப வற்றுக்கிடையே, 'பரலவலடைய' என இயைபு இல்லன வந்தனவால் எனின், இவ்வடிகளுள் ஒவ்வொன்றும் தனித்தனியே பொருள் முடிந்து, நோக்கு என்னும் உறுப்பு அமைந்திருக்கின்றது.

மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே (செய். 104)

என்றாராகலின், அந்நோக்கின் இலக்கணம் ஈண்டு உண்மை அறியப்படும். ஆயின், 'மருப்பின் இரலை' எனக் கொண்டு கூட்ட வேண்டுவதாய் இருத்தலின், இவ்வாறு வருவனவற்றை 'இன்தொகுதி' எனக் கொள்ளுதல் வேண்டுமெனின், ஈண்டு, இதனை, மொழிமாற்றுப் பொருள் கோளாயமைத்துக் கொள்ளுதல் தகும். நச்சினார்க்கினியரே இவ்வடியினை இப் பொருள்கோளுக்கு உதாரணமாகக் காட்டியுள்ளார் (எச்ச. 13)

இனி, புணர்ச்சியில்லாதவற்றிற்கெல்லாம் விதியமைப்பான் கருதி நச்சினார்க்கினியர் 'மருத்தொகுதி' என்றும், 'இன்தொகுதி' என்றும் பிரித்துப் பொருள் கூறினது ஆசிரியர் கருத்திற்கு அமைவுடையதன்று. இளம்பூரண அடிகள், இச்சூத்திரத்தைப் பிரித்து கூட்டிப் பொருள் கூறாராய்ச் செம்பொருள் உரைத்தது அறியத்தக்கது.

'புணர்ச்சி யில்வழிப் புணர்ச்சி பெற்றாற்போல நிற்பன' என்பவை, இக்காலத்தில் தழாத்தொடர் என்று வழங்குகின்றன.

**சிவ.**

'இச்சூத்திரம் மரூஉ மொழிகளும் நிலை வருமொழிகளாக நிறுத்திப் புணர்க்கப்படும் என்பது உணர்த்துதல் நுதலிற்று' என்று கொள்வதே சிறக்கும்.

இதன் மேற்சூத்திரம் நிலை வருமொழிகள் அடையொடு தோன்றினும் புணர்க்கப்படும் என்று கூறியது. மரூஉச் சொற்கள் யாவும் வழுச் சொற்களே; அவற்றுள் இலக்கணத்தொடு பொருந்தியனவும் பொருந்தாதனவும் உண்டு. இலக்கணத்தொடு பொருந்திய சொற்கள் மீகண் முன்றில் போல்வன. அவைபற்றிய புணர்ச்சியிலக்கணம் 'நீயென்பெயரும்' (எழுத். 251) என்னும்

சூத்திரத்திலும், 'முன்னென் கிளவி' (எழுத். 356) என்னும் சூத்திரத்திலும் கூறப்பட்டன. சென்னை (சென்னப்ப பட்டினம்), அருமருந்த (அரு மருந்து அன்ன) போன்ற சொற்கள் இலக்கணத்தொடு பொருந்தாதன. இவ்விருவகைச் சொற்களும் நிலை வருமொழிகளாக வைத்துப் புணர்க்கப்படும். மீகண் + துடித்தது, முன்றில் + அழகிது, சென்னை + பெரியது, அருமந்த + அரசாட்சி என நிலை மொழிகளாக நிறுத்திப் புணர்க்கவும், துடித்தது + மீகண், அழகிது + முன்றில், பெரியது + சென்னை, என வருமொழிகளாக நிறுத்திப் புணர்க்கவும் அமைந்தவாறு காணலாம். (அருமந்த என்பது பெயரெச்சமாகலின் வருமொழி யாகப் புணிர்க்கப்படாது.

இக்கருத்தில்தான் இளம்பூரணர் உரையை நாம் கருதுதல் வேண்டும். அவர், "நிலை என்றதனான் இலக்கணத்தொடு பொருந்திய மரூஉ வழக்கல்லா மரூஉ வழக்கும் புணர்க்கப்படும் எனக் கொள்க" என எழுதியதும் பொருத்தமே.

'இச்சூத்திரத்தான் மரூஉச் சொற்களின் பகுதிகள் புணரும் போது இடம்மாறும் என உணர்த்தப்பட்டதாகக் கொள்ளல் வேண்டும்' என்றார் சுப்பிரமணிய சாஸ்திரியார். மரூஉச் சொற்கள் உலகவழக்கில் காரணம் இல்லாமல் தாமே தன்மை திரிந்து மாறி வழங்குவன. கண் + மீ என்ற சொற்கள் 'மீ கண்' என மாறி வழங்குவது இலக்கண முறையால் இல்லை; உலகவழக்கின் தவறுதலால் ஏற்பட்ட வழக்கேயாகும். அதனால் மீகண் என்பதைப் பிரிக்கும்போது கண் + மீ எனப் பிரிப்பதும் புணர்க்கும் போது மீகண் எனப் புணர்ப்பதும் ஆகிய இருநிலைகளைக் காட்டுவது பொருந்தாது. மீ + கண் என்றே பிரித்தல் வேண்டும் இதற்கே இலக்கண விதி கூறல் வேண்டும். (எழுத். 251) இல் + முன் என்பன முன்றில் என வரும். முன்றில் என்பதை இல் + முன் எனப் பிரிப்பதும் முன்றில் எனப் புணர்ப்பதும் பொருந்தா. முன்றில் என்பதையே முன் + இல் எனப் பிரித்து னகர ஒற்று இரட்டாமல் 'ற்' என்ற ஒற்றுத் தோன்றியதாக இலக்கணம் அமைத்தல் வேண்டும். (எழுத். 356) ஆசிரியர் தொல்காப்பியர் அவ்வாறே அமைந்தமை காண்க.

## இருவகைப் புணர்ச்சி

113 வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்
வேற்றுமை யல்வழிப் புணர்மொழி நிலையும்
எழுத்தே சாரியை ஆயிரு பண்பின்
ஒழுக்கல் வலிய புணருங் காலை. (10)

**ஆ. மொ:** இல:

The words. joining in case-relation and
The words, joining in non-case relation
have either the letter or the increment of both
appeared,
when the joining takes place.

**க. சு:**

Words, juxtapposed in case-relation
as well as words juxtapposed in non–case relation,
have either a sound or an empty-morph,
one of the two, inserted,
when sandhi takes place.

பி. இ. நூ. நன்152.

**வேற்றுமை ஐம்முதல் ஆறாம் அல்வழி.**
**தொழில் பண்புவமை யும்மை யன்மொழி**
**எழுவாய் விளியீ ரெச்சம்முற் றிடையுரி**
**தழுவுதொடர் அடுக்கெனவீ ரேழே**

தொ. வி. 22.

**அல்வழி வேற்றுமையாம் இரண்டு அவற்றுள்**
**விரியினும் உருபுஎடா வினைசார் பெயரே**
**அல்வழிப் பொருட்பெயர் ஆகும் என்ப**
**வேற்றுமை யுருபு இல்லது விரிக்குங் காலை**
**வேற்றுமைக் கொளின் அது வேற்றுமைப்**
**பொருளே**

முத்து. 165

**அல்வழி வேற்றுமை யாம்இரு பாலன**

,, 166 **அவற்றுள்**

**அல்வழி வினைத்தொகை யன்மொழி யுவமை**
**உம்மை குணம்எழு வாய்விளி யிடையுரி**
**அடுக்கீ ரெச்சமுற் றாறொடும் எட்டே**

**இளம்.**

இது, நால்வகைப் புணர்ச்சியுள் மிக்க புணர்ச்சி [1]இத்தன்மைத் தென்பதூஉம், [2]அந்நால்வகைப் புணர்ச்சியும் [3]வேறோராற்றான் இருவகையாம் என்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) வேற்றுமை குறித்த புணர்மொழிநிலையும்—வேற்றுமையது பொருண்மையினைக் குறித்த புணர் மொழியது நிலைமையும், வேற்றுமை அல்வழி புணர்மொழி நிலையும்—வேற்றுமையல்லாத அல்வழியிடத்துப் புணர்மொழியது நிலைமையும், எழுத்து சாரியை அ இருபண்பின் ஒழுக்கல் வலிய—(மிக்க புணர்ச்சிக்கண்) எழுத்து மிகுதலும் சாரியை மிகுதலும் ஆகிய அவ்விரண்டு இலக்கணத்தானும் நடாத்துதலைத் தமக்கு [4]வலியாகவுடைய, புணருங்காலை—அவை புணருங் [5]காலத்து.

எ-டு: விளங்கோடு, மகவின்கை; விளக்குறிது, *பனையின் குறை எனக் கண்டு கொள்க.

ஒழுக்கல் வலிய என்றதனான், எழுத்தும் சாரியையும் உடன்பெறுதல் கொள்க.

அவற்றுக்கோடு, †கலத்துக் குறை எனவரும்.

அல்வழி முற்கூறாதது, வேற்றுமையல்லாதது அவ்வழியென வேண்டலின் என்பது. முன்னே [6]'புணர்மொழி' என்று வைத்து, 'புணருங்காலை' என்றதனாற் புணர்ச்சிக் கண்ணே வேற்றுமை அல்வழியென இரண்டாவது, அல்லாக்கால், வேற்றுமை [7]யெனவே படும் என்பது கொள்க. ஈண்டு அல்வழி என்றது பெரும்பான்மையும் எழுவாயினை.

சு. வே: 1. இத்தன்மை என்பதும்
2. அந்த நால்வகையும்
3. வேறோ ராற்றின்
4. வலியதாக
5. காலை
6. புணர்நிலை, புணர்மொழிநிலை
7. யெனப்படும்

* பனையாகிய குறை † கலமும் குறையும்

நச்.

இது மூவகைத் திரிபினுள் மிக்குப் புணரும் புணர்ச்சி இருவகைய என்கின்றது.

(இ—ள்.) நால்வகைப் புணர்ச்சியுள் மிக்க புணர்ச்சி புணருங் காலத்து, வேற்றுமைப் பொருண்மையினைக் குறித்த புணர் மொழியினது தன்மையும், வெற்றுமையல்லாத அல்வழியிடத்துப் புணரும் மொழியினது தன்மையும், எழுத்து மிகுதலும் சாரியை மிகுதலும் மாகிய அவ்விரண்டு குணத்தினாலும் செல்லுதலைத் தமக்கு வலியாகவுடைய; எ—று.

எனவே, ஏனைப் புணர்ச்சிகளுக்கு இத்துணை வேறுபாடு இன்றெனவுணர்க.

எ—டு: விளங்கோடு, இஃது எழுத்துப் பெற்றது. மகவின் கை, இது சாரியை பெற்றது. இனி அல்வழிக்கண் விளக்குறிது, இஃது எழுத்துப் பெற்றது. பனையின் குறை, இது சாரியை பெற்றது. இதற்குப் பனை குறைந்தது என்பது பொருளாம். இஃது அளவுப் பெயர். ஒழுக்கல் வலிய என்றதனான் இக்கூறிய இரண்டும் எழுத்தும் சாரியையும் உடன் பெறுதலும் கொள்க. அவற்றுக்கோடு என்பது வேற்றுமைக்கண் இரண்டும் பெற்றது. கலத்துக்குறை என்பது அல்வழிக்கண் இரண்டும் பெற்றது. இதற்குக் கலங் குறைந்தது என்பது பொருளாம். *இயல்பு கணத்துக்கண் இவ்விரண்டும் உடன் பெறுதல் இன்று. அல்வழி முற்கூறாதது வேற்றுமையல்லாதது அல்வழியென வேண்டுதலின். எழுத்துப் பேறு யாப்புடைமையானும் எழுத்தினாற் சாரியையாதலானும் எழுத்து முற் கூறினார். வேற்றுமை மேலைச் சூத்திரத்தே கூறுகின்றார்.

அல்வழியாவன அவ்வுருபுகள் தொக்கும் விரிந்தும் நில்லாது புணர்வன. அவை எழுவாய் வேற்றுமை **ஆறு பயனிலையோடும் புணர்ந்த புணர்ச்சியும், விளி வேற்றுமை தன்

*உயிர்க்கணம், மென்கணம், இடைக்கணம் ஆகிய மூன்றும் இயல்புகணம் எனப்பெறும்.

**ஆறுபயனிலை:—பொருண்மை சுட்டல், வியங்கொளவருதல், வினைநிலை யுரைத்தல், வினாவிற்கேற்றல், பண்புகொள வருதல், பெயர்கொளவருதல்.

பொருளோடு புணர்ந்த புணர்ச்சியும், முற்றுப் பெயரோடும் வினையோடும் புணர்ந்த புணர்ச்சியும், பெயரெச்சமும் வினையெச்சமும் பெயரோடும் வினையோடும் புணர்ந்த புணர்ச்சியும், உவமத் தொகையும் இருபெயரொட்டுப் பண்புத் தொகையும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரோடும் வினையோடும் புணர்ந்த புணர்ச்சியும், அன்மொழித் தொகை பொருளோடு புணர்ந்த புணர்ச்சியும், பண்புத் தொகையும் வினைத் தொகையும் விரிந்து நின்றவழிப் புணர்ந்த புணர்ச்சியு மெனவுணர்க.

**சுப்பிர.**

111ஆவது சூத்திரத்தினின்று நிறுத்த சொல்லும் குறித்து வருகிளவியும் என்பன அதிகரித்தன. அவை 'ஒழுக்கல் வலிய' என்றதற்கு எழுவாயாகும்.

பின்னர்ச் சூத்திரங்களிலெல்லாம் 'அல்வழி' எனக் கூறு மிடத்து 'வேற்றுமையல்வழி' எனக் கொள்ளல் வேண்டும் என்றது இச்சூத்திரத்து இரண்டாம் அடியாற் குறிக்கப்பட்டது.

முன்னர்ச் சொல்லப்பட்ட நால்வகைப் புணர்ச்சியும் வேற்றுமைப் புணர்ச்சி அல்வழிப் புணர்ச்சி என்றவற்றுள் அடங்கும் என்றதும் இச்சூத்திரத்தாற் பெறப்பட்டது.

வேற்றுமை குறித்த புணர்மொழி என்றதற்கு வேற்றுமை யுருபால் (நின்றும் தொக்கும்) இயைபு குறிக்கப்பட்ட புணர் மொழிகள் என்பது பொருளாகும்.

'ஒழுக்கல் வலிய என்றதனான் எழுத்தும் சாரியையும் உடன் பெறுதல் கொள்க' என்று இளம்பூரணத்திற் காணப்படுகின்றது. 'வலிய' என்ற சொல்லே இச்சூத்திரம் மிகுதல் என்ற திரிபைப் பற்றிக் கூறும் என உணர்த்துகின்றமையான் 'ஒழுக்கல்' என்பது வேண்டுவதன்று.

இச்சூத்திரத்தில் வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும் வேற்றுமையல்வழிப் புணர்மொழி நிலையும் என்றதை எழுவாயாகக் கொண்டனர் உரைகாரர்கள். நிறுத்த சொல்லும் குறித்து வருகிளவியும் என்பன புணருங்காலை என்றனவற்றிற்கு எழுவாயாகலின் அவற்றையே 'ஒழுக்கல் வலிய' என்றதற்கும் எழுவாயாகக் கொள்ளலாம். 'புணருங்காலை' என்ற சொல்

எற்றுக்கு எனின், மரத்தைக் குறைத்தான் என்ற இருசொற்களும் புணர்தற்குத் தகுந்தனவாயிருப்பினும், அவ்விரண்டனையும் சேர்த்து ஒலிக்காவிடின் புணர்ச்சியானுண்டாம் மிகுதல் நிகழாது என்றதற்காக. 'புணருங்காலை' என்றதனான், புணர்ச்சிக்கண்ணே வேற்றுமை அல்வழியென இரண்டாவது; அல்லாக்கால் வேற்றுமையெனவே படும் என்பது கொள்க' என்ற இளம்பூரணம் எற்றுக்கு எனின், வேற்றுமைப் புணர்ச்சி என்றதனான் வேற்றுமைப் பொருட் புணர்ச்சியையே இளம்பூரணர் கொண்டமையானும், அப்புணர்ச்சியுடையது தொகைச் சொல்லேயாதலானும் அவ்வாறு கூறினர் என்க.

நச்சினியார்க்கினியத்தில் 'வேற்றுமையல்லாத அல்வழியிடத்து' என்றதற்குப் பிரதியாக 'வேற்றுமையல்லாத வழி' என்றிருப்பின் நலம்.

## ஆ. வேலுப்பிள்ளை

தொல்காப்பியர் காலத் தமிழ்மொழியின் இலக்கணத்தை யுணர, வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என்று பாகுபாடு வேண்டியதொன்றாக இருந்திருக்கலாம். வீர சோழியம் இந்தப் பாகுபாட்டைக் குறிக்கவில்லை. நன்னூலார் இந்தப்பாகுபாட்டின் அடிப்படையிலேயே புணரியல் இலக்கணம் கூறுகிறார். இந்தப் பாகுபட்டின் அடிப்படையில் அமைந்த தொல்காப்பிய நன்னூற் சூத்திரங்களிலுள்ள விதிகளுக்கு, அந் நூல்களுக்கு உரை யெழுதியோர் எடுத்துக்காட்டும் பெருந் தொகையான விலக்குகளைப் பார்க்கும்பொழுது, இந்தப் பாகு பாடு மொழியின் இலக்கணத்தைப் புரிந்து கொள்ள உதவு கிறதா என்ற கேள்வி எழுகிறது.

நிலைமொழியீறும் வருமொழி முதலுமே புணர்வன. உயிரீறு முன் உயிர் முதல், உயிரீறு முன் மெய் முதல், மெய்யீறு முன் உயிர் முதல், மெய்யீறு முன் மெய் முதல் என நான்கு வகையிலும் புணர்ச்சி நிகழும். மெய்யீறு முன் உயிர் வரும் பொழுது, உயிர் மெய்மேல் ஏற நிகழும் புணர்ச்சி இயல்புப் புணர்ச்சி எனப்படும். உயிர் முன் உயிர் முதல் வரும்போது நிகழும் புணர்ச்சி எவ்வகையிலும் நிலைமொழி வருமொழியின் இலக்கணத் தொடர்போடு சம்பந்தப்பட்டதல்ல. எனவே, நால்வகைப் புணர்ச்சியில், இருவகைப் புணர்ச்சிக்கு வேற்றுமை—அல்வழிப் பாகுபாடு அவசியமற்றதாகிறது.

உயிரீறு முன் மெய் முதல் வரும் புணர்ச்சிக்கும், மெய்யீறு முன் மெய் முதல் வரும் புணர்ச்சிக்கும் வேற்றுமை—அல்வழிப் பாகுபாடு அவசியம் என்று கருதத் தக்க முறையில், தொல்காப்பியரும் நன்னூலாரும் இலக்கணம் செய்திருக்கின்றனர். வேற்றுமைப் புணர்ச்சி கொள்ளும்போது, முதலாம் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் தள்ளி ஏனை ஆறு வேற்றுமைகளே கொள்வர். இந்த ஆறு வேற்றுமைக்கும் உரிய தொகைநிலை தொகாநிலைத் தொடர்கள் யாவும் வேற்றுமைப் புணர்ச்சி பெறும் என்பர். வேற்றுமையல்லாத வழியிலமையுந் தொடர்கள் யாவும் அல்வழித் தொடராகக் கொள்ளப்படுகின்றன; அவை அல்வழிப் புணர்ச்சி பெறும் என்பர்.

சில புணர்ச்சி விகாரங்கள் வேற்றுமைக்கும் அல்வழிக்கும் பொதுவாக அமைகின்றன. உயிரீறுக்கு முன்வரும் வல்லினம் இரட்டும் என்பது தொல்காப்பியம் எழுத்ததிகாரச் சூத்திரங்களில், வேற்றுமைப் புணர்ச்சிக்கும் அல்வழிப் புணர்ச்சிக்கும் எடுத்துக் கூறப்படுகின்றன. அச்சூத்திரங்களின் பொருளைத் தொகுத்துக் கூறும் நன்னூல் சூத்திரம் (165) ''இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன், கசதப மிகும் விதவாதன மன்னே'' என்கிறது. யரழமுன் வல்லினம் வருவதைக் கூறப் போந்து (நன். சூ. 224), ''யரழ முன்னர் கசதப அல்வழி, இயல்பும் மிகலும் ஆகும் வேற்றுமை மிகலும் இனத்தோ டுறழ்தலும் விதிமேல்'' என்கிறது. யரழ முன்னர் வல்லெழுத்து வரும்பொழுது, சில தொடர்களில், இருவழியிலும் மிகலாம் என்று இச்சூத்திரத்தில் கூறப்படுகின்றது. மிகுதல் ஒருவகைப் புணர்ச்சிக்கு, மிகாமை ஒருவகைப் புணர்ச்சிக்கு என்று பிரித்துக் காட்ட இப்பாகுபாடு கூறவில்லை. இச்சூத்திரத்தின் காண்டிகையுரை, அல்வழியியல்பு மிகுதி இரண்டனுள், இயல்பு எழுவாய்த் தொடர், உம்மைத் தொகை, வினைத் தொகைகளிலும், மிகுதி பண்புத்தொகை உவமத் தொகைகளிலும் கொள்ளப்படும் என்கிறது. அல்வழியில், சில பிரிவுகளில் இயல்பும், சில பிரிவுகளில் மிகலும் வருவதனால், அல்வழியில் இயல்பும் மிகலும் வரும் என்று சூத்திரம் செய்வதிலும் பார்க்க, அல்வழியின் பிரிவுகளையே குறிப்பிட்டு, எவ்வெப் பிரிவுகளில் இயல்பு, எவ்வெப் பிரிவுகளில் மிகல் எனக் குறிப்பிடுவதே பிரயோசனமாக இருந்திருக்கும். உயிரீறு முன் வரும் வல்லினம் இரட்டுதல் கூட, வேற்றுமைப் புணர்ச்சியிலோ அல்வழிப் புணர்ச்சியிலோ எல்லா இடமும் நடப்பதில்லை. இலக்கியத் தமிழில் வல்லினம் இரட்டல் கூடிய அளவு

நடைபெறுகிற தெனலாம். இலக்கணம் கற்ற புலவர்கள் இவ் விலக்கண விதிகளைக் கூடிய அளவு போற்றுவது இதற்குக் காரணம் ஆகலாம். பேச்சு வழக்கைப் பெரிதும் ஒட்டிச் செல்லும் சாசனங்களில், உயிரீறு முன் வல்லினம் இரட்டாமை பரந்து காணப்படுகிறது. தொல்காப்பியர் காலத்திலும் இதே நிலையில் இருந்த தனாற் போலும், அவர், பொதுவிதியாலேயே அமைக்க முடியாது, பெருந்தொகையான சிறப்பு விதிகளையும் அமைத்துப் புணரியலை அவ்வளவு விரிவாகக் கூறுவது.*

—(தமிழ் வரலாற்றிலக்கணம். பக்கம். 82—94
பாரி நிலையம், சென்னை–1).

## 3. உருபு புணர்ச்சி

### வேற்றுமை யுருபுகள்

**114. ஐஒடு குஇன் அதுகண் என்னும்
அவ்வாறு என்ப வேற்றுமை யுருபே. (11)**

**ஆ. மொ:** இல.

Ai, odu, ku, in, athu and kaṇ
These are said to be the case suffixes, six in number.

**க. சு:**

ai oṭu ku iṉ atu kaṇ,
those six are said to be case—morphs.

**பி.இ.நு.**

**நன்.** 152

**வேற்றுமை ஐம்முதல் ஆறாம்.**

இ. வி. 54.

**ஐம்முதல் ஆறு தழுவுதொடர் வேற்றுமை.**

முத்து. 167.

**ஐஒடு குஇன் அதுகண் வேற்றுமை.**

---

* சாசனங்களில் காணப்படும் சொற்றொடர்களையும் சொற்களையும் பெரும் பாலும் முழுமை பெற்றனவாகவோ, முறையான வையாகவோகொள்ள முடியாது. தவறுகளே மிகுதியும்உள. ஒலியமைப்புமட்டுமன்றி இலக்கிய அமைப்பும் கெண்டே தொல்காப்பியர்இலக்கணம் செய்தார் என்பதை மறத்தற்கில்லை—**சிவ.**

**இளம்.**

இது, மேல் வேற்றுமை யெனப்பட்ட அவற்றது பெயரும், முறையும், தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) ஐ ஒடு கு இன் அது கண் என்னும்—ஐ ஒடு கு இன் அது கண் என்று சொல்லப்படும், அ ஆறு என்ப வேற்றுமை உருபு—[1]அவ்வாறும் என்று சொல்லுவர் வேற்றுமை[2]யுருபுகளை.

[3]இவ்வாறும் அல்லனவெல்லாம் அல்வழியெனப்படும். அவை எழுவாயும், விளியும், உவமத் தொகையும், [4]உம்மைத் தொகையும், பண்புத்தொகையும், [5]இருபெயரொட்டுப் பண்புத்தொகையும், [6]முற்றும், இருவகையெச்சமும், இடையும் உரியும் என இவை.

**நச்.**

இது, மேல் வேற்றுமை யெனப்பட்ட அவற்றது பெயரும் முறையும் தொகையும் உணர்த்துகின்றது.

(இ—ள்.) முற்கூறிய வேற்றுமைச் சொற்களை ஐ ஒடு கு இன் அது கண் என்று சொல்லப்படும் அவ்வாறு உருபும் என்று சொல்வர் ஆசிரியர்; எ—று.

மேற் சொல்லதிகாரத்து எழுவாயையும் விளியையும் கூட்டி வேற்றுமை யெட்டென்பரால் எனின், ஐ முதலிய வேற்றுமை யாறும் தொக்கும் விரிந்தும் பெரும்பான்மையும் புலப்பட்டு நின்று பெயர்ப் பொருளைச் செயப்படுபொருள் முதலியனவாக வேறுபாடு செய்து புணர்ச்சி யெய்துவிக்கும் என்றற்கு ஈண்டு ஆறு என்றார். ஆண்டு எழுவாயும் விளியும் செயப்படு பொருள் முதலியவற்றினின்றும் தம்மை வேறுபடுத்தும் பொருள் மாத்திரம் உணர்த்தி நின்றும் விளியால் எதிர்முகமாக்கி நின்றும் இங்ஙனம் சிறுபான்மையாய்ப் புலப்பட நில்லா வேறுபாடு உடையவேனும், அவையும் ஒருவாற்றான் வேற்றுமையான வென்றற்கு ஆண்டு எட்டென்றார் எனவுணர்க.

சு. வே: 1. இவ்வாறும்
2. உருபதனை
3. அவ்வாறும்
4. உம்மைத் தொகையும் பண்புத் தொகையும் விளியும்
5. இருபெயரொட்டும்
6. விரவு முற்றும்

வெள்ளை.

பெயர்ப் பொருளை வேற்றுமை செய்தலால் வேற்றுமை யெட்டெனச் சொல்லதிகாரத்திற் கூறிய தொல்காப்பியனார், எழுவாய்க்கும் விளிக்கும் பெயரும் பெயரது விகாரமும் அன்றி, வேறு உருபு இன்மையின் அவ்விரண்டினையும் நீக்கித் தமக்கென உருபுடைய இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை யீறாகவுள்ள ஆறையுமே இவ்வெழுத்ததிகாரத்து வேற்றுமை யாகக் கொண்டு 'அவ்வா றென்ப வேற்றுமை யுருபே' யெனத் தொகுத்துரைத்தார். எனவே ஐ முதலிய ஆறுருபும் தொக்கும் விரிந்தும் இடைநிற்கச் சொற்கள் புணரும் தொடர்ச்சியே எழுத்து வகையில் வேறுபாடுடைய வேற்றுமைப் புணர்ச்சி யென்பது ஆசிரியர் கருத்தாதல் நன்கு புலனாம். எழுவாயும் விளியும் எழுத்து வகையான் அன்றிச் சொற்பொருள் வகையான் வேறுபாடு உடையனவாகலின் சொல்லதிகாரத்து அவ் விரண்டையுங் கூட்டி வேற்றுமை யெட்டென்றார். எழுத்ததி காரத்து எழுத்திலக்கண அமைதியொன்றே கருதி வேற்றுமை ஆறென்றும், சொல்லதிகாரத்து எழுத்திலக்கண அமைதியோடு சொல்லிலக்கண அமைதியும் உடன் கருதி வேற்றுமை எட்டென்றும் ஆசிரியர் தொல்காப்பியனார் கூறிய இயல்பினைப் பகுத்துணர்தல் வேண்டும்.

பி. கு:

திரு. அடிகளாரசிரியரார்

சேந்தன் திவாகரத்தில் பத்தாவது ஒலி பற்றிய தொகுதியில் இந்நூற்பா இதே வடிவத்தில் எடுத்தாளப்பட்டுள்ளது. பிங்கலம் ஏழாவது பண்பிற் செயலின் பகுதி வகையிலும் இந்நூற்பா உள்ளது.

இந்நூற்பாவுள் ஒடுவைப் பற்றித் தொல்காப்பியனார் 'ஒடு' என்னும் பிரத்தியம் ஒன்றே மூன்றாம் வேற்றுமைக்கு உருபாகச் சொன்னார்; 'ஆலும் ஆனும் மூன்ற னுருபே' என்றார் அவிநயனார்'' என்பர் பெருந்தேவனார். (வீரசோ. வே-6-உரை)

''சொல்லோத்தினுள் வேற்றுமை யெனப்படும் எழுவாயும் விளியும் ஈண்டு அல்வழி யென்றல்மலைவாம் பிறவெனின், ஆண்டு அவை ஐ முதலிய வேற்றுமை போலப் பொருள் வேறுபடுத்தல் ஒப்புமை பற்றி அவற்றோடு உடன் எண்ணப்பட்டு வேற்றுமை

யெனப்படும்; ஈண்டு முற்றுச் சொற்கள் முதலியன போலப் புணர்ச்சிக்கட் செய்கை ஒப்புமை பற்றி இவற்றோடு உடன் எண்ணப்பட்டு அல்வழி யெனப்படும்; ஆகலின் மலை வாகா தென்க" இலக்கண விளக்கம்–54.

### வலிமுதல் உருபு புணருநிலை

**115.** **வல்லெழுத்து முதலிய வேற்றுமை யுருபிற்கு**
**ஒல்வழி ஒற்றிடை மிகுதல் வேண்டும்.** (12)

**ஆ. மொ: இல.**

The case suffiixes which have hard consonanls as initials must have the appearance.
of consonants between the joining of words to suit them.

**க. சு.**

case—morphs begining with occulsives must double the non-vocalized consonant in the appropriate place.

**பி. இ. நூ.**

முத்து. 168.

**ஏழும் நான்கும்ஓற் றிடைமிகும் என்ப**

**இளம்.**

இது, நான்காவதற்கும் ஏழாவதற்கும் உருபியலை நோக்கிற்றோர் கருவி உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) வல்லெழுத்து முதலிய வேற்றுமை உருபிற்கு— வல்லெழுத்து முதலாகவுடைய வேற்றுமையுருபிற்கு, ஒல்வழி ஒற்று இடைமிகுதல் வேண்டும்—பொருந்தின இடத்து வல்லொற்றாயினும் மெல்லொற்றாயினும் இடைக்கண் மிகுதல் வேண்டும்.

எ–டு: ஊர்க்கு, நீர்க்கு, ஊர்க்கண் நீர்க்கண் என வல்லெழுத்து மிக்கன. [1]தங்கண் எங்கண் என மெல்லெழுத்து மிக்கன.

சு. வே: 1. நங்கண்

'ஒல்வழி' என்றதனால், அரசர்கண், பார்ப்பார்கண் என ஒற்று மிகாதனவும் கொள்க. 'மெய்பிறிதாதல்' (புணரியல்-7.) முதலாய நான்கு புணர்ச்சியும் உருபு புணர்ச்சிக் கண்ணும் எய்தலின், மெய்பிறிதாதலை எடுத்தோதாது மிக்கதனை எடுத்தோதிய வதனான், மிக்க புணர்ச்சியல்லனவும் ஈண்டே கொள்க. பொற்கு பொற்கண் ஆங்கண் ஈங்கண் ஊங்கண் அவற்கு இவற்கு நுங்கண் கொற்றற்கு சாத்தற்கு எனவரும்.

அவன்கண், சாத்தன்கண் என்புழி இயல்பும் இதனானே கொள்க.

நச்.

இது நான்காவதற்கும் ஏழாவதற்கும் உருபியலை நோக்கியதோர் கருவி கூறுகின்றது.

(இ—ள்.) வல்லெழுத்து அடியாய் நின்ற நான்காவதற்கும், ஏழாவதற்கும், பொருந்தியவழி வல்லொற்றாயினும் மெல்லொற்றாயினும் இடைக்கண் மிக்குப் புணர்தலை விரும்பும் ஆசிரியன்; எ—று.

வரையாது ஒற்றெனவே வல்லொற்றும் மெல்லொற்றும் பெற்றாம்.

எ—டு: மணிக்கு மணிக்கண், தீக்கு தீக்கண், மனைக்கு மனைக்கண் எனவும், வேய்க்கு வேய்க்கண், ஊர்க்கு ஊர்க்கண், பூழ்க்கு பூழ்க்கண் எனவும் உயிரீறு மூன்றினும் புள்ளியீறு மூன்றினும் பெரும்பான்மை வல்லொற்று மிக்கு வரும். தங்கண் நங்கண் நுங்கண் என மெல்லொற்று மிக்கது. இவற்றிற்கு நிலைமொழி மகரக்கேடு உருபியலிற் கூறுப. ஆங்கண் ஈங்கண் ஊங்கண் என்பன சுட்டெழுத்து நீண்டு நின்றன. இவற்றிற்கு ஒற்றுக்கேடு கூறுதற்கு ஒற்றின்று.

இனி நான்கனுருபிற்கு மெல்லொற்று மிகாதென்றுணர்க.

இனி 'ஒல்வழி' யென்பதனான் ஏழாம் உருபின்கண் நம்பிகண் என இகர ஈற்றின் கண்ணும், நங்கை கண் என ஐகார ஈற்றின் கண்ணும், தாய்கண் என யகர ஈற்றின் கண்ணும், அரசர் கண் என ரகர ஈற்றின் கண்ணும் ஒற்று மிகாமை கொள்க.

இனி மெய்பிறிதாதலை முன்னே கூறாது மிகுதலை முற்கூறிய அதனானே பொற்கு பொற்கண் வேற்கு வேற்கண் வாட்கு வாட்கண் எனத் திரிந்து முடிவனவும் கொள்க. இதனானே அவன்கண் அவள்கண் என உயர்திணைப் பெயர்க் கண் ஏழனுருபு இயல்பாய் வருதலும் கொள்க. இவற்றிற்குக் குன்றிய புணர்ச்சி வருமேனும் கொள்க.

கொற்றிக்கு கொற்றிக்கண் கோதைக்கு கோதைக்கண் என விரவுப் பெயர்க்கும் இதனானே கொள்க.

**சூப்பிர.**

உ-ம். சினைக் கிளவிக்கு நுங்கண்.

முதற்கண் (வினை. 30) போக்கற்கண் (அகத். 39) முதலிய விடங்களில் கண்ணின் முன்னர் றகர ஒற்றின் மிகுதி பின்னர் ஈறொற்று வரும் என ஆசிரியர் கூறாமையானும் நிலைமொழி யீற்று லகரம் கெட்டதென்க.

அவ்வாறே தங்கண் நங்கண் உங்கண் என்ற விடங்களில் மகரக்கேட்டினைக் கொள்க.

"மெய்பிறிதாதலை எடுத்தோதாது......சாத்தற்கு என வரும்" என இளம்பூரணரும் அவரைப் பின்பற்றியே நச்சினார்க் கினியரும் கூறினர்.

ஈண்டுப் பொற்கு பொற்கண் அவற்கு இவற்கு கொற்றற்கு சாத்தற்கு என்ற உதாரணங்களில் உரைகாரர்கள் கொள்வது போல மிக்க புணர்ச்சியல்ல எனக் கொள்ளாது, மிக்க புணர்ச்சி யெனக் கொள்ளுதல் சாலும். உருபியலில் ஆசிரியர் னகரவீறு றகரமாக மாறும் எனக் கூறாமையானும், இங்கு ஒல்வழி ஒற்று இடைமிகும் எனக் கூறினமையானும், ய ர ழ என்னும் மூன்றன் பின்னரே ஈறொற்று வருமென எழுத். 48 ஆவது சூத்திரத்திற் கூறினமையான் னகர ஒற்றின் பின்னர் ஈறொற்று வாராது எனப் பெறப்படுகின்றமையான் அவ்வொற்று கெடும் எனக் கொள்ளுதல் பொருந்துமாகலானும் என்க. தங்கண் எங்கண் என்பன வற்றிற்கும் நுங்கண் என்பதற்கும் மாறுபாடின்மை

> படர்க்கைப் பெயரும் முன்னிலைப் பெயரும்
> ..................................................
> மெல்லெழுத்து மிகுதல் ஆவயி னான (எழுத். 312)

"நும்மென் ஒரு பெயர் மெல்லெழுத்து மிகுமே"
(எழுத். 326)

என்ற சூத்திரங்களின் ஒற்றுமையால் அறியக்கிடக்கின்றமையான் அஃது இடைச் செருகலாய் இருத்தல் கூடும். ஆங்கண் ஈங்கண் ஊங்கண் என்பன, அது + கண், இது + கண், உது + கண் என்ற இரு பெயர்களாகிய தொகைச் சொற்களாகலான் அவை ஈண்டு உதாரணமாகா. 'நீடவருதல் செய்யுளுள் உரித்தே' (எழுத். 209) என்ற சூத்திரத்தால் சுட்டுநீள, 'ஐம்பா லறியும் பண்பு தொகு மொழியும்......' (எழுத். 482) என்ற சூத்திரத்தால் ஙகரவொற்று வந்தது எனக் கொள்ளல் வேண்டும்.

**வேங்கட.**

உரையாசிரியர், 'மெய்பிறிதாதலை எடுத்தோதாது... ஈண்டே கொள்க' என்று கூறி, 'பொற்கு பொற்கண்...வந்த வழிக்கண்டு கொள்க' என்று எழுதியுள்ளார்.

இவற்றை நோக்குமிடத்து, பொற்கு என்பது முதல் ஊங்கண் என்பதுவரை அஃறிணைப் பெயர்க்கும், அவற்கு இவற்கு என்பன உயர்திணைப் பெயர்க்கும், நுங்கண் கொற்றற்கு சாத்தற்கு என்பன விரவுப் பெயர்க்கும் உதாரணம் என்பது எளிதின் அறியப்படும். இவையெல்லாம் மெய் பிறிதாதற்கே கூறப்பட்டன. ஆகலின், பொன் என்பது முதல் சாத்தன் என்பது வரையிலுள்ள பெயர்கள் எல்லாம் ஈற்றுமெய் திரியப் பெற்றனவாதல் வேண்டுமன்றே? அவ்வாறாயின், ஆங்கண் ஈங்கண் ஊங்கண் என்பவற்றில் ஆன் ஈன் ஊன் என்னும் பெயர்களின் ஈற்றெழுத்தாகிய னகரமெய் ஙகரமாய்த் திரிந் திருத்தல் நன்கு அறியப்படும்.

ஆன் ஈன் என்னும் சொற்கள் உண்மை,

"மன்னும் சின்னும் ஆனும் ஈனும்" (புள்ளி. 38)

என்பதனானும்,

"ஏனை யெச்சம்........................
ஆன்வந் தியையும் வினைநிலை யானும்"
(வினையியல். 35)

"வானோர் மருங்கிற் காண்ட யல்லதை
ஈனோர் மருங்கிற் காண்டல் இல்லென" (சிலப். பதி.)

என்பவற்றானும் அறியப்படும். ஊன் என்னும் சுட்டுப் பெயர் தொல்காப்பியனார் காலத்திலே வழக்கிறந்ததென்று தெரிகின்றது. ஆயினும், ஊங்கண் என்பது வழங்கி வந்துள்ளது.

நச்சினார்க்கினியர், ஆங்கண் ஈங்கண் ஊங்கண் என்பன அ இ உ என்னுஞ் சுட்டுக்கள் நீண்டு மெல்லெழுத்துத் தோன்றப் பெற்றவை என்று கொண்டார். இஃது ஆங்கண் ஈங்கண்... ஒற்றன்று' என்று எழுதியிருப்பவற்றான் அறியப்படும். சுட்டுக்களோடு கண் என்னும் உருபு சேருதல் முறையன்றாகலானும், ஆன் ஈன் என்னும் சுட்டுப் பெயர்களோடு கண் உருபு சேர்தலே இயல்பும் வழக்குமாகலானும் நச்சினார்கினியர் கூற்று பொருந்துவதன்று; இளம்பூரணர் உரையே பொருத்தமுடையது.

இனி நச்சினார்க்கினியர், தங்கண் நங்கண்...உருபியலிற் கூறுப' என்றார். உருபியலில் ஆசிரியர் விதி கூறிற்றிலர்; அது முன்னர்ப் போதரும்.

## வெள்ளை.

ஒற்று மிகுதல் வேண்டும் எனப் பொதுப்படக் கூறவே வல்லொற்றும் மெல்லொற்றும் மிகுதல் பெறலாம் எனக் கொண்டு தங்கண் நங்கண் என மெல்லெழுத்து கொண்டு மிக்கன என்று உதாரணங் காட்டினர் உரையாசிரியர், மெல்லொற்று மிகுதலையும் சேர்த்துரைத்தல் ஆசிரியர் கருத்தாயின் வல்லொற்றும் கிளையொற்றும் மிகும் எனப் பிரித்துரைப்பர். 'வல்லெழுத்து வருவழி ஒற்று இடை மிகுதல் வேண்டும்' எனவே அவ்விடத்து மிகுவது வற்லொற்றேயாதல் தேற்றம். ஒற்று மிகும் எனப் பொதுப்படக் கூறும் வழியெல்லாம் வந்த ஒற்று மிகுதலையே சுட்டிச் செல்லுதல் ஆசிரியர் கருத்தாகும். வந்த ஒற்றுக்குக் கிளையான எழுத்து மிகுமாயின் அதனைக் கிளந்துரைத்தலும் அவரியல்பாம். தங்கண் நங்கண் என்புழித்தாம் நாம் என்பன தம் நம் எனக் குறுகி 'மகரவிறுதி வேற்றுமையாயின், துவரக்கெட்டு' (புள்ளி. 15) என்றபடி மகரங்கெட்டு 'படர்க்கைப் பெயரும் முன்னிலைப் பெயரும், தொடக்கம் குறுகும் பெயர்நிலைக் கிளவியும், வேற்றுமையாயின் உருபியல் நிலையும்' (புள்ளி. 25) என்பதனால் வல்லெழுத்து வருவழி மெல்லெழுத்து மிக்கன ஆகலான் அவை ஈண்டு அடங்கா.

இனி, தங்கண் நங்கண் என்ற சொற்களை இடைச்சொற் சந்தி யெனக்கொண்டு வேற்றுமைக்குக் கூறிய மெல்லெழுத்து மிகுதி அதன்கண் அடங்காது எனக் கூறின், தங்கண் நங்கண் என்பன அல்வழியாயின் தம் நம் என்பவற்றின்கண் வரும் இறுதி மகரம் 'அல்வழியெல்லாம் மெல்லெழுத்தாகும்' (புள்ளி. 19) என்பதனால் வருமெழுத்தின் கிளையெழுத்தாகத் திரிந்து நின்றதெனக் கொள்வதன்றி 'வல்லெழுத்து முதலிய வேற்றுமை யுருபிற்கு ஒல்வழி ஒற்றிடை மிகுதல் வேண்டும்' என்னும் இச் சூத்திரத்தால் மெல்லெழுத்து மிக்கு நின்றதெனக் கொள்ளுதல் பொருந்தாது. உயிரீறும் இங்ஙனந் திரியும் இயல்புடைய மகர வீறல்லா மெய்யீறும் ஆகியவற்றின் முன் வரும் கு கண் என்னும் உருபுகளின் முன் மெல்லெழுத்து மிகாமையும் நோக்கத் தக்கது.

இனி ஒல்வழி என்றதனால் நம்பிகண் நங்கைகண் என இகர ஐகார ஈற்றின் கண்ணும், தாய்கண் அரசர்கண் என யகர ரகர வீற்றின் கண்ணும் ஏழாமுருபு வருமிடத்து ஒற்று மிகாமை கொள்க.

### அது உருபின் அகரம் கெடும்

**116.** ஆறன் உருபின் அகரக் கிளவி
ஈறுஆகு அகரமுனைக் கெடுதல் வேண்டும். **(13)**

**ஆ. மொ, இல.**

The 'a' of the sixth case sign must disappear before the final 'a' of the word to which it is added.

**க. சு.**

The sound 'a' of the sixth case-morph must disappear following a final 'a'.

**பி. நூ.**

நன். 238 : உருபின் முடிபவை ஒக்குமப் பொருளினும்
242 : ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியின்
ஒக்குமன் அப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே.

ஈ. வி. 146 : உருபின் முடிபவை ஒக்குமப் பொருளினும்
148 : உருபினும் பொருள்முடிபு ஒக்குமன் பயின்றே

முத்து. 169: ஆறன் உருபின் அகர முனைகெடும்.

இளம்.

இது, ஆறாவதற்குத் தொகைமரபினை நோக்கியதோர் கருவி கூறுதல்[1] நுதலிற்று.

(இ—ள்.) ஆறன் உருபின் அகரக்கிளவி—ஆறாம் வேற்றுமை யாகிய அது என்னும் சொல்லிடத்து அகரமாகிய எழுத்து, ஈறு ஆகு அகர முனை கெடுதல் வேண்டும்—(நெடுமுதல் குறுகும்) மொழியீற்று உளதாகின்ற அகரத்தின் முன்னர்த் தான்[2] கெடுதல் வேண்டும்.

எ–டு: நமது, எமது, தனது, எனது, நினது எனவரும்.

மேல்[3] ஈறாகு[4] அகரம் இதற்குத் தாராது, இவ்வுருபு அகரமே ஏறிமுடிய அமைதலின் அது கேடாதல் வேண்டா எனின், நெடு முதல் குறுகி விகாரப்பட்டு நின்ற மொழியாகலின் அதன்மேல் உருபு அகரம் ஏறி முடியல் வேண்டாராயினார் போலும் என்பது.

நச்.

இஃது ஆறாவதற்குத் தொகை மரபை நோக்கியதோர் கருவி கூறுகின்றது.

(இ—ள்.) அது என்னும் ஆறனுருபின்கண் நின்ற அகர மாகிய எழுத்து, நெடுமுதல் குறுகும் மொழிகட்கு ஈறாகு புள்ளி யகரமொடு நிலையும் (எழு. 161) என விதித்ததனால் உளதாகிய அகரத்தின் முன்னர்த் தான் கெடுதலை விரும்பும் ஆசிரியன்; எ—று.

(எ-டு) தமது, நமது, எமது, நுமது, தனது, எனது நினது என வரும். இது நிலைமொழிக்கு ஓர் அகரம் பெறும் என விதியாது உருபுஅகரம் ஏறி முடியும் என விதித்தால் வருங்குற்றம் உண்டோ எனின், 'நினவ கூறுவல் எனவ கேண்மதி' (புறம். 35) என்றாற் போல ஆறாவதற்குரிய அகர உருபின் முன்னரும் ஓர் அகர எழுத்துப் பேறு நிலைமொழிக்கண் வருதல் உளதாகக் கருதினா ராதலின், ஆறனுருபிற்கும் நான்கனுருபிற்கும் பொதுவாக நிலை

சு. வே: 1. உணர்த்துதல்
2. தானே
3. எனவருதலின்
4. ஈற்று

மொழிக்கண் அகரப்பேறு விதித்து, அது வென்னும் ஒருமையுருபு வந்தால் ஆண்டுப் பெற்று நின்ற அகரத்தின் முன்னர் அது வென்பதன் அகரங்கெடுக என்று ஈண்டுக் கூறினாராதலின் அதற்குக் குற்றம் உண்டென்று உணர்க.

**வேங்கட.**

ஈறாகு அகரம் என்றதனால் தொகைமரபு 12ஆம் சூத்திர விதிப்படி மொழிகளின் ஈற்றில் தோன்றுகின்ற அகரம் எனக் கொள்க.

தாம் நாம் யாம் என்னும் சொற்கள், முன்னர், "தாம் நாம் என்னும் மகரவிறுதி" (எழு. 189) என்னும் சூத்திர விதியினால், தம், நம், எம், என்றும், தான், யான் என்னும் சொற்கள், "தான் யான் என்னும் ஆயீரிறுதி" (எழு. 193) என்னும் சூத்திர விதியினால் தன், என் என்றும் ஆகி

> ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும்
> நெடுமுதல் குறுகும் மொழிமுன் னான (தொகை. 16)

என்னும் சூத்திர விதிப்படித் தம, நம, எம, தன, என என்று நிற்க, அவற்றின் முன் வரும் அது என்னும் ஆறன் உருபின் அகரம் இச்சூத்திரத்தாற் கெட்டுத் தமது, நமது, எமது, தனது, எனது என்று வழங்கும். இவ்வாறு ஆசிரியர் கூறிய விதியின் மரபினை ஆராய்ந்தறியாது, இச்சொற்கள் ஓர் அகரம் பெறும் என்று விதித்தலும் வேண்டா என்று கருதி, நன்னூலார் இவ் விதி கூறாதே விடுத்தார். ஆதலின், தொல்காப்பியம் பயிலாது நன்னூல் ஒன்றனையே கற்றோர் தன்+அது=தனது, தம்+அது =தமது என்றாயினி என்பர். அவ்வாறாயின் இரட்டிக்கும்.

தமிழ் மொழியில், தன்னுயிர் தம்முயிர் என்னுயிர் என்ப வற்றை, தன்+உயிர், தம்+உயிர், என்+உயிர் என்று பிரித்துப் புணர்ப்பர். கன்னட மொழியில் இவற்றை, தன்+அ+உயிர், தம்+அ+உயிர், என்+அ+உயிர் எனப் பிரித்து ஆறன் உரு பாகிய அகரம் கெட்டது என்று விதி கூறியுள்ளார். (சப்த மணி52) தமது தனது என்று உருபுடன் கூடி நின்ற சொற்களை நன்னூலார், தம்+அது=தமது, தன்+அது=தனது என்று பிரித்துக் கூட்டுவது போலவே, தம்முயிர், தன்னுயிர் என்ப வற்றைத் தம்+உயிர்=தம்முயிர், தன்+உயிர்+தன்னுயிர்என்று நாம் பிரித்துக் கூட்டுகின்றோம். மேற்காட்டிய தமது தனது

என்பவற்றைத் தொல்காப்பியனார், தம்+அ+அது=தமது, தன்+அ+அது=தனது என்று பிரித்துக் கூட்டுதல் போலவே, தம்முயிர் தன்னுயிர் என்பவற்றைக் கன்னட மொழியினர், தம்+அ+உயிர் என்றும், தன்+அ+உயிர் என்றும் பிரித்துக் கூட்டுகின்றனர் என வேறுபாடு அறியத் தக்கது. ஈண்டுக் கூறும் அகரம் ஆறன் உருபாகும்.

ஆறனுருபாகக் கன்னட மொழியில் அகரமேயுளதாகலானும், தெலுங்கில் பன்மை விகுதியேற்ற பெயர்களுக்கு அகரமே வருதலானும் நன்னூலாரும் ஆறனுருபுகளுள் ஒன்றாக அகரத்தைக் கூறினாராகலானும் அகரம் ஆறன் உருபு என்று கோடல் தகும். அது என்பது அஃறிணை ஒருமைச் சுட்டுப் பெயர். அஃறிணைப் பன்மைக்கும் ஒருமைப் பெயர் வருமாகலின் பன்மைக்கும் 'அது' என்பதுவே சால்வதாயிற்று என்றும், அதனானே இராமன்மகன் என உயர்திணைப் பெயர் வரும்வழி இராமனது மகன் என அதுவுருபு வருதல் முறையன்று என்று விலக்கப் பட்டது என்றும் உய்த்துணர்ந்து கொள்ளுதல் கூடும். 'ஆறனுருபு அஃறிணைப்பால் தோன்ற நிற்றல் பெற்றாம்' என்று சேனாவரையர் எழுதியிருப்பது நோக்கத்தக்கது.

தனாது எனாது என்பன போன்ற சொற்களை நோக்கி, நன்னூலார் 'ஆது' என்பதோர் உருபு கொண்டார். அஃது,' 'ஆறன் உருபினும்...மொழிமுன்னான' (எழுத்ததி.161) என்னும் சூத்திர விதிப்படி நெடுமுதல் குறுகிய மொழிகளோடு அது என்னும் ஆறனுருபு சேருமிடத்து வந்த அகரத்தினால் தன+அது=தனாது என்று புணர்ச்சிக்கண் நேர்ந்த வடிவமேயன்றி இயல்பாய தன்று. இவ்வுண்மை, தனாது முதலியவற்றிலன்றி, இராமனாது, விளவினாது, கிளியாது என்று பிற சொற்களில் ஆது உருபு காணப்படாததனானே அறியலாகும்.

## வெள்ளை.

"நினவ கூறுவல் எனவ கேண்மதி" (புறம்) என்றாற்போல ஆறாவதற்குரிய அகரவுருபின் முன்னரும் நின, என என்றாங்கு ஓர் அகர எழுத்துப்பேறு நிலை மொழிக்கண் வருதலுளதாக ஆசிரியர் கருதினாராதலின் ஆறனுருபும் நான்கனுருபும் நெடு முதல் குறுகும் மொழிகளோடு புணருமிடத்து அவ்விரண்டற்கும் பொதுவாக நிலைமொழிக்கண் அகரப்பேறு விதித்தார். அங்குப் பெற்று நின்ற அகரத்தின் முன்னர் அதுவென்னும் ஆறனுரு

பின் அகரம் கெடுக என இங்கு விதித்தார். இவ்வாறு நெடு முதல் குறுகு மொழிகள் ஈற்றில் அகரம் பெறும் என விதியாது அதுவென்னும் உருபின் அகரம் ஏறி முடியும் என நன்னூலார் கொண்டனர். நினவ, எனவ என்றற்றொடக்கத்துச் சொற்களில் ஆறாவதன் அகரவுருபின் மேலும் நிலை மொழியீற்றில் வேறோர் அகரம் காணப்படுதலால் தொல்காப்பியனார் கொண்ட முறையே பொருத்தமுடையது என்பது பெறப்படும்.

பி. கு:

இந்நூற்பா எதிரது போற்றல் என்ற உத்திக்குமேற்கோள் (தொல்-பொருள்-665-பேராசிரியர்)

தாம் + அது → தம் + அது → தம் + அ + அது → தம + அது →
தம + து → தமது.
யாம் + அது → எம் + அது → எம் + அ + அது → எம் + அது →
எம் + து → எமது.
நாம் + அது → நம் + அது → நம் + அ + அது → நம + அது →
நம் + து → நமது.

இம்மூன்றற்கும் "தாம்நாம் என்னும் மகர விறுதியும்"(189) என்னும் நூற்பாவிதியும் "ஆறனுரு பினும் நான்கனுருபினும்" (162) என்னும் நூற்பா விதியும் "ஆறனுருபின் அகரகிளவி" (116) என்னும் இந்நூற்பா விதியும் தனித்தனி முறையே கொள்க.

தான் + அது → தன் + அது → தன் + அ + அது →
தன + அது → தன + து → தனது
யான் + அது → என் + அது → என் + அ + அது →
என + அது → என + து → எனது

இவற்றிற்குத் "தான் யான் என்னும் ஆயீரிறுதியும் (1›5) என்னும் நூற்பா விதியும்" ஆறன் உருபினும் நான்கன் உருபினும் (180) என்னும் நூற்பா விதியும் பின்னர் இந்நூற்பா விதியும் கொள்க.

நீ + அது → நின் + அது → நின் + அ + அது →
நின + அது → நின + து → நினது

இதற்கு "நீயென்னொரு பெயர்"(180) என்னும் நூற்பா விதியும் "ஆறனுருபினும் நான்கனுருபினும்" என்னும் விதியும் பின்னர் இந்நூற்பா விதியும் கொள்க.

நும் + அது → நுமது

இது நீயிர் என்பது நும் எனத் திரிக்கப்பட்ட பின்னர் அது என்பதுடன் சேர்வது.

"...இளம்பூரணத்தில் 'மேல் ஈறாகு அகரம் இதற்குத் தாராது...வேண்டாராயினர் போலும் என்பது" என்ற தொடர் இடைச்செருகலாயிருத்தல் கூடும். இக்கொள்கையை 'இது நிலை மொழிக்கு ஓர் அகரம் பெறும் என விதியாது... ...அதற்குக் குற்றம் உண்டென்று உணர்க' என்ற நச்சினார்க் கினியர் தொடர்வலியுறுத்துகின்றது" என்பர் சுப்பிரமணிய சாஸ்திரியார்.

## வேற்றுமை யுருபுகள் நிற்கும் இடம்

**117. வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே (14)**

**ஆ. மொ:** இல.

The case comes after the noun in the way of joining.

**க. சு.**

case (—morphs) are joined to nouns following (them).

**பி. இ. நூ.**

நன். 241;

**பெயர்வழித் தம்பொருள் தரவரும் உருபே.**

இ. வி. 55:

**வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே.**

முத்து. 170:

**பெயர்க்குப் பின்வரும் வேற்றுமை யுருபே.**

**இளம்.**

இது, வேற்றுமையுருபு பெயர்க்கண் நிற்குமாறு உணர்த்து தல் நுதலிற்று.

(இ—ள்.) வேற்றுமை பெயர்வழிய புணர்நிலை—[1]வேற்றுமை [2]பெயர்களின் பின்னிடத்தன அவற்றோடு புணரும் நிலைமைக் கண்.

சு. வே: 1. வேற்றுமைகள் 2. பெயரின்

எ-டு: சாத்தனை, சாத்தனொடு எனவரும். [3]மேல் 'உருபு நிலை திரியாது ஈறு பெயர்க்காகும்' (வேற்றுமையில்-8) என்கிறார் அன்றோ எனின், பெயரோடு பெயர் முதலிய நால் வகைப் [4]புணர்ச்சியையும் வேற்றுமை அல்வழியென இரண்டாக அடக்கலின், வினைவழியும் உருபு வரும் என்பதுபட நின்ற தாகலின் ஈண்டு [5]இது கூறப்பட்டது.

**நச்.**

இது வேற்றுமை பெயர்க்கண் நிற்குமாறு கூறுகின்றது

(இ—ள்.) வேற்றுமைகள் பெயரின் பின்னிடத்தனவாம், அவற்றோடு புணரும் நிலைமைக்கண்; எ—று.

எ-டு; சாத்தனை, சாத்தனொடு, சாத்தற்கு, சாத்தனின், சாத்தனது, சாத்தன்கண் என வரும். மற்று இது, 'கூறிய முறையின்' (சொல். 64) என்னும் வேற்றுமை யோத்திற் சூத்திரத்தாற் பெறுதும் எனின், பெயரோடு பெயரைப் புணர்த்தல் முதலிய நால்வகைப் புணர்ச்சியினையும் வேற்றுமை அல்வழியென இரண்டாக அடக்குதலின் தொழிற் பின்னும் உருபு வரும் என எய்தியதனை விலக்குதற்கு ஈண்டுக் கூறினார் என்க. ஆயின் இவ்விலக்குதல் வினையியல் முதற் சூத்திரத்தாற் பெறுதும் எனின், அது முதனிலையைக் கூறிற்றென்பது ஆண்டு உணர்க.

**சுப்பிர.**

(பொருள்) வேற்றுறுமை குறித்த புணர்நிலையின்கண் பெயர்கள் வேற்றுமையுருபேற்ற பெயரின் பின்னர் வரும்.

ஈண்டு புணர்நிலை என்றது வேற்றுமை குறித்த, புணர் மொழி நிலையைக் குறிக்கும், 'வேற்றுமை வழிய' என்றிருத் தலின். இச் சூத்திரத்தில் வேற்றுமை என்றது 'உருபு தொடர்ந் தடுக்கிய வேற்றுமைக்கிளவி என்ற சொல்லைப் போல வேற்றுமையுருபை யிறுதியாகவுடைய சொல்லைக் குறிக்கும்.

சு.வே. 3. மேலுந்திரியா
4. புணர்ச்சியினையும்
5. அது

இச் சூத்திரத்திற்கு இளம்பூரணர் ''வேற்றுமை பெயர்களின் பின்னிடத்தன அவற்றோடு புணரு நிலைமைக்கண்'' எனப் பொருளும் ''மேல் உருபுநிலை திரியா......இது கூறப்பட்டது''* என இச்சூத்திரம் கூறியது கூறல் என்ற குற்றத்திற்கு இலக்காகா தெனக் கூறினர். 'வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது நினையுங் காலைக் காலமொடு தோன்றும்' (சொல். 108) என்ற சூத்திரத்துள் வினை உருபேலாதென வெளிப்படையாய்க் கூறப் பட்டமையின், இளம்பூரணர் கூறும் ஐயம் எழாதென்க. நச்சினார்க்கினியரும் இளம்பூரணரைப் பின்பற்றியே கூறினர்.

நச்சினார்க்கினியர் ''ஆயின் இவ்விலக்குதல்......கூறிற் றென்பது''† என்கின்றனர். ''சொல்லெனப்படுப பெயரே வினை யென்று'' (சொல். 158) என்றும், ''வினையெனப்படுவது......கால மொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம் உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்'' (சொல். 201) என்றும் ஆசிரியர் கூறு கின்றமையின் 'வினையெனப்படுவது' என்ற விடத்து வினை என்றது முதனிலையைக் குறிக்காதென்பது தெற்றன விளங்கும்.

மண்ணான் + குடம் போன்று குடம் + மண்ணான் என்பன வும் வேற்றுமை குறித்த புணர்மொழிகள் ஆகுமோ என ஐயம் வர அஃது ஆகாது என உணர்த்தும் இச்சூத்திரம்.

பி. கு.

கூறிய முறையின் உருபுநிலை திரியாது என்றதனாற் பெறப் படுவதனையே 'வேற்றுமை வழிய பெயர் புணர் நிலையே' என்பதனானும் கூறினார்க்கு, இதுவும் கூற அமையும் பிற வெனின், பிறாண்டுக் கூறுமாறுபோல, வேற்றுமையுருபு என்னா மையானும், ஆறனுருபு இறுதியிற்றொகின் 'ஐயுங் கண்ணும்' (வேற்.ம. 22) என்னும் சூத்திர விதியோடு முரணுதலானும், கூறி யது கூறல் ஆகலானும், வேற்றுமை வழிய பெயர் புணர்நிலையே என்பதற்கு அது பொருளன்மையின் அமையாதென்க. மற்றென்னையோ அதற்குப் பொருள் எனின், நால்வகைச் சொற்களும் இருவழியும் புணரும் என மேல் எய்தியதனை ஒரு மருங்கு மறுத்து பெயர்ச்சொற் புணரு நிலையே வேற்றுமை வழியாம் என்பது பொருள் எனக் கொள்க, ஏகாரம் பிரிநிலை

*பக்கம் 70ல் காண்க.
†பக்கம் 70ல் காண்க

என்க. எனவே ஏனை வினைச் சொன் முதலிய மூன்றும் அல்வழிய ஆவனவன்றி வேற்றுமை வழிய ஆகா எனவும், பெயர்ச் சொற்கள் இருவழியும் ஆம் எனவும் கூறியவாறாயிற்று.
—சிவஞானமுனிவர் (முதற் சூத்திரவிருத்தி.)

## பெயர்களின் பெயர், முறை, தொகை

**118. உயர்திணைப் பெயரே அஃறிணைப் பெயர்என்று**
**ஆயிரண்டு என்ப பெயர்நிலைச் சுட்டே (15)**

**ஆ:மொ இல:**

The nouns are of two kinds which are said to be Uyarthiṇai and Aஃṛiṇai (high class and non–class).

**க. சு:**

Nouns are pointed out to be of two types: of the personal class and of the non–class.

**பி.இ.நூ.**

நன். 240:

**ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பலஎன**
**வருபெயர் ஐந்து**

முத்து. 171:

**உயர்திணை அஃறிணை யோரிரு வகையன.**

**இளம்.**

இது, [1]வேற்றுமையோடும் புணரும் பெயர்கட்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) உயர்திணைப் பெயரே அஃறிணைப் பெயர் என்று அ இரண்டு என்ப—உயர்திணைப் பெயரும் அஃறிணைப் பெயருமாகிய அவ்விரண்டும் என்று சொல்லுப, பெயர்நிலை சுட்டு—பெயராகிய [2]நிலைமையது கருத்தினை.

எ—டு: ஆடூஉ, மகடூஉ என்பன உயர்திணைப் பெயர். ஒன்று, பல என்பன அஃறிணைப் பெயர்.

சு. வே: 1. வேற்றுமையொடு
2. நிலைமைக்

[3]மற்று விரவுப் பெயர் [4]கூறாராயது என்னை யெனின் [5]மற்றது சாத்தன் வந்தான், வந்தது எனப் புணர்ச்சிக்கண் பெரும்பான்மையும் ஒரு திணைப்பாற்படுதலின் [6]அவ்விரண்டாக அடக்கிக் கூறினார் என்பது.

நச்.

இது முற்கூறிய பெயர்கட்குப் பெயரும் முறையும் தொகையும் கூறுகின்றது.

(இ—ள்.) பொருளை ஒருவர் கருதுதற்குக் காரணமான நிலைமையையுடைய பெயர்களை, உயர்திணைப் பொருளை ஒருவன் கருதுதற்குக் காரணமான பெயரும் அஃறிணைப் பொருளை ஒருவன் கருதுதற்குக் காரணமான பெயரும் என்னும் அவ்விரண்டென்று கூறுவர் ஆசிரியர்; (எ—று.

பெயரியலுள் அவன் இவன் உவன் என்பது முதலாக உயர் திணைப் பெயரும் அது இது உது என்பது முதலாக அஃறிணைப் பெயரும் ஆமாறு அவற்றிற்கு இலக்கணம் கூறுகின்றார், ஈண்டுக் குறியீட்டாளுதல் மாத்திரையே கூறினார் என்று உணர்க. இனிக் கொற்றன் கொற்றி என்றாற்போலும் விரவுப் பெயரும், கொற்றன் குறியன், கொற்றி குறியள், கொற்றன் குளம்பு, கொற்றி குறிது எனப் பின்வருவனவற்றால் திணை தெரிதலின் இருதிணைப்பெயரின்கண் அடங்கும். கொற்றன் செவி, கொற்றி செவி என்பனவும் பின்னர் வருகின்ற வினைகளால் திணை விளங்கி அடங்குமாறு உணர்க. இனி 'அஃறிணை விரவுப்பெயர் இயல்புமா ருளவே' (எழு. 115) என்றாற் போலப் பிறாண்டும் ஓதுதல் பற்றி நிலையென்றதனான் விரவுப் பெயர் கோடலும் ஒன்று.

சுப்பிர.

உ. ம். அவன், அது.

பெயர் நிலைச்சுட்டு என்றதற்குப் 'பெயராகிய நிலைமையது கருத்தினை' என இளம்பூரணரும், 'பொருளை ஒருவர் கருது தற்குக் காரணமான நிலைமையையுடைய பெயர்களை' என நச்சினார்க்கினியரும் கூறினர். 'புணர் நிலைச்சுட்டே' என்றும்

சு.வே. 3. மற்றவ்
4. கூறாதது, கூறானாயது
5. மற்று
6, இவ்வாறு இரண்டாக

'புணர்நிலையே' என்றும் முன்னர்ச் சூத்திரங்களில் ஆசிரியர் வழங்குதலின், ஈண்டும் 'நிலைச்சுட்டே' என்றதற்கு 'புணர் நிலைர்சுட்டே' என்றதனைப் பொருளாகக் கொள்ளுதல் நேரிதாகும். அன்றியும் இச்சூத்திரத்துள் பெயரின்வகை கூறப்படு தலின் 'பெயர்' என்றது எழுவாயாய் இருத்தல் வேண்டும்.

'நிலைச்சுட்டு என்றது எற்றுக்கு எனின், பெயரின் வகை உயர்திணை அஃறிணை விரவுத்திணை என மூன்றாக 'இம்மூவுரு பின' (பொல். 160) என்ற விடத்துக் கூறியிருப்பினும், புணர்ச்சி யின்கண் இருவகையாகக் கொள்ளுதலே சாலும் என்றற் கென்க.

நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்துள் 'நிலை' என்ற சொல் மிகை எனக் கருதி 'இனி அஃறிணை விரவுப் பெயர்...விரவுப் பெயர் கோடலும் ஒன்று* எனக் கூறினர். விரவுப்பெயர் என்றது உயர்திணை அஃறிணை யிரண்டாகவும் வழங்கும் பெயராய் இருப்பினும் ஓரிடத்தில் உயர்திணையாகவேனும் அஃறிணையாக வேனும் இருத்தல் வேண்டுமேயன்றி இரண்டு திணையாகவும் இருத்தல் பொருந்தாமையான் அங்ஙன் கூறவேண்டுவதின்று. அவ்வாறாயின் 'அஃறிணை விரவுப் பெயர்' என அச்சூத்திரத்தில் ஆசிரியர் கூறாது 'அஃறிணை எனவே கூறியிருத்தல் கூடுமெனின், அற்றன்று; அவ்வாறு கூறின் அஃறிணைச் சொற்கள் எல்லாவற் றிற்கும் இயல்பாய் இருக்குந் தன்மை விதிக்கப்பட்டதாகும்; விரவுத்திணையாக வரத்தகுதியுள்ள சொற்கள் அஃறிணையாய் வரினே இயல்பு விதிக்கப்படவேண்டும் என்பது ஆசிரியர் கருத் தென்க.

'பெயர்' என்றது முற்சூத்திரத்திலிருந்து அதிகரிக்க இயலு தலின், இச்சூத்திரத்தில் 'பெயர் நிலைச்சுட்டே' என்றதற்குப் பிரதியாகிய ஆசிரியர் 'புணர்நிலைச்சுட்டே' எனப் படித்திருத்தல் கூடும்.

## 4. சாரியைப் புணர்ச்சி

### சாரியை வரும் இடம்

**119.** [1]அவற்றுவழி மருங்கிற் சாரியை வருமே **(16)**

**ஆ. மொ:** இல.

The increments (sāriyai) follow them.

---

* பக்கம் 73ல் காண்க.

சு. வே: 1. அவற்றுள்வழி

**க. சு:**

The empty morph (s come in the slots which follow them (i.e. the nouns).

**பி. இ. நா.**

வீர. 27.

துப்பார் பெயர்வேற் றுமையி னகத்தும் தொகையின் கண்ணும்
செப்பார் மொழிமுதற் பின் சாரியைவரின்

நே.மி. 22

மேய இருசொற் பொருள்தோன்ற வேறிருத்தி
ஆய இடைச்சொல் அடைவித்தால்—

நன். 243

பதமுன் விகுதியும் பதமும் உருபும்
புணர்வழி ஒன்றும் பலவும் சாரியை
வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும்.

இ. வி. 61.

பதமுன் விகுதியும் பதமும் உருபும்
புணர்வழி ஒன்றும் பலவும் சாரியை
வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும்
அனையவை தெரிதல் அறிவோர் கடனே.

முத்து. 175.

அவைதாம்
சாரியைச் சொற்களைச் சார்ந்துநின் றியலும்.

**இளம்.**

இது, சாரியை வரும் இடம் கூறுதல் நுதலிற்று.

(இ—ள்.) அவற்று வழி மருங்கின் சாரியை வரும்—அப் பெயர்களின் பின்னாகிய இடத்தின் கண்ணே சாரியை வரும்.

எ-டு: ஆடூஉவின் கை, மகடூஉவின்கை, பலவற்றுக் கோடு, எனவரும்.

**நச்.**

இது சாரியை வரும் இடம் கூறுகின்றது.

(இ—ள்.) அச் சொல்லப்பட்ட இருவகைப் பெயர்களின் பின்னாகிய இடத்தே சாரியைச் சொற்கள் வரும்; எ—று.

எ-டு: ஆடூஉவின்கை, மகடூஉவின்கை, பலவற்றுக்கோடு எனப் புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக்கு உதவி வந்தன. சாரியை என்றதன் பொருள் வேறாகி நின்ற இருமொழியும் தம்மிற் சார்தற் பொருட்டு இயைந்து நின்றது என்றவாறு.

சுப்பிர.

சாரியை என்பது முன்னோர் இட்ட குறியாகும். ஆகலின் அதன் இலக்கணத்தை ஆசிரியர் கூறிற்றிலர். அவற்றைப் புணரியல் நிலையிடைப் 'பொருள்நிலைக் குதவுந' என இடையியல் இரண்டாஞ் சூத்திரத்திற் கூறினர். ஆகலின் நச்சினார்க்கினியர் 'ஆடூஉவின்கை மகடூஉவின்கை பலவற்றுக் கோடு எனப்புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்கு உதவி வந்தன' என்றனர். அத்தொடர்க்குப் பொருள் ஆடூஉவின்கை மகடூஉவின்கைபலவற்றுக்கோடு என்றவிடத்துள்ள இன் சாரியை வற்றுச் சாரியையும் புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்கு உதவி வந்தன என்பது பொருளாகும்.

பி. கு.

பெயரையோ வினையையோ சார்ந்து இயைபு பட்டு வருதலின் சாரியை எனப்பட்டது என்னலாம் (சார்+இயை)

பல+கோடு என்பன பலகோடு எனவரின் பலவாகியகோடு என இருபெயரொட்டுப் பண்புத் தொகையாகவும் பல (மரங் களின்) கிளைகள் என ஆறாம் வேற்றுமைத் தொகையாகவும் பொருள்படும். பலவற்றுக்கோடு என வற்றுச் சாரியை சேர்த்துக் கூறின் வேற்றுமைத் தொகைக்கேயுரியதாகும். அதனால் புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்கு உதவுவன வாகச் சார்த்தப்படுதலின் சாரியை எனப்பட்டது எனினும் ஆம்.—சிவ.

சேனாவரையர், 'புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்கு உதவுதலாவது, எல்லாவற்றையும் என்புழி, வற்றுச் சாரியை நிலைமொழிப் பொருள் அஃறிணைப் பொருள் என்பதுபட வருதலும், எல்லா நம்மையும் என்புழி, நம்முச்சாரியை அப் பொருள் தன்மைப் பன்மை என்பதுபட வருதலுமாம்" என்பர். (இடையியல் 2)

"சாரியையாவது சொல் தொடர்ந்து செல்லும் நெறிக்கண் நின்று, அதற்குப் பற்றுக்கோடாகச் சிறிது பொருள் பயந்ததும்

பயவாததுமாய் நிற்பது" என்பர், அடியார்க்கு நல்லார். (சிலப். பதிகம்ட61)

"சாரியையாவது எல்லாப் புணர்ச்சிக்கும் பொதுவாய்ப் பெரும்பாலும் இன்னொலியே பயனாக வருவன" என்பர் மயிலைநாதர் (நன். 132)

இலக்கண விளக்கமுடையார் சாரியை அன் ஆன் முதலாக எடுத்தோதப்பட்டு எல்லாப் புணர்ச்சிக்கும் பொதுவாய்ச் சிறு பான்மை பொருள் நிலைக்கு உதவி செய்து பெரும்பாலும் இன் ஒலியே பயனாக வருவது என்பர். (இல. வி. பதவியல் 5)

## பெயர்களின் பெயரும், முறையும், தொகையும்

**120.** அவைதாம்
இன்னே வற்றே அத்தே அம்மே
ஒன்னே ஆனே அக்கே இக்கே
அன்னென் கிளவி [1]உளப்படப் பிறவும்
அன்ன என்ப சாரியை மொழியே (17)

**ஆ. மொ:** இல.

They are
in, vaṟṟu, aththu, am
on, ān akku, ikku, and
an, including which
there are words which serve as increments
in like manner.

**க.சு.**

And those indeed (like)
in, vaṟṟu, attu, am,
oṉ, āṉ, akku ikku (and)
aṉ including yet other words
are said to be such empty words.

**பி.இ.நூ.**

நன். 244.

அன்ஆன் இன்அல் அற்றுஇற்று அத்துஅம்
தம்நம் நும்ஏ அஉ ஐகுன
இன்ன பிறவும் பொதுச்சா ரியையே.

---

சு. வே: 1. உட்பட

இ. வி. 59:

அன்ஆன் இன்அல் அற்றிற் றத்தம்
தம்நம் நும்ஏ அஉ ஐகுன
இன்ன பிறவும் சாரியை மொழியே.

முத்து. 174:

அத்துஅம் மான்அக்கு இன்அன் ஒன்இக்கு
அற்றுத் தம்நம் நும்உம் ஆம்பிற.

திவாகரம் : தொல். 120. நூற்பாவையே கூறுகிறது.

சூடாமணி நிகண்டு : அம், இற்று, அற்று, அத்து, அல், இல், அன், ஆன், ஐ, தம், நும், அ, கு எனப்பதின்மூன்று சாரியைகள் கூறும்.

பிங்கலநிகண்டு: இன்னே வற்றே இக்கே அம்மே ஒன்மே ஆனே அக்கே அன்னே இன்னவை யெல்லாம் சாரியைச் சொல்லே.

## இளம்.

இது[2] சாரியைகட்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) அவைதாம்—மேற் சாரியை எனப்பட்டவைதாம், இன்னே வற்றே அத்தே அம்மே ஒன்னே ஆனே அக்கே இக்கே அன் என் கிளவி உளப்பட பிறவும்—இன்னும் வற்றும் அத்தும் அம்மும் ஒன்னும் ஆனும் அக்கும் இக்கும் அன் என்னும் சொல்லும் [3]ஆகிய அவ்வொன்பதும் [4]உளப்படப் பிறவும், அன்ன என்ப சாரியை மொழி—அச்சாரியையாம் தன்மைய என்று சொல்லுவர் சாரியையாகிய மொழிகளை.

பிறவும் என்றதனால், தம் நம் நும் [5]எம் கெழு ஏ ஐ ஞான்று என்பனவும் கொள்க. 'எடுத்த நறவின் குலையலங் காந்தள்' என்புழி அலம் என்பதோர் சாரியையும் உண்டால் எனின், அதனை 'அலங்கு காந்தள்' என்பதன் விகாரம் என்ப. இன் சாரியை வழக்குப்பயிற்சியானும், நூலுட் பலகாலும் எடுத்தோதப்படலானும், வாளா ஓதியவழித்தானே சேறலானும்

சு.வே. 2. அச்சாரியைகட்கு
3. ஆக
4: உட்பட 5உம்

முன்வைக்கப்பட்டது. அன் சாரியையும் அதுபோலச் [6]சிறப்புடைமையின் பின் வைக்கப்பட்டது. இடைநின்றவற்றியல்பும் அறிந்து கொள்க.

நச்.

இஃது அச்சாரியைகட்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துகின்றது.

(இ—ள்.) முன்னர்ச் சாரியை எனப்பட்ட அவைதாம், இன்னும் வற்றும் அத்தும் அம்மும் ஒன்னும் ஆனும் அக்கும் இக்கும் அன் என்னும் சொல்லொடு கூட ஒன்பதாகிய அத்தன்மையுடையனவும், அவை யொழிந்தனவும் சாரியைச் சொல்லாம் என்பர் ஆசிரியர்; எ—று.

பிறவாவன தம் நம் நும் உம் ஞான்று கெழு ஏ ஐ என்பனவாம். இவற்றுள் ஞான்று ஒழிந்தன எடுத்தோதுவர் ஆசிரியர். 'எடுத்த நறவின் குலையலங் காந்தள்' (கலித். 40) இது வினைத் தொகை; சாரியை அன்று. இன்சாரியை வழக்குப் பயிற்சியும் பலகால் எடுத்தோதப்படுதலும் பொதுவகையான் ஓதியவழித் தானே சேறலும் ஆகிய சிறப்பு நோக்கி முன் வைத்தார். வற்றும் அத்தும் இன்போல முதல் திரியும் ஆகலானும் செய்கை ஒப்புமையானும் அதன் பின் வைத்தார். அம் ஈறுதிரியுமாதலின் திரிபு பற்றி அதன்பின் வைத்தார். ஒன் ஈறுதிரியுமேனும் வழக்குப் பயிற்சியின்றி நான்காமுருபின்கண் திரிதலின் அதன்பின் வைத்தார். ஆன் பொருட்புணர்ச்சிக்கும் உருபுப் புணர்ச்சிக்கும் வரும் என்று அதன்பின் வைத்தார். அக்கு ஈறுதிரியுமேனும் உருபுப் புணர்ச்சிக்கண் வாராமையின் அதன்பின் வைத்தார். இக்கு முதல் திரியுமேனும் சிறுபான்மை பற்றி அதன்பின் வைத்தார். அன் இன்போலச் சிறத்தலிற் பின் வைத்தார்.

ஆன் உருபிற்கும் ஆன் சாரியைக்கும் இன் உருபிற்கும் இன் சாரியைக்கும் வேற்றுமையாதோவெனின், அவை சாரியையான விடத்து யாதானும் ஓர் உருபேற்று முடியும்; உருபாயின் இடத்து வேறோர் உருபினைஏலா என்றுணர்க. இனி மகத்துக்கை என்புழித் தகர வொற்றுந் தகரவுகரமும் வருமென்று கோடும் எனின், இருளத்துக் கொண்டான் என்றால் அத்து எனவே வேண்டுதவின் ஆண்டும் அத்து நின்றே கெட்டதென்று கோடும்.

சு.வே. 6: சிறப்புண்மையின்

அக்கு இக்கு என்பனவும் பிரித்துக் கூட்டக் கிடக்கும். தாழக் கோல் என அக்குப் பெற்று நிற்றலானும் ஆடிக்கு என் புழிக் குகரம் நான்கனுருபாகாமையானும் இவை சாரியையாமாறு உணர்க.

சுப்பிர.

அவைதாம் என்பதற்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் 'மேற்சாரியை எனப்பட்டவைதாம்' எனப் பொருள் கூறினும், 'அவற்றுவழி மருங்கின் வருவனதாம்' எனப் பொருள் கூறின் பொருந்தும் எனத் தோன்றுகின்றது. "அவைதாம்—விளிகொள் பெயரே" (சொல்120) என்ற சூத்திரத்துள்ள அவைதாம் என்ற தற்குக் 'கிளக்கப்படுவனவாகிய பெயர்தாம்' என்ற பொருளைச் சேனாவரையர் கூறியதும் 'விளிதாம்' எனக் கூறாததும் நோக்கத்தக்கன. அச்சூத்திரத்துள் 'மெய்ப்பொருள் சுட்டிய விளி கொள் பெயர், அப்பால் நான் கென்பன எழுவாயும் பயனிலையு மாய் இயைந்து ஒரு சொல் நீர்மையவாய் அவைதாம் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாயின' என அவர் கூறியவாறே ஈண்டும், 'சாரியை மொழியே பிறவுமன்ன என்ப' என்பன எழுவாயும் பயனிலையுமாய் இயைந்து ஒரு சொல் நீர்மைய வாய் அவைதாம் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாயிற்று எனக் கூறுதல் சாலும்.

இவ்வாறு கொள்ளாது 'சாரியை மொழியே' என்றதனை இரண்டாம் வேற்றுமையாக இளம்பூரணர் கொண்டனர். அவ்வாறாயின் அவைதாம் என்பதற்கு நேரிதான முடிவு இல்லை. நச்சினார்க்கினியரோ 'உளப்படப் பிறவு மன்ன' என்றதை 'உள்பட அன்ன பிறவும்' என மாற்றி "கூட ஒன்ப தாகிய அத்தன்மையுடையனவும் பிறவும்" எனப் பொருள் கூறினர். அவர் கூற்றின் 'அன்ன' என்றது மிகையாவதுடன் 'உளப்பட' என்றதற்கு முடிக்குஞ் சொல்லாய் நிற்பது இயற் கைக்கு மாறாய் நிற்கின்றது ஆகலின் 'உள்பட, பிறவு மன்ன' என்றே அந்நுவயங் கொள்ளல் வேண்டும்.

பிற என்றதனான், 'தம்மிடை வரூஉம் படர்க்கை மேன - நும்மிடை வரூஉம் முன்னிலை மொழிக்கே' (எழுத்.191) 'உயர் திணையாயின் நம் இடை வருமே' (எழுத்190) என்றவிடத்துக் கூறப்பட்ட தம், நும், நம் என்பனவும், 'ணகாரை முன்னர் மகாரம் குறுகும்' (எழுத்.52) என்றவிடத்து ஆசிரியரான் வழங் கப்பட்ட ஐயும், 'லன வென வரூஉம் புள்ளியிறுதிமுன்—உம்மும் கெழுவும்...' (எழுத்.481) என்ற சூத்திரத்துக் கூறப்பட்ட உம்,

கெழு இவையும், 'ஒத்த தென்பஏஎன் சாரியை' (எழுத்.164) என்ற விடத்துக் கூறப்பட்ட ஏயும் அவை போல்வனவும் கொள்ளப்படும்.

இச்சூத்திரத்தில் இன், வற்று...இவற்றின் முறைக்குக் காரணம் கூறுமிடத்து இன்னும் அன்னும் சிறப்பு நோக்கி ஒன்று தொடக்கத்தினும் மற்றொன்று இறுதியிலும் வைககப் பட்டன என்பர் உரைக்காரர்கள். முறைக்குக் காரணம் கூறாமையே நலமாம்.

இளம்பூரணத்தில் பிறவும் என்றதனால் கொள்ளப்படும வற்றில் எம்மும் உள்ளது. நச்சினார்க்கினியத்தில் 'உம்' என்றது அதற்குப் பிரதியாக உள்ளது. 'எம்' என்ற சாரியை ஆசிரியர் யாண்டு வழங்கியிருக்கிருர் என்பது புலப்படாமை யானும் 'உம்' என்றதை ஆசிரியரே கூறியிருத்தலானும் அஃது இளம்பூரணத்தில் இல்லாமையானும் 'உம்' என்பதற்குப் பிரதியாக 'எம்' எனத்தவறி வந்திருக்கலாம் என்று தோன்று கின்றது.

## வேங்கட.

பிறவும் என்றதனால் இந்நூலிற் கொள்ளப்படும் சாரியை கள்: அ உ எ ஏ ஒ உம் கெழு என்பன. இவையெல்லாம் சாரியையாதல் முன்னர்ப் பெறப்படும். இனி, இல் என்னும் பண்பினைச் சார்ந்து வருவனவாகிய ஐ, ஆ என்பனவும் சாரியை எனப்படும். இவற்றுள் உம்,கெழு ஒழிந்தனவெல்லாம் எழுத்துக்களே. தாம் நாம் நீயிர் (நீம்) இப்பெயர்களின் திரிபு களாகிய தம் நம் நும் என்பவற்றைச் சாரியையிடைச் சொல் என்பர். அவை, எல்லாம் என்னும் பொதுப் பெயரின் அடி யாகப் பிறக்கும் சொற்களைச் சார்ந்து வந்து, இடப்பொது மையை நீக்கி உரிமைப் படுத்தலின் பெயர் என்றலே பெரிதும் அமைதி.

நன்னூலார் இச்சாரியைகளுட் சிலவற்றை மாற்றியும், சில வற்றை நீக்கியும், சிலவற்றைக் கூட்டியும் வழங்கியுள்ளார்.

| | | | |
|---|---|---|---|
| வற்றுச் சாரியையினை | | அற்றுச்சாரியை | என்று |
| அகுச் | ,, | அ ,, | ,, |
| இக்குச் | ,, | கு | ,, |

கூறினார்.

ஒன் சாரியை ஒழித்தார்.

இற்றுச் சாரியை ஒன்று இயல்பினதாகக் கொண்டார்.

அன் சாரியையைப் புதிதாகக் கொண்டார்.

இவை,

அன் ஆன் இன் அல் அற்று இற்று அத்து அம்
தம் நம் நும் ஏ அ உ ஐ கு ன
இன்ன பிறவும் பொதுச்சாரியையே (நன்.244) என்னுஞ் சூத்திரத்தான் அறியப்படும்.

இச்சூத்திரத்தின் ஈற்றிலுள்ள 'பொதுச் சாரியையே' என்பதை மட்டுமே மாற்றி, அதற்கீடாக 'சாரியை மொழியே' என்று அமைத்துக் கூறினர் இலக்கண விளக்க நூலார். இவ்வாறாகவும், சிவஞான முனிவர் தமது இலக்கண விளக்கச் சூறாவளியில் 'தொடையல் என்புழி அல் விகுதி என்றொழிக. அற்றுச் சாரியை பொருள் நிலைக்குதவி செய்யும் சிறப்புத் தோன்ற 'நல்லற்று' என்ற நன்னூலார் கருத்து அறியாது அல்லுச் சாரியை எனக் கொண்டார்' என்று மறுத்துக் கூறினார். நன்னூலார், 'அன்' என்பது முதல் 'ன' என்பது வரையிலும் அடைமொழியின்றிச் சாரியைகளையே கூறியிருப்ப அவற்றிடையே அற்றுச் சாரியைக்கு மட்டும் 'நல்' என்னும் அடைமொழி கொடுத்தார் என்று கூறுதல் அமைவுடையதாகுமோ? பொருள் நிலைக்குதவி செய்யும் சிறப்பினது அற்றுச்சாரியை மட்டுமேயோ? சேனாவரையர் அற்றுச் சாரியையோடு நம் முச்சாரியையினையும் கொண்டுள்ளார். திருக்கோவையார் உரையாசிரியராகிய பேராசிரியர் அல் என்பதொரு சாரியையினை மேற்கொண்டுள்ளார்.

இலக்கண விளக்கமுடையார் கூறிய சாரியைச் சூத்திரம் நன்னூற் சூத்திரமே யாகலானும், உரையிற்காட்டிய உதாரணங்கள் எல்லாம் மயிலைநாதர் காட்டியனவே யாகலானும், சிவஞான முனிவர் கூறிய குற்றம் குற்றமே என்று கொள்ளினும் இலக்கண விளக்க நூலாரை மட்டும் சார்தற்கிடனின்று. இவ்வாறு இலக்கண விளக்க நூலாசிரியர் மீது முனிவர் கூறிய பொருந்தாக் குற்றங்கள் பல.

வற்றுச் சாரியையின் வகரம் சிலவிடங்களிற் கெடுதலானும், கெடாது நிற்குமிடத்திலும் வகரம் உடம்படு மெய்யாய் வந்தது எனின் அமையும் ஆகலானும், ஏனைச் சாரியைகள் எட்டும் உயிர்

முதல் மொழிகளாயிருத்தலானும் இதனையும் நன்னூலார் கூறிய வாறு அற்று என்று கூறுதல் அமைவுடையதாகும் எனத் தோன்றுகின்றது.

மகத்துக்கை என்னுமிடத்து, 'து' சாரியை என்றும், த் — சந்தியில் வந்ததென்றும் கொள்ளுதல் அமையுமாயினும், இருளத்துக் கொண்டான், வெயிலத்துக் கொண்டான் என்னு மிடங்களில் அமையாமையின் அத்துச் சாரியை ஒன்று கொள்ளற்பாலதே.

சாரியை மொழிகள் எல்லாம் முற்காலத்திற் பொருளுடை யனவே. இஃது ஆசிரியர் 'சாரியை மொழியே' என்றதனானும், சேனாவரையர், 'அல்லனவும் தாம் சார்ந்து வரும் மொழிப் பொருட்கு உபகாரமுடையவாய் வருமாறு ஓர்ந்து கொள்ளப் படும்; அல்லாச்கால், சாரியை மொழியாகா என்பது' என்று எழுதியிருத்தலானும் அறியப்படும்.

### சாரியைக்குப் புணர்ச்சி விதி

121. அவற்றுள்
இன்னின் இகரம் ஆவின் இறுதி
முன்னர்க் கெடுதல் உரித்தும் ஆகும். (18)

**ஆ. மொ: இல.**

Among those
'I', of 'in' may disappear before the end of 'ā'

**க. சு.**

Among them
the sound i of iṉ will optionally disappear ofter the final–ā.

**பி.இ.நூ.**

நன். 248.

ஆமா கோனவ் அணையவும் பெறுமே.

இ. வி. 151.

ஆமா கோனவ் வணையவும் பெறுமே.
(இவ்விரண்டு - நூல்களும் இன்சாரியையின் இகரம் கெடுத்தலை வேண்டாது னகரமே சாரியையெனக் கொண்டன.)

முத்து.

அவற்றுள்
ஆமா(கோ)இன் அடையவும் பெறுமே.

**இளம்.**

இது, அவற்றுள் இன்சாரியை முதல் திரியுமாறு [1]கூறுதல் நுதலிற்று.

(இ—ள்.) அவற்றுள்—மேற்கூறப்பட்ட சாரியைகளுள், இன்னின் இகரம் ஆவின் இறுதி முன்னர்—இன்சாரியையினது இகரம் ஆ என்னும் சொல்லீற்று முன்னர், கெடுதலும் உரித்து ஆகும்—கெடாமையேயன்றிக் கெடுதலும் உரித்தாம்.

எ—டு; ஆனை, ஆவினை, ஆன்கோடு, ஆவின்கோடு என வரும்.

முன்னர் என்றதனான், 'மா' என்னும் [2]சொல்லின் முன்னும் அவ்விரு விதியும் எய்தும். மானை மாவினை, மான்கோடு மாவின்கோடு என வரும்.

**நச்.**

இது முற்கூறியவற்றுள் இன்சாரியை முதல் திரியுமாறு கூறுகின்றது.

(இ—ள்.) முற்கூறிம சாரியைகளுள், இன்சாரியையது இகரம் ஆ என்னும் ஓரெழுத்து ஒரு மொழி முன்னர், கெட்டுமுடியவும் பெறும்; எ—று.

'உரித்துமாகும்' என்றதனான் கெடாது முடியவும் பெறும் என்றவாறு; இஃது ஒப்பக்கூறல் என்னும் உத்தி.

எ—டு. ஆனை, ஆவினை, ஆனொடு, ஆவினொடு, ஆற்கு, ஆவிற்கு, ஆனின், ஆவினின், ஆனது, ஆவினது, ஆன்கண், ஆவின் கண் என வரும்.

இனி முன்னர் என்றதனானே மாவிற்கும் இவ்வாறே கொள்க. மானை, மாவினை, மானொடு, மாவினொடு, மாற்கு, மாவிற்கு, என ஒட்டுக. ஆகார ஈறு என்னாது ஆவின் இறுதி என்று ஓதினமையின் மா இலேசினாற் கொள்ளப்பட்டது.

---

சு. வே: 1. உணர்த்துதல்
2. சொற்கண்ணும்

இனி ஆன்கோடு, ஆவின்கோடு, மான்கோடு, மாவின்கோடு என உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றுழியும் கொள்க.

**சுப்பிர.**

'ஆவின் இறுதி' என்பதற்கு 'ஆ' என்ற சொல்லின் இறுதி என உரைகாரர்கள் இருவருங் கொண்டு முன்னர் என்ற சொல் மிகையெனக் கருதி அதனால் 'மானை' என்றதையும் கொள்ளுகின்றனர். அத்தினகரம் அகர முனை இல்லை (எழு 126) 'இக்கின் இகரம் இகர முனை யற்றே' (எழு. 127) 'ஐயின் முன்னரும் அவ்வியல் நிலையும்' (எழு. 128) முதலிய சூத்திரங்களில் முன்னர் என்ற சொல்லையேனும் அப்பொருள் கொண்ட சொற்களையேனும் ஆசிரியர் வழங்குதலானும், அச்சொல் இல்லையெனின் பொருள் விளக்கமாய்க் கொள்ள இயலாமையானும், இச்சூத்திரத்தில் 'முன்னர்' என்ற சொல்லை மிகையாக உரைகாரர்கள் கொள்ளுதல் பொருத்தமின்று. அவ்வாறாயின், 'மானை' என்றது எதனாற் பெறுதும் எனின், 'ஆவின் இறுதி' என்றதற்கு 'ஆகாரத்தை இறுதியிற் கொண்ட சொல்' எனப் பொருள் கொள்ளுதலான் என்க. இரட்டுற மொழிதலான் மாவினிறுதி யெனப் பிரித்தால் 'மானை' எனப் பெறப்படலாம் எனின், உண்மையே; ஆயினும் 'பா' போன்ற ஆகார விறுதிச் சொற்கள் அச் செய்கை பெறின் அவற்றிற்குத் தனிச் சூத்திரங் கூறல் வேண்டுமாகும்.

இச்சூத்திரத்தில் 'உரித்தும்' என்ற உம்மையான் இகரங் கெடாது நிற்றலே பெரும்பான்மையெனக் கொள்ளல்தகும்.

**வேங்கட.**

உரையாசிரியர் இருவரும் 'முன்னர்' என்றதனான் மாவிற்கும் இவ்விதி கொள்க என்றனர். ஆயினும் ஆ என்னும் சொல்லிற்கே இவ்விதி என்பது ஆசிரியர் கருத்து எனத் தோன்றுகின்றது. ஆ, மா என்னும் இரண்டற்கு மாயின், முன்னர்,

'மாமரக் கிளவியும் ஆவும் மாவும் (உயிர்ம. 29) என்பதுபோல ஈண்டுங் கூறுவரன்றே?

இனி உரையாளரிருவரும் ஆ, மா என்னும் இரண்டற்கு முன் பொருட்புணர்ச்சிக் கண்ணும் இவ்விதி கொண்டு உதாரணங்

கொடுத்தனர். ஆசிரியர் அவ்விரண்டு பெயர்களும் னகர ஒற்றுப் பெறுதலையே விதித்தாராகலின், ஆவின்கோடு, மாவின்கோடு என்று வருதல் பெறப்படாது.

நிலை மொறியீற்று நெடிலுக்கு முன் குறின் முதல் மொழிகள் வருமிடத்துப் புணர்ச்சிக்கண் அக்குறில் கெடுதலும் உளதாகலின், ஆ முன்வந்த இன்சாரியையின் இகரம் கெட்டது. நீ + இர் = நீயிர், நீர்; மூ + உழக்கு = மூவுழக்கு; போ + இன் + ஆன் = போயினான், போனான் எனப் பிற நெட்டெழுத்துக்களுக்கு முன் வந்த குற்றெழுத்துக்கள் இவ்வாறே கெட்டும் கெடாமலும் வந்துள்ளன காண்க.

பி.கு.

''இன்னின் இகரம் மாவின் இறுதி எனப் பிரித்துக் கூறுதற்கும் இச்சூத்திரம் இடந்தருதலின் 'மா' என் என்னும் ஒரெழுத்தொரு மொழி முன்னும் இன்சாரியையின் இகரம் கெடுதல் கொள்க'' என்பர் வெள்ளைவாரணனார் (இகரம் + மா = இகரமா; இகரம் + ஆ = இகரமா) இதுவே பொருந்தும் என்னலாம்.

ஒப்பக் கூறல் என்னும் உத்திக்குக் காட்டப்பட்டது இந்நூற்பா. (தொல். பொருள். 665–பேரா.)

இன்சாரியை ஈறு திரியும் இடம்

122. [1]அளபாகு மொழிமுதல் நிலைஇய உயிர்மிசை
னஃகான் றஃகான் ஆகிய நிலைத்தே. (19)

ஆ.மொ. இல.

'n' of 'in' may change into r before the words which denote 'measures'.

க.சு.

Before words denoting measure the n (of in) placed in the slot of the vowel will be changed to r.

இளம்.

இது, இன் இறுதி திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

சு. வே: 1. அளவாகு

(இ—ள்.) அளபு ஆகும் மொழிமுதல்—[1]அளபுப் பெயராகும் [2]மொழி முதற்கண்ணே, நிலை இய உயிர்மிசை னஃகான்—நிலை பெற்ற உயிர்க்கு மேலாய் நின்ற இன்சாரியையது னகரம், றஃகான் ஆகிய நிலைத்து—றகரமாகிய நிலைமைத்து.

பதிற்றகல், பதிற்றுழக்கு என்புழி அவ்வாறு வருதல் அறிக.

'நிலைத்து' என்றதனால், பிறவழியும் இன்னின் னகரம் றகரமாதல் கொள்க.

பதிற்றொன்று, பதிற்றேழு எனவரும்

**நச்.**

இஃது அவ் இன்சாரியை ஈறு திரியுமாறு கூறுகின்றது.

(இ—ள்.) அளவுப் பெயராய்ப் பின்நிற்கும் மொழிக்கு முன்னர் நின்ற எண்ணுப் பெயர்களின் ஈற்று நின்ற குற்றுகரத்தின் மேல் வந்த இன்சாரியையது னகரம், றகரமாய்த் திரியும் நிலைமையை யுடைத்து; எ—று.

எ-டு: பதிற்றகல் பதிற்றுழக்கு. இவற்றைப் பத்தென நிறுத்தி 'நிறையுமளவும்' (எழு.436) என்னும் சூத்திரத்தால் இன் சாரியை கொடுத்துக் 'குற்றியலுகரம் மெய்யொடுங் கெடுமே' (எழு.433) என்றதனாற் குற்றுகரம் மெய்யொடுங் கெடுத்து வேண்டுஞ் செய்கை செய்து 'முற்ற இன் வரூஉம்' (எழு.433) என்பதனான் ஒற்றிரட்டித்து முடிக்க.

நிலைஇய என்றதனாற் பிறவழியும் இன்னின் னகரம் றகரமாதல் கொள்க. பதிற்றெழுத்து, பதிற்றடுக்கு ஒன்பதிற்றெழுத்து, பதிற்றொன்று, பதிற்றிரண்டு, பதிற்றொன்பது என எல்லாவற்றோடும் ஒட்டிக் கொள்க. அச் சூத்திரத்திற் 'குறையாதாகும்' (எழு.426) என்பதனாற் பொருட் பெயர்க்கும் எண்ணுப் பெயர்க்கும் இன் கொடுக்க.

**வேங்கட.**

அளவாகும் மொழிகளுள் முதற்கண் உயிரெழுத்தினையுடையன—அகல், ஆழாக்கு, உழக்கு, உரி முதலியன. இவை குறித்துவருகிளவியாய் வரும்வழி, நிறுத்த சொல்லைச் சேர்ந்த இன்சாரியையின் னகரம் றகரமாய்த் திரியும் என்பது இச் சூத்திரத்தாற் போந்த பொருள்.

சு. வே: 1. அளவுப்
2. மொழியின்

நிறையும் அளவும் வரூஉங் காலையும்

குறையா தாகும் இன்னென் சாரியை (உயிர் மய.29)

என்றதனால், பத்து என்னும் எண்ணின்முன் அளவுப் பெயர் வரும்வழி இன்சாரியை வரும். இச்சூத்திரத்தால் அதன் னகரம் றகரமாகத்திரியும். திரிந்து பதிற் என்று நிற்க, அதன் முன் அகல், உழக்கு என்னும் உயிர் முதன்மொழி வருமிடத்தில், ‘புள்ளியீற்றுமுன்......கெடுத்தே’ (புணரி.36) என்னும் சூத்திரத் தான் பதிற் என்பதன் ஈற்றில் நின்ற றகர ஒற்றின்மேல் உயிரெழுத் தூர்ந்து, பதிற்றகல், பதிற்றுழக்கு என றகரமெய் இரட்டித்து வழங்குகின்றதாலெனின், றகரத்தைப் பிறப்பிடம் நோக்கி நன்கு ஒலிப்பின், பதிறுழக்கு என்பதே பதிற்றுழக்கு எனக் கேட்கும். பிற்காலத்தவர் றகரத்தை நன்கு ஒலியாராய் ரகரத்தை யொப்ப ஒலித்ததனான், பதிற்றுழக்கு என்னும் பழைய ஒலிக்கேற்ப, றகர வொற்றிட்டெழுத நேர்ந்தது என்பது உய்த்துணர்தற்பாலது. இவ்வாறானவை முன்னரும் அறியப்படும். பொறை, காபு, பாகு என்ற பண்டு வழங்கிய சொற்கள் பின்னர்ப் பொற்றை, காப்பு, பாக்கு என ஒற்று மிக்கு வழங்கலாயினவை ஒப்பிடத்தக்கன.

‘நிலைத்து என்றதனால்...பதிற்றேழு என வரும்’ என்று உரையாசிரியரும், ‘நிலைஇய என்றதனான்...பதிற்றெழுத்து ...ஒட்டிக்கொள்க’ என்று நச்சினார்க்கினியரும் கூறியுள்ளனர். எண்ணுப் பெயரொழிந்த பிற பெயர் வரும்வழிச் சாரியை னகரம் றகரமாதல் ‘ஒன்பதிற் றெழுத்தே’ என்று ஆசிரியர் கூறியிருத்தலான்அறியப்படுமாதலின், இவ்வாறு கூறாமல், ‘உடம் பொடு புணர்த்தலாற் கொள்க’ என்று எழுதின் அமைதியாகும்.

பி-கு.

பதிற்றொன்று, பதிற்றேழு முதலியன பிற்காலத்து வழக்காயின் ஒற்றுமைப் போலியான் வந்தது எனக்கூறுதல் சாலும் என்பர் சுப்பிரமணிய சாஸ்திரியார். அவர், இந்நூற் பாவின் கீழ்க்குறிப்பில்,

“பத்து என்றதன் ‘து’ ஒன்று முதல் எட்டு வரையி லுள்ள எண்ணின் முன்னர்க் கெடும் என எழுத். 34 ஆவது சூத்திரத்திற் கூறப்படினும் அதனை அளவுப் பெயரின் முன்னரும் எழுத்437 ஆவது சூத்திரத்தால் ஒருவாறு

கொள்ளல் வேண்டுமெனத் தோன்றுகின்றது. றகரவொற்றிரட்டலை இறுதிப்புறனடைச் சூத்திரத்தாற் கொள்ள வேண்டும்''

என்றும் எழுதியுள்ளார்.

பதிற்றகல் என்பதில் இன் என்பது சாரியை யெனக் கொள்ளாமல் 'இற்று' என்பதே சாரியை என்பர் பிற்காலத்தார். புதியன புகுதலாக (புகுத்தலாக) இற்றுச் சாரியை கொண்டார் நன்னூலார் (இன்னும் இற்றும் ஒன்பதேற்கும். நன்.196)

*வற்று முதல் கெடுதல்

**123. வஃகான் மெய்கெடச் சுட்டுமுதல் ஐம்முன்**
**அஃகான் நிற்றல் ஆகிய பண்பே (20)**

**ஆ.மொ. இல.**

'V' of vaṟṟu may disappear before demonstrative of 'ai' ending, leaving 'a' to stand.

**க.சு.**

After the words in-ai which begin with the demonstrative (vowels) it is the usage to drop the consonant v (of vaṟṟu) and let the a remain.

**இளம்.**

இது, வற்று முதல் திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று (இ-ள்) சுட்டு முதல் ஐ முன்—சுட்டெழுத்தினை முதலாக வுடைய ஐகார ஈற்றுச் சொல்முன்னர், வஃகான் மெய்கெட அஃகான் நிற்றல் ஆகிய பண்பு—[1]வற்றுச் சாரியை [2]தன் வகரமாகிய மெய்கெட அகரம் நிற்றலாகிய பண்பினை[3]யுடைய.

எ-டு: அவையற்றை, இவையற்றை, உவையற்றை எனவும், அவையற்றுக் கோடு எனவும் வரும்.

---

*வற்றுச் சாரியை கொள்ளாமல் அற்றுச் சாரியைகொள்ளும் பிற்கால நூல்கள்.

சு. வே: 1. அவ்வற்று
2. அதன்
3. யுடைத்து

'ஆகிய பண்பு' என்றதனான் சுட்டு முதலாகிய ஐ என் இறுதி ஐகாரத்தோடு நில்லாத வழி, வற்றின் வகரம் அகரம் நிற்கக் கெடாது வற்றாயே நிற்றல் கொள்க. மற்றிது, 'திரிந்ததன் திரிபு பிறிது' என்னும் நயத்தால் கெடாதே நிற்கும் ஆகலின் இது கூறவேண்டா எனின், சுட்டு முதல் ஐ யீற்றுச் சொல்லின் ஐமுன் என ஓதாது, 'சுட்டு முதல் ஐம்முன்' என அச்சொல்முன் எல்லாம் கெடுவது போல ஓதினமையின், வேண்டிற் றென்பது *

நச்.

இது வற்று முதல் திரியுமாறு கூறுகின்றது.

(இ—ள்.) சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஐகார வீற்றுச் சொல்முன் வற்று வருங்காலை, அவ்வற்றுச் சாரியையினது வகரமாகிய ஒற்றுக் கெட ஆண்டு ஏறிய அகரம் நிற்றல் அதற்கு உளதாகிய குணம்; எ—று.

எ—டு: அவையற்றை, இவையற்றை, உவையற்றை என வரும். இன்னும் இவற்றை, அவை இவை உவை என நிறுத்திச் 'சுட்டு முதலாகிய ஐயென் இறுதி' (எழு. 117) என்றதனான் வற்றும் உருபும் கொடுத்து வேண்டும் செய்கை செய்க. இவ்வாறே எல்லா உருபிற்கும் ஒட்டுக. அவையற்றுக்கோடு என உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்ற வழியுங் கொள்க.

'ஆகிய பண்பு' என்றதனானே எவன் என்பது படுத்தல் ஓசையாற் பெயராயவழி எவன் என நிறுத்தி வற்றும் உருபும் கொடுத்து வற்றுமிசை ஒற்றென்று னகரங் கெடுத்து அகரவுயிர் முன்னர் வற்றின் வகரங் கெடும் எனக் கெடுத்து எவற்றை எவற்றொடு என முடிக்க.

சுப்பிர.

''ஆகிய பண்பு...நிற்றல் கொள்க'' எனக் கூறினர் இளம்பூரணர். அவை, அவ் என்பன இரண்டு தனிச் சொற்களாக ஆசிரியர் பலவிடங்களிற் கூறுகின்றமையான் இவ்வாறு கூற வேண்டுவதின்று எனத் தோன்றுகின்றது.

* இதன் விளக்கத்தைத் திரிந்ததன் திரிபு என்னும் கட்டுரையில் (இணைப்பில்) காண்க.

"ஆகிய பண்பு என்றதனானே...எவற்றொடு என முடிக்க" எனக் கூறினர் நச்சினார்க்கினியர். ஆசிரியர் யாவற்றை, யாவற்றொடு என்பனவற்றிற்குச் சூத்திரங் கூறுகின்றமையானும் 'எவன்' என்றது அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும் என்றமையானும் 'எவன்' என்றது அவர்காலத்துப் பெயராக வழங்கவில்லை யென்னலாம்.

**வேங்கட.**

'ஆகிய பண்பு என்றதனான்...அமைக்க' என்றார் நச்சினார்க்கினியர். ஆசிரியர் 'சுட்டுமுதல் ஐமுன்' என்று விதந்தோதுதலானும், யாவன் யாவள் யாவர் என்பனவற்றையன்றி, எவன் என்பதைப் பெயராகக் கூறிற்றிலர் ஆகலானும் எவற்றை என்று அமைத்தல் ஆசிரியர் கருத்தன்று.

யாவற்றை என்பது யவற்றை—எவற்றை என்று திரிந்துளது என்பது உய்த்துணரத்தகும்.

**பி.கு.**

வற்றுச் சாரியை கொள்ளாமல் அற்றுச் சாரியை கொண்டார் நன்னூலார்.

ஏவன் என்பது படுத்தல் ஓசையாற் கூறப் பெயராகவும் எடுத்தல் ஓசையாற்கூற வினாவினைக் குறிப்பாகவும் ஆம்.

## னகர ஈற்றுச்சாரியை திரியும் இடம்

**124. னஃகான் றஃகான் நான்கன் உருபிற்கு. (21)**

**ஆ.மொ.** இல.

'n' (of four increments) becomes ṟ before the fourth case sign (ku)

**க.சு.**

'n' is changed to ṟ before the fourth-case morph.

**பி.இ.நூ.**

முத்து. 177:

> **னகர இறுதி நாற்சாரியை னகரமும்**
> **றகார மாகும் நான்கன் உருபிற்கு.**

**இளம்.**

இது, னகர வீற்றுச் சாரியை நான்கற்கும் ஈறு திரிபு கூறுதல் நுதலிற்று.

(இ—ள்) நான்கன் உருபிற்கு னஃகான் றஃகான்—நான்காம் உருபிற்கு(னகார ஈற்றுச சாரியையெல்லாம்)னகாரம்றகாரமாம்.

எ—டு: விளவிற்கு, கோஒற்கு, ஒருபாற்கு, அதற்கு என வரும்.

**நச்.**

இஃது இன் ஒன் ஆன் அன் என்னும் னகர ஈறு நான்கும் திரியுமாறு கூறுகின்றது.

(இ—ள்) னகார ஈற்று நான்கு சாரியையின் னகரமும் நான்காம் உருபிற்கு றகாரமாய்த் திரியும்; எ-று

எ-டு: விளவிற்கு, கோஒற்கு, ஒருபாற்கு, அதற்கு என வரும்.

இதனை 'அளவாகு மொழி முதல' (எழு 121) என்பதன் பின் வையாது ஈண்டு வைத்தது னகர ஈறுகள் எல்லாம் உடன் திரியும் என்றற்கு; ஆண்டு வைப்பின் இன் சாரியையே திரியும் என்பது படும். 'ஒன்று முதலாகப் பத்தூர்ந்து வரூஉம்—எல்லா எண்ணும்' (எழு. 1்9) என்பதனான் ஒருபாற்கு என்பதனை முடிக்க.

**சுப்பிர.**

122 ஆவது சூத்திரத்தினின்று மிசை என்ற சொல் அதிகரிக்கப்பட்டு 'நான்கனுருபிற்கு மிசை' என அந்நுவயிக்கப்படல் வேண்டும்.

இளம்பூரணத்தில் 'னகர வீற்றுச் சாரியையெல்லாம்' என்றதற்குப் பிரதியாக 'னகாரவீற்றுச் சாரியையெல்லாவற்றினும்' என்றிருப்பின் நலம்.

பொருட்புணர்ச்சியில் ஆன் ஈறுதிரிதல்

**125. ஆனின் னகரமும் அதனோர் அற்றே**
**நாள்முன் வரூஉம் வன்முதல் தொழிற்கே. (22)**

**ஆ.மொ. இல.**

'n' of 'ān' takes the same change, when it comes between a noun denoting the name of a day and the verb which has the hard consonant as its initial.

**க.சு.**

The 'n' of 'ān' is changed identically when it comes between (a noun denoting) lunar constellation and a verb beginning with plosive.

**இளம்.**

இது, ஆன் சாரியை பொருட் புணர்ச்சிக்கண் ஈறு திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) நாள் முன் வரும் வல் முதல் தொழிற்கு ஆனின் னகரமும்—நாட்பெயர் முன்னர் வரும் வல்லெழுத்தை முதலாக வுடைய வினைச் சொற்கண் [1]வரும் ஆன் சாரியையின் னகரமும், அதன் ஓர் அற்று—அந்நான்கன் உருபின்கண் வரும் ஆன் சாரியையோடு ஒரு தன்மைத்தாய் னகாரம் றகாரமாம்.

தொழிற்கு என்பதனைத் [2]தொழிற்கண் ஆனின் னகரம் என மயக்கமாகக் கொள்க.

எ—டு: பரணியாற் கொண்டான் எனவரும்.

[3]உம்மையை இரட்டுற மொழிதலானே எதிரது தழீஇய தாக்கி, அதனான் நாளல்லவற்றுமுன் வரும் வன்முதற் றொழிற் கண் இன்னின் னகரமும் றகரமாய்த் திரிதல் கொள்க. பனியிற் கொண்டான் என வரும்.

தொழிற்கண் இன்னின் னகரம் திரியும் என, பெயர்க்கண் இன்னின்னகரம் திரிதலும் திரியாமையும்உடையஎன்பது ஞாபகத் தாற் கொள்ளப்படும். பறம்பிற்பாரி, வண்டின்கால் எனவரும்.

**நச்.**

இஃது ஆனின் ஈறு பொருட் புணர்ச்சிக்கண் திரியும் என் கின்றது.

---

சு. வே: 1. முன்வரும்
2. தொழிற்கண் என மயக்கமாக
3. உம்மை.

(இ—ள்) நாட்பெயயர் முன்னர் வரும் வல்லெழுத்தை முதலாகவுடைய தொழிற் சொற்கு இடையே வரும், ஆன் சாரியையின் னகரமும் நான்கன் உருபின்கண் வரும் ஆன் சாரியைபோல றகரமாய்த் திரியும்; எ—று.

எ—டு: பரணியாற் கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என வரும். நாண்முற் றோன்றும் தொழில் நிலைக் கிளவிக்கு' (எழு. 21) என்றதனான் ஆன்சாரியை கொடுத்துச் செய்கை செய்க, இனி உம்மையை இறந்தது தழீஇயதாக்கி நாளல்லவற்றுமுன் வரும் வன் முதற்றொழிற்கண் இன்னின் னகரமும் அதனோடு ஒக்கும் எனப் பொருளுரைத்துப் பனியிற் கொண்டான் வளியிற் கொண்டான் என இன்னின் னகரமும் றகரமாதல் கொள்க.

இனி, ஞாபகத்தான் தொழிற்கண் இன்னின் னகரம் திரியும் எனவே பெயர்க்கண் இன்னின் னகரம் திரிதலும் திரியாமையும் கொள்க. குறும்பிற் கொற்றன், பறம்பிற் பாரி எனத் திரிந்து வந்தன; குருகின்கால், எருத்தின் புறம் எனத் திரியாது வந்தன.

**சுப்பிர.**

120 ஆவது சூத்திரத்து இன் சாரியையை முதலில் ஆசிரியர் கூறினமையானும் 121, 122 ஆவது சூத்திரங்கள் இன் சாரியை பற்றியன ஆதலானும், 124 ஆவது சூத்திரம் இன்சாரியையும் பற்றிக் கூறுதலானும் 125 ஆவது சூத்திரம் ஆன் சாரியையும் அத்தன்மையது எனக் கூறுதலானும் 126 ஆவது சூத்திரம் அத்துச் சாரியை பற்றிக் கூறினமையானும் வற்றுச் சாரியை பற்றிக் கூறும் 123 ஆவது சூத்திரத்தை ஏன் 'ஆனின் னகரம், என்ற இச் சூத்திரத்தின் பின்னர் ஆசிரியர் கூறிற்றிலர் என்பது விளங்க வில்லை.

பரணியான்+கொண்டான் என்றது வேற்றுமைப் புணர்ச்சி யாகலின் 'னகார விறுதி வல்லெழுத்தியையின் றகாரமாகும் வேற்றுமைப் பொருட்கே' (எழு. 333) என்ற சூத்திரத்தான் னகரம் றகரமாய்த் திரியும் என்பது பெறப்படினும், இச்சூத் திரத்தை ஆசிரியர் கூறினமையின் சாரியைகளின் மாறுதல்கள் அங்குக் கூறப்பட வில்லையென்பது பெறப்படலாம். அவ்வாறா யின் 'பனி+கொண்டான்,' வளி+கொண்டான்' என்னுமிடங் களில் இன் சாரியை வரும் என்று 'பனியென......' (எழுத் 242) 'வளியென...' (243) என்ற சூத்திரங்களிற் கூறப்பட்டமை

யானும்' ஆங்குள்ள னகரம் றகரமாய்த் திரிதற்கு விதியின்மை யானும் "உம்மையை இரட்டுற மொழிதலானே எதிரது தழீஇய தாக்கி அதனான் நாளல்லவற்று முன் வரும் வன்முதற்றொழிற் கண் இன்னின் னகரமும் றகரமாய்த் திரிதல் கொள்க" என இளம்பூரணர் கூற வேண்டியுளது. 'னகார விறுதி' (எழு.333) என்ற சூத்திரத்தான் அதனைக் கொள்ளின் இவ்வாறு அவர் கூற வேண்டுவதின்று. அவ்வாறாயின் இச்சூத்திரம் எற்றுக்கு என்பது ஆராய்தற்பாலது.

*சிவ.*

'இன்னேவற்றே' (எழு. 120) என இன் சாரியைப் பின்னர் வற்றுச் சாரியை வைத்தமையின் இன்சாரியை பற்றிய 'அவற்றுள் இன்னின் இகரம்' (எழு.121), 'அளபாகும்' (எழு. 122) என்னும் நூற்பாக்களுக்கு அடுத்து 'வஃகான் மெய் கெட'(எழு.123) என்ற நூற்பாவை அமைத்தார் ஆசிரியர். 'னஃகான் றஃகான்' (எழு. 124)என்னும் நூற்பா னகரவீற்றுச் சாரியைகளுக்குப் பொதுவான விதியாதலினாலும் இன் சாரியையும் அவற்றுள் ஒன்றாதலினாலும் தொடர்பு கருதிஅத்து அம் சாரியை விதிகளுக்கு முன்னர்க் கூறினார்.

இளம்பூரணர் "உம்மையை இரட்டுற மொழிதலானே...... திரிதல் கொள்க" என எழுதியதைத் தேவையில்லையென்றும், "னகார இறுதி" (எழு 333) என்ற நூற்பா விதியையே 'பனியிற் கொண்டான், வளியிற் கொண்டான் என வருவனவற்றில் இன்னின் னகரம் றகரமாகத் திரிந்தமைக்கும் கொள்ளலாம் என்றும் சுப்பிரமணிய சாஸ்திரியார் கூறியது பொருத்தம் இல்லை. "னகார இறுதி" என்ற நூற்பாவில் கூறப்பட்ட திரிபு பொருட்புணர்ச்சிக்காகும். (பொன்+கோடு = பொற்கோடு) இங்குக் கூறப்பட்ட திரிபு சாரியை (இன்) வருமொழியுடன் புணரும் செய்கைக்காகும். ஆதலின் இளம்பூரணர் கூறியது பொருந்தும். ஆசிரியர் "ஆனின்னகரமும்" என்ற நூற்பாவை இங்கு அமைத்ததும் பொருத்தமாகும்.

"உம்மையை இரட்டுற மொழிதலானே... பனியிற் கொண் டான் என வரும்" — இளம் — விளக்கம்:

இந்நூற்பாவில் 'னகரமும் என்பதில் உள்ள 'உம்' இரட்டுற மொழிந்ததாம். இந்த உம்மை இறந்தது தழீயதாகும், அதாவது நான்காம் உருபின்கண் வரும் 'ஆன்' சாரியையின் னகரத்தை

(124)த் தழுவியதாம். ஆதலின் இறந்தது தழீஇய எச்சப் பொருளில் வந்தது. இதுவே எதிரது தழீஇயதாகவும் கொள்ளு தற்கமைந்தது. அதாவது, "பனியிற்கொண்டான்" என நாட் பெயரல்லாத பிற பெயரிலும் வல்லின முதல் மொழி வந்தால் இன்சாரியையின் னகர ஒற்றும் றகர ஒற்றாகத் திரியும்" என்ற கருத்தைத் தழுவியதாம் என்பது. எனவே னகரமும் என்பதன் உம்மை இறந்ததான முன் நூற்பாவைத் தழுவியும், 'பனியிற் கொண்டான்' என்பது போலும் இடத்தில் இன் சாரியையின் னகரம் திரிதலைத் தழுவியும் வருதலின் இரட்டுற மொழியப் பட்டதாயிற்று.

"தொழிற்கண் இன்னின்...... ஞாபகத்தாற் கொள்ளப்படும்" இளம். விளக்கம்:

"ஞாபகம் கூறலாவது இரட்டுற மொழிந்து இரண்டு சொற்கும் பொருள் கோடல்" என ஞாபகத்துக்கு விளக்கம் எழுதினார் இளம்பூரணர் (தொல். பொருள்.665) அதாவது, நூலாசிரியர் இருவேறு பொருள்படும்படியான சொற்களை அமைத்துச் சென்றால் ஒரு பொருள் கொண்டு பின்னர்க் குறிப் பிடப்படாத வேறு கருத்தையும் ஆங்கே அமைத்துக் கொள்வ தாம். இங்ஙனம் கொள்ளாக்கால் இரட்டுற மொழிதலுக்கும் ஞாபகங் கூறலுக்கும் வேறுபாடில்லாமல் போய்விடும்.

இந்நூற்பாவில் னகரமும் என்பதின் உம்மை இறந்தது தழுவலும் எதிரது போற்றலுமாகிய இரு பொருளில் அமைந் தது. இவ்விரு பொருளையும் இளம்பூரணர் கொண்டு உதாரண மும் காட்டினர். இவற்றுடன் குறிப்பிடப்படாத வேறு கருத்தைக் கொள்ள வைத்தலே ஞாபகம் கூறலாம். ஆசிரியரால் குறிப்பிடப்படாத வேறு கருத்து 'பெயர்க்கண் இன்னின் னகரம் திரிதலும் திரியாமையும் உடைய' என்பது. பரம்பிற்பாரி என்பதில் திரிதலும் வண்டின்கால் என்பதில் திரியாமையும் காண்க.

### அத்துமுதல் கெடுதல்

**126. அத்தின் அகரம் அகரமுனை யில்லை. (23)**

**ஆ. மொ:** இல.

'a' of aththu disappears before the 'a'

**க., சு:**

a of attu disappears after a

**பி. இ. நா.**

நல். 252.

**அத்தின் அகரம் அகரமுனை இல்லை.**

**இ. வி. 60.**

**அத்தின் அகரம் அகரமுனை இல்லை.**

முத்து. 178.

**அத்துறின் அகரம் ஈறுஅழியும் என்ப.**

**இளம்.**

இது அத்து முதல் திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) அத்தின் அகரம் அகர முனை இல்லை—அத்துச் சாரியையின் அகரம் அகரவீற்றுச் சொல் முன்னர் இல்லையாகும்.

எ—டு: மகத்துக்கை எனவரும்.

**நச்.**

இஃது அத்து முதல் திரியுமாறு கூறுகின்றது.

(இ—ள்.) அத்துச் சாரியையின் அகரம், அகரஈற்றுச் சொல் முன்னர் இல்லையாம்; எ—று.

'அத்தவண் வரினும் வரைநிலை யின்றே' (எழு. 219) என்பதனான் மகப்பெயர் அத்துப் பெற்று நின்றது, மகத்துக் கை என அகரம் கெட்டு நின்றது. விளவத்துக்கண் என்புழிக் கெடாது நிற்றல் 'அத்தே வற்றே' (எழு. 133) என்பதனுள் 'தெற்றென்றற்றே' என்பதனாற் கூறுப.

**வேங்கட.**

உயிர் முதல் மொழி வருமிடத்து, புணர்ச்சியில் நிலைமொழியீற்றுக் குற்றுயிர் கெடுதலே யாண்டும் காண்டலின், ஈண்டும் மக என்னும் நிலைமொழியின் ஈற்றகரமே கெட்டது என்று கொள்ளுதல் அமைதி. ஒழிக+இனி=ஒழிகினி, உற்ற+உழி=உற்றுழி, செய்க+என்றான்=செய்கென்றான், நாடாக+ஒன்றோ=நாடாகொன்றோ என்னும் இடங்களில் எல்லாம் நிலைமொழியீற்றுக் குற்றுயிரே கெட்டுள்ளது காண்க. மகத்து என்னுமிடத்து நிலைமொழியின் ஈற்றிலும் வருமொழி

யின் முதலிலும் அகரமே நிற்றலான், ஆண்டுக் கெட்ட அகரம் இஃது எனத் தெளிதல் இயலாதாயினும், இ, உ, எ, ஒ, என்னும் நான்கு உயிர்களும் வந்தவிடத்து நிலைமொழியீற்று அகரமே கெட்டிருத்தலின், மகத்து என்னுமிடத்தும் நிலைமொழியீற்று அகரமே கெட்டது என்று துணிதல் கூடும்.

ஆயின் ஆசிரியர் வருமொழியின் முதல் அகரம் கெடும் என்று விதி கூறியதற்குக் காரணம் என்னையெனின், நிலைமொழியின் ஈற்றகரம் கெட, வருமொழியின் அகரம் நிலைமொழியின் ஈற்றொடு சேர்ந்தது என்றலினும் வருமொழியின் அகரம் கெட்டது என்றல் எளிதாகலானும், இலக்கண நூலார் அவ்வாறு கூறும் இயல்புடையர் ஆகலானும் இவரும் அங்கனம் கூறினார் என்றுணர்க.

**சிவ.**

ஒழிகினி, உற்றுழி, செய்கென, நாடாகொன்றோ என்னும் இடங்களில் நிலைமொழியீற்று அகரம் கெட்டது போலவே மகத்துக்கை என்பதிலும் நிலைமொழியீற்று அகரம் கெட்டதாகக் கொள்ளலாம் ஆயினும், அந்நிலை மொழிகள் யாவும் வினைச் சொற்கள் ஆதலினாலும் மக என்பது பெயர்ச் சொல் ஆதலினாலும், இக்குச் சாரியையின் இகரம் நிலைமொழியீற்று இகர முன்னர்க் கெடுதலேயன்றி நிலைமொழியீற்று ஐகார முன்னரும் (சித்திரைக்குக் கொண்டான்) கெடும் எனப் பின்னர்க் கூறுதலினாலும், நிலைமொழியீற்றுடன் சாரியைப் புணர்ச்சி கூறப்படுதலினாலும் அவ்வாறு கொள்ளலாகாது.

**பி. கு.**

இந்நூற்பா நன்னூலிலும் இலக்கண விளக்க நூலிலும் மேற்கோள் நூற்பாவாக ஆளப்பட்டுள்ளது. (நன். 252 இல. வி. 60)

## இக்கு முன் கெடுதல்

**127. இக்கின் இகரம் இகரமுனை யற்றே. (24)**

**ஆ.மொ இல.**

'i' of 'ikku' before 'i' becomes so.

**க. சு:**

i of ikku (is treated) in the same manner after i.

**பி.இ.நூ.**

முத்து. 179.

**இக்குறின் இகர இறுதியும் அற்றே.**

**இளம்.**

இது, இக்குச் சாரியை முதல் திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) இக்கின் இகரம் இகர முனை அற்று—இக்குச் சாரியையினது இகரம் இகர ஈற்றுச் சொல் முன்னர் மேற்கூறிய வாறு போலக் கெடும்.

எ—டு: ஆடிக்குக் கொண்டான் எனவரும்.

**நச்.**

இஃது இக்கு முதல் திரியுமாறு கூறுகின்றது.

(இ—ள்.) இக்குச் சாரியையினது இகரம் இகர ஈற்றுச் சொல் முன்னர் முற்கூறிய அத்துப் போலக் கெடும்; எ—று.

''திங்கள் முன்வரின்'' (எழு. 248) என்பதனாற் பெற்ற இக்கு, ஆடிக்குக் கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என இகரங் கெட்டு நின்றது. இஃது இடப் பொருட்டு.

**128. ஐயின் முன்னரும் அவ்வியல் நிலையும் (25)**

**ஆ. மொ. இல.**

Even before 'ai' it is so,

**க.சு.**

Even after–ai (the i of ikku) is treated so.

**பி. இ. நூ.**

முத்து. 180.

**ஐகான் முன்னரும் அவ்வியல் நிலையும்.**

**இளம்.**

இதுவும் அது.

(இ—ள்.) ஐயின் முன்னரும் அ இயல் நிலையும்—(இக்கின் இகரம்) இகர வீற்றுச் சொல்முன் அன்றி ஐகார வீற்றுச் சொல் முன்னரும் மேற்கூறப்பட்ட கெடுதல் இயல்பிலே நிற்கும்.

எ—டு: சித்திரைக்குக் கொண்டான் என வரும்.

நச்.

இதுவும் அது.

(இ—ள்.) இக்கின் இகரம் இகர வீற்றுச் சொல் முன்னரன்றி ஐகார வீற்றுச் சொல் முன்னரும் மேற்கூறிய கெடுதல் இயல்பிலே நிற்கும்; எ—று.

'திங்களும் நாளும் முந்து கிளந்தன்ன' (எழு. 286) என்பதனாற் சித்திரைக்குக் கொண்டான் என்புழிப் பெற்ற இக்கு ஐகாரத்தின் முன்னர் இகரம் கெட்டவாறு காண்க.

பி. கு:

நன்னூலார் இக்கின் இகரம் எங்கும் நில்லாமையால் ஆடிக்கு, சித்திரைக்கு என்பவற்றிலுள்ள 'கு' என்பதைச் சாரியையாகக் கொண்டார்.

ஆடிக்குக் கொண்டான் என்றால் ஆடிமாதத்தில் கொண்டான் எனப் பொருள்படுதலின் 'கு' என்பது சாரியை எனப்படும்.

ஆடிக்கு என்பதில் 'கு' நான்கன் உருபாகக் கொண்டால் ஏழன் உருபின் வந்த மயக்கம் என்க. 'இந்த உடன்படிக்கை ஆடிக்குக் காலாவதியாகிறது' என்னும் உலகவழக்கும் காண்க.

*அக்கு அகரம் நிற்க ஏனைய கெடுமாறு

**129.** எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
அக்கின் இறுதிமெய் மிசையொடுங் கெடுமே
குற்றிய லுகரம் முற்றத் தோன்றாது. (26)

ஆ. மொ. இல.

Before any noun when hard consonant comes, the final consonant of 'akku' (which is inserted between them) disappears with its preceding consonant. The short 'u, disappears completely.

க.சு.

The final consonant of 'akku' disappears when (akku) is inserted between any noun and (a word beginning) with plosive, (and) the over-short-u (of akku) disappears completely.

---

*பிறஇலக்கண நூல்கள் அக்குச்சாரியை கொள்ளாமல் அகரச் சாரியை கொண்டன.

**பி. இ. நூ.**

**மூத்து.**

அக்கு ஈறுகெடும் வலியடையுங் காலே.

**இளம்.**

இது, அக்கு ஈறு திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) எ பெயர் முன்னரும்—எவ்வகைப்பட்ட பெயர் முன்னும், வல் எழுத்து வருவழி—[1]வல்லெழுத்து வருமிடத்து, அக்கின் இறுதிக் குற்றியலுகரம் முற்றத் தோன்றாது—அக்கின் இறுதிக் குற்றியலுகரம் முடியத் தோன்றாது, மெய் மிசையொடும் கெடும்—அதனாற் பற்றப்பட்ட வல்லெழுத்தாகிய மெய் தனக்கு மேல் நின்ற மெய்யோடும் கெடும்.

எ—டு: குன்றக் கூகை, மன்றப் பெண்ணை, ஈமக்குடம் அரசக்கன்னி, தமிழக்கூத்து எனவரும்,

'முற்ற' என்றதனான் வன்கணமன்றி மற்றக் கணங்கட்கும் கொள்க. [2]தமிழநூல், தமிழயாப்பு, தமிழவரையர் எனவரும்.

**நச்.**

இஃது அக்குமுதல் ஒழிய ஏனைய கெடுமாறு கூறுகின்றது.

(இ—ள்.) எவ்வகைப்பட்ட பெயர்ச்சொல் முன்னரும், வல்லெழுத்து வருமொழியாய் வருமிடத்து, இடை நின்ற அக்குச் சாரியையின் இறுதி நின்ற குற்றியலுகரம் முடியத் தோன்றாது, அக்குற்றுகரம் ஏறிநின்ற வல்லொற்றுத் தனக்குமேல் நின்ற வல்லொற்றோடுங் கெடும்; எ—று.

'ஒற்று நிலை திரியாதக்கொடு வரூஉம்' (எழு. 418) என்றதனான் அக்குப் பெற்ற குன்றக் கூகை, மன்றப் பெண்ணை என்பனவும், 'வேற்றுமையாயின் ஏனை யிரண்டும்' (எழு. 329) என்பதனான் அக்குப் பெற்ற ஈமக்குடம், கம்மக்குடம் என்பனவும், 'தமிழென் கிளவியும்' (எழு. 385) என்பதனான் அக்குப் பெற்ற தமிழக்கூத்து என்பதுவும் அக்கு ஈறு கெட்டவாறு காண்க. இங்ஙனம் வருதலின் 'எப்பெயர்' என்றார். 'முற்ற' என்பதனான் வன்கணமன்றி ஏனையவற்றிற்கும் இவ்விதி கொள்க. தமிழநூல், தமிழயாழ், தமிழவரையர் எனவரும்.

சு. வே: 1. வல்லெழுத்துத்தாம்

2. இதன்முன்னர்த் தமிழக்கூத்து என்பது ஞானியார் மடத்துச் சுவடியிற் காணப்படுவது தேவையில்லாதது.

இன்னும் இதனானே தமக்கேற்ற இயைபு வல்லெழுத்துக் கொடுத்து முடித்துக் கொள்க. அன்றிக் கேடோதிய ககரவொற்று நிற்குமெனின், சகரந் தகரம் பகரம் வந்தவற்றிற்குக் ககரவொற் றாகாமை யுணர்க.

சிவ.

எந்த ஓரிடத்தும் அக்குச் சாரியை முழுமையாக நிற்பதில்லை. அதன் 'அ' என்ற எழுத்தே பயன்படுவதாயின் 'அ' என்பதையே சாரியை என்று கூறிவிடலாம். (நன்னூலார்' அ என்பதே சாரியை என்றார்) அவ்வாறு கூறாமல் 'இன்னே வற்றே' (எழு. 120) என்ற நூற்பாவில் 'அக்கு' என்பதையே சாரியை யாகக் கூறி 'எப்பெயர் முன்னரும்' என்னும் இந்நூற்பாவினால் அகரம் நிற்க மற்றைய எழுத்துகள் கெடும் என்று கூறுவானேன்?

தொல்காப்பியர்க்கு முந்து நூலார்கள், அக்குச் சாரியையே கூறினார்கள். அவர்கள் காலத்தில் தாழக்குக் கோல் என்பது போன்றே வழங்கியிருக்கும். அக்குச் சாரியையில் யாதொரு மாறுபாடும் இருந்திராது. காலப்போக்கில்—தொல்காப்பியர் காலத்தில் தாழக்கோல் என்ற அளவிலேயே வழங்கியதாகும். அக்கு எந்த இடத்திலும் முழுமையாக அமையச் சொற்றொடர் வழக்கு இல்லாதிருந்திருக்கும். அதனால் ஆசிரியர், தம் முன்னோர் கருத்தாக 'அக்கு' என்னும் சாரியை கூறிப்பின், தம் காலத்துக்கேற்ற நிலையில் தாம் சேர்க்க வேண்டிய கருத்தாக அக்கின் அகரம் நிற்க மற்றைய எழுத்துகள் கெடும் என்றார்.

இவ்வாறு அமைதி கொள்ளாக்கால் எங்கும் பயன்படாத 'அக்கு' என்னும் சாரியையினைக் கூறியதால் பயன் என்னை என்பதற்கு விடையில்லாது போதலுடன், வேண்டாததைக் கூறியதாகவும், வேண்டிய அகரச் சாரியை கூறாமையின் குன்றக் கூறியதாகவும் ஆசிரியர்பால் குற்றம் தங்கும். எனவே வழி நூலாசிரியரான தொல்காப்பியர் தம்நூல் 'வழிநூல்' என்பதை இதன் மூலம் தெரிவித்தார் என்னலாம்—(செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 54 பரல் 10-1980)

பி. கு.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் 'முற்ற' என்ற மிகையினாற் கொண்டவற்றைப் "பிற்காலத்து வழக்காயின் ஒற்றுமைப் போலியான் வந்தன என்றும், ஆசிரியர் காலத்து

வழக்கே எனின் அதிகாரப் புறனடையால் வந்தன என்றும் கூறல் தகும்'' என்பர் சுப்பிரமணிய சாஸ்திரியார்.

இந்நூற்பாவின்கீழ்த் திரு—அடிகளாசிரியர் எழுதிய குறிப்பு வருமாறு:

பேராசிரியர், ''என்னவகையினும் மனங்கோளின்மை வருமாறு 'இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்' என்னும் சூத்திரத்திற்கும் (பெயரியல். 7) 'எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி' என்பதற்கும் வேறு பொருள் உரைப்பார் உரைக்குமாற்றான் அறியப்படும்'' (தொல். பொருள். 663) என்பர். இதனான் இந்நூற்பாவிற்கு மனங் கொள்ளாவுரை யொன்று உண்டுபோலும்.

ஞாபகங் கூறல் என்னும் உத்திக்கு இனமாக இந்நூற் பாவைக் காட்டுவர் பேராசிரியர் (தொல். பொருள். 665)

### அம் ஈறுதிரியும் இடம்

130. அம்முன் இறுதி கசதக் காலைத்
தன்மெய் திரிந்து ஙஞந ஆகும். (27)

**ஆ. மொ. இல.**

The final 'm' of 'am' changes into ṅ, ñ
and ṉ when k, c and th begin the coming word.

**க. சு.**

When the end of 'am' occurs before k, c, t, its consonant changes becoming ṅ, ñ, n.

**இளம்.**

இது, அம்மின் இறுதி திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்) அம்மின் இறுதி க ச தக் காலை—அம்மின் இறுதி யாகிய மகரவொற்று க ச தக்கள் வருமொழியாக வந்த காலத்து, தன்மெய் திரிந்து ங ஞ ந ஆகும்—தன் வடிவு திரிந்து ங ஞ நக்களாம்.

எ—டு: புளியங்கோடு, புளியஞ்செதிள், புளியந்தோல் என வரும்.

தன்மெய் என்றதனால், அம்மின் இறுதி மகரமேயன்றி, தம் நும் உம் என்பனவற்றின் இறுதி மகரமும் திரியும் என்பது கொள்க.

எல்லார் தங்கையும், எல்லார் நங்கையும், எல்லீர்நுங்கையும், 'வானவரி வில்லுந் திங்களும்' என வரும்.

**நச்.**

இஃது அம் ஈறு திரியுமாறு கூறுகின்றது.

இ—ள்) அம்முச் சாரியையின் இறுதியாகிய மகர வொற்று, க ச தக்கள் வருமொழியாய் வருங்காலத்து, தன் வடிவு திரிந்து ங ஞ நக் களாம்; எ—று.

எ—டு: புளியங்கோடு, செதிள், தோல் எனவரும்.

இது 'புளிமரக் கிளவிக்கு' (எழு.244) என்பதனான் அம்முப் பெற்றது. க ச தக்காலை திரியுமெனவே பகரத்தின்கண் திரி பின்றாயிற்று. மெய்திரிந் தென்னாது 'தன் மெய் என்றதனான் அம்மின் மகரமே யன்றித் தம் நம் நும் உம் என்னும் சாரியை மகரமும் திரிதல் கொள்க. எல்லார் தங்கையும், எல்லார் நங்கையும், எல்லீர்நுங்கையும், 'வானவரி வில்லுந் திங்களும்' என வரும். துறைகேழ் ஊரன், வளங்கேழ் ஊரன் எனக் கெழு என்னும் சாரியையது உகரக்கேடும் எகர நீட்சியும் செய்யுள் முடிபென்று கொள்க.

**சிவ.**

"தன்மெய் என்றதனால் அம்மின் இறுதி மகரமே யன்றித் தம், நம், நும், உம் என்பவற்றின் இறுதி மகரமும் திரியும் என்பது கொள்க" என உரைகாரர்கள் கூறியதை ஏலாது, "மெல்லெழுத்து மிகுதல் ஆவயினான (எழு.321) எனக் கூறப் பட்டாமையானும், அம்மெல்லெழுத்து மிகுதி மகரக்கேடின்றி முடியாமையானும், ஆங்கு மகரமே மெல்லெழுத்தாகத் திரியா மையானும் உரைகாரர்கள் கூற்று ஆராய்தற்பாலது" என்பர் சுப்பிரமணிய சாஸ்திரியார்.

'மெல்லெழுத்து மிகுதல் ஆவயினான்' என்ற இடத்தில் தாம் நாம் நீயிர் என்னும் பெயர்களின் திரிபாகிய தம், நம், நும், உம் என்பவற்றிற்கு மெல்லெழுத்து மிகுதல் கூறப்பட்டது. ஈண்டு திரிபெயர்களல்லாத தம், நம், நும், உம் என்னும்

---

சு. வே: 1. தன் என்றதனான்

சாரியைகளின் திரிபு கூறப்படுதலினால் உரைகாரர்கள் கூற்றுப் பொருந்துவதே என்க.

தம், உம் சாரியைகள் படர்க்கைக்கும், நம் சாரியை தன்மைக்கும், நும் சாரியை முன்னிலைக்கும் உரியன.

தாம், நாம், முதலிய பெயர்கள் தம் நம் முதலியவாகத் திரிந்து வந்தனவே சாரியைகளாகவும் ஆயின என்பர் சிவஞான முனிவர் (நன்னூல் 247. விருத்தியுரை)

'வானவரி வில்லும் திங்களும்' என்பதில் உள்ள உம்மைகள் சாரியையல்ல. எண்ணும்மைகளாம். சாரியைக்குப் பொருள் இராது. ஈண்டு உம்மை எண்ணுப் பொருளது. ஆதலின் உம் எண்ணுப் பொருளில் வந்த இடைச்சொல்.

## அம் ஈறுகெடும் இடம்

**131.** மென்மையும் இடைமையும் வருஉங் காலை
இன்மை வேண்டும் என்மனார் புலவர். (28)

**ஆ மொ. இல.**

It disappears, so say the poets, when soft and medial ones come (as initials of coming words).

**சு. சு:**
The scholars say that it (i. e. m) must disppear when followed by a nasal or a semi-vowel.

**இளம்.**

இதுவும் அது.

(இ—ள்.) மென்மையும், [1]இடைமையும் வருஉம் காலை— அம்மின் இறுதி மென்மையும் இடைமையும் வருமொழியாய் வருங்காலத்து, இன்மை வேண்டும் என்மனார் புலவர்—இன்றி [2]முடிதலை வேண்டும் என்று சொல்லுவர் புலவர்.

எ—டு; புளிய ஞெரி, நுனி, முரி, யாழ், வட்டு என வரும்.

சு. வே: 1. இடையும்
2. முடித்தலை

உரையிற் கோடல் என்பதனால், புளியவிலை எனவும் உயிர் வருவழிக் கேடும் கொள்க.*

நச்.

இஃது அம்மீறு இயல்புக்கணத்து முன்னர்க் கெடும் என்கின்றது.

(இ—ள்.) மென்கணமும் இடைக்கணமும் வருமொழியாய் வருங்காலத்து, அம்முச்சாரியை இறுதி மகரம் இன்றி முடிதலை வேண்டும் என்று கூறுவர் புலவர்; எ—று.

எ—டு: புளிய ஞெரி நுனி முரி யாழ் வட்டு என வரும். உரையிற் கோடல் என்பதனால் புளிய விலை என உயிர் வருவழி ஈறு கெடுதலும் புளியிலை என அம்மு முழுவதுங் கெடுதலும் கொள்க. புளிய விலையென்றது ஒட்டுதற் கொழுகிய வழக்கு (எழு. 132) அன்று. மென்கணமும் இடைக்கணமும் உயிர்க்கணமுந் தம்முள் ஒக்குமேனும் அம்மு முழுவதும் கெட்டு வருதலின் உயிரை எடுத்தோதாராயினார். புளியங்காய் என்பது மரு முடிவு.

பி. கு.

மென்மையும் இடைமையும் வரூஉங் காலை என மென்மையிடைமைகளை விதந்து கூறினமையால் உரைகாரர் கூறியமை போலப் புளியவிலை புளியிலை என உயிர்வரு வழி மகரக் கேடும், முழுவதும் கேடும் தொல்காப்பியர்க்கு உடன்பாடன்று என்பதும், புளியமிலை என்பது வழக்கிலுள்ளது ஆதலின் உயிர் வருவழி மகரம் கெட வேண்டுவதின்று என்பதும், புளிய விலை என்பதில் புளிய மிலை என்பதின் மகரமே வகரமாகத் திரிந்து வந்தது என்பதும் வேங்கடராகலு ரெட்டியார் கருத்து. "உரையிற் கோடல் என்பதனால் புளிய விலை எனவும் உயிர் வழிக்கேடும் கொள்க" என இளம்பூரணர் கூறியிருப்பதில் உரையிற் கோடல் என்பதற்குப் பதில் 'ஒன்றென முடித்தல்' என்றிருப்பின் நன்று.

* இதன் பின்னர் 'புளியிலை எனமுழுவதூஉங்கேடு கூறலுங் கொள்க' என்ற தொடர் ஞானியார் மடத்துச் சுவடியில் காணப் படுகிறது.—திரு. அடிகளாசிரியர்.

## இன்சாரியை முழுதும்கெடும் இடம்

**132. இன்என வருஉம் வேற்றுமை யுருபிற்கு
இன்என் சாரியை இன்மை வேண்டும். (29)**

**ஆ. மொ. இல.**

The case sign 'in' needs no increment 'in'

**க. சு**

The empty morph 'i<u>n</u>' should disappear when it occurs before the case-marker 'i<u>n</u>'

**பி.இ.நூ.**

முத்து. 182.

**இன் இன்று ஐந்தாம் வேற்றுமை யியலும்**

**இளம்.**

இது, இன் சாரியை முழுவதூஉம் கெடும் இடம் உணர்த்து தல் நுதலிற்று.

(இ—ள்.) இன் என வரும் வேற்றுமை உருபிற்கு—இன் என்று சொல்ல வருகின்ற வேற்றுமை யுருபிற்கு, இன் என் சாரியை இன்மை வேண்டும்—இன் என்னும் சாரியை தான் இன்றி முடிதல் வேண்டும்.

எ—டு: விளவின், பலாவின் என வரும்.

'அவற்றுள் இன்னின் இகரம்' (எழு. 120) என்றதன் பின் வையாததனால் சிறுபான்மை இன்சாரியை கெடாது நிற்றல் கொள்க. பாம்பினிற் கடிது தேள் என வரும்.

**நச்.**

இஃது, இன் சாரியை ஐந்தாம் உருபின்கண் முழுவதும் கெடும் என்கின்றது.

(இ—ள்.) இன் என்று சொல்ல வருகின்ற வேற்றுமை உருபிற்கு, இன்னென்னுஞ் சாரியை தான் இன்றி முடிதலை விரும்பும் ஆசிரியன்; எ—று.

எ—டு:— விளவின், பலாவின், கடுவின், தழூஉவின், சேவின், வெளவின் என வரும். இவற்றிற்கு வீழ் பழம் எனவும் நீங்கினான் எனவும் கொடுத்து முடிவுணர்க. ஊரினீங்கினான்

என ஏனையவற்றோடும் ஒட்டுக. இனி 'அவற்றுள் இன்னின் இகரம்' (எழு. 120) என்றதன் பின் இதனை வையாத முறையன்றிக் கூற்றினான் இன்சாரியை கெடாது வழக்கின் கண்ணும் செய்யுட் கண்ணும் நிற்றல் கொள்க. பாம்பினிற் கடிது தேள், 'கற்பினின் வழாஅ நற்பல வுதவி அகடு சேர்பு பொருந்தியளவினின் திரியாது (மலை படு—33) என வரும். இனி இன்மையும் வேண்டும் என்னும் உம்மை தொக்கு நின்றதாக்கி அதனான் இவை கோடலும் ஒன்று.

**வேங்கட.**

'இன்னிடை வரூஉம் மொழியுமா ருளவே' (எழு. 186) என்பதனால் இன்சாரியை பெறுகின்ற உரும் என்னும் மொழி இன் என்னும் ஐந்தனுருபுடன் புணரும்போது அச்சாரியை பெறுதலாகாது. என் எனின், இரண்டு முறை இன் இன் என்று வரின் ஓசையின்பம் இலதாகும். உருமை, உரும்கு, உருமது, உரும்கண் என மற்றைய வேற்றுமைகள் சாரியை பெறாமல் வருதல் ஆகா; ஐந்தனுருபு மட்டும் உருமின் என்று சாரியை பெறாது வருதலே அமைதி; உருமினின் என்று சாரியைபெற்று வருதல் ஆகாது.

இச்சூத்திரத்தை, இன்சாரியையினைக் குறித்துக் கூறியவழிக் கூறாது ஈண்டுக் கூறியது என்னையெனின் 'அவற்றுள் இன்னின் இகரம்' (எழு. 120) என்னும் சூத்திர முதல் மேலைச் சூத்திர மளவும் சாரியை மொழிகளுள் ஒரு கூறு கெடுதலும், ஒரு கூறு திரிதலுமே கூறி, முன்னர், சாரியை மொழி முழுவதுமே வர வேண்டாத இடம் இஃது என்று கூறுகின்றாராகலின், சாரியை வரத்தகாத இடம் ஒன்றனைக் கூறும் இச்சூத்திரத்தை ஈண்டு வைத்தார் என்க.

உரையாசிரியர்கள் இச்சூத்திரத்தை 'இவற்றுள் இன்னின் இகரம்' என்றதன் பின் வையாததனால் இன் உருபு வருமிடத்து இன் சாரியை நிற்றலும் கொள்க' என்று எழுதி, பாம்பினிற் கடிது தேள் என உதாரணமும் காட்டினர். ஆசிரியர்க்கு அது கருத்தாயின் 'இன்மையும் வேண்டும்' என்று எதிர்மறை யும்மை கொடுத்துக் கூறியிருப்பர். அங்கனம் கூறாமையானும் இச் சூத்திரத்தை ஈண்டு வைத்ததற்குக் காரணம் மேற் கூறப் பட்டதே யாகும் ஆதலானும் அவர்கள் கூறுவது அமைதி யின்றாகும். இதனானே, 'கற்பினின் வழாஅ நற்பல வுதவி'

என்னும் மேற்கோள் ஆசிரியர் கருத்திற்கு அமையாது போதரும். இனி, 'கற்பின் வழாஅ' என்றிருப்பினும் ஓசை கெடாதாகலின், இன் சாரியை இன்றியிருத்தலே ஈண்டுச் சிறப்பு,

சிவ.

'பாம்பினிற் கடிது தேள்' என்பது பிற்பட்ட வழக்குப் போலும்' என்பர்சுப்பிரமணிய சாஸ்திரியார்.'கற்பினான் வழாஅ' என்பது 'கற்பின் வழாஅ' என்றிருத்தலே சிறப்பு என்னும் வேங்கடராசுலு ரெட்டியார் 'பாம்பினிற் கடிது தேள்' என்ற விடத்தில் இன் பற்றிக் கூறாது சென்றார். அன்றியும் 'கற்பினின் வழாஅ' என்றிருப்பது தவறு என்றும் கூறவில்லை.

இனி 'பெயருந் தொழிலும் (எழு. 133) என்ற அடுத்த சூத்திரத்தில் ஒரு உருபு வரும் போது சாரியை வாராமலும் இருக்கும் எனக் கூறப்படுதலின் அதனை யொட்டி இச்சூத்திரமும் கூறப்பட்டது என்னலாம் என்பர் சுப்பிரமணிய சாஸ்திரியார். இதுவும் அமைவுடையதே.

"இது இன்சாரியை முழுவதூஉம் கெடும் இடம் உணர்த்து தல் நுதலிற்று''—இளம்பூரணர்—விளக்கம்:

'இன்சாரியை இன்மை வேண்டும்' என ஆசிரியர் கூறியிருத் தலின் இளம்பூரணர், இது இன்சாரியை வாராத விடம் உணர்த் துதல் நுதலிற்று' என்றுதான் எழுதியிருக்க வேண்டும்.'முழுவதூ உம் கெடும் இடம்' என்றெழுதியது விளக்கத்துக்குரியதாம்.

'இன்' என்னும் ஐந்தாம் வேற்றுமையுருபு பெயருடன் சேரும்போது சாரியை இன் வேண்டுவதில்லை. உருபு புணரி யலில்,

அ ஆ உ ஊ ஏ ஔ என்னும்
அப்பா லாறன் நிலைமொழி முன்னர்
வேற்றுமை யுருபிற் கின்னே சாரியை (173) எனவும்,
ஞந வென் புள்ளிக் கின்னே சாரியை (182) எனவும்,

இன்னிடை வரூஉம் மொழியுமா ருளவே (186) எனவும் பொதுவில் வேற்றுமையுருபுகள் பெயர்களுடன் புணரும்போது சாரியை இன்வரும் என்று விதித்தார் ஆசிரியர். அதனால் ஐந்தாம் வேற்றுமையுருபு புணரும் போதும் சாரியை 'இன்' வரும் என்பது போதரும். எனவே விள + இன் எனப் புணரும்போது இடையில் 'இன், என்னும் சாரியை முதற்

சூத்திர (174) விதிப்படி வரும். (விள+இன்+இன்) அவ்விடத்தில் இன்சாரியை வேண்டுவதில்லையென இச் (132) சூத்திரத்தால் விலக்குதலின் அதைக் கெடுக்க வேண்டும் (விள+இன்) அதனால்தான் "முழுவதூஉம் கெடும் இடம் உணர்த்தினார்" என இளம்பூரணர் எழுதினார்.

புணர் மொழிகளிற் சாரியை வருதல்

133. பெயருந் தொழிலும் பிரிந்துஒருங் கிசைப்ப
வேற்றுமை யுருபு நிலைபெறு வழியும்
தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்
ஒட்டுதற்கு ஒழுகிய வழக்கொடு சிவணிச்
சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்காது
இடைநின்று இயலும் சாரியை இயற்கை
உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும். (30)

ஆ. மொ. இல.

When the noun and the verb appears in the
company of one another or vice-versa
whether the case sign stands or not,
it is the nature of the increment to appear
in the middle in accordence with the rules
of joining. It can be found when the
words are split. As regards 'odu' it
makes no difference whether it appears or not.

க. சு.

When a noun is followed by a verb
it is the nature of the empty morph to be inserted,
according to the rules of santhi, between the base
and the case-marker, or after the base
when the case-marker is dropped,
though when the two words are pronounced separately,
the empty—morph disappears,
Between the base and the marker—oṭu,
it both appears and disappears.

பி இ நூ.

வீர. 27, நேமி. 22, நன். 243, இ.வி. 61, முத்து. 173 ஆகியவற்றைத் தொல். 119இன் கீழ்க் காண்க.

இளம்.

இது, சாரியைகட் கெல்லாம் பொதுவாயதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) பெயரும் தொழிலும் பிரிந்து ஒருங்கு இசைப்ப— பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும் பெயரும் வினையுமாகப் பிரிந்தும் பெயரும் பெயருமாய்க் கூடியும் இசைப்ப, வேற்றுமை உருபு நிலை பெறும் வழியும்—வேற்றுமையுருபு தொகாது நிலைபெற்ற இடத்தினும், தோற்றம் வேண்டாத் தொகுதிக்கண்ணும் — அவை தோற்றுதல் வேண்டாத தொகுதிக் கண்ணும், ஒட்டுதற்கு ஒழுகிய வழக்கொடு சிவணி— [1]தாம் தாம் பொருந்துதற்கேற்ப நடந்த வழக்கோடே பொருந்தி, சொல் சிதர் மருங்கின்—சாரியை பெறும் புணர்மொழிகளைப் [2]பிரித்துக் காணுமிடத்து, வழி வந்து விளங்காது இடை நின்று இயலும்—அவற்றின் [3]பின் வந்து விளங்காது அவற்றிடையே நின்று நடக்கும், சாரியை இயற்கை—[4]சாரியையின் இயல்பு, உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும்—அவைதாம் உண்டாதலும் இல்லையாதலும் ஒடு உருபினிடத்து ஒக்கும்.

எ—டு: விளவினைக் குறைத்தான், விளவினைக் குறைத்தவன் எனவும், நிலாத்துக் கொண்டான், நிலாத்துக் கொண்டவன் எனவும் வரும்.

ஒட்டுதற் கொழுகிய வழக்கன்மையின், நிலாக்கதிர் நிலா முற்றம் என்பன சாரியை பெறாவாயின.

[5]எல்லா நம்மையும் எனச் சாரியை ஈற்றின் கண்ணும் வருதலின், இடைநின்றியறல் பெரும்பான்மையெனக் கொள்க.

பூவினொடு விரிந்த கூந்தல் எனவும் பூவொடு விரிந்தகூந்தல் எனவும் [6]உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒத்தவாறு.

'இயற்கை'யென்றதனால் [7]ஒடுவுருபின்கண் சாரியை பெறுதலும் பெறாமையும் ஒழிய, ஒரோவழிப் பெற்றே வரும் என்பது கொள்க. பலவற்றோடு என வரும்.

சு.வே. 1. தாம் பொருந்துதற்
2. பிரிந்து
3. பின்னே
4. சாரியையின் இயல்புதாம்
சாரியை இயல்பு; அவைதாம் (வ.உ.சி)
5. எல்லார் தம்மையும்
6. உண்மையும்
7. ஒடு உருபு இன்சாரியை.

நச்.

இது முற்கூறிய சாரியைகள் எல்லாம் புணர்மொழியுள்ளே வரும்என்பதூஉம் அம்மொழிதாம் இவையென்பதூஉம் அவை வாராத மொழிகளும் உளவென்பதூஉம் கூறுகின்றது.

(இ—ள்.) பெயர்ச் சொல்லும் தொழிற் சொல்லும் பெயரும் தொழிலுமாய்ப் பிரிந்திசைப்பப் பெயரும் பெயருமாய்க் கூடியிசைப்ப, வேற்றுமை செய்யும் உருபுகள் தொகாது நிலைபெற்ற இடத்திலும், அவ்வேற்றுமை யுருபுகள் தோற்றுதல் வேண்டாது தொக்க இடத்தும், தாம் பொருந்துதற்கேற்ப நடந்த வழக்கோடே பொருந்தி, சாரியை பெறும் புணர்மொழிகளைப் பிரித்துக் காணுமிடத்து, அச்சாரியையினது தன்மை அச்சொற்களின் பின்னே வந்து விளங்காது நடுவே நின்று நடக்கும், அச்சாரியை உண்டாதலும் இல்லையாதலும் ஒடுவுருபினிடத்து ஒத்துவரும்; எ—று.

ஒடுவிற்கொக்கும் எனவே ஏனைய ஒவ்வாவாயின.

எ—டு, விளவினைக் குறைத்தான், கூழிற்குக் குற்றேவல் செய்யும்—இவை பிரிந்திசைத்து உருபு நிலை பெற்றன. 'அன்னென் சாரியை' (எழு. 194) என்பதனைக் 'குற்றியலுகரத் திறுதி' (எழு. 195) என்பதனைச் சேரவைத்ததனால் இன்சாரியை வருதல் கொள்க. இவ்விரண்டுருபும் சாரியை நிற்பப் பெரும் பான்மையுந் தொகா வென்றுணர்க. விளவினைக் குறைத்தவன், கடிசூத்திரத்திற்குப் பொன்—இவை ஒருங்கிசைப்ப உருபு நிலை பெற்றன. வானத்தின் வழுக்கி, வானத்து வழுக்கி எனச் சாரியை பெற்றுப் பிரிந்திசைத்து ஐந்தா முருபு நிலை பெற்றும் நிலைபெறாதும் வந்தன. வானத்தின் வழுக்கல், வானத்து வழுக்கல்—இவை 'மெல்லெழுத் துறழும்' (எழு. 312) என்னுஞ் சூத்திரத்து வழக்கத்தான என்பதனான் அத்துக் கொடுத்து மகரங் கெடுக்க ஒருங்கிசைத்தன. விளவினது கோடு, விளவின் கோடு என ஒருங்கிசைத்துச் சாரியை பெற்றவழி ஆறனுருபு தொகாதுந் தொக்கும் நின்றது. இதற்குப் பிரிந்திசைத்தல் இன்று. மரத்துக்கட் கட்டினான், மரத்துக் கட்டினான் எனப் பிரிந்திசைத்த வழியும் மரத்துக்கட் குரங்கு மரத்துக் குரங்கு என ஒருங்கிசைத்த வழியும் சாரியை நின்றவழி ஏழனுருபு தொகாதுந் தொக்கும் நின்றது. 'கிளைப் பெயரெல்லாம்' (எழு. 307) என்றதனுட் 'கொள' என்றதனான் ணகாரம் டகாரமாயிற்று. 'நிலாவென் கிளவி யத்தொடு சிவணும் (எழு. 228) என விதித்த அத்து, நிலாக் கதிர், நிலா முற்றம் என்ற வழிப் பெறாதாயிற்று.

அஃது ஒட்டுதற்கொழுகிய வழக்கு அன்மையின். நிலாத்துக் கொண்டான், நிலாத்துக் கொண்டவன் என்பனஉருபு தொக்குழி இருவழியும் பெற்றன. எல்லார்தம்மையும் எனச் சாரியை ஈற்றின் சுண்ணும் வருதலின் இடை நிற்றல் பெரும்பான்மை யென்றதற்கு 'இயலும்' என்றார். பூவினொடு விரிந்த கூந்தல், பூவொடு விரிந்த கூந்தல் என உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒத்தது. இனி இயற்கையென்றதனான் ஒடு உருபின் கண் பெற்றும் பெறாமையும் வருதலன்றிப் பெற்றே வருதலும் கொள்க. பலவற்றொடு எனவரும்.

**வேங்கட.**

'ஒடுவயின் ஒக்கும்' என்றதனால் ஏனைய உருபுகள் வரும் வழி இவ்வுறழ்ச்சி ஒவ்வாதென்பதாம். அவ்விடங்களில் சாரியை ஒழியாது வரல் வேண்டும் என்றபடி.

பிறவுருபுகள் வேண்டும் இன் சாரியையினை ஐந்தனுருபு வேண்டாது வருதலை மேற் சூத்திரத்தாற் கூறி, பிறவுருபுகள் வேண்டுஞ் சாரியை பலவற்றையும் மூன்றனுருபு வேண்டாது வருதலை இச்சூத்திரத்தாற் கூறினார்.

மகரவீற்று மொழிகள், இரண்டு நான்கு முதலிய உருபு களோடு கூடுமிடத்து, 'அத்து' என்னும் சாரியை பெற்று வரும் என்பதும், மூன்றனுருபோடு வருமிடத்து அது வேண்டாதும் வரும் என்பதும்,

> 'ப்ரத்ய யஸ்வரம் ஏல்க்கும்போழ்
> இரட்டிச்ச தகாரமாம்
> த்தாதேசத்தே விகல்பிக்காம்
> ஒடென்னுள்ள விபக்தியில் (சந்தி. சூ. 25

என்னும் கேரள பாணினீயச் சூத்திரத்தாலும் அதன் உரையில்,

> தனம் + எ(ஐ) = தனத்தெ (தனத்தை)
> தனம் + ஆல் = தனத்தால்
> தனம் + ஒடு = தனத்தோடு, தனமோடு
> தனம் + இல் = தனத்தில்

என்று காட்டியிருக்கும் உதாரணத்தாலும் அறியப்படும்.

சாரியை உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒத்தற்கு உரையாசிரியர்கள், பூவினொடு விரிந்த கூந்தல், பூவொடு விரிந்த கூந்தல் என்று உதாரணங் காட்டினர். இதனினும்,

உருமினொடு உருமொடு
வளத்தொடு வளமொடு

என்பன போல்பவை காட்டுதல் சிறப்புடையதாகும். என்னை யெனின், ஏனையுருபுகளை யேற்கும் வழிச் சாரியை பெறாது வருதல் இயையாத சொற்களே ஒடு உருபினை யேற்கும் வழி மட்டும் சாரியை பெறாதும் வருதல் இயைய வேண்டுமாகலின். ஆசிரியர் ஆனொற் றகரமொடு நிலையிட னுடைத்தே' (உயிர் மயங். 30) என்று கூறியிருப்பதுவும், 'செற்றமொடு' 'சீற்றமொடு' (பதிற்று. 16) என்று பழைய செய்யுட்களில் வந்திருப்பதுவும் ஈண்டைக்கு உதாரணமாகும்.

எல்லா நம்மையும் என்று உரையாசிரியரும், எல்லார் தம்மையும் என்று நச்சினார்க்கினியரும் உதாரணம் காட்டி, சாரியை யீற்றின் கண்ணும் வரும் என்றனர். இச்சொற்களின் உம்மை சாரியையன்று; முற்றும்மை இன்னும் அவர்கள், பல வற்றொடு என ஒடு உருபு சாரியை பெற்றே வரும் என்றனர். அஃது ஆசிரியர்க்குக் கருத்தன்று. 'உடைமையும் இன்மையும் ஒக்கும்' என்றாராகலின். ஆகவே பலவொடு என்று வருதலும் அமையும். பலவை (பல வற்றை) பலக்கு (பலவற்றுக்கு) என்று வருதல் அமையாது.

இச்சூத்திரத்தில் 'சொற்சிதர்...நின்றியலு' என்னும் அடை மொழிகளின் பயன் நன்கு விளங்கவில்லை.

**வெள்ளை-**

'சொற்சிதர் மருங்கின்...சாரியை யியற்கை' என்றதனால், புணர்மொழியினிடையே சார்ந்து இயைந்து நிற்கும் இயல் புடையது சாரியை என அதன் பெயர்க் காரணமும் கூறினாரா யிற்று. ஒட்டுதற் கொழுகிய வழக்காவது நிலைமொழியையும் வருமொழியையும் தனித்தனியே இருவேறு மொழிகளாக நிறுத்திப் புணர்த்தற்குரிய சொல்நடை. இவ்வாறன்றி நிலாக் கதிர், நிலா முற்றம் என ஒரு மொழிமேல் நடப்பன ஒட்டுதற் கொழுகிய வழக்காகா ஆதலின் சாரியை பெறாவாயின என்பர் உரையாசிரியர்.

***சிவ.***

'பெயருந்தொழிலும்...தொகுதிக் கண்ணும்' என்ற வரிகளைப் 'பெயருந் தொழிலும் பிரிந்திசைப்ப வேற்றுமையுருபு நிலைபெறு வழியும் தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்' எனவும்,

'பெயருந் தொழிலும் ஒருங்கிசைப்ப வேற்றுமையுருபு நிலை பெறு வழியும் தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்' எனவும் கொண்டு கூட்டினர் உரைகாரர்கள். சேனாவரையரோ 'பெயருந் தொழிலும் பிரிந்திசைப்ப வேற்றுமையுருபு நிலைபெறு வழியும், பெயருந் தொழிலும் ஒருங்கிசைப்பத் தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்' எனக் கொண்டு கூட்டினார். 'எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய' (தொல். சொல். 420) என்னும் நூற்பாவில் அவர்,''நிலங்கடந்தான், குன்றத்திருந்தான் எனப் பெயரும் வினையும் தொக்கன ஒருசொல் நீர்மையில வாகலின் தொகையெனப்படா என்பாருமுளர். எழுத்தோத் தினுள் 'பெயருந்தொழிலும் பிரிந்தொருங்கிசைப்ப—வேற்றுமை யுருபு நிலை பெறுவழியும்—தோற்றம் வேண்டாத்தொகுதிக் கண்ணும்' என்றதனால், வேற்றுமையுருபு தொகப் பெயருந் தொழிலும் ஒருங்கிசைத்தல் ஆசிரியர் நேர்ந்தார் ஆகலின் அவை தொகையெனவே படும் என்பது. கடந்தான் நிலம், இருந்தான் குன்றத்து என்பன ஒருங்கிசையாது பக்கிசைத்தலின் அவை தொகையன்மையறிக'' என எழுதியிருத்தலைக் கொண்டு அதை உணரலாம்.

### அத்து வற்று வருமிடத்து நிகழும் விகாரம்

**134.** அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்
ஒற்றுமெய் கெடுதல் தெற்றென் றற்றே
அவற்றுமுன் வருஉம் வல்லெழுத்து மிகுமே. (31)

**ஆ. மொர:** இல.

It is clearly known that the consonants
which precedes 'aththu' and 'vaṟṟu'
disappear and hard consonants which
come before them are doubled.

---

**க. சு.**

It is obvious that the consonant
which precedes 'attu' and vaṟṟu these two words
will disappear, while that which follow them
will be doubled as plosive.

இளம்.

இது, அத்தும் வற்றும் வருமிடத்து நிலைமொழியினும் வருமொழியினும் வரும் செய்கை கூறுதல் நுதலிற்று.

(இ—ள்.) அத்தே வற்றே அ இரு மொழிமேல் ஒற்று மெய் கெடுதல் தெற்றென்றற்று—அத்தும் வற்றும் ஆகிய அவ்விரு மொழிமேல் நின்ற [1]எழுத்து (ஒற்று)த் தன் வடிவு கெடுதல் தெளியப்பட்டது, அவற்றுமுன் வரும் வல்லெழுத்து மிகும்—அவ் விரு சாரியை முன்னும்வரும் வல்லெழுத்து மிகும்.

எ—டு: கலத்துக் குறை, அவற்றுக் கோடு எனவரும்.

கலன் என னகாரமாக நிறுத்திக் கெடுக்கவே, [2]'ஒன்றின முடித்தல்' என்பதனால், புள்ளியீறல்வழி விகாரவகையான் நின்றனவும் [3]வற்றின்மிசை [4]ஒற்று என்று கெடுக்கப்படும் எனக் கொள்க.

அவற்றுக்கோடு எனவரும். இஃது ஐகார வீறு.

ஈண்டு வல்லெழுத்து மிகும் என்றது, ஈற்று வல்லெழுத் தின்றித் திரிந்து முடியும் னகரமும் ணகரமும் லகரமும் ளகரமும் என இவற்றை நோக்கியென வுணர்க.

அத்து முற்கூறிய [5]முறையன்றிக் கூற்றினான் அத்தின்மிசை ஒற்றுக் கெடாது நிற்கவும் பெறும். விண்ணத்துக் கொட்கும், வெயிலத்துச் சென்றான், இருளத்துக் கொண்டான் எனவரும்.

'மெய்' என்றதனான், அத்தின் அகரம், பிறவுயிரின் முன்னும் கெடுதல் கொள்க. அண்ணாத்தேரி என வரும்.

[6]'ஒற்று' என்றதனால், அத்தின் அகரம் கெடாது நிற்றலும் கொள்க. விளவத்துக்கண் எனவரும்.

சு. வே:
1. ஒற்று
2. ஒன்றென முடித்தல்
3. அவற்றின் மிசை.
4. ஒற்றென்றெல்லாம்
5. முறையன்றிய
6. தெற்றென்றற்று

நச்.

இஃது, அத்து வற்று என்பனவற்றிற்கு நிலைமொழியது ஒற்றுக்கேடும் வருமொழி வன்கணத்துக்கண் ஒற்றுப்பேறுமாகிய செய்கை கூறுகின்றது.

(இ—ள்) அத்தும் வற்றுமாகிய அவ்விரண்டு சாரியைமேல் நின்ற ஒற்று, தன் வடிவு கெடுதல் தெளியப்பட்டது; அவ்விரு சாரியை முன்னும் வரும் வல்லெழுத்து மிக்கு முடியும்; எ—று.

எ—டு: கலத்துக்குறை, அவற்றுக்கோடு என வரும்.

'அத்திடை வரூஉம் கலமென் அளவே' (எழு. 168)

'சுட்டுமுதல் வகரம் ஐயும் மெய்யும்' (எழு. 182) என்பனவற்றான் அத்தும் வற்றும் பெற்றுவரும் மகர வகர ஈறுகட்கு ஈற்று வல்லெழுத்து விதி இன்மையின் அவற்றுமுன் வரூஉம் வல்லெழுத்து மிகும் என்று சாரியை வல்லெழுத்து விதித்தார். வல்லெழுத்து இன்றித் திரிந்து முடிவன ணகாரமும் னகாரமும் லகாரமும் ளகாரமும் ஆம். மகர ஈற்றிற்கு அத்தும், வகர ஈற்றிற்கு வற்றும் வரும் என்பது அச்சூத்திரங்களாற் பெற்றாம். வற்றே யத்தே என்னாத முறையன்றிக் கூற்றினாற் புள்ளியீற்றின் முன்னர் அத்தின்மிசை யொற்றுக் கெடாது நிற்றலுங் கொள்க.

எ—டு: விண்ணத்துக் கொட்கும், வெயிலத்துச் சென்றான், இருளத்துக் கொண்டான் எனவரும்.

மெய்யென்றதனான் அத்தின் அகரம் அகர முன்னரேயன்றிப் பிற உயிர் முன்னரும் கெடும் ஒரோவிடத் தென்று கொள்க. அண்ணாத்தேரி, திட்டாத்துக்குளம் என ஆகாரத்தின் முன்னரும் வரும் அத்தின் அகரம் கெட்டது. இவற்றை, அகர ஈறாக்கியும் முடிப்ப. இனித் 'தெற்றென்றற்றே' என்றதனான் அத்தின் அகரந் தெற்றெனக் கெடாது நிற்கும் இடமும் கொள்க. அதவத்துக்கண், விளவத்துக்கண் எனவரும்.

சுப்பிர.

இச்சூத்திரத்தான் அவை+கோடு என்றதும் அவற்றுக் கோடு என ஆகும் என்று உரைகாரர்கள் கூறினர். *ஈண்டு ஐகாரம்

* ஐகாரம் கெடுதற்கு விதியுண்டு என்பது 184 ஆம் நூற்பாவில் விளக்கப்படும்:

கெடுதற்கு விதியின்று. சூத்திரத்தில் 'ஒற்றுமெய்' என்றற்குப் பிரதியாக 129 ஆவது சூத்திலுள்ளவாறு இறுதிமெய் என இருப்பின் அச்சூத்திரத்தினின்றும் மிசை என்ற சொல்லை அதிகரித்து, இறுதியும் அதன் முன்னருள்ள மெய்யும் எனப் பொருள் கொளல் தகும். அவையற்றுக்கோடு எதுபது, அவை கோடு என்ற சொற்களின் புணர்ச்சியெனவும், அவற்றுக்கோடு என்பது அவ் கோடு என்ற சொற்களின் புணர்ச்சி யெனவும் கொள்ளல் இளம்பூரணருக்கு ஒருவாறு உடன்பாடு என்றது 168 ஆவது சூத்திரத்து அவருரையான் விளங்கும்.

விண்ணத்துக் கொட்கும், வெயிலத்துக் கொண்டான், இருளத்துக் கொண்டான் என்னுமிடங்களில் ஒற்று கெடாததை நோக்கி ஒற்று மெய் கெடும் என்னாது ஒற்று மெய் கெடுதல் தெற்றென்றற்றே என ஆசிரியர் கூறியிருக்கலாம். உரைகாரர்கள் அத்து முற்கூறிய முறையன்றிய கூற்றினான் அத்தின் மிசை யெற்றுக் கெடாது நிற்கவும் பெறும்' என்கின்றனர். பிறவுயிரின் முன்னும் அத்தின் அகரங் கெடுதல் பிற்கால வழக்கு என்னலாம்.

**வேங்கட.**

மெய்யீற்று மொழிகளின் முன்னர் இச்சாரியைகள் வரின், இவை சினை கெடாமலும் திரியாமலும் இருப்ப நிலை மொழியீறே கெடுதலின், இச்சூத்திரத்தை, 'வஃகான் மெய்...ஆகிய பண்பே' (எழு. 122) 'அத்தின் அகரம் அகர முலையில்லை (எழு. 125) என்னுந் சூத்திரங்களையடுத்துக் கூறாமல், ஈண்டுக் கூறினார்.

உரையாசிரியர்கள், அத்துச் சாரியையின் அகரம், அகரத்தின் முன்னர்க் கெடாதிருத்தலையும், அகரத்தின் முன்னர்க் கெடுதலையும் இச்சூத்திரத்தில் அடக்கிக் கூறினர். அவற்றை ஈண்டுக் கூறுதற்கு இடனின்று. இச்சூத்திரம் நிலைமொழியீறு கெடுதலையே விதித்தலின்,

இருளத்து, வெயிலத்து என அத்துச் சாரியை வருமிடத்து மேல் ஒற்றுக் கெடாமைக்கு விதி, அவ்வச் சூந்திரங்களிற் காட்டப்படும், ஆண்டுக்காண்க. அவற்றையும் ஈண்டு அடக்குதல அமையாது.

---

இனி விண்ணத்துக் கொட்கும் என்னுமிடத்து, அத்துச் சாரியையின் மேல் ஒற்றுக் கெடாமை, 'குறியதன் முன்னர்த்

தன்னுரு விரட்டலும்' (160) என்னுஞ் சூத்திரத்தான் அமைவதாகலின், அதனையும் ஈண்டுக காட்டுதல் வேண்டாததுவே.

**சிவ**.

''கலன் என...ஒன்றின முடித்தல் என்பதானல்...கெடுக்கப்படும்''—இளம்:– விளக்கம் ''அத்தே வற்றே'' (134) இந்நூற்பாவின் படி கலன்+கோடு என்பன அத்துச்சாரியை பெற்றுக் 'கலத்துக் கோடு' என முடியும். அவ்+கோடு என்பன 'அவற்றுக் கோடு' என வற்றுப் பெற்று முடியும். 'அவை' என்னும் ஐகார வீற்றுச் சொல் ஐ கெட்டு 'அவ்' என வகரவீற்றுச் சொல்லாக நிற்பின் அது, 'கோடு' என்பதுடன் சேரும்போது எவ்வாறு முடியும் என ஐயம் எழுவது இயல்பு. ஐகாரம் கெட்டு வகரவீறாக நிற்றலின் அதையும் மெய்யீறாகவே கொண்டு 'அவ்' என்ற மெய்யீறு போலவே புணர்க்க வேண்டும். 'அவ்' என்பது புள்ளியீறு. 'அவை' என்பதில் ஐகாரம் கெட்டு 'அவ்' என நிற்பது விகாரப் பட்டதாதலின் அஃது புள்ளியீறு என்பதற்கில்லை. ஆயினும் புள்ளியீற்றுள் அடக்குதற்குப் பொருந்துதலின் அதனுள் அடக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

''ஈண்டு வல்லெழுத்து...னகரமும் என இவற்றை நோக்கியெனவுணர்க''—இளம். —விளக்கம்:—

இத்தொடரை ''ஈண்டு வல்லெழுத்து மிகும் என்றது ...இவற்றை நோக்கிச் சாரியை வல்லெழுத்தை எனவுணர்க'' என்று விரித்துக் கொள்வோம்.

வருமொழி வல்லெழுத்து இரண்டு வகையில் மிகுந்து வருதல் உண்டு. நிலைமொழி யிறுதியை நோக்கி மிகுதல் என்பதொன்று. விள+குறிது என்பன 'விளக்குறிது' என வருமிடத்து நிலைமொழியிறுதி அகரத்தை நோக்கி வருமொழி வல்லெழுத்தானது, மிக்கது. இஃது அல்வழிப்புணர்ச்சி வேற்றுமைப்புணர்ச்சியிலும் இப்படியே இருவிள+கொற்றன் என்பன 'இருவிளக் கெற்றன்' எனவரும் (இருவிள என்பது ஓர் ஊர்). அன்றியும் இயல்பாக இன்றி விதியீறாக நிற்பினும் நின்ற ஈறு நோக்கி மிகுதலும் உண்டு. 'மரக்கிளை' என்பதில் அதைக் காண்க இவ்வாறு ஈறு நோக்கி மிகும் வல்லெழுத்தை ஈற்று வல்லெழுத்து என்பர்.

கலத்துக்குறை என்பதில் நிலைமொழியாகிய 'கலன்' என்பது வருமொழியாகிய 'குறை' என்பதுடன் சேரும் போது

இடையில் அத்துச் சாரியை வந்தது. இந்நூற்பாவின்படிக் 'கலன்' என்பதில் உள்ள ஒற்றுக் கெட்டு, "அத்தின் அகரம் அகர முனையில்லை (எழு. 125) என்னும் விதிப்படி அத்தின் அகரம் கெட்டுக் 'கலத்துக்குறை' என வந்தது. அத்து என்பதன் பின் வந்த வல்லெழுத்து சாரியை நோக்கி வந்த வல்லெழுத்தாகும். நிலைமொழியீற்று னகர ஒற்று வருமொழி முதலில் வல்லெழுத்து வந்தால் வேற்றுமைப் புணர்ச்சியில் றகர ஒற்றாகும் என்பது பொது விதி. அதன்படிக் கலன்+குறை=கலற்குறை என்றாக வேண்டும். அத்துச் சாரியை இடை வரவே னகர ஒற்றுத் திரியாது தான் கெடுகிறது. பின் 'கலத்து' என்றாகிறது. கலத்து+குறை என்புழி வருமொழி வல்லெழுத்து, நிலை மொழி (கலத்து என்பது) தனிப்பெயர் அன்மையானும் சாரியை இடைச்சொல் இறுதியது ஆதலினாலும் உயிர் மயங்கியலின் உகர இறுதி நோக்கி மிக்கது என்று கூறுதற் கில்லை. அதனால் சாரியை நோக்கியே மிக்கது என்ன வேண்டும். எனவே 'கலத்துக் குறை' என்பதில் வல்லெழுத்தானது சாரியை வல்லெழுத் தெனப் பட்டது.

இந்நூற்பாவில் வல்லெழுத்து மிகும் என்றது ஈற்று வல்லெழுத்தையன்று; சாரியை வல்லெழுத்தை எனக் கொள்ள வேண்டுவதேன் என்றால், திரிந்து முடியும் னகரமும் ணகரமும் லகரமும் ளகரமும் என இவற்றை நோக்கிக் கொள்ளவேண்டும். மொழிக்கிறுதியில் வரும் மெய்கள் ஞணநமன யரலவழள என்பன, இவற்றுள் வருமொழி வல்லெழுத்து மிகுவதாயின் யரழ என்பனவற்றின் முன்னர் அவை நிற்க மிகும். மகர வீற்றின் முன்னர் அம்மகரம் கெட மிகும். ஞ ந வ முன்னர் அவை உகரத் தோடு சேர்ந்த பின்னர் மிகும். சுட்டு முதல் வகரம் வற்றுச் சாரியை பெறாமல் இருத்தல் இல்லையாதலின் வல்லெழுத் தானது ஈறு நோக்கி மிகுதல் இல்லை. எனவே அவ்வழி வரும் வல்லெழுத்து சாரியை வல்லெழுத்தாம்,

னகர ணகர லகர ளகரங்களின் முன்னர் அவைகளே றகர டகரங் களாகத் திரிதலின் (வல்லெழுத்துகளாகவே திரிதலின்) மிகுதல் இல்லை. அதனால் 'கலத்துக்குறை' என்பதில் 'கலன்' என்ற நிலைமொழி னகர வீறாக இருத்தலின் வருமொழி வல்லெழுத்து ஈறு நோக்கி மிகுதற்கில்லை' அதனால் இடைக்கண் வந்த சாரியை நோக்கியே மிகுவதாயிற்று. திரிதலுடைய அந்நான் கெழுத்துகளையும் நோக்கியே இந்நூற்பாவில் சாரியை

வல்லெழுத்தை விதித்தார். மற்றை எழுத்துகளை நோக்கி அவ்வவ் வீறுகளில் ஈற்று வல்லெழுத்து விதித்தார்.

'கலத்துக்குறை' என்பதைக் கலன்+குறை எனப் பிரித்து நிலைமொழி னகரவீறாகக் கொள்ள வேண்டும். அல்லது கலம்+குறை எனப் பிரித்து மகர வீறாகக் கொள்ளின் இந் நூற்பாவின் விதியாவது, "மகர விறுதி வேற்றுமையாயின், துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே" (எழு. 310) என்னும் நூற்பாவின் விதியாவது பெறும் எனக் கொள்ள வேண்டும். ஆனால் அத்துச் சாரியை யின்றிக் 'கலக்குறை' என வருமாயின் நிலைமொழி 'கலம்' என மகர வீறாகவே கொள்ளல் வேண்டும். கொண்டு 'மகரவிறுதி' என்றும் நூற்பா விதிப்படி வல்லெழுத்து மிகுதியை ஈற்று வல்லெழுத்து மிகுதி எனக் கொள்ள வேண்டும். கலன்+குறை எனப்பிரித்தால் 'கலற்குறை' என்று தான் ஆக வேண்டும்; னகரக்கேடு இல்லை. ஆதலின் னகர ஈறாகப் பிரித்தல் கூடாது.

## 5. எழுத்துச்சாரியை

### எழுத்துச்சாரியைகளின் பெயர்

**135. காரமும் கரமும் கானொடு சிவணி**
**நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை (32)**

**ஆ. மொ. இல.**

'Kāram', 'Karam' and 'Kān'
appear in right manner as the increments of letters.

**க. சு.**

Kāram, Karam, and Kān are the empty morphs
which corectly joining sounds.

**இளம்.**

இது, எழுத்துச் சாரியைகட்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) காரமும் கரமும் கானொடு சிவணி—காரமும் கரமும் கானொடு பொருந்தி, நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை—எல்லா ஆசிரியரானும் உடன்படத் தோன்றும், எழுத்துச்சாரியை யாதற்கு.

'நேரத் தோன்றும்' என்றதனான், நேரத் தோன்றாதன ஆனம், ஏனம், ஓனம் என இவை.

**நச்.**

இது, மொழிச் சாரியைவிட்டு எழுத்துகட்கு வருஞ் சாரியை களது பெயரும் முறையும் தொகையும் உணர்த்துகின்றது.

(இ—ள்.) காரமும் கரமும் கானொடு பொருந்தி எழுத்தின் கண்வரும் சாரியையாதற்கு எல்லா ஆசிரியரானும் உடம்படத் தோன்றும்: எ—று.

காரமும் கரமும் [1]எடுத்துச் சொல்லியவழி இனிதிசைத்த லானும், வழக்குப் பயிற்சியுடைமையானும், வடவெழுத்திற்கும் உரியவாதலானும் சேரக் கூறினார். கான் அத்தன்மையினாற் பின் வைத்தார். 'நேரத்தோன்றும்' எனவே நேரத் தோன்றா தனவும் உளவாயின. அவை ஆனம் ஏனம் ஓனம் [2]என்க. இவை சிதைந்த வழக்கேனும் கடியலாகாவாயின.

**சுப்பிர.**

(பொருள்.) நிரம்பத் தோன்றும் எழுத்தின் சாரியைகள் காரம் கரம் இவ்விரண்டும் கானொடு பொருந்த அம்மூன்றாம். ஈண்டு எழுத்தின் சாரியை என்றதை எழுவாயாகவும் நேரத் தோன்றும் என்றதைப் பெயரெச்சமாகவும் கொள்ளுதல் நேரிதாகும் என்பது, ''ரஃகானொற்றும்...நேரத்தோன்றும் பல வறி சொற்கே'' (சொல். 7.) என்றவிடத்துச் சேனாவரையர் நச்சினார்க்கினியர் உரைகளான் விளங்கும். ஆங்கு 'நேரத் தோன்றும்' என்றதைப் பெயரெச்சமகாக் கொண்ட நச்சினார்க் கினியர், ஈண்டு வினைமுற்றாகக் கொண்டனர். 'எழுத்தின் சாரியை' என்றதன் பின்னர் 'ஆதற்கு' என வருவித்துக் கொண்டு இச்சூத்திரத்துக்கு, ''காரமும் கரமும்... யாதற்கு'' எனப் பொருள் கூறினர். 'எழுத்தின் சாரியை' என்றது ஈண்டு உத்தேசியம் ஆகையால் அதனை எழுவாய் வேற்றுமையாகக் கொள்ளுதலே நேரிது என்பது என் கொள்கை. அவ்வாறாயின் 'சிவணி' என்றதன் பின்னர் 'அம்மூன்றாம்' என வருவித்தல் வேண்டும்.

'நேரத் தோன்றும்' என்ற பெயரெச்சத்தின் பயன் யாதெனின் நேரத்தோன்றாத காரை, ஆனம், ஏனம், ஓனம் என்ற சாரியைகளை நீக்குதற்கு என்னலாம்.

---

சு. வே: 1. அடுத்து
2. என

நச்சினார்க்கினியத்தில், காரமும் கரமும் அடுத்துச் சொல்லியவழி...சேரக் கூறினார்'' என்ற தொடர் உளது. வடவெழுத்திற்குக் காரம் என்ற சாரியை உளதே யன்றிக் கரம் என்ற சாரியையில்லை.

**பி.கு.**

இந்நூற்பாவையே ஒலிபற்றிய தொகுதியில் திவாகர நிகண்டு ஆண்டுள்ளது.

கரமும் கானும் காரமும் அகரமும்
ஏனவும் பிறவும் எழுத்தின் சாரியை

என்பது பிங்கல நிகண்டு.

கரமொடு கானே காரங் காட்டிய அகரம் என்ப
தரமுற எழுத்துக்கேற்ற சரியை நான்கே சாற்றும்

என்பது சூடாமணி நிகண்டு.

நன்னூல் 'அ' சாரியை ஒன்றும் சேர்த்துக் கூறும். (நன், 126)

## நெட்டெழுத்துக்குச் சாரியை

**136.** அவற்றுள்
கரமும் கானும் நெட்டெழுத் திலவே. **(33)**

**ஆ மொ. இல.**

Among those
'Karam' and 'Kān' are not added to long letterts.

**க.சு.**

Among them
Karam and Kān are not (used along with) the long sounds.

**பி. இ. நூ.**

நன். 126:

மெய்கள் அகரமும் நெட்டுயிர் காரமும்

இ. வி. 37:

நெட்டுயிர் காரமும்

முத்து. 109:

நெட்டெழுத் தெல்லாம் காரமொடு நிலையும்

**இளம்.**

இது, அவற்றுட் சில சாரியை சில எழுத்தோடு வாரா என எய்தியது விலக்குதல் நுதலிற்று.

(இ—ள்.) அவற்றுள் கரமும் கானும் நெட்டெழுத்து இல—மேற்சொல்லப்பட்டவற்றுள் கரமும் கானும் நெட்டெழுத்திற்கு இல.

எ—டு: காரம் நெட்டெழுத்திற்கு உண்டு என்றவாறு. ஆகாரம் ஈகாரம் எனவரும்.

**நச்.**

இஃது அவற்றுட் சில சாரியை சில எழுத்தோடு வாராவென எய்தியது விலக்கிற்று.

(இ—ள்.) [1]முற்கூறிய அவற்றுள், கரமும் கானும் நெட்டெழுத்திற்கு வருதல் இன்று, எ—று. எனவே நெட்டெழுத்திற்குக் காரம் வருமாயிற்று. ஆகாரம் ஈகாரம் என ஒட்டுக. ஐகாரம் ஔகாரம் எனச் சூத்திரங்களுள் வருமாறு காண்க.

**பி.கு.**

'காரந்தானே நெட்டெழுத்துண்டே' எனச் சூத்திரிக்காது இவ்வாறு சூத்திரித்ததற்கு யாது காரணம் எனின் அவ்வாறு சூத்திரிப்பின் நெடுட்டெழுத்துக்குள் ஒரு பகுதியான ஐகார ஔகாரங்கட்கு கானும் வரும் என்று பின் கூறுதல் நேரிதன்றாம்'—என்பர் சுப்பிரமணிய சாஸ்திரியார்.

### குற்றெழுத்துக்குச் சாரியை

**137. வரன்முறை மூன்றும் குற்றெழுத் துடைய. (34)**

**ஆ.மொ. இல.**

The short letters shell have all these three which come down though centuries.

**க. சு.**

The short sounds as they follow (each other) in succession have all the three (above—quoted morphs).

**பி. இ. நூ.**

நன். 126:

**இருமைக் குறில் இவ்விரண்டொடு கரமும் ஆம்**

இ. வி.: 37

**இருமைக் குறில்...இவற்றொடு கரமும் ஆம்**

முத்து. 111:

**காரம் கான்கரம் பெறும் இருமைக்குறில்.**

**இளம்.**

இது, நெட்டெழுத்திற்குச் சில சாரியை விலக்கினமையின் [2]குற்றெழுத்திற்கும் சில விலக்குவதுண்டு கொல் என்னும் ஐயம் தீர்த்தல் நுதலிற்று.

(இ—ள்.) வரன் முறை மூன்று குற்றெழுத்து உடைய— வரலாற்று முறைமையையுடைய மூன்று சாரியையும் குற் றெழுத்து உடைய.

எ—டு: அகாரம், அகரம் அஃகான் எனவரும். வரன் முறை என்றதனான், அஃகான் என்புழி ஆய்தம் மிக்கு முடியும்.

**நச்.**

இஃது, ஐயம் அகற்றியது; என்னை? நெட்டெழுத்திற்குச் சில சாரியை விலக்கினாற்போலக் குற்றெழுத்திற்கும் விலக்கற் பாடு உண்டோவென ஐயம் நிகழ்தலின்.

(இ—ள்.) வரலாற்று முறைமையையுடைய மூன்று சாரியை யும் குற்றெழுத்துப் பெற்று வருதலையுடைய; எ—று.

அகாரம் அகரம் மஃகான் என ஒட்டுக. 'வகரமிசையும்' (எழுத். 330) 'அகர இகரம்' (எழுத். 54) 'வஃகான் மெய்கெட எழுத். 122)' எனவும் பிறவும் சூத்திரங்களுட் காண்க இஃகான், ஒஃகான் என்பன பெருவழக்கன்று. வரன்முறை என்றதனான் அஃகான் என்புழி ஆய்தம் பெறுதல் கொள்க. இது குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி (எழு. 38) என்பதனாற் பெறாதாயிற்று மொழியாய் நில்லாமையின்.

சு. வே: 1. மேல்சொல்லப்பட்டவற்றுள்.
2. குற்றெழுத்திற்கு உண்டென்றவாறு.

**சுப்பிர.**

காரம், கரம், கான் மூன்றும் எழுத்துக்களின் சாரியை என்றும், காரம் நெட்டெழுத்துக்களின் சாரியை என்றும், முன்னர்ச் சூத்திரங்களால் பெறப்பட, கரம், கான் என்ற இரண்டுந்தான் குற்றெழுத்துக்களுக்கோ என்ற ஐயம் ஒருவாறு வரலாம் என நினைத்து, அதனைப் போக்கினர் ஆசிரியர் இச் சூத்திரத்தான் என்க. 'வரன்முறை' என்றதனான் அஃகான் என்புழி ஆய்தம் மிக்கு முடியும் என்பது கொள்க.' என இளம் பூரணர் கூறினர். அவர் கொள்கையினையே பின்பற்றினர் நச்சினார்க் கினியர். அஃகான் (எழுத். 123) னஃகான் (எழுத். 24) ணனஃகான் (எழுத். 26) என ஆசிரியர் வழக்கான் அதனைக் கொள்ளுதல் நேரிதாகும்.

## ஐ ஔவின் சாரியை

—138. **ஐகார ஔகாரங் கானொடுந் தோன்றும்** (35)

**ஆ. மொ.** இல.

'ai' and 'ou' may appear with 'kān' also.

**க. சு.**

ai–hāram and au-kāram appear also with kān.

**பி. இ. நூ.**

**நன். 126**

**ஐ ஔ கானும்**

**இ. வி. 37:**

**ஐ ஔ கானும்**

**முத்து. 110:**

**ஐ ஔ கானும் அடையவும் பெறுமே**

**இளம்.**

இது அவற்றுள் காரமும் கானும் என்பதற்கு ஓர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) ஐகாரம் ஔகாரம் கானொடும் தோன்றும்—நெட் டெழுத்துக்களில் ஐகாரமும் ஔகாரமும் முன் விலக்கப்பட்ட கானொடும் தோன்றும்.

எ—டு: ஐகான் ஔகான் எனவரும்.

**நச்.**

இஃது அவற்றுட் கரமும் கானும் என்பதற்கோர் புறனடை கூறுதல் நுதலிற்று.

(இ—ள்.) நெட்டெழுத்துக்களுள் ஐகார ஒளகாரங்கள் முன் விலக்கப்பட்ட கானொடும் தோன்றும்; எ—று.

எ—டு: ஐகான் என வரும். உம்மை இறந்தது தழீஇயிற்று, காரத்தைக் கருதுதலின்.

## 6. உயிர் எழுத்தின் புணர்ச்சி இயல்புகள்

**139.** புள்ளி யீற்றுமுன் உயிர்தனித்து இயலாது
[1]மெய்யொடு சிவணும் அவ்வியல் கெடுத்தே. (36)

**ஆ.மொ.** இல.

The vowel has so separate existence before the final consonant.
It merges with the consonant destroying its individuality.

**க.சு.**

A vowel symbol following a consonant
—symbol cannot exist by itsef:
it merges with the consonant,
destroying thus its nature.

**பி.இ.நூ.**

**நன்.** 204:

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

**இ. வி.** 64:

புள்ளி யீற்றுமுன் உயிர்தனித் தியலாது
மெய்யொடு சிவணும் அவ்வியல் கெடுத்தே

**இளம்.**

இது, உயிர் முதல்மொழி புள்ளியீற்றுமுன் வருங்காற் பிறப்பதோர் கருவி கூறுதல் நுதலிற்று.

---

சு. வே: (பாட வேறுபாடு. நச்.)
1. மெய்யொடும்

(இ—ள்.) புள்ளி ஈற்றுமுன் உயிர் தனித்து இயலாது—புள்ளி யீற்றுச் சொல்முன் உயிர் தனித்து நடவாது, மெய்யொடுஞ் சிவணும் அ இயல் கெடுத்து—[2]அப்புள்ளியோடு கூடும் தான் தனி நின்ற அவ்வியல்பினைக் கெடுத்து.

எ—டு: ஆல்+அடை—ஆலடை என வரும்.

[3]'ஒன்றென முடித்தல்' என்பதனால், இயல்பல்லாத புள்ளி முன் உயிர் வந்தாலும் இவ்விதி கொள்க. அதனை எனவும், நாடுரி எனவும் வரும்.

புள்ளியீற்று முன்னும் எனத் தொகுத்து நின்ற உம்மையை *விரித்ததனானே குற்றியலுகரத்தின் முன்னும் இவ்விதி கொள்க. நாகரிது எனவரும்.

நச்.

இஃது, புள்ளியீற்றுமுன் உயிர்முதன்மொழி வந்த காலத்துப் புணரும் முறைமை கூறுகின்றது.

(இ—ள்.) புள்ளியீற்றுச் சொல்முன்னர் வந்த உயிர் முதல் மொழியின் உயிர் தனித்து நடவாது, அப்புள்ளியோடும் கூடும், தான் தனித்து நின்ற அவ்வியல்பினைக் கெடுத்து; எ—று.

எனவே, நீரோடுகூடிய பால்போல நின்றதென்று ஒற்றுமை கூறினார். ஈண்டு இதனானே உயிர்மெய் எனப் பெயர் பெற்றது.

எ—டு: பாலரி, பாலாழி, ஆலிலை. பொருளீட்டம். வானுலகு, வேலெறிந்தான், வேலேற்றான் பொருளையும், பொருளொன்று, நாணோடிற்று, சொல்லௌவியம் எனவரும்.

ஒன்றென முடித்தல் என்பதனால் இவ்வியல்பல்லாத புள்ளி முன்னர் உயிர் வந்தாலும் இவ்விதி கொள்க. அதனை அதனொடு நாடுரி என வரும். இவற்றைச் 'சுட்டுமுதலுகரம் அன்னொடு' (எழு. 171) 'உரிவருகாலை நாழிக் கிளவி' (எழு. 240) என்பன வற்றான் முடிக்க. புள்ளியீற்று முன்னும் என உம்மையை மாறி எச்ச உம்மையாக்கிக் குற்றிலுயகரத்தின் முன்னரும் என அவ்விதி கொள்க. எனவே, குற்றியலுகரமுமற்று (எழு. 105) என்றதனோடும் பொருந்திற்றாம். நாகரிது, வரகரிது எனவரும்.

சு. வே. 2. அப்புள்ளியொடும்
3. ஒன்றின முடித்தல்
* விரித்து அதனானே

**சுப்பிர.**

(பொருள்) நிலைமொழியின் ஈற்றில், மெய் குற்றியலுகரம் இவ்விரு புள்ளியுள் ஒன்று நிற்க, வருமொழி முதலில் உயிர்வரின், அப்புள்ளியின் தன்மையைக் கெடுத்து அவ்வுயிர் அம்மெய் யுடனும் அக்குற்றியலுகரப் பற்றுக்கோடாகிய மெய்யுடனும் பொருந்தும்.

**உ–ம்:** பால் + ஆடை = பாலாடை.

**கன்று** + அங்கே = **கன்றங்கே.**

''**மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்**'' (எழுத். 105)

என்றும்,

''**குற்றிய லுகரமும் அற்றென மொழிப**'' (எழுத். 106)

என்றும் ஆசிரியர் கூறினமையான் இச்சூத்திரத்துள்ள புள்ளி என்ற சொல்லே மெய், குற்றியலுகரம் இரண்டனையும் குறிக்கும் எனக் கொள்ளல் தகும். 'உயிரும் புள்ளியும்' (எழுத். 165) என்ற சூத்திரத்தில் 'புள்ளி' என்றதற்கு அவ்வாறே பொருள் கொளல் வேண்டும்.

**வேங்கட.**

கெடுத்து இயலாது என இயைக்க. இதனால், உயிரெழுத்து, மெய்யெழுத்தோடுகூடி இயலுதல் போலவே புள்ளியீற்றொடுங் கூடி இயலும் என்றபடி.

தனி மெய்யெழுத்தோடு உயிரெழுத்துச் சேர்தலை, மேல் நூல்மரபில் கூறினார்; அவ்வாறே, புள்ளியீற்றொடும் உயிர் சேர்ந்தியலும் என்பதை இச்சூத்திரத்திற் கூறினார். இச்சூத்திரத்தில் 'புள்ளியீறு' என்றதனை மெய்யீறென்று கொண்டு நன்னூலார்,

**உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே** (மெய். 1)

என்று கூறினார்.

ஈண்டுப் புள்ளியீறு ஆவன–மெய்யெழுத்தீறும் குற்றியலுகர வீறும். மேல்,

**மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்** (புணரி. 2)

என்றும்,

குற்றிய லுகரமும் அற்றென மொழிப (புணரி. 3)

என்றும் கூறிய சூத்திரங்களான், மொழியின் ஈற்றில் நிற்கும் மெய்யெழுத்தும், மொழியின் ஈற்றில் நிற்கும் குற்றியலுகரமும் புள்ளிபெறும் என்று விதித்ததனானும், ஈண்டும், மெய்யீற்றுமுன் என்று கூறிப், 'புள்ளியீற்றுமுன்' எனக் கூறியதனானும் இது பெறப்படும்*.

உயிர் இயல்பாய் மெய்யீற்றோடும் குற்றியலுகர வீற்றொடும் சேர்ந்தியலுதல் போலவே, விதியான் வந்த மெய்யீறு குற்றியலுகரவீறு இவற்றொடும் சேர்ந்தியலும்.

அதனை (= அத் + அன + ஐ)

அவற்றொடும் (= அவ் + வற்று + ஒடு + உம்)

என்பன காண்க ஈண்டு, முற்றியலுகரமாகிய 'ஒடு' என்பது 'அவற்று' என்பதனொடு சேர்ந்து குற்றியலுகரமாயிற்று. அதனான், உம் என்பது அதனை ஊர்ந்து நின்றது.

இச்சூத்திரங் கூறாக்கால், உரும் இன் ஐ, அத் அன் ஐ, அவற்று ஒடு உம் என்பனபோல அல்லாமல் உருமினை, அதனை, அவற்றொடும் என்பன போன்று வருதற்கு விதியின்றாம்.

இவ்வாசிரியர் நன்னூலார் கூறுவது போன்று உயிரெழுத்து வருமிடத்துக் குற்றியலுகரங் கெடும் என்று கூறினாரல்லர். குற்றியலுகரத்தின்மேல் உயிர் ஊர்ந்து இயலும் என்பது இச் சூத்திரத்தான் அறியப்படுகிறது.

முற்றியலுகரத் தொடு உயிர் முதன்மொழி புணருமிடத்து முற்றுகரம் கெடுமாயின், ஆண்டு, அவ்வுகரம் கெடுதற்கு விதி கூறும் ஆசிரியர், குற்றியலுகரத்தொடு உயிர் முதன் மொழி புணருமிடத்து, அக்குற்றியலுகரம் கெடும் என்னாராய், இயல் பாகப் புணரும் என்றே யாண்டும் விதி கூறுதலின், மெய்யீற்றின் மேல் உயிரெழுத்து ஊர்ந்து வரும் என்பது அவ.ர் கருத்தாதல் நன்கு பெறப்படும்.

ஒன்பா னிறுதி யுருபுநிலை திரியாது
இன்பெறல் வேண்டும் சாரியை மொழியே (குற்றி. 54)

* 1937ல் இக்கருத்தை வெளிப்படுத்தியவர் சி. கணேசய்யர். தொல். எழுத்து. நச். உரை பதிப்பு. 1937

ஒன்பா னிறுதி யுருபுநிலை திரியாது
இன்பெறல் வேண்டும் சாரியை மரபே (குற்றி. 65)

என்னும் சூத்திரங்களில் குற்றியலுகர வீறு திரியாமலே இன் சாரியையொடு சேரும் என்று விதித்துள்ளார். முற்றிய லுகரம் கெடும் என்பது,

சுட்டுமுத லுகரம் அன்னொடு சிவணி
ஒட்டிய மெய்யொழித் துகரம் கெடுமே. (உருபு. 4)

ஆயிரம் வரும்வழி யுகரம் கெடுமே (புள்ளி. 96)

என்னுஞ் சூத்திரங்களிலும் பிறாண்டும் விதித்திருத்தலான் அறியக்கூடும். இதனைப்பற்றிய விளக்கமான செய்தியை யான் எழுதியுள்ள குற்றியலுகரம் என்னும் கட்டுரையிற் காண்க.

இச்சூத்திரத்தில், 'புள்ளியீறு' என்றதனை மெய்யீறு என்று கொண்டதனானே, இளம்பூரணர், 'புள்ளியீற்று முன்னும்' என்று உம்மையை விரித்தும், நச்சினார்க்கினியர், 'புள்ளியீற்று முன்னும்'என உம்மையை மாற்றியும்‡ பொருள் கூறுவாராயினர். அன்றியும், இச்சூத்திரப் பொருளை மெய்யீ றெல்லாம் புள்ளி யொடு நிலையல் என்னும் இவ்வியல் இரண்டாஞ் சூத்திரத் தோடு மட்டெறிந்து அதனையே குற்றியலுகரமும் அற்றென மொழிப என்னும் சூத்திரத்திற்குப் பொருளாகவும் கூறினர்.

பி. கு:

'மெய்யொடு சிவணும்' என்ற பாடமே (உம்மையில்லாமல்) நேமி நாத உரையாசிரியரும், இலக்கண விளக்க முடையாரும், கொண்டனர். (நேமி. எழுத்து, 4. 1 இல. வி. ɔ4)

மாறனலங்கார உரையாசிரியர் அதன் பாயிரவுரையில் ஒன்றின முடித்தல் என்பதற்கு விளக்கம் எழுதி உதாரணமாக இந்நூற்பாவைக் காட்டினர்,

"அவ்வியல் கெடுத்து என்பதற்குப் புள்ளி பெற்று நிற்கும் அம்மெய்யின் இயல்பைக் கெடுத்து என்றே பொருள் கொள்வது தக்கது; 'மெய்யுயிர் நீங்கின் தன்னுருவாகும்' என்று அடுத்த நூற்பாவும் கூறுதல் காண்க" என்பர் பாவாணர்.

‡ மெய்யொடும் என்பதன் உம்மையை மாற்றினர்

''புள்ளியீற்று முன்னும்...நாகரிது என வரும்''—இளம்பூரணர் விளக்கம்:

இத்தொடரில் விரித்ததனானே' என்பதை 'விரித்து அதனானே' எனப்பிரித்துக் கொள்க.

குற்றியலுகரம் உயிர் ஏற இடம் கொடுக்கும் என்பதைக் 'குற்றியலுகரமும் அற்றென மொழிப' என்னும் நூற்பாவிலேயே கூறிவிட்டமையின் ஈண்டும் ஏன் கூறினார் இளம்பூரணர் என்னும் ஐயம் எழலாம், ஆண்டு நிலைமொழியீற்றுச் செயலாகக் கூறப்பட்டது. ஈண்டு மொழி முதல்எழுத்தின் செயலாகக் கூறப்பட்டது என அமைதி கொள்ள வேண்டும்.

### உயிர் பிரிந்த மெய்யின் இயல்பு

**140. மெய்உயிர் நீங்கின் தன்உரு ஆகும். (37)**

**ஆ.மொ இல.**

When the consonant break company with the vowel
it has its own original form (figure).

**க. சு**

When the consonant separates from the vowel
it obtains its original form.

**இளம்.**

இது, புணர்ச்சியிடத்து உயிர்மெய் உயிர் நீங்கியவழிப் படுவதோர் விதிகூறுதல் நுதலிற்று.

(இ—ள்) மெய் உயிர் நீங்கின் தன் உரு ஆகும்—மெய் [2]தன்னொடு கூடிய உயிர் புணர்ச்சியிடத்து நீங்கியவழித் தன்புள்ளி வடிவுபெறும்.

உ—ம் அதன் ஐ எனவரும்

**நச்.**

இஃது உயிர்மெய் புணர்ச்சிக்கண் உயிர் நீங்கிய வழிப் படுவதோர் விதி கூறுகிறது.

---

சு. வே: 1. தன்னுருபாகும்
2. அதனொடு

(இ—ள்) மெய் தன்னோடு கூடிநின்ற உயிர் புணர்ச்சி யிடத்துப் பிரிந்து வேறு நின்றதாயின், தான் முன்னர்ப் பெற்று நின்ற புள்ளி வடிவு பெறும்; எ—று.

எ—டு: ஆல் இலை, அதன் ஐ என வரும். உயிர் இன்ன வடிவிற்றென்று ஆசிரியர் கூறாமையின் உயிர்க்கண் ஆராய்ச்சி யின்று.

இனி, எகர ஒகரங்களைப் புள்ளியான் வேற்றுமை செய் தலின், தொன்று தொட்டு வழங்கின வடிவுடைய என்று கோடலுமாம். புணர்ச்சியுள் உயிர்மெய்யினைப் பிரிப்பாரா தலின், இது கூறாக்கால் குன்றக் கூறலாம் என்றுணர்க.

**பி. கு.**

'மெய் உயிர் நீங்கிற்றன் உருவாகும்' என்று மெய்யீற்றிற்கே கூறினாரயினும் குற்றியலுகரத்திற்கும் ஒன்றென முடித்தலாற் கொள்ளப்படும்—சி. கணேசய்யர், பாவணர்.

## உடம்படுமெய் தோன்றும் இடம்

**141.** எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார் **(38)**

**ஆ. மொ.** இல.

To all the words which end in vowels, if folllowed by vowels, the use of conjoining consonants is not forbidden.

**க. சு.**

It is not forbidden to give shape to a suitable consonant between any words which end and begin with vowels.

**பி. இ. நூ.**

*வீர.* 13:

**மூன்றொடு நான்குஒன்ப தாமுயிர்ப் பின்னுயிர் முந்திரண்டு
ஆன்ற யகாரம்வந் தாகம மாகும்; அல்லா வுயிருக்கு
ஏன்ற வகாரம்; எட்டேற்கும் இரண்டு இறுதி கெட்டுத்
தோன்று நிலை ஒரோவிடத் தாமென்பர் தூமொழியே**

நேமி. 14:

மூன்றுநான் கொன்பான் உயிர்ப்பின்னு மல்லாத
ஆன்ற உயிர்ப்பின்னும் ஆவிவரிற்—றோன்றும்
யகர வகரம் இறுதியிடத் தோரோர்
மகரங் கெடவகரம் ஆம்.

நன். 162:

இஈ ஐவழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்.

இ. வி. 68:

இஈ ஐவழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாதல்
வரைவின் றென்மனார் மதிக்குங் காலே.

தொ. வி. 20:

முதலீற் றுயிரும் மொழியே சேர்புள்ளி
இஈஏ ஐயீறு இவையும் யவ்வே
மற்றை யுயிர்க்கீழ் வகரம் புணரும்

(ஏகாரத்துக்கும் யகர உடம்படுமெய் மட்டும் இதில் கூறப் பட்டுள்ளது.)

முத்து, 183:

இஈ ஐவழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்.

முத்து 184:

கோமா முன்வரின் யகரமும் குறிக்கும்
உ-ம் கோயில், மாயிருந்தூவி)

## இளம்.

இஃது,[3] உயிரீறு உயிர் முதன்மொழியோடு புணரும் வழி நிகழ்வதோர் கருவி கூறுதல் நுதலிற்று.

---

சு. வே: 1. மொழியும்
2. கொள
3. உயிரீறும் புள்ளியீறும்

(இ—ள்) எல்லா மொழிக்கும்—மூவகைப்பட்ட மொழிக்கும், உயிர்வருவழி—உயிர் முதன் மொழி வருமிடத்து, உடம்படுமெய் யின் உருபு கொளல் வரை யார்—இடை[4] உடம்படுமெய் வடிவு கோடலை நீக்கார்.

எ—டு: புளியங்கோடு, எருவங் குழி, [5]விளவத்துக் கொட்கும் என வரும்.

'உரையிற் கோடல்' என்பதனால், உடம்படு மெய் யாவன யகரமும் வகரமும் எனக் கொள்க. இகரவீறும் ஈகார வீறும்[6] ஐகார வீறும் யகரவுடம்படுமெய் கொள்வன: அல்லன வெல்லாம் [7]வகர மெய் கொள்வன. [8] ஒன்றென முடித்தல்' என்பதனால் விகாரப்பட்ட மொழிக்கண்ணும் உடம்படுமெய் கொள்க. மரவடி, ஆயிருதிணை என வரும்.

'வரையார்' என்றதனால், உடம்படுமெய் கோடல் ஒரு தலை அன்றென்பது கொள்ளப்படும. கிளி அரிது, மூங்கா இல்லை என வரும்.

நச்.

இஃது உயிரீறும் உயிர் முதன் மொழியும் புணரும் வழி நிகழ்வதோ கருவி கூறுகின்றது.

(இ—ள்) நிலை மொழியும் வருமொழியுமாய்ப் புணரும் எவ் வகை மொழிக்கும் உயிர் முதல்மொழி வருமிடத்து, உடம்படு மெய்யினது வடிவை உயிரீறு கோடலை நீக்கார் கொள்வர் ஆசிரியர்; எ—று.

அவை யகரமும் வகரமும் என்பது முதல்நூல்பற்றிக் கோடும்.

"உடம்படு மெய்யே யகார வகாரம்
உயிர்முதல் மொழிவரூஉங் காலை யான"

எனவும்,

சு. வே. 4. உடம்படுமெம்யாகிய
5. விண்வத்துக் கொட்கும்
6. ஐகாரவீறுமே
7. வகரமெய் எனக்கொள்க.
8. ஒன்றின

''இறுதியும் முதலும் உயிர்நிலை வரினே''

உறுமென மொழிப உடம்படு மெய்யே எனவும் கூறினாராக லின். உயிர்களுள் இகர ஈகார ஐகார ஈறு யகர உடம்படு மெய் கொள்ளும்; ஏகாரம் யகாரமும் வகாரமும் கொள்ளும்; அல்லன வெல்லாம் வகர உடம்படுமெய்யே கொள்ளும் என்று உணர்க.

எ—டு: சிளியழகிது, குரீஇ யோப்புவாள், வரையர மகளிர் எனவும், விளவழகிது, பலாவழகிது, கடுவழகிது, பூவழகிது, கோவழகிது, கௌவடைந்தது எனவும் ஒட்டுக். 'ஏஎ யிவ ளொருத்தி பேடியோ வென்றார் (சீவக. 612) 'ஏவாடல் காண்க' என ஏகாரத்திற்கு இரண்டும் வந்தன.

ஒன்றென முடித்தல் என்பதனான் விகாரப்பட்ட மொழிக் கண்ணும் உடம்படுமெய் கொள்க. மரவடி, ஆயிருதிணை என வரும். வரையார் என்றதனால் உடம்படுமெய் கோடல் ஒரு தலையன்று. கிளி அரிது, மூங்கா இல்லை எனவும் வரும். ஒன்றென் முடித்தல் என்பதனால் விண்வத்துக் கொட்கும் எனச் சிறுபான்மை புள்ளியீற்றினும் வரும். செல்வுழி உண்புழி என்பன னைத் தொகை என மறுக்க.

**சுப்பிர.**

எல்லா மொழிக்கும் என ஆசிரியர் கூறினும் உயிரை ஈற்றிற் கொண்ட சொல்லே கொள்ளல் வேண்டும்'

னகர விறுவாய், அவ்வியல்; ஆயிருதிணையின் ஆவின் இறுதி; நொடியென; ஈயாகும்; உருவாகும்; அம்மூவாறும் எஒவென்னும்; உளவேயவ்வும்; அரையளவு; ஓஔவென்னும் என்று ஆசிரியர் வழங்கிய சொற்களான் அஉஊ எ ஒ ஔ இவற்றின் பின்னர் வகரமும், இ ஈ ஏ ஐ இவற்றின் பின்னர் யகரமும், ஆவின் பின்னர் யகர வகரங்களும் வரும் என அறிக.

நச்சினார்க்கினியர் நன்னூலார் கூறியவாறே கூறுதலின், அவர் நன்னூலார்க்குப் பிற்பட்டவர் என்பதற்கு இஃதும் ஒரு சான்றாகும்.

**வேங்கட.**

வரையார் என்றதனால், உடம்படுமெய்யிட்டு எழுதுதல் தொல்வழக்கன்று எனவும், தொல்வழக்கன்றாயினும் ஆசிரியர்

கள் அவ்வழக்கினை யேற்றுக் கொண்டனர் எனவும் போதரும். இனி உடம்படுமெய் பெறுதல் ஒருதலையாயின்,

உடம்படு மெய்யின் உருபுகொளல் வேண்டும் என விதிப்பர் ஆசிரியர்; அவ்வாறு கூறும் இயல்பினராதலை,

> சுட்டின்முன்னர் ஞகமத் தோன்றின்
> ஒட்டிய ஒற்றிடை மிகுதல் வேண்டும் (உயிர். ம.65)

என்றும் பிறாண்டும் கூறியிருப்பவற்றான் அறியலாகும். இதனை உய்த்துணராது, பிற்காலத்தவர் எல்லா இடங்களிலும் உடம்படுமெய் வந்தே தீரல் வேண்டும் எனக் கருதி, யாண்டும் தந்து எழுதுவாராயினர்.

இளம்பூரண அடிகளும், ஆசிரியர் நச்சினார்க்கினியரும் 'வரையார்' என்றதனான் உடம்படுமெய் கோடல் ஒருதலையன்று; சிளி அரிது, மூங்கா இல்லை எனவும் வரும்' என்று எழுதியிருப்பது இக்கொள்கைக்குத் துணையாகும்.

கன்னட மொழியில் 'நிர்விகாரங்களான எ, ஏ, ஒ, ஓ இவ்வெழுத்துக்களை ஈற்றிலுடைய இடைச்சொற்களுக்கும், அவதாரணம் (தோற்றம்) விசங்கை (ஐயம்) இப்பொருளில் வரும் எகாரத்திற்கும், அளபெடைக்கும் முன்னர் உயிரெழுத்துவரின் சந்தியில்லை (சப்த. 56) என்றும், 'மெச்சிக் கூறுமிடத்திலும்... ஆக்ஷேபத்திலும் வரும் ஓகாரத்தின் முன்னும் துன்பத்தைக் குறிக்குஞ் சொற்களுக்கு முனனும் சந்தியில்லை (சப்த. 57) என்றும் விதி கூறப்பட்டிருப்பதுவும்,

மலையாள மொழியில்,

> 'ய வாகமம் நிபாதத்தின்
> ஸ்வரத்திங்கல் அசுந்தரம்' (கேரளபாணினீ. 10.)

'இடைச் சொற்களாகிய உயிரெழுத்துக்குமுன் யகர வகரம் ஆகமமாகி வரும் அழகி தன்று' என்று கூறப்பட்டிருப்பதுவும் அறிதற்பாலன.

உடம்படுமெய் என்று பொதுப்படக் கூறினாராயினும், அம்மெய், யகர வகரம் என அறியப்படுகின்றது. இகர ஈகார ஏகார ஐகார வீற்றின் முன் யகரமும், அகர ஆகார உகர ஊகார ஒகரஓகார ஔகார வீற்றின் முன் வகரமும். வருகின்றன. ஆகார

ஓகாரங்கட்கு முன்னர் ஒரோவழி யகரமும் வருகின்றது. இவ்விரண்டு மெய்கள் மட்டும் இவ்வாறு வருதற்குக் காரணம் யாது என்று நோக்குதும். இடையண்ணத்திற் பிறப்பனவாகிய இ ஈ எ ஏ ஐகளுக்கு முன் இடையண்ணத்திற் பிறப்பனவாகிய யகரமும், இதழிற் பிறப்பன வாகிய உ ஊ ஒ ஓ ஔகளுக்கு முன் இதழிற் பிறக்கும் வகரமும் வருகின்றன. அகர ஆகாரங்கள் இவ்விரண்டிடங்களுள் ஒன்றிலும் பிறப்புன வல்லவாயினும், வாய் அங்காந்து ஒலிக்கப் பிறக்கும் அவ்வொலி இதழிடையே யன்றி வெளிப்படுதல் இயலாதகலின், அவற்றின் முன் இதழிற் றோன்றும் வகாரம் வருவதாயிற்று.

> "பூர்வம் தாலவ்ய மாணெங்கில்
> யகார மதிலேய்க்கணும்
> பூர்வம் ஓஷ்ட்ட்யஸ்வரம் வன்னால்
> வகாரம் சேர்த்து கொள்க" (கேரளப. சந்தி. 7.)

என்னும் சூத்திரம் இதனை நன்கு தெளிவிக்கும். தமிழில்,

> 'மாயிருண் ஞாலம்' (திருமுகாற். 91)
> 'பாயிருள் பருகி' (பெரும்பாண். 1)

என்பது போலச் சிலவழி ஆகாரத்தின் முன்னும், கோயில்' என ஓகாரத்தின் முன்னும் யகரம் வருகின்றது. கன்னடத்திலும் இவ்வாறு வருதல் உண்டு, அது,

> *ஆத்வதி னிவர்ணிதம் மத்
> தோத்வதி னைத்வதி னெவர்ணிதிம் முந்தக்கும் (சப்த. 63)

என்னும் விதியானும்,

> 'ஆயிர்த மாழ்கெயிம் பர'
> 'போயெனலும் பல்லா' (கதாயுத்தம் 2:16)

என்னும் உதாரணச் செய்யுளானும் அறியப்படும்.

தெலுங்கு மொழியில் அகர ஆகாரங்களுக்கு முன்னும் ஓகாரத்திற்கு முன்னும் யகரமே வருகின்றது.

> புட்டின + இல்லு = புட்டினயில்லு
> மா + ஊரு = மாயூரு
> ஓஹோ + அனி = ஓஹோயனி

என்பன காண்க.

* ஆகாரம் இகர ஈகாரம் ஒகாரம் ஐகாரம் எகர ஏகாரம் இவற்றின் முன் யகரம் என்பது பொருள்.

மலையாள மொழியில் ஆகாரம் ஓகாரங்களின் முன் யகரம் வகரம் இரண்டும் வருகின்றன.

போரா + இது = போராயிது
சா + உன்னு = சாவுன்னு

என்று கேரள பாணினீயத்திலும், போவுதோ வென்றவாறே (லீலா. 34) என்று லீலா திலகத்திலும்

'திவா யென்னும் நிஸாயென்னும்'
'உண்டோ யென்னு'
'அய்யோ யென்னு'

என்று குண்டர்ட்டு இலக்கணத்திலும் உதாரணம் காட்டப் பட்டுள்ளன.

இக்காட்டியவற்றால், தமிழ் கன்னடம் தெலுங்கு மலையாளம் இந்நான்கு மொழியிலும் ஆகார ஓகாரங்களின் முன்னர் யகரம் வருதல் அறியப்படும். இதற்குக் காரணம் யாது? இவற்றின்முன் யகரம் வருமொழி நோக்கி வந்தது எனல் அமையும் ஆயின், தொலுங்கு மொழியில் மாயூரு என்று வருதல் அமைவதன்று. இனி, 'ஆகாரம் தாலவ்யம் ஓஷ்ட்ட்யம் இவ்விரண்டிலும் உளது' என்று கேரள பாணினீயம் கூறுகின்றது. அதனால் யகரம் வருதல் அமைதியாகும்போலும். வேறு காரணம் தெரியவில்லை; நிற்க.

வடமொழியில் இகர ஈகாரங்கட்குமுன் இகர ஈகாரம் அல்லாத பிற உயிர் வரின், அவ்விகர ஈகாரங்கள் யகாரமாகும். உகர ஊகாரங்கள் இவ்வாறே வகாரமாகும்.

ததி + அத்ர = தத்யத்ர } ய்
நதீ + ஏஷா = நத்யேஷா }

மது + அத்ர = மத்வத்ர } வ்
வதூ + ஆஸநம் = வத்வாஸநம் }

தமிழ் மொழியில் இகர ஈகாரங்கள் கெடாமல் நிற்ப, யகரம் வருகின்றது; அவ்வாறே உகர ஊகாரங் கெடாது நிற்ப, வகரம் வருகின்றது. இத்துணையே வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் இத்திறத்தில் வேறுபாடு. இவற்றால், உடம்படு மெய்யின் இயல்பு வடமொழியிலும் திராவிட மொழிகளிலும் பெரும்பாலும் ஒத்திருத்தல் அறியப்படும்.

சிவ.

ஆகாரவீறு வகர உடம்படுமெய் பெறும் என்ற உரைகாரர் இருவரும் விகாரப்பட்ட உயிர் பற்றிக் கூறும்போது யகர உடம்படு மெய்பெற்ற 'ஆயிருதிணை' என்பதை உதாரணம் காட்டினர். இது பொருந்துமா என்பது ஐயம். இவ்வுதாரணம் தவறாக எழுதப்படவில்லை யென்பதைப் பிறிதோர் இடங் கொண்டுதான் நிறுவமுடியும்.

உயிர் முன் வரினும் ஆயியல் திரியாது (எழு. 208) என்னும் நூற்பா அகரச் சுட்டின் முன்னர் உயிர்வரின் எவ்வாறு முடியும் என்பதை யுணர்த்த வந்தது. ''உயிர் முதல் மொழி அகரச் சுட்டின் முன்னர் வரினும் முன் நூற்பாவில் கூறிய வகரம் (எழு. 207) மிக்கு முடியும்; அவ்வியல்பில் திரியாது'' என்பது இதன் பொருள். 'அவ்வாடை' என்பது உதாரணம். இந் நூற்பாவுரையின்கீழ் இளம்பூரணர்,

> ''திரியாது என்றதனானே மேல் (209) சுட்டு
> நீண்டவழி யகரத்தோடு கொள்க''

என்றும் எழுதியுள்ளார். அ + இருதிணை = அவ்விருதிணையென வரும். 'அ' என்ற சுட்டு நீண்டு 'ஆ' என்றாயவழி ஆயிருதிணை யென யகர மெய்யோடு வரும்.

இதனால் ஆகாரத்தின்முன் உயிர்முதல் மொழி வரின் வகர உடம்படுமெய் பெறும் என்றாலும் சுட்டு நீண்டு 'ஆ' என நிற்குமாயின் யகர உடம்படுமெய் பெறும் என்பது இளம்பூரணர் (நச்.) கருத்து என்பதை யறியலாம். தொல்காப்பியரும் அக் கருத்துபடவே நூற்பாக்களில் அமைத்துள்ளார்.

'ஆவின் இறுதி' (அ + இன். வ்) (எழுத். 121)
ஆவும் மாவும் (ஆ + உம், மா + உம். வ்) (எழுத். 232)
எல்லா வெழுத்தும் (எல்லா + எழுத்தும். வ்) (எழுத். 47)

என ஆகார வீறு உயிர் முதல்மொழி வருமொழியாய் வந்த விடத்து வகர உடம்படுமெய் பெற்ற நிலையிலும்,

'ஆயீரியல்' (அ + ஈர். ய்) (எழு. 108)
ஆயியல் (அ + இயல். ய்) (எழு. 208)
ஆயிருதிணை (அ + இருதிணை. ய்) (சொல். கிளவி. 1)

என அகரச் சுட்டின் நீட்சியாகிய ஆகாரவீறு யகர உடம்படுமெய் பெற்ற நிலையிலும் ஆசிரியர் கூறியதைக் காணலாம். ஆதலால் உரைக்காரர் இருவரும் "விகாரப்பட்ட மொழிக்கண்ணும் உடம்படுமெய் கொள்க" என்று கூறி, 'ஆயிருதிணை' யென உதாரணம் காட்டியது தவறன்று என்னலாம்.

எழுத்ததிகாரத்துப் புறனடை நூற்பாவாகிய 'கிளந்த வல்ல' என்பதன் உரையில் "ஆயிடை என்பது 'அவ்' என்னும் வகரவீறு வேறுபட முடிந்தது" என எழுதினார் இளம்பூரணர். 'அவ்' என்பது ஈறுகெட 'அ' என்பது 'ஆ' என நீண்டு பின் யகர வுடம்படுமெய் பெற்றது என்பது அவர் கொள்கை. இதை வைத்துத்தான் நன்னூலார் பின்னர்

"சுட்டு நீளின் யகரமும் தோன்றுதல் நெறி"

(நன். எழு. )

என்றார்.*

## திரு- அடிகளாசிரியர்

உயிரீறும் புள்ளியீறும் நிலைமொழியாய் நிற்க உயிர்வரின் அவ்வுயிர் உடம்படுமெய் பெறும் என்றும், உயிர்ஈறு நிலைமொழியாய் நிற்க உயிர்வரின் அவ்வுயிர் உடம்படுமெய் பெறும் என்றும் இரண்டு கொள்கைகள் உள்ளன.

தொல்காப்பியர் உடம்படுமெய்யினைக் கூறும் இந்நூற்பாவில் நிலைமொழியினை 'உயிர் வருவழியே' என்றும் கூறியுள்ளதால், முதற்கொள்கையினைக் கொண்டவராவர் எனக்குக் கிடைத்த இளம்பூரணர் உரைச்சுவடி இரண்டில் ஒரு சுவடியில் "உயிரீறும் புள்ளியீறும் உயிர் முதன் மொழியோடு புணரும்வழி நிகழ்வதோர் கருவி கூறுதல் நுதலிற்று" என்ற பாடமே உள்ளது. நச்சினார்க்கினியர் "இறுதியும் முதலும் உயிர்நிலை வரினே உறுமென மொழிப உடம்படுமெய்யே" என்ற நூற்பாவொன்றினைக் காட்டி இரண்டாவது கருத்தினைக் கொள்வர். அவரே 'ஒன்றென முடித்தல்' என்பதனால் 'விண்வத்துக் கொட்கும்' எனச் சிறுபான்மை புள்ளியீற்றினும் வரும். செல்வுழி உண்புழி என்பன வினைத் தொகையென மறுக்க" என்பர். ஆனால், மாறனலங்கார வுரையாசிரியர் சார்வுழி என்பது கொள்வுழி, செல்வுழி என்பனபோல ஒற்றீற்று வகரவுடம்படு மெய் வந்தது என்பர். (மாற. 47-1. உரை)

* இளம் பூரணர் எழுத்துரை (பக். 44-47) ஆ. சிவலிங்கனார். (1967)

பி. கு.

இந்நூற்பா புறப்புறச் செய்கைக்கு உதாரணம் (எழுத். 1—இளம். நச். உரை)

ஒன்றில் பல வுத்தி வருவதற்கு இந்நூற்பா காட்டப் பட்டுள்ளது (மாறனலங்காரம். 25 உரை)

''வரையறை என்றதனால்...மூங்கா இல்லை'' என்னும் இத் தொடர்களால் தமிழும் ஒரு காலத்தில் ஆங்கிலத்தைப் போல் புணர்ச்சியின்றி எழுதப்பட்டமை ஊகிக்கப்படும்--பாவாணர்.

## 7- புணர்ச்சியிற் பொருள் வேறுபடும் இடம்

## ஒலிவேற்றுமையாற் பொருள் வேறுபடல்

**142.** எழுத்தோ ரன்ன பொருள்தெரி புணர்ச்சி
இசையில் திரிதல் நிலைஇய பண்பே. **(39)**

ஆ. மொ. இல.

The words which appear similar in form in their joining give different meanings by means of intonation.

க. சு:

Words which appear similar in form
have different meanings (and) sandhi
according to the way they are pronounced.

பி.இ.நா.

நன். 391.

எழுத்தியல் திரியாப் பொருள்திரி புணர்மொழி
இசைத்திரி பால்தெளி வெய்தும் என்ப.

இ. வி. 62.

எழுத்தோ ரன்ன பொருள்தெரி புணர்ச்சி
இசையில் திரிதல் நிலைஇய பண்பே.

இளம்.

இது, எழுத்துக்கள் ஒன்று பலவாதல் கூறுதல் நுதலிற்று.

(இ—ள்.) எழுத்து ஓரன்ன பொருள்தெரி புணர்ச்சி—எழுத்து ஒரு தன்மையான பொருள் விளங்கி நிற்கும் புணர் மொழிகள்,

இசையில் திரிதல் நிலைஇய பண்பு—ஓசை வேற்றுமையால் புணர்ச்சி வேறுபடுதல் நிலைபெற்ற பண்பு.

எ—டு: செம்பொன்பதின்றொடி, குன்றேறாமா என வரும்

**நச்.**

இஃது, எழுத்துக்கள் ஒன்று பலவாம் என எய்தாதது எய்துவிக்கின்றது.

(இ—ள்.) எழுத்து ஒரு தன்மைத்தான பொருள் விளங்க நிற்கும் புணர் மொழிகள், எடுத்தல் படுத்தல் நலிதல் என்கின்ற ஓசை வேற்றுமையால் புணர்ச்சி வேறுபடுதல் நிலைபெற்ற குணம்; எ—று.

எ—டு: செம்பொன்பதின்றொடி, செம்பருத்தி, குறும் பரம்பு, நாகன்றேவன்போத்து, தாமரைக்கணியார், குன்றே றாமா என இவை இசையில் திரிந்தன.

**143.** அவைதாம்

முன்னப் பொருள புணர்ச்சி வாயின்
இன்ன என்னும் எழுத்துக்கடன் இலவே. (40)

**ஆ.மொ.** இல.

Those are to be understood in context.
They can not be written in different characters.

**க. சு:**

And they
since (their) meaning is determined from the context,
are not bound by a particular rule of writing.

**பி.இ நூ.**

இ. வி. 63.

அவைதாம்
முன்னப் பொருள புணர்ச்சி வாயின்
இன்ன என்னும் எழுத்துக்கடன் இலவே.

**இளம்.**

இது, மேலதற்கோர் புறனடை கூறுதல் நுதலிற்று.

(இ—ள்.) அவை தாம்—மேற்சொல்லிய புணர்மொழிகள் தாம், முன்னப் பொருள—முன்னத்தினான் உணரும் பொருண்மையை

யுடைய, புணர்ச்சியின் இன்ன என்னும் எழுத்துக்கடன் இல— அவை புணர்ச்சியிடத்து இத்தன்மைய என்னும் எழுத்து முறைமையையுடைய வல்ல.

செம்பொன்பதின்றொடி என்றவழிப் பொன்னாராய்ச்சி உள்வழிப் பொன் எனவும். செம்பாராய்ச்சி உள்வழிச் செம்பெனவும் குறிப்பால் உணரப்பட்டது. [1]மற்று, இதன்மேல் [2]“இசையிற் றிரிதல் நிலைதல்”, என அறியுமாறு கூறினானன்றோ எனின், ‘ஓசை’ என்றமையான் அஃது ஒலியெழுத்திற்கெனவும், ‘இன்னவென்னும் எழுத்துக்கடனில’ என்றதனான் இது வரி வடிவிற்கெனவும் கொள்க.

**நச்.**

இது மேலதற்கோர் புறனடை கூறுகின்றது.

(இ—ள்.) பல பொருட்குப் பொதுவென்ற புணர் மொழிகள்தாம், குறிப்பான் உணரும் பொருண்மையினை யுடைய; புணர்ச்சியிடத்து இத்தன்மைய வென்னும் எழுத்து முறையை யுடையவல்ல; எ—று.

செம்பொன்பதின்றொடி என்றுழிப் பொன் ஆராய்ச்சி யுள்வழிப் பொன் எனவும், செம்பு ஆராய்ச்சியுள்வழிச் செம்பு எனவும் குறிப்பால் உணரப்பட்டது. இசையில் திரிதல் என்றது ஒலியெழுத்திற்கெனவும் ‘எழுத்துக்கடனில’ என்றது வரிவடிவிற் கெனவும் கொள்க.

**சுப்பிர.**

இச்சூத்திரம் வரிவடிவிற்கெனக் கொள்க என உரைகாரர்கள் கூறினர். முன்னருள்ள சூத்திரத்தில் பல பொருளுள்ள ஒரு தொகைமொழி ஓசை வேற்றுமையால் மாறுபடும் எனக் கூறப் பட்டமையான், அப்பொருள் வேற்றுமை எதனாற் புலப்படும் என ஐயந்தோன்றக் குறிப்பான் உணரப்படும் என இச்சூத்திரம் ஐயம் அகற்றிற்று எனக் கூறின் குற்றம் என்னை?

இச்சூத்திரமும் இதற்கு முன்னுள்ள சூத்திரமும் எற்றுக்கு எனின், தமிழ் மொழியில் சொற்களின் பொருள் அறியப்படாத

சு. வே: 1. மற்றிதுமேல்
2. இசையிற்றிரிதல் என

வரை, புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சியா அல்வழிப்புணர்ச்சியா என அறிதல் இயலாமையின் இவ்விரண்டு சூத்திரங்களும் வேண்டும் என்க.

நான்காவது புணரியல் உரைவளம் முற்றிற்று.

**இணைப்பு**

## 8. திரிந்ததன் திரிபு

"ஆசிரியர் தொல்காப்பியர் எழுத்தினை எட்டு வகையானும் எட்டிறந்த பலவகையானும் இணர்த்தினர்" எனக் கூறி அவ் வகைகள் இன்னின்ன என்றும் எழுதினர் உரையாசிரியர். அவ் வெட்டிறந்த பலவகையில் திரிந்ததன் திரிபு அது என்றலும், திரிந்ததன் திரிபு பிறிது என்றலும், திரிந்ததன் திரிபு அதுவும் பிறிதும் என்றலும் ஆகிய மூன்று வகைகளையும் கூறினார். மூன்றனுள் முன்னிரண்டு வகைகளை மூன்றிடங்களில் சுட்டிச் சென்றார் அவர். இம்மூன்றன் இலக்கணம் பற்றிச் சங்கத்துச் சாமி எனச் சிறப்பிக்கப்படும் திரு. பண்டித. சித. நாராயண சாமி யார் அவர்கள் செந்தமிழ்த் தொகுதி 52 பகுதி 70ல் விளக்கமாக எழுதியுள்ளார்கள். அவர்கள் கருத்துவழிநின்று இளமபூரணர் எழுதிய இடங்களை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

'திரிந்ததன் திரிபு அதுவென்றல்' என்பது, விகாரப்பட்டதின் விகாரத்தை விகார எழுத்தாகக் கொள்ளாமல் மூல எழுத்தாகக் கொள்ளுதல். உதாரணமாக 'கஃறீது' என்ற இருசொற் புணர்ச் சியைக் கொள்ளலாம். இது கல்-தீது எனப் பிரிக்கப்படும். நிலைமொழி யீற்றிலுள்ள லகர ஒற்றைக் கண்ட வருமொழி முன்னுள்ள தகர வொற்று, றகர ஒற்ருக மாறும் என்பது விதி. லகர தகர ஒற்றுக்கள் இடைநிலை மயக்கம் பெரு. ஆய்தமும் தகர ஒற்றும் மயக்கம்பெறும். 'அஃது' என்பதில் மயங்கியது காண்க. 'கஃறீது' என்பதில் நிலைமொழியீற்று லகரம் ஆய்த மாகத் திரிந்தது. தகரம் றகரமாகத் திரிய வேண்டியதில்லை. என்றாலும் நிலைமொழி லகரத் திரிபாகிய ஆய்தத்தை, வரு மொழித்தகரமானது, ஆய்தமாகவே கருதாது, அதன் முன்னைய வடிவமாகிய 'லகர' எழுத்தாகவே கருதியதாம். சொற் புணர்ச்சியிடத்துமட்டுமன்றி ஆசிரியர் ஆட்சியிலும் இதனைக் காணலாம்.

(1) மாமரக் கிளவியும் ஆவும்மாவும்
ஆமுப் பெயரும் அவற்றோரன்ன
அகரம் வல்லெழுத் தவையண்நிலையர்
னகரம் ஒற்றும் ஆவும்மாவும். (232)

'மா (மரம்), ஆ, மா ஆகிய மூன்று பெயர்ச் சொற்களும், வேற்றுமை வழியில் வருமொழி வல்லெழுத்தோடு புணருமிடத்து மேல் நூற்பாவில் (230) கூறப்பட்ட யா, பிடா, தளா ஆகிய மூன்று பெயர்ச்சொற்களோடு ஒருதன்மையவாய் வல்லெழுத்துப் பெறாது மெல்லெழுத்துப் பெற்று முடிதலுடையன. அவற்றுள் ஆவும் மாவும் ஆகிய இரண்டும் அகர எழுத்தும் வல்லெழுத்தும் நிலைபெறாவாய் னகர ஒற்றுப்பெற்று முடியும்'' என்பது இதன் உரை.

உதாரணம் மாஅங்கோடு, ஆன்கோடு, மான்கோடு என்பன வாம். இந்நூற்பாவின் உரைக்கீழ் உரையாசிரியர்.

''அவற்றோ ரன்ன என்ற மாட்டேற்றால் பெற்று நின்றது மெல்லெழுத்தாகலின் 'அகரம் வல்லெழுத்தவையவண் நிலையா' என்றோதற்பாலதன்றெனின் மேல் ''ஊவென் ஒருபெயர் ஆவொடு சிவணும்'' (உயிர்மயங்கியல். 67) என்ற வழி அம்மாட்டேற்றானே அதன் வல்லெழுத்து வீழ்வும் கொளல் வேண்டித் திரிந்ததன் திரிபது என்னும் நயத்தானே மெல்லெழுத்தை வல்லெழுத்தாக வோதினன் எள்க''

என்றெழுதினார். மா, ஆ, மா ஆகிய மூன்று பெயர்களும் யா முதலிய மூன்று பெயர்களோடு மாட்டேற்றப்பட்டன.

யாமரக் கிளவியும் பிடாவும் தளாவும்
ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே (130)

என. யா முதலிய மூன்றும் வருமொழி வல்லெழுத்தோடு புணருமிடத்து (வேற்றுமையில்) மெல்லெழுத்து மிகும் என்பதாயிற்று. அடுத்து, 'மாமரக்கிளவி தவிர ஆவும் மாவுமாகிய இரண்டு பெயர்களும் ''குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும் அறியத்தோன்றும் அகரக் கிளவி'' என்ற நூற்பாவின் விதிப்படி பெற்று நின்ற அகர எழுத்தும், வருமொழி வல்லெழுத்து மிகுதலும் இன்றி. னகர ஒற்றுப் பெறும்' என்றது, மாட்டேற்றுக்கு மாறுபடுகின்றது. மாட்டேற்றின்படி ''அகரம் மெல்லெழுத்து அவை அவண் நிலையா'' என்றே கூறியிருக்க வேண்டும். அவ்வாறு கூறாமைக்குக் காரணம் ஊகாரவிறுதி

பற்றிப் பின்னர்க் கூறும்போது "ஊவென் ஒரு பெயர் ஆவொடு சிவணும்" எனமாட்டேற்றவேண்டியிருப்பதாம். 'ஊ' என்ற பெயர் 'குறை என்ற சொல்லுடன் புணரும்போது, னகர எழுத்துப்பெற்று 'ஊன்குறை' என வரும், ஊகாரவிறுதி வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி வல்லெழுத்து மிக்கு முடியும் என்பது விதி (267). அன்றியும் தனி 'ஊ' ஆதலின் உகர எழுத்தும் பெற்றுவரும் என்பதும் ஒரு விதி உண்டு. அவற்றின்படி வரும் உகரமும் வல்லெழுத்தும் னகர ஒற்று வரும்போது நிலைத்தல் இல்லை. அதற்கு விதி கூறுவதாயின் நூற்பா ஒன்று மிகுதிப்படும். அதைக் குறைக்கவேண்டி மாட்டேற்றால் கூறினார். "அகரம் மெல்லெழுத்தவையவண் நிலையா" என்று கூறியிருந்தால் பின்னர் "ஊவென் ஒரு பெயர் ஆவொடு சிவணும்" என மாட்டேற்ற முடியாது, 'ஊ' என்பது மெல்லெழுத்துமிகும் என்பது இல்லையாதலின். மாட்டேற்றுக் கேற்பவே, 'அகரம் வல்லெழுத்தவையண் நிலையா" என்றார்.

ஆயின் 'ஊ' என்பதை மாட்டேற்றுவதற்காக மாறுபடக் கூறுதல் பொருந்துமோ எனின், திரிந்ததன் திரிபு அது என்னும் நயத்தாற் கூறுதலின் பொருந்தும் என்னலாம். மாமரக்கிளவி முதலிய மூன்றும் மெல்லெழுத்துப் பெற்றாலும் ஆகார வீற்றுப் பொதுச் சூத்திர விதிப்படி வேற்றுமையில் வல்லெழுத்துப் பெறுவன. அதனாலேயே "யாமரக் கிளவியும்" என்பதை யடுத்து 'வல்லெழுத்து மிகினும் மானமில்லை' (231) என்றார் ஆசிரியர். எனவே தொல்காப்பியர் யா முதலியவற்றிற்கு வல்லெழுத்து மிகுதல் இயல்பு என்றும் மெல்லெழுத்து மிகுதல் திரிபு என்றும் கொண்டார். மெல்லெழுத்து மிகுதலாகிய திரிபு, பொதுச்சூத்திர விதிப்படி வல்லெழுத்து மிகுதலாகிய இயல்பில் திரிந்ததாம். ஆதலின் அத்திரிபை வேறுபட்ட தனித் திரிபாகக் கருதாமல் முன்னைய வல்லெழுத்து மிகுதலாகவே கருதினார். அதனால்தான் 'வல்லெழுத்து அவண் நிலையாது' என்றார். இது, திரிந்ததன் திரிபு அது என்னும் நயத்தாற் கூறியதாம். 'ஊ' என்ற பெயரை மாட்டேற்றுவதற்குத் துணை செய்தலின் இந்நயத்தை மெற்கொண்டார் ஆசிரியர். இதில் திரிந்தது யாதெனின் வல்லெழுத்து மிகுதி; அதன் திரிபாவது மெல்லெழுத்து மிகுதல். அது என்றலாவது மெல்லெழுத்தாகிய மிகுதியைப் பழைய வல்லெழுத்து மிகுதியாகவே கருதுதல்.

(2) ஆறன் மருங்கிற் குற்றியலுகரம்
ஈறு மெய்யொழியக் கெடுதல் வேண்டும். (469)

"எண்ணுப் பெயராகிய 'ஆறு' என்பது திரிந்த 'அறு' என்ற சொல்லில் உள்ள குற்றியலுகரம் ஆயிரம் என்ற சொல்லுடன் சேரும்போது தான் ஏறிய மெய்யாகிய றகர ஒற்றுக் கெடாது நிற்ப உகரமாகிய அவ்வீறு கெட்டு முடிதல் வேண்டும்" என்பது இதன் உரை. உதாரணம் அறாயிரம் என்பது.

உரையாசிரியர், இதன் உரைக்கீழ். "திரிந்ததன் திரிபு அது' என்னும் நயத்தால் 'ஆறன் மருங்கின்' என்று ஓதப்பட்டது. என எழுதியுள்ளார். இந் நூற்பாவின்படி நிலைமொழி 'அறு, என்பதாகும்: 'ஆறு' என்பதன்று. 'அறு' என்ற எண்ணின்முன் 'பஃது' என்ற எண் வரும் போது முன்னையது நெடு முதல் குறுகி 'அறுபஃது' எனவரும் என்பது, "மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும்" என்ற நூற்பாவில் கூறப்பட்டது. அதற்குப் பின்னர் அளவுப்பெயர் முதலிய பெயர்கள் வரும்போது எவ்வெவ்வாறு புணரும் என்று கூறிவந்த விடமெங்கும் 'அறு' என்பதே நிலை மொழியாகக் கொள்ளப்பட்டது. 'ஆயிரம் என்ற எண்ணுப் பெயர் வருமொழியாக வரும்போதும் நிலைமொழி 'அறு' என்பதே. அதனுல் ஆசிரியர் "அறு என்பதன் உகரம் ஈறு மெய் யொழியக் கெடுதல்வேண்டும்" என்று கூறியிருக்க வேண்டும், 'ஆறு' என்பது நிலைமொழிபோல் 'ஆறன் மருங்கின்" என்று தொடங்கினுர். காரணம் திரிந்ததன் திரிபு அது என்ற நயத்திற் கொண்டதே.

'அறு' என்பது 'ஆறு' என்ற எண்ணுப்பெயரின் திரிந்த வடிவம். அதில் திரிந்தது 'ஆ' என்ற நெட்டெழுத்து. அதன் திரிபாவது 'அ' என்று குறுகியது. அக்குறுக்கமாகிய திரிபைத் தனித்திரிபாகக் கருதாமல் அதன் முன்னைய வடிவாகிய நெடிலாகவே ஆசிரியர் கருதியது அது எனக்கருதுதலாம். ஆதலின் 'ஆறு' என்பது நிலைமொழிபோல "ஆறன் மருங்கின்" என்றுர். என்றுலும் 'அறு' என்பதே நிலைமொழியாகும், இவ்வாறு கூறியது திரிந்ததன் திரியு அது என்னும் நயத்தாற் கூறியதாம்.

இனித் 'திரிந்ததன் திரிபு பிறிது' என்னும் நயம் பற்றிக் காண்போம். அஃதாவது, விகாரப்பட்டதின் விகாரத்தை மூல எழுத்தாகக் கொள்ளாது வேறெழுத்தாகக் கொள்ளுதலாம், உதாரணமாக மரக்கோடு என்பதைக் கொள்ளலாம். மரம் என்ற சொல் வேற்றுமையில் வல்லெழுத்தோடு புணருமிடத்து உறுதி மகரம் கெட 'மர' என நிற்கும். 'கோடு' என்பதின் முதல் ககர

மெய்யெழுத்தானது 'மர' என்ற திரிந்த சொல்லின் இறுதியை மகர விறுதி யெனக் கருதாமல் அகர விறுதியாகவே கருதித் தான் மிக்கு முடிந்தது. இவ்வுதாரணத்தில் திரிந்த (கெட்ட) எழுத்து மகரம். அம்மகர எழுத்தின் திரிபாவது தான் கெட்டு அகரவீறு என்பதற்கு இடம் கொடுத்தல். பிறிது என்றலாவது அகர விறுதியை முன் எழுத்தாகிய மகர விறுதி எனக் கருதாமல் தனி எழுத்தாக அஃதாவது அகர விறுதியாகவே கருதுதல். இவ்வாறு விளக்கம் காண்க. இனி இந்நயத்திற்கு உரையாசிரியர் சுட்டிக்காட்டிய இடம் ஒன்று காண்போம்.

வஃகான் மெய் கெடச் சுட்டுமுதல் ஐம்முன்
அஃகான் நிற்றல் ஆகிய பண்பே. (123)

இதற்கு உரையாசிரியர்,

"சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஐகார வீற்றுச் சொல் முன்னர் வற்றுச்சாரியை தன் வகரமாகிய மெய்கெட அகரம் நிற்றலாகிய பண்பினையுடைய"

எனவுரையெழுதி, அவையற்றை, இவையற்றை, உவையற்றை என உதாரணமும் காட்டிப் பின்னர்,

"ஆகிய பண்பு என்றதனால் சுட்டு முதலாகிய ஐயென் இறுதி ஐகாரத்தோடு நில்லாதவழி வற்றின் வகரம் அகரம் நிற்கக் கெடாது வற்றுயே நிற்றல் கொள்க. மற்றிது திரிந்ததன் திரிபு பிறிது என்னும் நயத்தாற் கெடாதே நிற்குமாதலின் இது கூறவேண்டாவெனின், சுட்டு முதல் ஐயீறுச் சொல்லின் ஐமுன் என ஓதாது 'சுட்டுமுதல் ஐமுன்' என அச்சொல் முன் எல்லாம் கெடுவதுபோல ஓதினமையின் வேண்டிற் றென்பது."

எனவும் எழுதினர். "ஆகிய பண்பு......நிற்றல் கொள்க" என்ற கருத்து திரிந்ததன் திரிபு பிறிது என்னும் நயத்தால் பெறப்படு மாற்வறக் காண்போம். அவ்+வற்று+ஐ என்பன 'அவற்றை' என வரும், திரிந்ததன் திரிபு பிறிது எனக் கருதுவது வற்றுச் சாரியையின் முதல் வகரவொற்றின் தொழிலாகக் கொள்வோம். 'அவ்' என்பது அவை யென்பதன் திரிந்த வடிவம். இதில் திரிந்த எழுத்தாவது 'வை' என்பதாம். வையின் திரிபாவது ஐகாரம் கெட்டு வகர ஒற்றாய் நிற்றல். அவ்வகர ஒற்றை அதன் முன்னைய வடிவெழுத்தாகிய 'வை' யென நினையாமல் வகர ஒற்றென

வேறெழுத்தாகவே நினைத்தல், பிறிது எனக் கருதலாம். அவ்வாறு நினைந்து வற்றுச்சாரியையின் முதல் வகர ஒற்று அகரம் நிற்கக் கெடாமல் அப்படியே நின்றது. அதனுல் 'அவற்றை' என வந்தது. இப்படி வருவது திரிந்ததன் திரிபு பிறிது என்னும் நயத்தால் எனக் கொள்ளலாம்.

* சுட்டு முதலாகிய ஐயென் இறுதி ஐகாரத்தோடு நில்லாத வழி வற்றின் வகரம் அகரம் நிற்கக் கெடாது வற்ருயே நிற்கும்' என்பது திரிந்ததன் திரிபு பிறிது என்னும் நயத்தாலேயே பெற வேண்டியிருக்க ''ஆகிய பண்பு'' என்றதனுற் பெற வைத்தது ஏன் என்ற வினுவிற்கு விடையாக ''சுட்டு முதல் ஐயீற்று... வேண்டிற்றென்பது'' என்பதைக் கொள்க. ''ஆகிய பண்பு...... வேண்டிற்றென்பது'' இத்தொடரில் இடையில் வந்த 'மற்றிது' என்பதிலுள்ள 'இது' என்ற சுட்டுக்கு 'சுட்டு முதலாகிய ஐயென் இறுதி ஐகாரத்தோடு நில்லாத வழி வற்றின் வகரம் அகரம் நிற்கக் கெடாது வற்றாயே நிற்கும் 'என்ற கருத்து' என்றும், இது கூறவேண்டா என்பதிலுள்ள 'இது' என்ற சுட்டிற்கு 'ஆகிய பண்பு என்பதனாற் பெறப்பட்டதாகக் கூறிய கருத்து' என்றும், 'அச்சொல் முன் எல்லாம்' என்பதற்கு 'ஐகெட்டு வந்த 'அவ் முதலிய சொற்களின் முன் எல்லாம்கூட' என்றும் பொருள் கொள்க.

இனித் திரிந்ததன் திரிபு அதுவும் பிறிதும் என்னும் நயம்பற்றி உரையாசிரியர் யாண்டும் சுட்டினார் இல்லை. ஆதலின் இதன் விளக்கத்தை மட்டும் சங்கத்துச் சுவாமிகள் கூறியதையே வைத்துக் கூறுகின்றோம்.

(1) நினவ கைகள். நினதுகை என்பனவற்றில் இதைக் காணலாம். இவைகளின் நிலைமொழிகள் நீ+அ எனவும் நீ+அது எனவும் பிரிக்கப்படும். அ, அது என்பன ஆறாம் வேற்றுமையின் பன்மை ஒருமை உருபுகள். 'நீ' என்பது 'நி' எனக் குறுகி, னகர ஒற்று சேர்ந்து 'நின்' என்றாகும். பின் அகரம் சேர்ந்து 'நின' என்றாகும். அவ்வாறாயின் நின+அ எனவும் நின+அது எனவும் இவ்விரண்டும் பிரிக்கப்படும், பன்மையுருபாகிய 'அ' என்பது நின என்பதின் ஈற்றெழுத்தின் அகரத்தைப் பொருட்படுத்தாமல் தான் நிலைத்து நின்றது. ஏன் எனின் தான் முன்னின்ற

* இப்பகுதி வேண்டாதது என்ருலும் விளக்கம் வேண்டி எழுதப் பட்டது.

அகரத்தோடு இயைந்து வருவதில்லை என்றாலும், அந்த அகர எழுத்தைத் தனி எழுத்தாகக் கருதாது அது வருவதற்கு முன்னைய வடிவாகிய (நின் என்பதில்) னகர ஒற்றாகவே கருதியது. மெய்யெழுத்தின் மேல் தான் ஏறி முடியும் இயல்புடைய உயிராதலின் னகர ஒற்றை நோக்கிக் கெடாது நின்றது. இவ்வாறு நிற்பது திரிந்ததன் திரிபு அது என்று கருதிய நயம் என்க. பின்னர் நின என்பதன் இறுதி அகரத்தையும் உருபு அகரத்தையும் உடம்படுத்த வகர மெய்வந்து நினவ என்ற முடிபு ஆகிறது.

நினது என்பது நின அது எனப் பிரிக்கப்பட்டு அது என்பதன் அகரவுயிர் நின என்பதன் இறுதி அகரத்தைத் திரிந்த வேறு தனி எழுத்தாகவே கருதியதால் தனக்கும் அவ்வுயிர்க்கும் மயக்கம் இன்மையின் தானே கெட்டது. (நின+அது—நினது) இது திரிந்ததன் திரிபு பிறிது எனக் கருதிய நயம்.

நின என்பதில் இறுதி னகரம் திரிந்ததாம். அதன் திரிபாவது தான் மெய்யாய் இருந்து அகர உயிர் ஏறப்பெற்றதாம். அந்த அகரத்தை அகரமாக எண்ணாமல் பழைய னகர ஒற்றாக் நினைத்தல் அது என நினைத்தலாம். இவ்வாறு நினைத்தது பண்மையருபாகிய 'அ' என்பது. இறுதி அகரத்தைத் தனி எழுத்தாகவே—அதாவது னகர ஒற்றாகக் கருதாது பிறிதோர் எழுத்தாகவே கருதியது'அது' என்ற ஒருமையுருபின் அகரம் இது திரிந்ததன் திரிபு அதுவும் பிறிதும் என்றலுக்கு விளக்கம்,

(2) இனி நினவ நினது என்பனவற்றில் வருமொழிகள் வேறு வேறு காட்டப்பட்டன வாதலின் வருமொழி ஒன்றாகவே உள்ள உதாரணத்தில் இந்நயத்தைக் காண்போம். 'கலத்துக் குறை' என்பதை உதாரணமாகக் கொள்ளலாம் இது கலம்+குறை எனவும், கலன்+குறை எனவும் பிரிக்கப்படும்.

கலம்+குறை எனப் பிரிக்கப்படும்போது கலம் என்ற சொல், ''மகரவிறுதி வேற்றுமையாயின், துவரக்கெட்டு வல்லெழுத்து மிகுமே'' என்ற விதிப்படி மகரம் கெட்டுக் 'கல' நிற்கப் பின் வருமொழி வல்லெழுத்து மிக்குக் 'கலக்குறை' என வரும். ''அத்திடைவரூஉம் கலமென்னளவே'' என்ற விதிப்படி அத்துச்சாரியை வரக் 'கலத்துக்குறை' எனவரும். இதில் வருமொழி வல்லெழுத்தானது, 'கலம்' என்பது திரிந்த 'கலத்து' என்ற சொல்லை வேறுபட்ட பிறிதான சொல்லாகக் கருதாமல்

பழைய வடிவாகிய 'கலம்' என்ற சொல்லாகவே கருதி மிகுந்தது. இதில் திரிந்தது கலம் என்னும் சொல். அதன் திரி பாவது அத்துப் பேற்றுடன் மகரம் கெட்டுக் 'கலத்து' என்று நின்றது. அது என்றலாவது பிறிதான திரிந்தசொல் எனக் கருதாது பழைய 'கலம்' என்ற சொல்லாகவே கருதுவது. அதனுல் கலம்+குறை என்பன கலத்துக்குறை எனப் புணரு மிடத்து வல்லெழுத்து மிகுதியானது ஈற்றுப் பொதுமுடிபால் வந்ததாதலின் திரிந்ததன் திரிபு அது என்னும் நயத்தால் வந்த தென்க.

கலன்+குறை எனப் பிரிக்கப்படும்போது இடைவரும் அத்துச்சாரியை காரணமாக நிலை மொழியீற்றுனகரம் கெட்டுக் 'கலத்து' என நின்று பின் வல்லெழுத்து மிக்குக் 'கலத்துக்குறை. என்றாகும். இதற்கு,

> அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்
> ஒற்றுமெய் கெடுதல் தெற்றென் றற்றே
> அவற்றுமுன் வரூஉம் வல்லெழுத்து மிகுமே.

என்பது விதி. இதில் வருமொழி வல்லெழுத்தானது, 'கலத்து' என்ற சொல்லை முன்னைய 'கலன்' என்ற சொல்லாகக் கருதாமல் திரிந்த பிறிதான சொல்லாகவே கருதிய தால் அதில் உள்ள சாரியை நோக்கி மிகுந்தது. திரிந்தது கலன் என்ற சொல். அதன் திரிபாவது அத்துச்சாரியையுடன் சேர்ந்த னகரம் கெட்டுக் 'கலத்து' என்றானது; பிறிது என்றலா வது கலன் என்ற சொல்லாகக் கருதாமல் திரிந்ததான 'கலத்து' என்ற வேறு சொல்லாகவே கருதியது. எனவே கலன்+குறை என்பன 'கலத்துக்குறை' என வருமிடத்து வல்லெழுத்து மிகுதி யானது ஈற்றுப் பொதுமுடிபான் இன்றிச் சாரியை நோக்கிய முடிபால் வந்ததாதலின் திரிந்ததன் திரிபு பிறிது என்னும் நயத் தான் வந்ததென்க.

திரிந்ததன் திரிபு அது எனக்கருதுதலும், திரிந்ததன் திரிபு பிறிது எனக் கருதுதலும் திரிந்ததன் திரிபு அதுவும் பிறிதும் எனக் கருதுதலும், நிலைமொழியிறுதிபற்றி வருமொழியின் முதல் எழுத்தின் தொழில் எனக் கொள்க. இவ்வாறு கொள்வது இருசொற் புணர்ச்சியில் என்று கொள்க. ஆசிரியர் தொல் காப்பியர் கூற்றாக நூற்பாவில் கொள்ளுமிடங்களில் முதலில் கூறிய கருத்தைப பற்றிப் பின்னர்க் கூறப்படும் கருத்தின் தொழில் எனக்கொள்க.

(ஆ. சிவலிங்கனார்
இளம்பூரணர் எழுத்துரை. பக்கம் 64–76. மாணிக்கம் பதிப்பகம், சென்னை-7. (1967),

## பயன்படுத்தப் பெற்ற நூல்கள்


1. தொல்—எழுத்து—இளம்பூரணம்.
சென்னை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடு.
எண் 870 முதற்பதிப்பு 1955.

2. தொல்—எழுத்து—இளம்பூரணம்
திரு—அடிகளாசிரியர் பதிப்பு
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர் 1969.

3. தொல்—எழுத்து—குறிப்புரையுடன்
டாக்டர், பி. சா. சுப்பிரமணியசாஸ்திரியார்
திருவையாறு, பி. சு. சாமிநாதன் பதிப்பு 1937.

4. தொல்—எழுத்து—நச்சினார்க்கினியம்
சென்னை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு
எண் 17. ஆறாவது பதிப்பு 1972.

5. தொல்—எழுத்ததிகார ஆராய்ச்சி
வே. வேங்கடராசுலு ரெட்டியார்,
சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு 1944.

6. தொல்—எழுத்து—நச்சினார்க்கினியம்
சி. கணேசய்யர் பதிப்பு. இலங்கை, சுன்னாகம்
திருமகள் அழுத்தகம் வெளியீடு 1952.

7. தொல்—எழுத்து—நச்சினார்க்கினியம்
இராம–கோவிந்தசாமி பிள்ளை பதிப்பு
தஞ்சைச் சரசுவதிமகால் வெளியீடு 1957

8. தொல்காப்பியம்—நன்னூல்—எழுத்ததிகாரம்
க. வெள்ளை வாரணன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் 1962.

9. அவிநயம்
க. ப. அறவாணன் பதிப்பு
சைன இளைஞர் மன்றம், சென்னை 17. 1975.

10. இலக்கண விளக்கம்
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 1973.

11. சுவாமிநாதம்—இலக்கணத் தொகை—எழுத்து
பதிப்பு: ச. வே. சுப்பிரமணியன், விற்பனை உரிமை பாரி நிலையம், சென்னை 1967.

12. தொன்னூல் விளக்கம்
பதிப்பு: சா. வே. சுப்பிரமணியன்
தமிழ்ப் பதிப்பகம், அடையாறு, சென்னை 1978.

13. நன்னூல்
டாக்டர், உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு (4) 1953.

14. நேமிநாதம்
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை. 1964

15. முத்துவீரியம்
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. 1772

16. வீரசோழியம்
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை. 1970

17. Tolkappiyam-in English with critical studies
Kural neri Publishing house, Madurai 1963

18. Journal of Tamil studies (December 1972)
International Institute of Tamil studies
Adayaru, Madras-20.

## புணரியல் தொடர்பாகக் கிடைக்கப் பெற்ற கட்டுரைகள் சில

1. இடைச்சொல்
   ந. வீ. செயராமன்
   தொல்காப்பியக் கருத்தரங்கு
   அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
   அண்ணாமலை நகர். 1970.

2. உடம்படுமெய்
   திரு—அடிகளாசிரியர்
   கி. ஆ. பெ. விசுவநாதம் மணிவிழாமலர்
   திருச்சி, தமிழ்ச்சங்கம் (1958)

3. உடம்படுமெய்
   ஆ. சிவலிங்கனார்
   இளம்பூரணர் எழுத்துரை
   மாணிக்கம் பதிப்பகம் சென்னை-7. (1967)

4. உம்மையிடைச்சொல்
   டாக்டர், தி. முருகரத்தினம்
   இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றக்
   கருத்தரங்கு மலர், மதுரை. 1969

5. எழுத்துப்பேறும் சாரியையும்
   சோ. ந. கந்தசாமி
   இலக்கணச் சிந்தனைகள்
   அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை
   வெளியீடு அண்ணாமலை நகர். 1974

6. குற்றியலுகரமும் அற்றென மொழிப
   Journal of Annamalai University
   அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1952.

7. சாரியை—அக்கு
ஆ. சிவலிங்கனார்,
செந்தமிழ்ச் செல்வி. சிலம்பு. 54 பரல் 10.
சை. சி. கழகம், சென்னை-1.

8. தொல்காப்பியச் சாரியை
டாக்டர், செ. வை. சண்முகம்
இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கு மலர் 1974.

9. தொல்காப்பியத்தில் அக்கும் இக்கும்
டாக்டர், மோ. இசரயேல்
தமிழ்ப்பொழில் துணர் 39. 1963–64.
கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்

10. தானும் தாமும்
டாக்டர், மு. வரதராசன்
மணிமலர் தமிழாசிரியர் மாநாடு 1963.

11. திரிந்ததன் திரிபு
இளம்பூரணர் எழுத்துரை—ஆ. சிவலிங்கனார்
மாணிக்கம் பதிப்பகம், சென்னை–7. 1967

12. புணரியல்
M. S. நடேசன்
Journal of the sri Venkateswara University, Oriental Institute. (1954)

குற்றியலுகரமும் அற்

# சொல்லகராதி

(எண்—பக்க எண்)


அஃது இஃது உஃது 19
அஃறிணை 74
அக்குச்சாரியை 102
அகர உருபு 65
அகல் 81
அடிகளாசிரியர் 16, 23, 34, 41, 58, 103, 106, 141
அண்ணாத்தேரி 117
அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் உயர் ஆய்வுத் துறை 18
அண்ணாமலை நகர் 9
அத்து 113, 116, 120
அதற்கு 92
அதன+ஐ 132
அதனை 130
அரசக்கன்னி 101
அரசர்கண் 60
அருமந்த அரசாட்சி 49
அல்லுச் சாரியை 82
அல்வழியென்றது பெரும் பான்மையும் எழுவாயினை 51
அலங்கு காந்தள் 78
அவற்றுக்கோடு 51, 117
அவற்றொடு 130
அவன் 73
அவையற்றுக்கோடு 118
அவையற்றை 89, 90
அன்மொழித் தொகை 41, 43
ஆ. 28, 81, 83
ஆங்கண் 60, 62, 63
ஆங்கில மொழி பெயர்ப்பு (ஆ. மொ.) 3, 7, 23, 27, 30, 36, 40, 44, 50, 56, 59, 64, 69, 72, 74, 77, 83, 86, 89, 91, 93, 96, 97, 98, 100, 103, 105, 107, 110, 115, 121, 123, 123, 124, 126, 127, 132, 133, 142, 143
ஆசிரியர் 6 முதல்
ஆடிக்குக் கொண்டான் 99, 100
ஆடூஉ 72
ஆடூஉவின்கை 75
ஆண்டியப்பன், தே. 3
ஆய்வுக்கோவை 9
ஆயர்மகளிர் 35
ஆயிரத்தொருபது 41
ஆயிரம் 16—18
ஆயிருதிணை 135, 140
ஆல் 4
ஆல் இலை 28
ஆல் விழ்ந்தது 28
ஆலடை 128
ஆலிலை 128
ஆவலிது 28
ஆவின்கண் 84
ஆவின்கோடு 84
ஆவினை 84
ஆவுண்டு 84
ஆழாக்கு 87

ஆறு 16, 18
ஆறு—அறு 18
ஆறுபயனிலை 52
ஆன்உருபு 29
ஆன்கண் 84
ஆன்கோடு 84
ஆன்சாரியை 79
ஆனது—ஆவினது 84
ஆனின் 84
ஆனை 84
ஆக்ஷேபம் 137
இக்கு
இடை 32
இடைச் சொல் 33
இடையும் உரியும் 57
இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் 9
இயல்பு ஒன்று 32
இயல்புகணம் 52
இரட்டுற மொழிதல் 93
இராமன் மகன் 67
இராமனது மகன் 67
இருபெயரொட்டுப் பண்புத் தொகை 41 42 43 53 57 76
இருவகை யெச்சம் 57
இருவிளக் கொற்றன் 119
இருளத்துக் கொண்டான் 79 83 117
இல் முன் 46
இலக்கண விளக்கச் சூறாவளி 82
இலக்கண விளக்கம் 31, 34, 56, 59, 64, 69, 75, 77, 83, 97, 123, 125 126, 127, 133, 142, 143
இலக்கண விளக்க முடையார் 77 82 130
இலக்குவனார் 3, 7, 23, 27, 30, 36, 38, 40, 44, 50, 56, 59, 64, 69, 72, 74, 77, 83, 86, 89, 91, 93, 96, 98, 99, 100, 103, 105, 107, 110, 115, 121, 123, 124, 127, 132, 133, 133, 142, 143
இயேசு 14
இலை 4
இவன் 73
இவையற்றை 89 90
இளம் பூரணர் (இளம்) 1 முதல்
இளம்பூரண அடிகள் 6 48 137
இளம்பூரணம் 41 53
இன்னோசை 45
ஈ 28
ஈங்கண் 60—63
ஈமக்குடம் 101
ஈற்றுவல்லெழுத்து 120
ஈற்றொடு—விகாரத்தால் தொக்கது 5
உண்டசாத்தன் 41
உண்டு வந்தான் சாத்தன் 41
உத்தரபதம் 35 உம் 79 80 104 105
உம்–எண்ணுப் பொருளில் வந்த இடைச்சொல் 105
உம்மை எச்சவும்மை 24
உம்மைத் தொகை 41 42 53 57
உயிர் மயங்கியல் 2
உரி 32 82
உரிச்சொல் 33
உருபியல் 2
உருபு அகரம் 65
உருபு புணர்ச்சி 39
உருமின் 108

உருமினின் 108
உருமிணை 130
உருமினொடு 114
உருமொடு 114
உரைகாரர் இருவர் 13 14
உரைகாரர்கள் 81
உரையாசிரியர் 13 16 17 21 44
உரையாசிரியர்கள் 22 113 118
உரையாளர் இருவர் 85
உரையிற் கோடல் 106 135
உரைவளம் 1 முதல்
உழக்கு 87
உவமத்தொகை 53 57
உவன் 73
உவையிற்றை 89 90
ஊங்கண் 60—63
ஊர்க்கண் 59 60
ஊர்க்கு 59 60
எகரவுயிர் 17
எங்கண் 59
எட்டு 14
எண்ணும்மைகள் 105
எதிரது போற்றல் 68
எம் 78 81
எம 66
எமது 65 66
எய்தியது விலக்கிற்று 8
எருவங்குழி 135
எல்லார் தங்கையும் 104
எல்லார் தம்மையும் 113
எல்லார் நம்மையும் 111
எல்லார் நங்கையும் 104
எல்லீர் நுங்கையும் 104
எவை 65 67
எழுத்ததிகாரத் தொடர் எண் 3
எழுத்ததிகாரம் 58
எழுத்தியல் 3
எழுவாய் 57 80
என்று இரண்டு 29
என்று இரண்டும் எண்ணிடைச் சொல் 29
என 66
எனது 65 66
எனாது 67
ஏ–சாரியை 78
ஏ எயிவள் ஒருத்தி 136
ஏ என் சாரியை 81
ஏகாரம் பிரிநிலை 71
ஏது 14
ஏழாம் உருபு 64
ஐ–சாரியை 78 81
ஐய மறுத்தல் 5
ஒட்டுதற் கொழுகிய வழக்கு 113 114
ஒட்டுப் பெயர் 33
ஒப்பக் கூறல் 86
ஒரு சொல் நீர்மை 80
ஒருபாற்கு 92
ஒருபுடைச்சேறல் 22
ஒழிகினி 97 98
ஒற்றுமைப் போலி 102
ஒற்றுமை நயம் 24 26
ஒன்பது 19
ஒன்றின முடித்தல் 19 119
ஒன்றென முடித்தல் 128 133
ஓடு நாகம் 38
ஓஷ்ட்ட்யம் 139
சடி சூத்திரத்திற்குப் பொன் 112
சடுவழ கிது 136
கடுவின் 107
கண்மீ 49
கணேசய்யர், கி. 130 1 3
கதவழ கிது 19 20
கமீல் சுவலபில் (க. சு.) 3, 4, 7, 23, 27, 30, 36, 40, 44, 50, 56, 59, 64, 69, 72, 75, 77, 77, 83, 86, 88, 91, 93, 96, 98, 96, 100, 103, 105, 107, 110, 115, 121, 123, 124, 126, 127, 132, 133, 142, 143
கரம் 121–126
கருங்காலோமை 45

கருவி 1
கலத்துக் குறை 51 52 116 117 119 121
கறி 26
கன்றங்கே 129
கன்னடம் 139
கன்னட மொழியினர் 67
கன்னியப்ப முதலியார் 39
கனவழகிது 19 20
காப்பியர் நெறி 3
காரம் 121—126
கான் 121—126
கிளியழகிது 136
கிளையெழுத்து 64
குண்டர்ட்டு 139
குரீஇ யோப்புவாள் 136
குலையலங் காந்தள் 78
குவளை மலர் 37
குற்றியலுகரப் புணரியல் 2 17 19
குற்றியலுகரம் 5 6 12 13 15 16 17 21 22
குற்றுகரம் 11 20
குற்றுகர வோசை 11
குறிப்பு வினை 33
குறும்பரம்பு 143
குன்றக் கூகை 101
குன்றக் கூறல் 133
குன்றியாது 14
குன்றேறாமா 143 144
கூழிற்குக் குற்றேவல் 112
கூறியது கூறல் 21
கூறியது கூறல் அன்மை 26
கூறியது கூறலாம் 22
கெழு 18 81
கேண்மதி 65
கேரளபாணினீயம் 138 139
கொட்டு 14
கொடாப் பொருள் 38
கொல்களிறு 13
கொள்வுழி 141
கொற்றற்கு 60
கொற்றன் 73
கொற்றி 73
கொற்றிக்கண 61
கொற்றிக்கு 61
கோ—83
கோஒற்கு 92
கோதைக் கண் 61
கோதைக்கு 61
கோவழகிது 136
கௌவடைந்தது 136
சங்கர நமச்சிவாயப் புலவர் 13 21 22 43
சச்சிதானந்தம், க. வா. 9
சந்திகாரியம் 34
சப்தமணிதர்ப்பணம் 66
சாசனங்கள் 56
சாஞான்றான் 38
சாத்தற்கு 60
சாத்தன் உண்டான் 32
சாத்தன் கை 32 33
சாத்தனை 70
சாத்தனொடு 70
சாநின்றான் 38
சார் + இயை = சாரியை 76
சார்பெழுத்துகள் 13
சார்வுழி 141
சாரியை 2 75 76 78
சாரியை வல்லெழுத்து 120
சாவுன்னு 139
சான்றோர் 46

சித்திரைக்குக்
கொண்டான் 108
சிதம்பரம் பிள்ளை 29
39
சிவஞான முனிவர் 11 12 17 19
20 22 72 82
சிவ லிங்கனார் (சிவ.) 2 7 22
35 48 94 98 102 104 109
114 116 140
சிறப்பும்மை 25
சினைக்கிளவி 61
சிற்றமொடு 114
சுப்பிரமணிய சாஸ்திரியார்
(சுப்பிர) 1 6 8 11 24 29 34
38 42 46 53 64 70 73 76
80 85 95 94 115 129 136
144
சூடாமணி நிகண்டு 123
செந்தமிழ்ச் செல்வி 102
செந்தாமரை 43
செம்பொன்பதின்றொடி 143
144
செய்கை ஒத்து 1
செல்வுழி 141
செற்றமொடு 114
சென்னை 56
சென்னை பெரியது 49
சேவின் 67
சேனாவரையர் 67 76 82 114
சொல்லதிகாரம் 58
சொற்கேட்டான் 38
சொல்லெளவியம் 128
ஞாபகங்கூறல் 96 103
ஞான்று 78 79
ஞானியார் மடத்துச்சுவடி
101 106
தங்கண் 59 60 61
தங்கமணி, வை 3
தத்யத்ர 139
தம் 78 79 81 104 106
தம 66
தமது 66
தமிழ்க் கூத்து 101
தமிழ் வரலாற்றிலக்கணம் 56
தமிழ் நூல் 101
தமிழ் யாப்பு 101
தமிழ வரையர் 101
தழூஉ வின் 107
தன்னின முடித்தல் 41
தன 66
தனது 65
தனாது 67
தாது 14
தாப்பிசை 35
தாம் 66
தாமரைக் கணியார் 143
தாய்கண் 60
தாலவ்யம் 139
தாழக்கோல் 80
திரிந்ததன் திரிபது 18
திரிந்ததன் திரிபு பிறிது 90
திரிபு மூன்று 32
திருக்கோவையார் 82
திவாகர நிகண்டு 123
தீக்கண் 60
தீக்கு 60
து—சாரியை 83
தெய்வ மால்வரைத் திருமுனி
45
தெரிநிலை வினை 33
தெலுங்கு 34 139
தொகை நிலை, தொகா
நிலை 55
தொகை மரபு 2
தொன்னூல் விளக்கம்
(தொன், தொ. வி.) 37 50 133

தொகைமரபினை நோக்கிய
தோர் கருவி 65
தொல்காப்பியக் கருத்தரங்கு
18
தொல்காப்பியம் 1 முதல்
தொல்காப்பிய முதற் சூத்திர
விருத்தி 16
தொல்காப்பியனார் 16 19 58
68
தொல்காப்பியர் 20 21 23 35
43 49 140 141
தொல்காப்பியர்க்கு முந்து
நூல்கள் 102
நத்யே ஷா 139
நம் 78 79 81 104 104 105
நம்பிகண் 60 64
நம்முச்சாரியை 176
நம 66
நமது 65 66
நன்னூல் (நன்) 31 36 56 64
69 72 75 77 82 97 123
125 126 127 133 142
நன்னூலார் 130 136
நாகரிது 11 16 19 20 129
நாகன்றேவன்போத்து 143
நாகு 16
நாட்பெயர்க்கிளவி 38
நாடாகொன்றோ 97
நாடியாது 14
நாணோடிற்று 128
நா நுனி 46
நாம் 66
நால்வகைப் புணர்ச்சி 5 70
நினது 65
நினவ 65 67
நியம விதி 11
நிலாக்கதிர் 111 112
நிலாத்துக் கொண்டவன் 111
நிலாத்துக் கொண்டான் 111
113
நிலாமுற்றம் 111 112
நிலை மொழி 33
நிலை மொழிக் கருவி 22
நிலை மொழியீறு 2
நீ + இா = நீயிர் 86
நீ இர் 39
நீம் 81
நீயிர் 40
நீயிர் குறியிர் 37 39
நீர்க்கண் 59
நீரொடு கூடிய பால் 128
நுங்கண் 60--62
நுந்தை 11 20
நும் 39 78 79 81 104 105
நுழைவாயில் 3
நுனிநா 46
நூலுட்பயின்று வருதல் 78
நூற்று நான்கு 17
நூற்று மூன்று 17
நூறு 16 17
நூன் மரபு 1
நேமி நாதம் (நேமி) 33 31 36
75 133
நேமிநாதவுரையாசிரியர் 131
நோக்கு என்னும் உறுப்பு 48
ப்ர கிருதி 34
ப்ர கிருதியியல்பு 34
பண்புத் தொகை 41 42 43
53 57
பதிற்றகல் 89 88 89
பதிற்றுழக்கு 87 89
பதிற்றேழு 87 88
பதிற்றொன்று 87 88
பதினாயிரத்தொருபஃது 41
42
பதினாயிரத் தொன்று 41 42

பதினாயிரம்—பத்தாகிய ஆயிரம் 43
பரணியாற் கொண்டான் 93 94 95
பலவற்றொடு 114
பலவொடு 114
பலாக்குறைத்தான் 38
பலாவின் 107
பவணந்தியார் 16
பறம்பிற்பாரி 93—95
பனியிற் கொண்டான் 94 95
பனைமரம் 43
பனையின் குறை 51 52
பாஎன்னும் உறுப்பு 47
பாசபந்தம் 35
பாடப்போயினான் 38
பாணினீயம் சூத்திரம் 113
பாம்பினிற்கடிது தேள் 107 108 109
பார்ப்பார்கண் 60
பாரிநிலையம் 56
பாலரி 128
பாலாடை 129
பாலாழி 128
பாவாணர் 43 133
பிங்கல நிசண்டு 123
பிரயோக விவேக நூலார் 35
பிற்கால நூல்கள் 89
பிற குறிப்பு 9 23 43 68 71 76 86 88 91 98 102 106 123 124 129 133 142
பிறப்பியல் 12
புணர்ச்சி சொல்வகையால் நான்கு 31
''புணர்ச்சி வகையால் நான்கு 31
புணர் மொழிகள் 3
புணர் மொழியியல் 3
புணரியல் 1 முதல்
புணரியல்—இயல்விளக்கம் 3
புணரியல் தொடர் எண் 3
புள்ளி மயங்கியல் 2
புளியங் கோடு 104 135
புளிய நெரி 105
புளிய மிலை 106
புளிய விலை 106
புறம் 46
பூர்வபதம் 35
பூவழகிது 136
பூவினொடு விரிந்த கூந்தல் 111 113
பூவொடு விரிந்த கூந்தல் 111 113
பெயரியல் 73
பெயரெச்சம் 53
பெருமாள், ஏ. என், டாக்டர் 3
பேராசிரியர் 4 13 15 22 27 82 103
பொதுச்சாரியை 32
பொருளன்று 128
பொளீட்டம் 128
பொற்கு 62
பொற்குடம் 37
போராயிது 139
மக—குழந்தை 83
மகடூஉ 72
மகத்தாற் கொண்டான் 37 38 39
மகத்துக்கை 79 83 97
மகவின்கை 51
மட்குடம் 38
மண் மலை 38

மண்ணான் + குடம் 71
மணிக்கண் 60
மணிக்கு 60
மத்வத்ர 139
மதுரை 3
மயிலை நாதர் 77 83
மரக்கிளை 43
மரத்துக்கட் கட்டினான் 112
மரநட்டான் 38
மரம் 4 8
மரமரிது 8
மரவடி 135
மரவேர் 37 38
மரா 9
மரூஉ 44
மலைத்தலை 38
மலை படுகடாம் 108
மலையாளம் 139
மன்றப்பெண்ணை 101
மனைக்கண், மனைக்கு 60
மா—காட்டுப்பசு 83
மாட்டேறு ஒருபுடைச்சேறல் 10 12 15
மாட்டேறு முழுதுஞ் சேறல் 10
மாவிற்கு 84
மாவின் கண் 84
மாவின்கோடு 84
மாற்கு 84
மாறனலங்காரம் 23 130
மான்கண் 84
மான்கோடு 84
மானை 84
மீகண் 44 45 49
முதற் சூத்திர விருத்தி 72
முந்து மொழிந்ததன் தலை தடு மாற்றம் 4
முயற்கோடு 34
முன்றில் 44 45 46
முன்றில் அழகிது 49
முத்துவீரியம் (முத்து) 31 44 50 56 64 69 72 75 77 83 91 97 98 101 107 123 125 126 133
முன்னுரை 3
மேற்கோள் 4
மொழி மரபின் ஒழிபு 24 25
மொழிமரபு 1—6
மொழிமாற்றுப் பொருள் கோள் 48
மொழிபுணர் இயல்பு நான்கு 30
மொழி முதற் குற்றியலுகரம் 7
மொழியாக்கம் இரண்டாம் 5
யாம் 66
யாவற்றை 91
யானைக்கோடு 37
யோகாங்குலி நியாயம் 35
லீலா திலகம் 139
வடமொழி 34
வண்டின் கால் 93—95
வத்வாஸநம் 139
வந்தான் சாத்தன் 32
வந்தான் போயினான் 32 33
வரகரிது 128
வரகு 24 25
வருமொழி 33
வருமொழிக் கருவி 21
வருமொழி முதல் 2
வரையர மகளிர் 136
வழக்குப் பயிற்சி 78
வழிநூல் 102
வளியிற் கொண்டான் 94 95
வானத்தின் வழுக்கி 112
வானவரி வில்லுந்திங்களும் 104
வானுலகு 128

விகாரப் புணர்ச்சி 33
விகாரம் 5, 78
விண்ணத்துக் கொட்கும் 118
விண் வத்துக் கொட்கும் 118
விரவுத்திணை 74
விரவுப்பெயர் 73 74
விரிந்தது தொகுத்தல் 4
விள 4
விளக்குறிது 51 49
விளங்கோடு 51
விளவத்துக் கண் 117
விளவத்துக் கொட்கும் 135 136
விளவழகிது 136
விள விற்கு 92
விளவின் 107
விளவின்கோடு 112
விள வினது கோடு 112
விள வினைக் குறைத்தான் 28 111
விளவினைக் குறைத்தவன் 111
விளி 57
வினைத்தொகை 41 42 43 53
வினை யெச்சம் 53
வீரசோழியம் (வீர) 31 75 133
வீரசோழிய நூலார் 23
வீழ்பழம் 107
வெயிலத்துக் கொண்டான் 83
வெள்ளை வாரணனார் (வெள்ளை) 2 9 15 26 58 62 66 114
வேய்க் கண், வேய்க்கு 60
வெளிப்படை 29
வெற்றிவேல் பிரசுரம் 3
வேங்கடராசுலு ரெட்டியார் 2 6 12 25 33 47 62 66 81 85 87 91 9/ 103 116 129 136
வே லுப்பிள்ளை, ஆ 54
வேலெறிந்தான் 128
வேலேற்றான் 128
வேற்றுமைத் தொகை 41 43
வேற்றுமை நயம் 26
வேற்றுமை யுருபு 2
வேற்றுமை யோத்து 70

## சூத்திர முதற்குறிப்பு அகராதி

(எண்—பக்க எண்)

அத்தின் அகரம் 96
அத்தேவற்றே 115
அம்முன் இறுதி 103
அவற்றுவழி 74
அவற்றுள், இன்னின் 83
அவற்றுள், கரமும் 123
அவற்றுள், நிறுத்தசொல் 30
அவற்றுள், மெய்யீறு 7
அவைதாம், முன்னப் 143
அவைதாம், மெய்பிறி 36
அளபாகு மொழி 86
அன் ஆன் இன் 77
ஆறன் உருபின் 64
ஆனின் னகரமும் 92
இக்கின் இகரம் 98
இன் என வரூஉம் 107
உயர்திணைப் பெயரே 72
உயிர் இறு சொல் 26
உயிர் மெய்யீறும் 23
எப்பெயர் முன்னரும் 100
எல்லாமொழிக்கும் 133
எழுத்தோரன்ன 142
ஐ ஒடு கு இன் 56
ஐகார ஔகார 126
ஐயின் முன்னரும் 99
காரமும் கரமும் 121
குற்றியலுகரமு 10
நிறுத்த சொல்லும் 40
புள்ளியீற்று 127
பெயரும் தொழிலும் 110
மருவின் தொகுதி 44
மூன்று தலையிட்ட 3
மெய்யுயிர் நீங்கின் 132
மென்மையுமிடை 105
வஃகான்மெய் 89
வரன்முறை 124
வல்லெழுத்துமுத 59
வேற்றுமை குறித்த 49
வேற்றுமை வழிய 69
னஃகான் றஃகான் 91

# நிறுவன வெளியீடுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | தமிழில் விடுகதைகள் | ... | ரூ. | 12 | 00 |
| 2. | ஆராய்ச்சி நெறிமுறைகள் | ... | ரூ. | 5 | 00 |
| 3. | Tamil Research through Journal | ... | Rs. | 7 | 50 |
| 4. | Dr.Mu. Va. | ... | Rs. | 20 | 00 |
| 5. | அடியார்க்கு நல்லார் உரைத்திறன் | ... | ரூ. | 12 | 00 |
| 6. | Dissertations on Tamilology | ... | Rs. | 10 | 00 |
| 7. | தமிழ் இலக்கியக் கொள்கை—III | ... | ரூ. | 8 | 00 |
| 8. | தமிழ் இலக்கியக் கொள்கை—IV | ... | ரூ. | 10 | 00 |
| 9. | தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு | ... | ரூ. | 15 | 00 |
| 10. | சின்ன மகிபன் குளுவ நாடகம் | ... | ரூ. | 5 | 00 |
| 11. | உலகத் தமிழ் எழுத்தாளர் யார்-எவர் ? | ... | ரூ. | 6 | 00 |
| 12. | தமிழ் இலக்கியக் கொள்கை—V | ... | ரூ. | 12 | 00 |
| 13. | தமிழ் இலக்கியக் கொள்கை—VI | ... | ரூ. | 16 | 00 |
| 14. | Heritage of the Tamils— Language and Grammar | ... | Rs. | 22 | 00 |
| 15. | தொல்காப்பியம் சிறப்புப்பாயிரம் | ... | ரூ. | 10 | 00 |
| 16. | தொல்காப்பியம் நூன்மரபு | ... | ரூ. | 9 | 00 |
| 17. | தொல்காப்பியம் மொழிமரபு | ... | ரூ. | 9 | 00 |
| 18. | தொல்காப்பியம் மரபியல் | ... | ரூ. | 10 | 50 |
| 19. | திருக்குருகூர் திருவேங்கடநாதன் பிள்ளைத்தமிழ் | ... | ரூ. | 7 | 50 |
| 20. | பணவிடு தூது | ... | ரூ. | 6 | 00 |
| 21. | தமிழர் நாட்டு விளையாட்டுகள் | ... | ரூ. | 14 | 00 |
| 22. | தமிழர் ஆடைகள் | ... | ரூ. | 16 | 00 |
| 23. | தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் | ... | ரூ. | 16 | 00 |
| 24. | தமிழர் கண்ட மனம் | ... | ரூ. | 9 | 00 |
| 25. | Epigraphical Evidences for Tamil Studies | | Rs. | 10 | 00 |
| 26. | கூவநூல் | ... | ரூ | 7 | 00 |
| 27. | பிரபந்தத் திரட்டு | ... | ரூ. | 16 | 00 |
| 28. | தமிழக நாட்டுப்புறக் கலைகள் | ... | ரூ. | 10 | 00 |
| 29. | மனைநூல் | ... | ரூ. | 15 | 00 |
| 30. | A Study of Perunkatai | ... | Rs. | 12 | 00 |
| 31. | Papers on Tamil Studies | ... | Rs. | 15 | 00 |
| 32. | Thiru Murugan | ... | Rs. | 5 | 00 |
| 33. | தமிழர் உணவு | ... | ரூ | 12 | 00 |
| 34. | தந்திவனபுராணம் | ... | ரூ | 15 | 00 |
| 35. | The Tamil writers Dirctory | ... | Rs. | 10 | 00 |
| 36. | Tamil Drama | ... | Rs. | 20 | 00 |

தொடர்பு கொள்க:

இயக்குநர்,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

அடையாறு, சென்னை-600 020.